த.ச. பே[illegible]டவடிக்[illegible]

செயலக வெளியீடு

தொகுதி - 18 எண் - 1

[illegible] மார்ச் - 1992

வெளியீடு 18-9-1992 Issued 18-9-1992

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 16, 1992 - தொகுதி 18 - எண் 1
Monday the 16th March, 1992 - Volume 18 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்

*16—03—1992*



| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | ii–vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii–x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | xii–xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | xiv–xxiv |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1–47 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 47–129 |
| 2. சிறப்புக் குறிப்புகள் | |
| (அ) உரிமைப் பிரச்சினை எழுப்பும் நடைமுறை குறித்து .. .. .. .. | 129–131 |
| (ஆ) உறுப்பினர் திரு. பி. சொக்கலிங்கம் உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சிலரால் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து—பேரவைத் தலைவரின் குறிப்புரை .. .. .. | 131–132 |
| 3. வரவு-செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம் தொடர்ச்சி | 132–218 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் .. | 132–159 |
| *மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 159–218 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 218 |



*53—31—A*

D
V211,31'N92
N92-18·1
16312

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா

   பொது, பொது நிர்வாகம் இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை. சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு

2. நிதி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

   நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி

   சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட) கம்பெனிகள் பதிவு.

4. வருவாய்த் துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள்.

5. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இராம வீரப்பன்

பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. — மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:

கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.



8. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

10. பொதுப்பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்:

பொதுப் பணிகள், பாசனம் (சிறுபாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபு சாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.

12. உணவு - கூட்டுறவுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:

உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

| | | |
|---|---|---|
| 13. | தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. செ. ரகுபதி<br>தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப் புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு. |
| 14. | வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:<br>வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்பு வரி மற்றும் கரும்பு வளர்ச்சி. |
| 15. | வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:<br>வீட்டு வசதி,குடிசைமாற்றுத் திட்டம், ஊரக வீட்டுவசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப் பாடு, நகர அமைப்பு, நகர்ப் புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| 16. | சமூக நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:<br>சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதி கள், சீர்திருத்த நிர்வாகம். |
| 17. | ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எம். ஆனந் தன்:<br>ஆதிதிராவிடர் நலம், மலை வாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால் பால் பெருக்குத் திட்டம். |



| | | |
|---|---|---|
| 18. | மீனளத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. டி. ஜெய குமார்:<br>மீனளம். |
| 19. | ஊரகத் தொழில் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்:<br>சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU BHISHMA NARAIN SINGH.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. THE HON. DR. J. JAYALALITHA:

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control.

2. Minister for Finance THE HON. DR. V.R. NEDUNCHEZHIAN :

   Finance, Planning, Elections and Legislature.

3. Minister for Law .. THE HON. THIRU K. A. KRISHNASAMY :

   Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, chits and Registration of Companies.

4. Minister for Revenue — THE HON. THIRU S. D. SOMASUNDARAM :

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes.

5. Minister for Backward Classes. — THE HON. THIRU ERAAMA VEERAPPAN :

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Oversees, Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen.

6. Minister for Education. — THE HON. DR. C. ARANGANAYAGAM :

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare and Archaeology.

7. Minister for Health — THE HON. THIRU S. MUTHUSAMY :

Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control.

8. Minister for Transport — THE HON. THIRU K. A. SENGOTTAYAN :

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona.

9. Minister for Handlooms and Textiles — THE HON. THIRU E. MADHUSUDHANAN :

Handlooms and Textiles.

10. Minister for Public Works. — THE HON. THIRU S. KANNAPPAN :

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control.



11. Minister for Local Administration. — THE HON. THIRU ALAGU THIRUNAVUKKARASU :

Municipal Administration, Rural Development, Panchayats and Panchaynt Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply.

12. Minister for Food and Co-operation. — THE HON. THIRU G. VISWANATHAN :

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Labour. — THE HON. THIRU S. RAGHUPATHY :

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

14. Minister for Agriculture. — THE HON. THIRU KU. PA. KRISHNAN:

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

15. Minister for Housing and Urban Development. — THE HON. THIRU T. M. SELVAGANAPATHI :

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority.

16. Minister for Social Welfare. — THE HON. TMT. R. INDIRAKUMARI:

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. — THE HON. THIRU M. ANANDAN :

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development.

18. Minister for Fisheries. — THE HON. THIRU D. JAYAKUMAR:

Fisheries.

19. Minister for Rural Industries. — THE HON. THIRU S. NAGOOR MEERAN :

Small Scale Industries, Rural Industries. including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு. திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர்

திரு. செ. சு. ஜானகிராமன்

பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி.., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி.பி., மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. ச., பி.எஸ்ஸி. | குழு அலுவலர். |
| வெங்கட்டராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. சி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா, திருமதி பி.ஏ. பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே.பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. சா., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை, எம்.ஏ., | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ.ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி.சி. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) பெயர்களும் தொகுதிகளும்.

| | |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3. அபுல் ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை, |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர்.டி. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன், திரு. க, | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு. ச. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13. ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1. |
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |

| | |
|---|---|
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்றாம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | போளூர். |
| 21. இராசாராமன், திரு. சோ. | பாபநாசம். |
| 22. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ,வ). |
| 25. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடானை. |
| 26. இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா. | இளையாங்குடி. |
| 28. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | கம்பம். |
| 29. இராமச்சந்திரன், திரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31. இராமதாஸ், திரு. எஸ். எஸ்.ஆர். | செஞ்சி. |
| 32. இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம். |
| 33. இராம. வீரப்பன், திரு. | காங்கேயம். |
| 34. இராஜமன்னார், திரு. கு. செ. | ஓட்டப்பிடாரம்.(செ.வ.) |
| 35. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி. | திருத்தணி. |
| 36. இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம். |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ,வ,) |
| 38. இளம்வழுதி, திரு, | எழும்பூர், |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு, பி. | தாராபுரம் (செ,வ.) |



| | |
|---|---|
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கா. | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே.எம். | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி. |
| 49. கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என்.சி. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர் செல்வம், திரு. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. .. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. .. | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. கிருஷ்ணசாமி, கே. ஏ. .. | ஆயிரம் விளக்கு. |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர். |
| 59. குப்பன், திரு. க. | திருவொற்றியூர். |
| 60. குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. | [illegible]யூர். |
| 62. [illegible] சி. .. | [illegible] (செ.வ.). |

| | |
|---|---|
| 63. கோடிமாரி, திரு. ஆர். .. | நாகப்பட்டினம். |
| 64. கோபாலகிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 65. கோபால், திரு. க. .. | நன்னிலம் (செ.வ.) |
| 66. கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி. .. | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. .. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி. | சத்தியமங்கலம், |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. | கபிலர்மலை. |
| 77. சரோஜா, டாக்டர் (திருமதி) வெ. .. | சங்கரி (செ.வ.) |
| 78. சாத்தையா, திரு. தி. .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முகையூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி. |
| 81. சிங்காரம், திரு. கே. .. | மொரப்பூர். |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர். |
| 83. சியாமளா, திருமதி ரெ. .. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி. |



| | |
|---|---|
| 85. சிவபதி, திரு. என். ஆர். | தொட்டியம். |
| 86. சின்னசாமி, திரு. ம. .. | கரூர். |
| 87. சின்னசாமி, திரு. கா. .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88. சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர். |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் (திருமதி) மு. | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. .. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. .. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. .. | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். .. | கலசப்பாக்கம். |
| 95. சுந்தர தாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. .. | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர் ச. .. | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை. |
| 102. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. | பழனி (செ.வ.) |
| 104. சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம். |
| 105. சுவாமிநாதன், திரு. சி. .. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |

108. செல்லசாமி, திரு. ஏ. டி. — ஒட்டன்சத்திரம்.
109. செல்லத்துரை, திரு. ஆ. .. — திருச்செந்தூர்.
110. செஷ்வகணபதி, திரு. டி. எம். — திருச்செங்கோடு.
111. செல்வராசன், திரு. அ. .. — துறைமுகம்.
112. செல்வராஜ், திரு. கே. .. — கோயம்புத்தூர் மேற்கு.
113. செழியன், திரு. தா. .. — பெரம்பலூர் (செ.வ.)
114. சேகர், டாக்டர் எம்.பி. .. — பெரம்பூர் (செ.வ.)
115. சேகர், திரு. எம். ஜி. .. — பாலக்கோடு.
116. சொக்கலிங்கம், திரு. பி. .. — மதுராந்தகம்.
117. சோமசுந்தரம், திரு. எஸ். டி. — தஞ்சாவூர்.
118. ஞானசேகரன், திரு. சி. .. — வேலூர்.
119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. — ஸ்ரீவைகுண்டம்.
120. தங்கமுத்து, திரு. கு. .. — திருவோணம்.
121. தங்கராஜ், திரு. ஆர். .. — ஆண்டிமடம்.
122. தங்கவேல், திரு. எம். .. — முசிறி.
123. தண்டாயுதபாணி, திரு. வி. — குடியாத்தம்.
124. தமிழரசன், திரு. செ. கு. — வந்தவாசி (செ.வ.)
125. தமிழரசு, திரு. வே. .. — ஆத்தூர்.
126. தம்புசாமி, திரு. வே. .. — திருவாரூர் (செ.வ.)
127. தர்மலிங்கம், திரு. சி. .. — அணைக்கட்டு.
128. தர்மலிங்கம், திரு. பே. — பாளையங்கோட்டை.
129. தவசி, திரு. கே. .. — ஆண்டிப்பட்டி.
130. தனபால், திரு. ம. .. — திருப்போரூர் (செ.வ.)
131. தாமரைக்கனி, திரு. இரா. — ஸ்ரீவில்லிபுத்தூர்.
132. தாமோதரன், திரு. சி. .. — நெல்லிக்குப்பம்.



133. திருநாவுக்கரசு, திரு. எஸ். — அறந்தாங்கி.
134. துரை, திரு. எஸ். எம். .. — ஆத்தூர்.
135. துரை முருகன், திரு. கு. சு. — பல்லடம்.
136. துரை ராமசாமி, திரு. .. — வெள்ளக்கோவில்.
137. தெய்வநாயகம், திரு. எ. .. — மதுரை மத்தி.
138. தென்னவன், திரு. மு. .. — இராமநாதபுரம்.
139. தேவராஜ், திரு. அ. .. — செய்யாறு.
140. தேனி பன்னீர்செல்வம், திரு. — போடிநாயக்கனூர்.
141. நடேசன், திரு. இரா. .. — திருவட்டாறு.
142. நடேசன், திரு. மு. .. — சேலம்-2.
143. நடேசன் பால்ராஜ், திரு. ரெ. — நாங்குநேரி.
144. நாகூர் மீரான், திரு. எஸ். — கடையநல்லூர்.
145. நிர்மலா, செல்வி, பி. .. — திண்டுக்கல்.
146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. — தேனி.
147. பஞ்சவர்ணம், திருமதி கே. — வலங்கைமான் (செ.வ.)
148. பட்டாபிராமன், திரு. கா. ப. — காஞ்சிபுரம்.
149. பரந்தாமன், டாக்டர் ஜெ. — பேரணாம்பட்டு (செ.வ.)
150. பரமசிவம், திரு. ஆர். பி. — சின்னசேலம்.
151. பரமசிவன், திரு. ஏ. எம். — சோழவந்தான்.
152. பலராமன், திரு. வ. .. — பூங்கா நகர்.
153. பழனிசாமி, திரு. இரா. — தாரமங்கலம்.
154. பழனிசாமி, திரு. க. — எடப்பாடி.
155. பழனிசாமி, திரு. நா. கா. — [illegible]

| | | |
|---|---|---|
| 156. | பழனிசாமி, திரு. வெ. ... | திருப்பூர். |
| 157. | பழனிசாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158. | பழனியம்மாள், திருமதி. க. | ராசிபுரம். |
| 159. | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. | பன்னீர்செல்வம், திரு. சா... | திண்டிவனம். |
| 161. | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர், |
| 162. | பாண்டியம்மாள், திருமதி. இரா. | உசிலம்பட்டி. |
| 163. | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. | பாலகங்காதரன், திரு. ஜெ. .. | சிவகாசி. |
| 165. | பாலகிருஷ்ணன், திரு. சோ. .. | முதுகுளத்தூர். |
| 166. | பாலசுப்ரமணியன், திரு.எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. | பாலன், திரு. எம். கே. .. | சைதாப்பேட்டை. |
| 169. | பாலையா, திரு. ஆ. .. | குளச்சல். |
| 170. | பியாட்ரிக்ஸ் டி. சோசா, டாக்டர் (திருமதி) | நியமனம். |
| 171. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. | புரட்சிமணி, திரு. ச. .. | மங்களூர் (செ. வ.) |
| 174. | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. | பூராசாமி, திரு. எம். .. | பூம்புகார். |
| 176. | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.) |
| 177. | பெரியவீரன், திரு. எம். .. | பெரியகுளம். |
| 178. | பெருமாள், திரு. செ. — | ஏற்காடு (ம.ப.) |



| | | |
|---|---|---|
| 179. | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180. | பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி |
| 181. | பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி |
| 182. | பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.) |
| 183. | போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ வ.) |
| 184 | மணிமேகலை, டாக்டர் (திருமதி) சு. | அரியலூர் |
| 185. | மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை |
| 186. | மணிவாசகம், திரு. கே. பி. | உடுமலைப்பேட்டை |
| 187. | மதுசூதனன், திரு இ. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 188. | மரியமுல் ஆசியா, திருமதி | அரவக்குறிச்சி |
| 189. | மல்லிகா, செல்வி, கோ. | புவனகிரி |
| 190. | மனோகரன், திரு. கே. ஏ. | ஓசூர் |
| 191. | மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192. | மாலா, டாக்டர் (செல்வி) ஜி. ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193. | முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 194. | முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 195. | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 196. | முருகானந்தம், திரு. கே. ஆர். | சிவகங்கை |
| 197. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 198. | முனிரத்தினம், திரு. ஏ. எம். | சோளிங்கர் |
| 199. | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 200. | முனுசாமி, திரு. கா. பூ | காவேரிப்பட்டிணம் |
| 201. | மூர்த்தி, திரு து | சீர்காழி (செ.வ.) |
| 202. | மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203. | ரகுபதி, திரு. செ. | திருமயம் |
| 204. | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205. | ரங்கராஜன், திரு. டி. எம். | மயிலாப்பூர் |
| 206. | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207. | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208. | ரமேஷ், திரு. வி. பி. ஆர். | தூத்துக்குடி |
| 209. | ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210. | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |

| | |
|---|---|
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | ஆலங்குளம் |
| 212. ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம் |
| 213. ராஜு, திரு. கே. ஆர். | கூடலூர் |
| 214. ராஜு, திரு. கே. பி. | பேரூர் |
| 215. ராஜேந்திரன், திரு. என். ஆர். | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217. லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. | லால்குடி |
| 219. வரதராஜன், திரு. செ. து. | செங்கல்பட்டு |
| 220. விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222. வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர் |
| 224. வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. | ராணிப்பேட்டை |
| 226. வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227. ஜனார்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228. ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229. ஜீனத் சர்புதீன், திருமதி | சேப்பாக்கம் |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 231. ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, டாக்டர். ஜெ. | பர்கூர் |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235. ஸ்ரீதரன், டாக்டர், அ. | வால்பாறை (செ.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்—

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**பங்குனி 3, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு 2023**
**1992 மார்ச் 16, திங்கட்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

கடமை இவை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் அவரது இயல்பான கடமை என்றாகும்.

1. வினாக்கள்— விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள். வினா எண். 219 திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

219—

### சிறைசசாலைகளைச் சீரமைக்க நிபுணர் குழு.

*2437 திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு சட்டத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறைச்சாலைகளைச் சீரமைக்க, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பாதுகாப்பை பலப்படுத்த, புதிய பாதுகாப்பான கட்டிடங்கள் கட்ட, நவீன இயந்திரங்களை இயக்கி திடீர் புரட்சி செய்வதை முறியடிக்க என எல்லா வகையிலும் நவீனப்படுத்த ஒரு நிபுணர் குழு அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சிறைச்சாலைகளைச் சீரமைப்பு செய்ய ஏற்கெனவே மத்திய அரசாலும், மாநில அரசாலும் நிபுணர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கை

களின் பேரில், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், தனியாக மேலும் ஒரு நிபுணர் குழு அமைக்க வேண்டிய அவசியம் தற்போதைக்கு அரசுக்கு இல்லை.

<u>திரு. க. அர்ச்சுனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் சிறை சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக அரசு நிபுணர் குழு அமைத்துள்ளதா? ஆமெனில் அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளைச் சீரமைக்க இதுவரையில் 4 குழுக்கள் மத்திய அரசாலும், மாநில அரசாலும் அமைக்கப்பட்டு அவை பல பரிந்துரைகளை நல்கியுள்ளன. அதன்மீது இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. போற்றுதற்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது 1978-ல் தமிழ்நாடு அரசு சிறைச்சாலைகளைச் சீரமைக்க ஓய்வு பெற்ற பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.எஸ். நரசிம்மன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தது. இரண்டாவதாக 'All India Committee on prison reform' என்ற பெயரினால் 1980—83 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசு ஜஸ்டிஸ் ஏ.என். முல்லா அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தது. அதன்பிறகு 1987-ல் திரு. ஆர். கே. கபூர் அவர்கள் தலைமையில் ஒரு குழு இந்தியாவிலுள்ள அனைத்து சிறைச் சாலைகளிலும் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாடு அதாவது 'செக்யூரிட்டி அன்ட் டிசிப்ளின்' தொடர்பாக ஆய்வு செய்ய அமைக்கப்பட்டு அது ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அதன்பிறகு 7-வது பைனான்ஸ் கமிஷன் மூலமாக மத்திய அரசு சில மானியத் தொகைகளை தமிழக அரசுக்கு நல்கி சிறைச்சாலைகளைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வந்திருக்கிறது. ஆக இவைகள் காரணமாக புதிய குழு தேவையில்லை என்று அரசு கருதி இந்தக் குழுக்கள் அளித்த பரிந்துரைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் 864 இலட்சம் ரூபாய் கொண்ட திட்டத்தோடு இன்றைக்கு அந்தப் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக 359 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் துரிதமாக நடக்கிறது. அடுத்த கட்டமாக அதாவது 'செக்கன்ட் பேஸ்' என்பதன்படி 505 இலட்சம் ரூபாய் அளவில் சிறை சீரமைப்புப் பணிகள் நடைபெற இருக்கின்றன. முக்கியமாக இன்றைய அரசியலில், அதாவது இன்றைக்கு இருக்கிற நிலையில் சிறைச்சாலைகளில் பயங்கரவாதிகள் அதாவது 'டெரரிஸ்ட்ஸ்' அதிக பாதுகாப்பு கொடுக்கப்படக்கூடிய கைதிகள் அதாவது 'ஹை செக்யூரிட்டி ப்ரிசனர்ஸ்' சிறையில் இருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய



குற்றவாளிகள் அதாவது 'எஸ்கேப் ரிஸ்க் ப்ரிசனர்ஸ்' ஆகிய இவர்களை எல்லாம் காக்கவேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது. எனவே மத்திய அரசிடம், நமக்கு நல்ல பயிற்சி கொடுக்க, நம்முடைய சிறையில் இருக்கிற பாதுகாப்பு அதிகாரிகளுக்கு 'பார்டர் செக்யூரிட்டி போர்ஸ்'இல் இருப்பதைப்போன்ற ஒரு பயிற்சி கொடுக்க வேண்டும் என்று நம்முடைய அரசு எழுதி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. க. அர்ச்சுனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ், பாரஸ்ட், ஜெயில் ஆகியவற்றில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் 'யூனிஃபார்ம் போர்ஸஸ்'. ஆனால் சிறைத் துறையை யாரும் சரியாகக் கண்டுகொள்வதில்லை என்பது அனைவரும் அறிந்த விஷயம். சிறைத்துறை அதிகாரிகளையும் மற்ற துறை அதிகாரிகளைப் போல் எல்லா வகையிலும் ஊக்குவிக்கின்ற வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுமா? அதன் மூலமாக சிறைத் துறையை நவீனப்படுத்துகிற முயற்சியில் எல்லா வகையிலும் அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், இன்றைக்கு சிறைத் துறை 'it is a sensitive department' ஆக இருக்கிறது. எனவே அதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு நவீன பயிற்சிகளைக் கொடுத்து, அதே வேளையில் சிறைகளையும் பாதுகாப்பான இடமாக ஆக்க அடுத்த கட்டமாக 505 லட்சம் ரூபாயில் அந்தப் பணிகளை எல்லாம் செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருமதி ஜீனத் சர்புதீன்.

<u>திருமதி ஜீனத் சர்புதீன் :</u> மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலை சீரமைப்புப் பணியில் மத்திய அரசு எத்தனை பர்சென்ட் செலவழிக்கும், மாநில அரசு எத்தனை பர்சென்ட் செலவழிக்கும் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பணிகளில் 50 சதவிகிதம், சில பணிகளில் மாநில அரசே செய்ய வேண்டி இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்ள இருக்கிறேன்

[1992 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச் சாலைகளில் அதன் கொள்ளளவுக்கு மேல் ஆட்களைக் கைது செய்யும்போது, அப்படி கைது செய்து வைக்கும் சூழ்நிலை ஏற்படும்போது அடிப்படை வசதிகளுக்குக்கூட கஷ்டப்படவேண்டியுள்ளது. கடந்த அரசு, அரசியல் போராட்டங்களில் கைது செய்து வேலூர் சிறையில் எங்களை வைத்தபோது என்னோடு 3 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அந்த சிறையில் காலைக்கடன்களை கழிப்பதற்குக் கூட கஷ்டப்படும் நிலை இருந்தது. இதே நிலையை இங்கே இருக்கின்ற பல உறுப்பினர்களும் அனுபவித்து இருக்கிறார்கள். இதுபோன்ற சூழ்நிலைகளை சமாளிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சிறைச்சாலையைப் பற்றி சொன்னார்கள். நானும் மதுரை சிறைச்சாலையில் ஒரு கைதியாகத்தான் இருந்தேன். ஜனவரி மாதம், ஏறத்தாழ அங்கே 10 ஆயிரம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சகோதரர்களும், இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்த சகோதரர்களும் அன்றைய போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஏறத்தாழ 2 லட்சம் பேர், சென்ற ஜனவரி மாதம், இந்த சாலை மறியல் போராட்டத்தை முன்னிட்டு முன் எச்சரிக்கையாக அவர்களைக் கைது செய்தார்கள். எனவே எனக்கும் அந்த அனுபவம் உண்டு. இந்தப் போற்றுதற்குரிய புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே எந்த அரசியல் கட்சிக் கைதிகளும் இன்றைக்கு சந்தோஷமாகத்தான் இருக்கிறார்கள், நேற்றைக்குக்கூட மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கருணாநிதி ஈரோட்டிலே பேசுகிறபோது தடா சட்டத்திலே கைது செய்த சுப்புலட்சுமி மகிழ்ச்சியாக இருக்கிறார் என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே தமிழகத்திலே இன்றைக்கு தடா கைதிகள்கூட, சுப்புலட்சுமிகள் கூட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதனை அதனுடைய தலைவரே சொல்கிறபோது சிறைச்சாலையின் நல்ல நடவடிக்கைகளை. நிர்வாகத்தை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் காலத்திற்குப் பிறகு நம் நாட்டிலே சிறைச்சாலைகள் நல்ல வகையிலே நிர்வகிக்கப்படவில்லை.



1992 மார்ச் 16]

மேலும் பல சிறைச்சாலைகளிலே கைதிகளும் 'அன்டர் ட்ரையல்ஸ்' என்ற குற்றவாளிகளும் தப்பி ஓடுவதை நாம் எல்லோரும் அறிகிறோம். ஆகவே சிறந்த முறையில் சிறைச்சாலைகளைச் சீரமைக்க ஒரு சிறைச்சாலை கமிஷன் அமைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னது போல ஜஸ்டிஸ் நரசிம்மன், ஜஸ்டிஸ் முல்லா, ஜஸ்டிஸ் கபூர் ஆகிய பல பெருமக்கள் பல கருத்துக்களை அளித்து இருக்கின்றார்கள். அந்த கருத்துக்களின் அடிப்படையிலே சீரமைத்தாலே சிறைத் துறை திறமையாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி தனியாக இதற்கு ஒரு கமிட்டி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 220 திரு. பி. சொக்கலிங்கம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர். உறுப்பினர் இருக்கையில் இல்லை. திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் கேட்கிறார்களா?

திரு. நா. சா. பழனிசாமி: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி இந்தக் கேள்வியைக் கேட்கிறார்.

220—

விவசாயக் கூலித் தொழிலாளிக்கு நிவாரண நிதி

*4428 திரு. பி. சொக்கலிங்கம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கூலித் தொழிலாளி இறந்துவிட்டால் நிவாரண நிதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் தொழிலில் ஈடுபடும்போது விபத்தில் இறந்தால், அவர்களின் குடும்பத்திற்கு விபத்து நிவாரண நிதி அரசு கொடுக்கும்.

[1992 மார்ச் 16

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விபத்து நிவாரண நிதி அரசு கொடுப்பதை வர
வேற்கிறேன். ஆனால் தொழிற்சாலைகளிலே பணிபுரிகின்ற தொழி
லாளர்களுக்கு அமைப்பு ரீதியான தொழிற்சங்கங்கள் மூலமாக
ஆண்டுக்காண்டு கூலி உயர்வும், ஓய்வு ஊதியம் போன்ற வசதி
களும் கிடைப்பதைப் போல, விவசாயத்திலே நிரந்தரமான
வேலையற்ற விவசாயிகள், கூலி உயர்வு கிடைக்காத அந்த
விவசாயத் தொழிலாளர்கள், வானமே கூரையாக, வைக்கோலே
பஞ்சணையாக, வேர்வையே குளியலாக, வெற்றுடம்பே பட்டா
டையாகக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்குப் பாது
காப்புத்தொகை, அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஒரு பாதுகாப்புத்
தொகையை கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு
கிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட்
டுப் பதில் பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவசாயக் கூலிகளில் பல பேர்கள் மலைப் பகுதிகளில்
விவசாயக் கூலி வேலை இல்லாத சமயங்களில் போய் கல்
பாசி, கடுக்காய், புங்கம் பருப்பு போன்ற மலைப் பொருள்
களை சேகரிப்பதற்காக மலைப் பகுதிகளுக்குள்ளே செல்கின்
றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி,
விவசாயக் கூலித் தொழிலாளி இறந்து விட்டால் நிவாரண நிதி
வழங்குவது பற்றியது மூலக் கேள்வி. நீங்கள் உயிரோடு இருக்
கிறவர்கள் செய்கிற வேறு தொழில்களைப் பற்றிச் சொல்கிறீர்
கள்.

திரு. வே. பெரியசாமி: அந்த விவசாயக் கூலிகள் அப்படிப்
போகின்ற போது, எதிர்பாராத சூழ்நிலைகளில் யானைகளால்
தாக்கப்பட்டு இறக்கிறார்கள். மரங்களில் ஏறி கல்பாசி
எடுக்கின்றபோது ஒரு கையை மரத்தில் பிடித்துக் கொண்டு
இன்னொரு கையால் கல்பாசி எடுக்கிறபோது சறுக்கி விழுந்து
இறக்கிறார்கள். இப்படி எல்லாம் இறக்கின்ற அந்த ஆதிவாசி
களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு நமது
அரசு விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இறந்து விட்டால்
வழங்குகின்ற தொகையை வழங்க ஆவன செய்யப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்
தொழிலாளி விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்
போது விபத்து ஏற்பட்டால் நஷ்ட ஈடு உண்டா என்பதுதான்
மூலக்கேள்வி. அந்த மூலக் கேள்விப்படி விவசாயத் தொழி
லாளி விவசாயத்தில் ஈடுபடுகிறபோது, விபத்து ஏற்பட்டால்
அரசு நிவாரணம் அளிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு அளிக்கப்படும் தொகை எவ்
வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இழப்பு ஏற்பட்டால்
10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு அவர்
களுடைய விபத்துக்கு ஏற்றவாறு அவர்களுக்கு நிவாரணத்தொகை
கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்றபோது என்று
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்தத் தொழிலில்
ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படும்? எந்
தெந்தத் துறைகளில் இருப்பவர்களை விவசாயத் தொழிலாளர்
களாக அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்றால் பயிர்
செய்கிற எல்லோருமே கேணி வெட்டுதல், ஆழப்படுத்தல்,
பூச்சி மருந்து அடித்தல், உழுவது, நடுவது இப்படிப்பட்ட
எல்லா தொழில்களுமே விவசாயம் தான். அதில் எல்லா
விவசாயத் தொழிலாளர்களுக்கும் உண்டு. குறு விவசாயி
களுக்கும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர்.
இராமசாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் விவசாயத்
தொழில் செய்கிறபோது இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்

படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றவர்கள் இறந்துவிட்டால் 20 ஆயிரம் ரூபாய் வழங்குவதாகக் கூறுகிறார்கள். ஆகவே, அதுபோல உழுகின்ற விவசாயிகளுக்கும் இந்தத் தொகை அதிகப்படுத்தி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் செல்வது மிக ஆபத்தான தொழில் என்பதால்தான் அதற்கு 20 ஆயிரம் ரூபாய் என்பது அரசினுடைய தனி உத்திரவு. ஆனால் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது போல ஆபத்து இல்லை என்பதால் இதற்கு அவ்வாறு இல்லை. ஆகவே, அதற்கு அரசு தனி உத்தரவு போட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலுக்கு, காட்டுப் பகுதிக்கு சென்றுவிட்டு திரும்பி வரும் போது பெரும்பாலும் பாம்பு கடித்து இறக்கின்ற நிலைமை கிராமப் புறங்களில் இருக்கிறது. அவர்கள் காட்டுப் பகுதியில் பாம்பு கடித்து இறந்து விடுவதால், கிராமப் பகுதிகளிலிருந்து அரசு மருத்துவமனைக்கு 'போஸ்ட் மார்ட்டம்' செய்வதற்கு, கொண்டு வருவதற்கு அவர்கள் வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தினால் அந்தந்த கிராமத்திலேயே அவர்களை அடக்கம் செய்து விடுகிறார்கள். அதற்கான நிவாரணத் தொகையை 'போஸ்ட் மார்ட்டம் சர்டிபிகேட்' காரணத்தால் அரசிடமிருந்து பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பாம்பு கடித்து இறப்பவர்களுக்கு மட்டுமாவது 'போஸ்ட் மார்ட்டம்' செய்வதிலிருந்து விதி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், பல கிராமங்களில் ஏழையெளிய அரிசனங்களுடைய குழந்தைகளை, 10 வயதிலேயே, படிக்கின்ற 5 வயதிலேயே





கூட குத்தகைதாரர்களிடம் விட்டுவிடுகிறார்கள். 2 வேளைக்கு சாப்பாடு போட்டால் போதும் என்று படிக்கின்ற வயதிலுள்ள ஆண், பெண் இருபாலரையும் விவசாய முதலாளிகளிடத்தில் விட்டு விடுகிறார்கள். அவர்கள் இதனால் படிக்காத சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, குறிப்பிட்ட 15 ஆண்டு காலகட்டாயம் இளம் வயதில் இருக்கிற சிறார்களை விவசாயக் கூலிகளாக நிரந்தரமாக வைத்துப் பயன்படுத்தக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிப்பார்களா? அதுமட்டுமல்ல, விவசாயக் கூலிகள் இறக்கின்ற நேரத்தில் குறைந்தது 50 ஆயிரம் ரூபாயாவது தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரிய விவசாயிகளிடத்தில் இவர்கள் நிரந்தரமாக இருக்கிற காரணத்தால் அரசாங்கம் தருகிற 10 ஆயிரம் ரூபாயோடு இவர்களிடமிருந்தும் 10 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.45

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர்களை வேலைக்கு வைக்கக் கூடாது என்பது தனி உத்திரவு. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. விவசாயத் தொழிலாளர்கள் என்கிற போது, விவசாயத் தொழிலாளர்கள் எங்கே இருந்தாலும் அரசு கொடுக்கிறது. ஆனால் தனியாரிடத்தில் வேலை செய்கிற போது ஆபத்து ஏற்பட்டால், தனியாரிடத்திலிருந்தும் பெறுவதற்கு அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 221 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

221—

கைத்தொழில் பாடத்தை தேர்விற்குரிய பாடமாக்கல்.

*924 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கைத்தொழில் பாடத்தை தேர்விற்குரிய பாடமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கைத்தொழில் பாடத்தை தேர்வுக்குரிய பாடமாக ஆக்காத காரணத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன. அமைச்சரவர்கள் 'இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலிக்க இயலுமா? 'இல்லை' என்பதற்கான காரணத்தையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு வைக்காததால் எந்த மோசமான விளைவுகளும் ஏற்படக்கூடுமென்று எனக்குத் தெரியவில்லை. எந்தவிதமான விளைவுகளும் ஏற்படாதென்றுதான் கருதுகிறேன். தேர்வு நடக்காது, அவ்வளவுதான். அந்தத் தேர்விலே மார்க் போடமாட்டார்கள்; அந்த மார்க்கை ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்குப் பாஸ் போடும் போது கணக்கிலே எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதைத் தவிர வேறு தவறான விளைவுகள் எதுவும் ஏற்படாது. தேர்வு இல்லாத காரணத்தால் அந்த பாடங்களைச் சரியாக நடத்தாமல் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் தேர்வு இல்லை. பிளஸ் 2 வகுப்புகள் நடக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் வொகேஷனல் கல்வி என்று சொல்லி தொழில் கல்வி அளிக்கிறோம். அதிலே தேர்வு இருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு இல்லாத காரணத்தால் அந்தப் பாடங்களைச் சரியாக நடத்துவதே இல்லை. அவர்களுக்குச் சரியாக படிக்க வேண்டுமென்ற எண்ணமும் வருவது இல்லை. ஆகவேதான் அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மேலும், நடுநிலைப் பள்ளிகளில் நீண்ட பல ஆண்டுகளாகப் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே உத்தரவிடப்பட்டும், அது நடைமுறைக்கு வரவில்லை. சென்ற ஆட்சிக் காலத்தில், அது எம்.ஜி.ஆர். அவர்கள் போட்ட உத்தரவு என்பதால் அதற்கு மூடு விழா பண்ணி விட்டார்கள். ஆனால், ஜி.ஓ. உயிரோடு இருக்கிறது. மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி நடக்கிற காரணத்தால், அதைப் பரிசிலனை செய்து, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை முழுநேர ஆசிரியர்களாக்க அரசிடம் கருத்துரு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமான பரிசீலனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் பலர் அவர்களே, தமிழகத்தில் எம்.ஏ., பி.ஏ., படித்துவிட்டு எஜிகேஷனல் வேலையில்லாமல் இருக்கின்ற காரணத்தாலே, உடனடி கசிகுலத்தையே மாற்றி, ஜாப் ஓரியண்டட் கல்வியை ஏற்பாடு யாகத் தமிழகத்திலே கொண்டுவர தமிழக அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் திட்டத்தை தேசிய அளவிலே மாற்றம் செய்ய, கொள்கை அறிவித்து, அதற்கான எல்லா விளக்கங்களும் தரப்பட்டு, கடந்த 4, 5 ஆண்டுக் காலத் திற்கு மேலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே இதற்கெல்லாம் இடமிருக்கிறது. மாணவர்கள் அதை எடுத்துப் படிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விச் சாலைகளிலே நடைபெறுகின்ற தொழிற் கல்விக்கு மத்திய அரசு பல கோடி ரூபாயை நிதியாகத் தந்த போதிலும் கூட, அந்த ஆசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படாமலும், ஊதியம் வழங்கப்படாமலும் இருக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, கைத் தொழில் பாடத்தைத் தேர்வுக்குரிய பாடமாக ஆக்குவது பற் றியது. நீங்கள் ஆசிரியர்களை நிரந்தரம் ஆக்குவது பற்றிக் கேட்பது இதிலே துணைக் கேள்வியாக அமையாது. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தொழில் பாடமானது பல பள்ளிகளிலே '' வொகேஷனல் டிரெயினிங் '' என்று கொடுக்கப்படுகிறது. வொகேஷனல் டிரெயினிங் சொல்லிக் கொடுப்பவர்கள் அந்த வேலையிலிருந்து விடுபடும்போது, மீண்டும் அந்தப் பதவிக்கு யாரையும் போடாமல் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்து, உடனுக்குடன் கைத்தொழில் ஆசிரியர்களை நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50 [1992 மார்ச் 16

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இல்லாது இருக் கிற, காலியாக இருக்கிற பணியிடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்கிற கருத்துரு பரிசீலிக்கப்பட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே கேட்கப்பட்டிருக்கிற மூலக் கேள்வி, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் கேட்டிருப்பது, நடுநிலைப் பள்ளிகளில் நாம் கைத்தொழில் பாடம் என்று வைத்து இருக்கிறோம், அந்தப் பாடத் திட் டத்தைப் பொறுத்தவரையில் தேர்வு உண்டா என்று கேட் டிருக்கிறார். தேர்வு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 222, திரு. வே. தம்புசாமி—இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் கேட்கிறார்.—மாண்புமிகு கல்வி அமைச்சர். இது திரு. வே. தம்புசாமியினுடைய தொகுதி சம்பந்தப்பட்டது.

222—

திருவாரூரில் பெண்களுக்குத் தனிக் கல்லூரி.

*1521 திரு. வே. தம்புசாமி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் நகரத்தில் பெண்களுக்கு தனிக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனை அரசு பெண்கள் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ? அதாவது 5,000-க்கு மேற்பட்ட பெண்கள் இருக்கிற ஒரு தொகுதியில்...



1992 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் நீங்கள் கேள்வி கேட்கிறபோதே உங்களிடம் கேட்டேன். திருவாரூரில் பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது. நீங்கள் கேட்பதற்கு அவரிடம் பதில் இருக்காது. தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 223. திரு. செ. து. வரதராஜன்—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

223—

மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள்.

*4496 திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாசுக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடங்கள் தமிழகத்தில் செயல்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் அவை இயங்குகின்றன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங் கள் சென்னை, மதுரை, சேலம், மறைமலைநகர், அம்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இது தவிர, ஆறு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஓசூர் மற்றும் மணலி போன்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரில் நான்கு புறங்களில் இருந்து சாலைகள் வந்து சேருகின்றன. தெற்குப் புறத்தில் சாராய பேக்டரியின் துர்நாற்றம் செங்கல்பட்டு நகரைத் தாக்குகிறது. வடக்குப் பகுதியில் லைட் ரூபிங் கம்பெனியினுடைய தார் சுடும் துர்நாற்றமும், குப்பைகளின் நாற்றமும் செங்கல்பட்டு நகரைத் தாக்குகின்றன. கிழக்குப் பகுதியில், கிளிஞ்சல் சுண் ணாம்பு சுடுவதும், மாட்டு இறைச்சியின் துர்நாற்றமும் செங்கல் பட்டு நகரைத் தாக்குகின்றன. மேற்குப் பகுதியில் எல். ஜி

[1992 மார்ச் 16

ரப்பர் பேக்டரியினுடைய ரப்பர் சுடும் நாற்றமும், இரவெல்லாம் காஸ் விடுபட்டு நாற்றமும் வருவதால், அங்கேயிருக்கின்ற மக்களுடைய சுகாதாரம் மிகவும் சீர்கேடு அடைந்து இருக்கின்றது. செங்கல்பட்டில் சுமார் 60 ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். இது நீண்ட நாளாக இருக்கிற கோரிக்கை. இந்தத் தொழிற்சாலைகள் அனைத்தும் மிகுந்த வசதி படைத்தவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தினாலும், அரசியல் செல்வாக்கு அவர்களுக்கு இருப்பதாலும், இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வரும் துர்நாற்றத்தைத் தடுக்க....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. செ. து. வரதராஜன், இது துணைக் கேள்வி. என்ன கேள்வி கேட்க வேண்டும் என்பது தெரிந்து தொடர்புடைய துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

<u>திரு. செ. து. வரதராஜன்:</u> ஆகவே அரசு நடவடிகை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக புகார்கள் வந்திருந்தால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து இருக்குமென்று நான் நம்புகிறேன். ஒருவேளை இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படாமலோ அல்லது புகார்கள் வராமலோ இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை எழுத்து மூலமாக இப்போதே என்னிடம் கொடுத்து விட்டால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

<u>திரு. செ. து. வரதராஜன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற சாராய பேக்டரி உடையாருக்குச் சொந்தமானது. அங்கேயிருந்து ஏற்படுகிற துர்நாற்றத்தை தெற்குப் பகுதியிலிருந்து செங்கல்பட்டுக்கு வருகிற அத்தனை பேரும் அறிவார்கள். அது இரவாக இருந்தாலும் சரி, பகலாக இருந்தாலும் சரி, எந்த நேரத்திலும் அந்த நாற்றத்தை நுகர்ந்த உடனேயே, செங்கல்பட்டு வந்து விட்டது என்று அறியும் உணர்வு இங்கே இருக்கிற அத்தனை பேருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே அந்த துர்நாற்றத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு சாராய பேக்டரியில் இருந்து வெளியேறுகிற கெமிக்கல் வாட்டர், பக்கத்தில் இருக்கிற ஆற்றில் கலக்கிறது. அப்படிக் கலந்து, செங்கல்பட்டு பக்கத்தில் இருக்கிற வேதநாராயணபுரம் பம்ப்பிங் ஸ்டேஷனிலும் அந்த கெமிக்கல் கலந்திருக்கிற காரணத்தால், அங்கேயிருந்து எடுக்கப்படுகிற தண்ணீரின் நிறமே மாறிப்போய், தண்ணீரின் சுவையும் மாறிவிட்டது. அந்தத் தண்ணீரை அருந்தினால்



1992 மார்ச் 16]

இன்னும் 30 ஆண்டுக் காலத்திற்குள் அங்கே இருக்கின்றவர்களுடைய பற்கள் விழுந்து போகும் என்று மெடிக்கல் சர்டிபிகேட்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் பரிசோதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைக் குடிக்கலாம் என்று சர்டிபிகேட் தருகிறார்கள். தயவுசெய்து இப்போதுகூட நீங்கள் வந்து பார்க்கலாம். இரண்டு கிளாஸ்களில் எடுத்துப் பார்த்தால் கலர் நன்றாகத் தெரியும். இவர்கள் எப்படி அந்தத் தண்ணீர் நன்றாக இருக்கிறது என்று சர்டிபிகேட் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இது மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறிப்பிட்ட தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போதே உடனடியாக மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அங்கே சென்றுபார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாக இதைக் கொடுத்திருந்தால் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்க முடியும். இப்போது அவர்கள் எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9–55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. கே. செல்வராஜ்.

<u>திரு. கே. செல்வராஜ் ;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கோயம்புத்தூரில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வுக்கூடம் நடமாடும் ஆய்வுக்கூடமாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். தென்னிந்தியாவினுடைய மான்செஸ்டர் என்று புகழ் பெற்ற கோவை நகரம் பெரிய தொழில்கள் நிறைந்த நகரம். அங்கே நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால், சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால் அங்கே மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிரந்தர ஆய்வுக்கூடத்தை அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் உள்ள நடமாடும் ஆய்வுக்கூடம் கோயம்புத்தூருக்குள்ளேதான் நடமாடிக் கொண்டிருக்கும். வெளியே போகாது. எனவே ஓர் இடத்திலே இருப்பதைவிட வசதியாக அந்தந்த இடத்திலே இருக்கின்ற காற்று ஆகியவற்றையெல்லாம் பார்ப்பதற்கு வசதியாக இருப்பது நடமாடும் ஆய்வுக்கூடம் என்பது. எனவே நிரந்தரமாக இருப்பதைவிட நடமாடும் ஆய்வுக்கூடமாக இருப்பதே வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[1992 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நடமாடும் ஆய்வுக் கூடங்கள் பல இடங்களிலே இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிக அளவு தொழிற்சாலைகள் எங்கள் தொகுதியான சிவகாசி தொகுதியிலேதான் இருக்கின்றன. மேலும் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலையும் உள்ளது. அங்கே புகை மண்டலமாகக் கிளம்பி கிட்டத்தட்ட 20 மைல் தூர சுற்றளவிற்கு ஆஸ்துமா நோயையும் மற்றும் கேன்சர் நோயையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தும்படி மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே ஆய்வுக்கூடம் என்பது அங்கங்கே இருக்கிற கழிவு நீர் சுத்தம் செய்யப்படுகிறதா, இன்னும் எவ்வளவு சுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு மட்டுமே இருக்கிறது. அந்த ஆய்வுக்கூடங்கள் எந்த இடத்திலேயிருந்தும் கழிவுநீர் போன்ற மற்றவற்றையும் எடுத்துக் கொண்டு வந்து அந்த ஆய்வுக்கூடங்களிலே நம்மாலே ஆய்வு செய்ய முடியும். பல இடங்களிலேயிருந்து கொண்டு வருவதற்கு கஷ்டமாக இருக்கிறது என்பதால்தான் வாரம் ஒரு முறை இந்த நடமாடும் ஆய்வுக் கூடங்கள் அங்கே போய்ப் பார்க்க வேண்டும் என்று வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடங்களில் இது போன்ற பிரச்சினைகள் இருக்குமானால் அந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுப்பார்கள். தேவைப்பட்ட எந்தப் பொருளையும் ஆய்வுக் கூடத்திலே கொண்டு வந்து அதை ஆய்வு செய்வதற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 224 திரு. என். பன்னீர் செல்வம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

224—

வன உயிரியல் பட்டமேற்படிப்பு முடித்த மாணவர்கள்.

*4342 திரு. என். பன்னீர் செல்வம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;



1992 மார்ச் 16]

(அ) வன உயிரியல் பட்ட மேற்படிப்பு முடித்த சுமார் 200 மாணவர்கள் இதுநாள்வரை எந்தப் பணியிலும் அமர்த்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களுக்கு I. F. S.-க்கு இணையான படிப்பு உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உதவி வனப்பாதுகாவலர் மற்றும் வன சரகர் நேரடி நியமனத்திற்குரிய கல்வித் தகுதியில் வன உயிரியல் பட்ட மேற் படிப்பு ( M.Sc., Wild life Biology ) படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன் மூலம் வன உயிரியல் பட்ட மேற்படிப்பு (M.Sc., Wild life Biology) படித்தவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொண்டு வனத்துறையில் உதவி வனப் பாதுகாவலர்/சரகர் ஆக நேரடி நியமனம் பெற வாய்ப்புள்ளது.

(ஆ) இந்த பட்ட மேற்படிப்பு முடித்தவர்களை Indian Forest Service-க்கு இணையான படிப்பு உயர்வு அளித்தல் குறித்து வனத்துறையில் ஏதும் செய்ய இயலாது.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று வனத்துறையினுடைய படிப்பைப் படிக்கக்கூடிய அமைப்புகள் இந்தியாவிலேயே இரண்டு இடங்களிலே தான் இருக்கின்றன. அதிலே ஒன்று, மயிலாடுதுறையில் உள்ள ஏ.வி.சி. கல்லூரியாகும். அந்தக் கல்லூரி 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு , இதுவரையில் 150 மாணவர்கள் படித்து வெளியேறியிருக்கிறார்கள். இப்போது 15 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை யாருக்குமே வேலை கொடுக்கப்படவில்லை. ஆகவே இது போன்றவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்கப்படுமா? அல்லது வேலை கொடுத்து இதுவரை எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் அளவிற்கு இணையாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வாய்ப்பில்லை. இது போன்று பட்டப் படிப்பு முடித்தவர்கள் 313 நபர்கள் இருக்கிறார்கள்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற அண்ணா உயிரியல் கல்லூரியிலே 6 மாணவர்கள் தினக்கூலியாக வேலை செய்து

கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படுவார்களா? அடுத்து எம். ஏ., பி. ஏ., படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதுவதற்கு எப்படி அனுமதிக்கப்படுகிறார்களோ அதைப்போலவே உயிரியல் சம்மந்தமாக எம்.எஸ்.ஸி., படித்தவர்கள் ஐ.எஃப்.எஸ் தேர்வு எழுத இந்த அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு திரு. கே: ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகப் பணியில் இருக்கின்றவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்களா என்று முதல் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். அது போன்ற கேள்விக்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எம்.எஸ்.ஸி. பட்டம் படித்தவர்களுக்கு அங்கே இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் (ஐ.எப்.எஸ்.) அளவுக்கு பதவி உயர்வு செய்வதற்கு இங்கே தற்சமயம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்:

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர் செல்வம் கேட்டபொழுது எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று அவர்கள் கேட்டார்கள். அமைச்சர் அவர்களும் முன்னூற்றுச் சில்லரை பேர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு, வனப் பட்டம் படித்தவர்களுக்கு வேலை அளிக்கப் பட்டு இருக்கிறதா? அப்படி இன்னும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை என்றால், எத்தனை ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு வேலை அளிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்ப அவர்களுக்கு வேலை அளிக்கப்படும்.

மாண்புமிகு போவைத் தலைவர்: வினா எண் 225. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

225—

காடுவளர்ப்புப் பணியினை கண்டறிய பொதுமக்கள் பிரதிநிதி.

*5211 திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் வன இலாகா அலுவலர்கள் காடு வளர்ப்புப் பணியினை சிறப்பாகச் செய்கிறார்களா என்பதனைக் கண்டறிய பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு வாய்ப்புத்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு .கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் வன இலாகா அலுவலர்கள்,பணியினை சிறப்பாகச் செய்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்கு பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு அரசு ஏற்கனவே வாய்ப்பு அளித்துள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,சமூக நலக் காடு வளர்ப்புத் திட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வன இலாகா அலுவலர்கள் அவர்கள் இஷ்டப்படி கண்மாய்களையும், புறம்போக்குகளையும் சாலைகளையும் தேர்வு செய்து மரத்தை நட்டு வளர்ப்பதாகப் பதிவு செய்துகொண்டு பல கோட்டங்களில் செலவு செய்து வருகின்றார்கள். அதே கண்மாய் அல்லது புறம்போக்கு சாலைகளைத் தேர்வு செய்து உள்ளாட்சித் துறை மூலம் ஊராட்சி கூடுதல் ஆணையாளர் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்களை நட்டு வளர்ப்பதாக பதிவு செய்து வருகிறார்கள். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எந்தப் பகுதியை எடுத்துச் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அதற்கு விரிவான தேர்வுக் கூட்டம் பொதுமக்கள் பிரதிநிதிகளைக் கூட்டி நடைபெறுகின்றது. ஆனால், சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் எந்தப் பகுதியில் இந்த ஆண்டு மரங்கள் நட வேண்டும் என்பதைத் தேர்வு செய்ய பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் நடைபெறவில்லை. ஆகவே, அந்தப் பணி எத்தனை கோடி செலவில் எங்கு நடைபெறுகிறது என்பதே தெரியாத நிலைமை இருக்கிறது. அரசு அதற்கு ஏற்கனவே வழிவகை செய்து இருக்குமேயானால் அதனை வலியுறுத்தி அந்தக் கூட்டங்களை நடத்தி, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்தியில் எவ்வளவு செலவு செய்ய வேண்டும். எங்கு, எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாவட்ட ஆட்சித் தலைவருடைய

தலைமையின்கீழ் சமூகக் காடுகள் கோட்ட அலுவலர்கள் அதேபோல பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறையை சார்ந்த அதிகாரிகள், மாவட்ட அளவில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதிலே இடம் பெற்று இருக்கிறார்கள். எந் தெந்தப் பகுதியில் இதுபோன்ற கூட்டங்கள் கூட்டப்பட வில்லை என்று நீங்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எனக்குத் தெரிய எங்கள் இராமநாத புரம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட கூட்டம் கடந்த ஒரு மாதத்திற்கு முன்புதான் கூட்டப்பட்டது; கடந்த 6 அல்லது 7 ஆண்டுகளாக அது கூட்டப்படவில்லை. நான் வலியுறுத்தியத னால் அதைக் கூட்டினார்கள். இதே நிலைமை எல்லா மாவட்டங்களிலும் இருப்பதாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே இங்கு தெரிவிக்கின்றார்கள். இந்தக் கண்மாய் களைத் தேர்வு செய்கின்றபொழுது உள்ளாட்சித் துறை கண்மாய் என்று சொன்னால் அவர்கள் உள்ளாட்சித் துறையின் அனுமதி பெற்று மரங்களை நடவேண்டும் ; பொதுப்பணித் துறை கண்மாய் என்று சொன்னால் பொதுப்பணித்துறையிடம் அனுமதி பெறவேண்டும். ஆனால், இதைத் தவிர்த்து அந்த வன இலாகா அதிகாரிகள் அந்த ஊராட்சி, கிராமப் பஞ்சாயத் தின் தலைவரிடம் ஓரலாக, வாய் மூலம் சொல்லி விட்டு ' உங்கள் கண்மாயில் நடப்போகின்றோம் ; அனுமதி கொடுங் கள் ' என்று கேட்டுக்கொண்டு நடுவதாகப் பதிவு செய்கிறார் கள். அதனால் அங்கே அந்த மரத்தைப் பராமரிப்பது பொதுப்பணித் துறையா, வன இலாகாவா என்ற தகராறுகள் சில கிராமங்களிலே வந்து சேருகின்றது. மரங்களை நட்டு வளர்ப்பதாகப் பதிவு செய்துகொண்டு, இயற்கையாக உண்டான வேலிகருவேல மரங்களைக்கூட வன இலாகாவினர் தனியாக ஏலம் விட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு அவர்கள் தள்ளப்படு கிறார்கள். கிராமத்தார் அதைத் தாவா செய்கின்றார்கள். ஆகவே, பராமரிக்கப்படுகின்ற அந்த புறம்போக்குப் பகுதி வருவாய்த்துறை என்றால் வருவாய்த் துறையிடமும், பொதுப் பணித்துறை என்றால் பொதுப்பணித் துறையிடமும், உள்ளாட்சி துறை என்றால் உள்ளாட்சித் துறையிடமும் அனுமதியைப் பெற்று அவர்கள் மரம் நட உத்தரவிட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டதிலே உள்ளாட்சித் துறையின் சார்பாக 60 சதவீதம்



மரங்கள் நடுகிறார்கள். உள்ளாட்சித் துறையே அதை நடத்து கிறது. அதற்கும் வனத்துறைக்கும் சம்பந்தமே கிடையாது. அதைப் போல 40 சதவீதம் வனத்துறையில் சமூக நலக்காடுகள் திட்டத்தின் அடிப்படையில் நாங்கள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். இதிலே வருவாய்த் துறை மற்றும் பொதுப்பணித் துறை இடம் பெறுவது இல்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கிடைப்பதாலும், அவர்கள் நீண்ட நாட்களாக நிரந்தரமாக பணியமர்த்தப் படாத காரணத்தாலும் அவர்கள் தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்வதில்லை. எனவே, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தவும், பணியை நிரந்தரம் செய்வதற்கும் அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960 ஆம் ஆண்டுதான் இந்தத் திட்டம் முதன் முதலாக துவக்கப்பட்டது 1980–ஆம் ஆண்டு வரை 1 1/2 இலட்சம் எக்டேர் தான் அதிலே பயிரிட்டார்கள். ஆனால் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகு 1991–92 ஆம் ஆண்டு மட்டும் இதற்காக 22 கோடி ரூபாய் செலவு செய்து கொண் டிருக்கிறோம் ஆகவே, உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டது அங்கே பணியாற்றுகிற பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னதைப் போல. அரசு அதிகாரிகள் இருந்தால் அதை டி. சரியாகச் செய்ய முடியாது. அந்த நோக்கம் நிறைவேறாது. ஆகவே, சமூகநலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை தனியா ரிடம் ஒப்படைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

[1992 மார்ச் 16

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் எங்கும் இல்லாத அளவுக்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள், தனியாரை ஊக்குவிக்கிற வகையில் சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்கு வருகிற ஆண்டில் இதற்கான திட்டப் பணியை நாங்கள் துவக்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தை சில இன்ஸ்டிடியூஷன்ஸ் அடிப்படையில் நிறைவேற்றுகிற நோக்கத்தோடு கல்லூரிகள், தமிழகத்திலே இருக்கிற பள்ளிகள் போன்ற இடங்களிலும், மற்றும் தொழிற்சாலைகள் அமைந் திருக்கிற இடங்களிலும் குறிப்பாக இந்த சமூக நலக்காடுகள் வளர்க்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 226— திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

226—

கைத்தறி நெசவாளர்களுக்கு தறி நெசவுக்கூடம்.

*3503 திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு தறிநெசவுக்கூடம் இணைந்து வழங்கும் திட்டத்தில் அதிகமாகக் கைத்தறிகள் உள்ள சின்னாளபட்டிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1992 மார்ச் 16]

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர்களுக்கு சின்னாளப் பட்டியில் 165 தறிக்கூடத்துடன் இணைந்த வீடுகள் கீழ்க்கண்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தற்போது கட்டப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | .. | 52 வீடுகள் |
| 2. கலைமகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | .. | 56 வீடுகள் |
| 3. அஞ்சுகம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | .. | 57 வீடுகள் |
| ஒட்டுமொத்தமாக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. | .. | 165 |

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கேளுங்கள் தரப்படும். தட்டுங்கள் திறக்கப்படும் என்று இயேசுபிரான் கூறியுள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கேட்பவர்களுக்கு இல்லையென்ற சொல்லே இல்லாத நிலையில் 5,000 விசைத் தறிகள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று நம்முடைய பட்ஜெட்டில் கூறப்பட்டிருக்கிறது, அதன் படி கைத்தறி நெசவாளர்கள், கைத்தறியை நம்பியுள்ளவர் கள் அதிகமுள்ள என்னுடைய சொந்த ஊரான சின்னாளப் பட்டிக்கு விசைத்தறிகள் அதிக அளவுக்கு ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி வீடு கட்டுகிற திட்டத்தை பற்றியதாகும், இப்போது சின்னாளம்பட்டியில் விசைத் தறிகள் தரப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஊருக்குப் பெயர் சின்னாளப்பட்டி, சின்னாளம்பட்டி அல்ல.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சின்னாளப்பட்டித் தமிழகத்தில்வீடு கட்டுகிறத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 2000 வீடுகள் கட்டவிருக்கிறோம், அதன்கீழ் கேள்வி வருமானால், பதில் அளிக்கலாம், உறுப் பினர் அவர்களுக்கு விசைத்தறிகள் குறித்து கேட்க வேண்டு மென்றால் அதுகுறித்துத் தனிக் கேள்வி போடவும்.

[1992 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 227— திருமதி செ, சுந்தராம்பாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

227—

மேட்டூர் நகரியத்தில் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு,

*260 திருமதி செ, சுந்தராம்பாள் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

மேட்டூர் தொகுதியில். மேட்டூர் நகரியத்தில் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின்சாரம் வழங்க தடை விதித்துள்ளதைத் தளர்த்தி மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே புறம்போக்கு மற்றும் அரசுத் துறைகளுக்குச் சொந்தமான நிலங்களில் கட்டியுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் நேரத்தில் நடைமுறையிலுள்ள மின்சார வாரிய விதிகளின்படி சம்மந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடமிருந்து தடையில்லா சான்றிதழ் அதாவது No Objection Certificate பெறப்பட வேண்டும். மேட்டூர் நகரியத்திற்கும் இதே விதிதான் கடைபிடிக்கப்படுகிறது,

முற்பகல் 10—10,

திருமதி செ, சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. மேட்டூர் நகரியத்தில் நூற்றுக்கு 75 பர்செண்ட் வீடுகள் பட்டா இல்லாமல் உள்ளன, மறைந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின்போது. பட்டா இல்லாத வீடுகளுக்கு N.O.C. வழங்கப்பட்டு. மின் இணைப்பு வழங்கப்பட்டது, கடந்த 3 ஆண்டுக்காலமாக மின்சார வாரியம் என்ன காரணத்தாலோ, அந்த உதவியை நிறுத்தி வைத்துள்ளது, தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில். என்.ஓ.சி. சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டு, மீண்டும் பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நகரியக் குழு எல்லையில் உள்ள பெரும்பாலான இடங்கள் பொதுப்பணித்துறை வருவாய்த்துறை மற்றும் நகரியக் குழுவிற்குச் சொந்தமான இடங்களாக இருக்கின்றன. மேட்டூர் நகரியக் குழு நிர்வாக அலுவலர்கள் வழங்கும் தடையில்லாச் சான்றிதழ் அடிப்படையில் மின் இணைப்பு வழங்க உத்தரவுகள் அளிக்க அரசின் ஆணை 22—3—1991 நாளிட்ட கடிதத்தில் அரசிடமிருந்து மின் வாரியத்திற்கு ஒரு கோரிக்கை வந்தது, என்.ஓ.சி. இல்லாவிட்டாலும்கூட இந்த மின் இணைப்பு வழங்கலாமா என்பதைப்பற்றி மின் வாரியத்திற்கு அரசிடமிருந்து ஒரு கோரிக்கை கேட்கப்பட்டது. அவ்வாறு அரசு உத்தரவிடுமானால் நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று மின்சார வாரியமும் அதற்கான பதிலைத் தந்தது. அதற்குப் பின்னால். 15—2—1991 அன்று அந்தக் கோரிக்கை கைவிடப்பட்டு, பழைய முறையிலே, அதாவது என்.ஓ.சி. பெற்றவர்களுக்குத்தான் மின் இணைப்பு வழங்கவேண்டும் என்று அரசு நம்முடைய அரசு வருவதற்கு முன்னாலே. நம்முடைய ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்னாலே 15—2—1991 தேதியன்று அரசு ஒரு கடிதத்தை மின்சார வாரியத்திற்கு அனுப்பி இருக்கிறது, அதன் காரணமாகத்தான் மின் இணைப்பு என்.ஓ.சி. இல்லாமல் வழங்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இப்போது பெரும்பாலான இடங்களில் இப்படி நாம் மின் இணைப்பு கொடுக்கின்ற நேரத்தில் ஆக்கிரமிப்பு செய்கின்ற காரணத்தாலே, புறம்போக்கு இடங்களில் ஆக்கிரமிப்பு அதிகமாகின்ற காரணத்தாலே இது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஒப்பற்ற தலைவியாகிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே பட்டா இல்லாத வீடுகளில் உள்ள படிக்கும் குழந்தைகள் மின்சாரம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், எனவே தாய் உள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் அவர்களது படிப்பை முன்நிறுத்தியாவது அத்தகைய வீடுகளுக்கு, பட்டா இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தலைவர் அவர்களே நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன், அந்த மாதிரி விதிகளைத் தளர்த்தி மின்சார வாரியத்திற்கு அனுப்பினால் மின்சார வாரியம் அந்த இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 228, திருமதி மரியமுல் ஆசியா, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்,

228—

மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்திற்கு திருப்பிவிடல்,

*2887—திருமதி கே.மரியமுல் ஆசியா :

திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்திற்கு திருப்பி விட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி கே. மரியமுல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை தமிழகத்திற்குத் திருப்பி விடும் திட்டத்தில், பாண்டியாறு புன்னம்புழாத் திட்டத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கிழக்கே திருப்பி விடுகின்ற இந்தத் திட்டம், நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, மிக முனைப்போடு, கேரள அரசோடு இன்றைக்கு பல்வேறு தொடர்புகளை வைத்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட, பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்திற்கும் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளான, பாண்டியாறு-புன்னம்புழா, ஆனைமலை ஆறு, நல்லாறு, பாம்பாறு, சிரியாறு, அச்சன் கோயில் ஆறு போன்ற ஆறுகளின் மூலமாக 2,000 டி.எம்.சி.



தண்ணீருக்கு மேல் மேற்கு அரபிக்கடலில் கலப்பதாகவும், அதிலே 800 டி.எம்.சி. வரைக்கான தண்ணீரைத் தமிழகத்திற்கு திருப்பி விடலாம் என்றும், தேசிய நீர் வள அபிவிருத்திக் குழு 'நேஷனல் வாட்டர் டெவலப்மென்ட் ஏஜென்சி அண்மையிலே ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது. அந்த 800 டி.எம்.சி. தண்ணீர் என்றால், நமக்கு 4 மேட்டூர் டாமுக்கு விடுகின்ற தண்ணீருக்கு ஒப்பாகும், நடுவர் மன்றத் தீர்ப்புப் படியான தண்ணீருக்கு ஒப்பாகும். எனவே, அந்த மேற்கு நோக்கிப் பாய்கின்ற அந்த ஆறுகளினுடைய தண்ணீரைத் திருப்பி விடுகின்ற நடவடிக்கையை விரைவாக இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு பேரவைத் தலைவர் மூலமாக இந்த அரசுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று வாடிக்கொண்டிருக்கிற தென்னை மரங்களுக்கு தண்ணீர் விடவேண்டுமென்று இந்த அரசை நாங்கள் நீண்ட நாட்களாக கேட்டு வந்தோம். வாடிய பயிரைக் கண்டபோது வாடினார் வள்ளலார் என்று சொல்வார்கள். வாடிய தென்னை மரங்களுக்குத் தண்ணீர் விட வேண்டுமென்று நாங்கள் சொல்லக் கேட்டே, அதற்கு உயிர்த் தண்ணீர் விட உதவிய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை பொறியாளர் அவர்களுக்கும், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, உடுமலை தொகுதிகளின் தென்னை விவசாயிகளின் சார்பாகவும், எனது சார்பாகவும், நாங்கள் சார்ந்திருக்கின்ற உழவர் உழைப்பாளி கட்சித் தலைவர், சொல்லேர் உழவர் செல்லமுத்து அவர்களின் சார்பாகவும், இந்த அரசுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் என்றென்றும் காணிக்கையாக்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவை விட்டு விட்டீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரை கிழக்கே வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு திருப்பி விடவேண்டுமென்று ஒரு ஆய்வு செய்யப்பட்டு, இன்றைக்கு 'நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி' என்று சொல்லப்படுகின்ற அந்தக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில் ஏறத்தாழ 23 டி. எம். சி. தண்ணீரை திருப்பி விடலாம் என்ற ஒரு ஆய்வு செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமான பேச்சுவார்த்தை கேரள அரசோடு நாம் பேசி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டிற்கும் கேரளாவிற்கும் ஏற்கெனவே ஒப்பந்தம் ஏற்பட்டு, ஏற்கெனவே 28 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பிவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 2.5 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பிவிட வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தம் செய்வதற்காக இப்பொழுது பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இது இரண்டு மாநிலங்கள் சம்பந்தமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் ஒரு சுமுகமான அடிப்படையில், இந்த இரண்டு அரசுகளும் பேசி இந்தத் திட்டத்திற்கான முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய ஒப்பற்ற தலைவி, முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியின் காலத்திலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுகிற வகையில் அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்திற்குத் திருப்பி விடுவதற்கு கேரள அரசு தமிழக அரசுக்கு என்னென்ன நிபந்தனைகளை விதிக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இந்த அவையில் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகளைப் பற்றி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தமட்டில், பொதுவாக எந்த நிபந்தனைகளையும் அவர்கள் விதிக்கவில்லை இப்போது நடைமுறையில் எப்படி செய்யலாம் என்ற ஆய்வு 'நேஷனல் வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி' என்று சொல்லப்படுகின்ற தேசிய நீர்ப்பாசனக் குழு அதற்கான ஆய்வு செய்து கொண்டு வருகிறது. அதனுடைய அறிக்கையின் அடிப்படையிலே முடிவுகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இன்றைக்கு பூர்வாங்க ஆய்வு அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிபந்தனை எதுவும் புதியதாக விதிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக முழுமையாகப் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிகின்ற நேரத்திலேதான் அது பற்றிய விவரம் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் [illegible] திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு. [illegible] பொதுப் பணித்துறை அமைச்சர். [illegible]



229—

## நந்தியாற்றின் பாசன வசதி.

*4314 திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருத்தணி வழியே ஓடும் நந்தியாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டியுள்ளதால் செங்கற்பட்டு -எம்.ஜி.ஆர் மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நந்தியாற்றுப் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்குப் போதுமான நீர்வரத்தைப் பெற அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நந்தி ஆற்றின் குறுக்கே ஏதும் அணை கட்டப்படாததால் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தியாற்றின் குறுக்கே அணை கட்டப்படவில்லை என்பது அறிந்த ஒன்று. நந்தியாற்றில் அதாவது பள்ளிப்பட்டு மேலே அம்மபள்ளி டாம் என்ற ஒரு டாம் கட்டப்பட்டிருக்கிறது. குசஸ்தலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கின்றது அந்த டாம். குசஸ்தலை ஆற்றினுடைய கிளை நதியாக அந்த நந்தியாறு இருக்கிறது. எனவே அந்த குசஸ்தலை ஆற்றிலிருந்து வருகின்ற நீர் அந்த நந்தியாற்றுக்கு வர வேண்டியிருக்கின்ற காரணத்தினால் அம்மபள்ளி அருகே ஆந்திர அரசு டாம் கட்டிவிட்ட காரணத்தினால் கடந்த 10 ஆண்டுகளாக அந்த நந்தியாற்றுக்கு வரவேண்டிய நீர் வராதிருக்கின்ற காரணத்தால், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சார்ந்த அந்த நந்தியாற்றுப் பாசனத்தை நம்பியிருக்கின்ற விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனாருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20. [1992 மார்ச் 16

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டம் திருத்தணியில் உள்ள ஐயனேரியினுடைய மிகையான நீர் வெளியேறி அது நந்தியாறு என்று அழைக்கப்படுகிறது. நந்தியாறு என்பது நம்முடைய தமிழ்நாட்டின் பகுதிகளிலே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒரு ஆறு. அது செங்கல்பட்டு— எம்.ஜி.ஆர். மாவட்டம், இராமநாதபுரம் கிராமத்தின் அருகே நகரி ஆற்றில் கலக்கிறது. நகரி ஆறு என்பது ஆந்திராவிலிருந்து உருவாகி நம்முடைய பகுதியிலே வந்து இந்த இரண்டு ஆறுகளும் ஒன்றாக சேர்ந்து நிறைந்து அதற்குப் பின்னாலே பூண்டி ரிசர்வாயருக்கு இந்தத் தண்ணீர் வந்து சேருகிறது. நம்முடைய தமிழ்நாட்டின் பகுதியான நந்தியாற்றின் குறுக்கே எந்த விதமான அணைகளும் கட்டப்படவில்லை. ஆனால் ஆந்திராவிலிருந்து வருகிற நகரி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே கிருஷ்ணாபுரம் என்கிற இடத்திலே அணையைக் கட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஆந்திராவின் பகுதியிலேயிருந்து நம்முடைய தமிழ்நாட்டின் பகுதிக்கு வருகிற நேரத்திலே அந்தப் பகுதியில் நாம் ஒரு ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய பகுதியிலே வருகிற நகரி ஆற்றின் குறுக்கே பாசனத்திற்காக ஒரு அணைக்கட்டு கட்டி, அதன் மூலம் நம்முடைய பகுதிகளுக்குப் பாசன வசதி செய்யலாமா என்று ஒரு ஆய்வினை பொதுப் பணித் துறை மேற்கொண்டிருக்கிறது. ஆந்திரப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற அணையினால் நமக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. அவர்கள் ஏற்கெனவே 15, 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே அதைக் கட்டியிருக்கிறார்கள். நம்முடைய பகுதியிலே வருகிற அந்த நகரி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டி நம்முடைய பாசன மேம்பாட்டிற்காக அதைச் செய்யலாமா என்று ஆய்வு மேற்கொண்டிருக்கிறோம். அதற்குரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக நந்தியாற்றின் குறுக்கே எந்தவிதமான அணையும் கட்டப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். நகரி ஆற்றின் குறுக்கேதான் இந்தப் பாசனப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 230 திரு. டி. எம். ரங்கராஜன் மற்றும் திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**230—**

### கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.

*1196 திரு. டி. எம். ரங்கராஜன்:

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1992 மார்ச் 16]

(அ) கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் முதன் முதலாக எந்தத் தொகுதியில் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் முன்னோடி திட்டமாக செயல்படுத்துவதற்கு சென்னைக் குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்கான இடத்தைத் தேர்வு செய்த பிறகு விரைவில் இந்தத் திட்டம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அதற்குரிய தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலே கிடைக்கிறதா அல்லது வெளி நாட்டினுடைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த கடல் நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டத்திற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பம் நம்முடைய மாநிலத்திலேயே கிடைக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயே ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை தயாரித்து இருக்கிறோம். அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 231. திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**231—**

### அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

*3961 திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

கிணத்துக்கடவு, பெரியநெகமம் ஆகிய ஊர்களுக்கும் மற்ற கிராமங்களுக்கும் குடிநீர் தரும் அமராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிணத்துக்கடவு, பெரிய நெகமம் ஆகிய ஊர்களுக்கும் மற்ற கிராமங்களுக்கும் குடிநீர் தரும் அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் 1993ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு நம்பிக்கையை தந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அமராம்பாளையம் குடிநீர்த் திட்டம் கிணத்துக்கடவு, பெரிய நெகமம் என்ற பேரூராட்சிகளுக்கு மட்டும் அல்லாமல், அதிலே பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், கிணத்துக்கடவு ஒன்றியம் ஆகிய இரண்டிற்கும் உட்பட்ட 70-க்கும் மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நான் பொறியாளர் மூலமாக அறிந்தேன். ஆக அத்தனை கிராமங்களையும் உள்ளடக்கி அந்தக் குடிநீரை விநியோகிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எல்லாக் கிராமங்களையும் உள்ளடக்கியதாகத்தான் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அமராம்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் நடத்தி முடிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய அந்தப் பகுதி நிலத்தடி நீர்வளம் இல்லாத பாறையான பகுதி. அதிலே போர் வெல்கள் போட்டாலும் கூட தண்ணீரே வருவதில்லை. எனவே இந்த அமராம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் சீக்கிரமாக செய்ய வேண்டும். வறட்சி இருக்கிற இந்த நேரத்திலே, அதிலே தண்ணீர் சுத்தப்படுத்துவதற்கு சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதில்தான் காலதாமதம் ஆகிறது என்று பொறியாளர்கள் சொன்னார்கள். எனவே அதற்கு இடையில் சாதாரணமான தண்ணீர் வழங்கிட அந்தக் குடிநீர்த் திட்டம் விரைவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை வருகிற 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 232. திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

232—

தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவித் திட்டம்,

*5261 திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

படித்தவர்களுக்கும் கிராமப் பகுதியில் வாழ்பவர்களுக்கும் பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளித்து தொழில்கள் துவங்க கடனுதவி அளித்திட அரசிடம் திட்டங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987–88 முதல் அமுல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் துவங்குவதற்காக இத்துறையால் அதிகபட்சம் ரூபாய் 2,000 அல்லது வங்கி

[1992 மார்ச் 16

யால் அளிக்கப்பட உள்ள கடன் தொகையில் கால்பங்கு இதில் எது குறைவோ இத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இம் மானியத்தின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூபாய் 10,000 வரை கடனாகப் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட அளவில் இத்துறை அலுவலர், வங்கி அலுவலர், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ஆகியவர்களைக் கொண்ட ஒரு தேர்வுக் குழு உள்ளது. இத்திட்டம்; இம்மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களால் அமுல்படுத்தப்படு கிறது. இத்திட்டத்தின்கீழ் செப்டம்பர் 1991 வரை 458 விண்ணப் பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூபாய் 7.88 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு ரூபாய் 35.96 இலட்சம் மொத்தக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கடனுதவி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும், மானியக்தொகை மாநில அரசு நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது.

பயிற்சிப் பிரிவில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 47 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், 253 என்.சி.வி.டி. அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் எஸ்.சி.வி.டி., அங்கீகாரம் பெற்ற 175 தனியார் தொழில் பள்ளிகளும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. 45 தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வருடத்திற்கு சுமார் 20,000 நபர்கள் பயிற்சி முடித்து வெளி வருகின்றார்கள்.

மேற்கண்ட பயிற்சி தவிர, டிரைசம், தாட்கோ, நேரு ரோஜர் யோஜனா போன்ற பகுதி நேர பயிற்சிகளும் இத்துறை யில் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் வருமாறு :

டிரைசம் :

இத்திட்டத்தின் கீழ் 32 தொழிற்பயிற்சி நிலையங்களில் பகுதி நேர பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தது. 9 தொழிற் பயிற்சி நிலையங்களில் முழு நேர பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. செப்டம்பர் 1979-இல் இப்பயிற்சி துவங்கப்பட்டு 31—3—1991 வரை 22,168 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இப்பயிற்சி 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை நடத்தப்படுகிறது. இந்தப் பயிற்சிக்காக நிதி ஊரக வளர்ச்சித் துறையினரால் ஒதுக்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 250 வரை உதவித்தொகை. மாவட்ட திட்ட அலுவலர்களால் அளிக்கப்பட்டு வருகிறது.



1992 மார்ச் 16]

பயிற்சி முடிந்தவுடன் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் மாவட்ட திட்ட அலுவலர்களால் சுய வேலைவாய்ப்பு ஊக்குவிப்ப தற்காக ரூபாய் 500 பெறுமான கருவிப் பெட்டி வழங்கப்படு கின்றது.

தாட்கோ :

இது நகர்ப்புற ஆதி திராவிட இளைஞர்களுக்கென அளிக்கப் படும் பகுதி நேர பயிற்சி. இதன் பயிற்சிக்காலம் 6 மாதம். இப்பயிற்சிக்கென நிதி ஒதுக்கீடு தாட்கோ நிறுவனத்தால் அளிக் கப்படுகிறது. 1985-லிருந்து அளிக்கப்பட்டு வரும் இப்பயிற்சியில் இதுவரை 2,661 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாத உதவித் தொகை ரூபாய் 250 ஆகும்.

நேரு வேலைவாய்ப்புத் திட்டம் :

நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நகர்ப்புற ஏழை பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பகுதி நேர பயிற்சிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

. இத்திட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செப்டம்பர் 1990 முதல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 568 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மாதந்தோறும் ரூபாய் 250 வரை உதவித்தொகை நகராட்சி ஆணையர்களால் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் பயிற்சி மட்டுமே இத்துறையின் பயிற்சிப் பிரிவில் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு சுய தொழில் துவங்க நிதி உதவிகள் ஊரக வளர்ச்சித் துறையில் மாவட்ட திட்ட அலுவலர்களால் நேரிடையாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் துறையில் குறுகிய கால தொழில் முனைவோர் பயிற்சி வங்கி மற்றும் பல நிறுவனங்களின் உதவியுடன் வழங்கப்படு கிறது. மேலும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில்களுக்கு கடன் வழங்குகிறது.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்க அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்த விவர அறிக்கையில் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாவட்டங் களில் மட்டும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றி அதற்கு ஒரு வரம்பிற்குட்பட்ட கடனை வழங்கி இருப்பதாக அந்த

அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது. மேற்படி அந்தத் திட்டத்தை கிராமப் பகுதியிலே படித்திருக்கின்ற இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் இவர்கள் எல்லாம் அரசுக்கு விண்ணப்பம் போட்டு வேலை தேடி அலைகின்ற இந்த இளைஞர்களுக்கு ஒருங்கிணைந்த கிராமப் பகுதியிலே எல்லாம் பயிற்சி அளித்து அவர்களுக்கு கடன் உதவி வழங்குகின்ற அந்த விதிமுறைகளைத் தளர்த்தி, அவர்களுக்கு வழங்குகின்ற அந்தக் கடனை அதிகப்படுத்தித் தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புப் பிரிவைப் பொறுத்தவரை தொழில் நுட்பப் பயிற்சி சான்றிதழ் பெற்ற நபர்கள் சுய தொழில் துவங்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு 6 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, தென்னாற்காடு மற்றும் வடாற்காடு—அம்பேத்கார்) 1987-88 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சமாக 10,000 ரூபாய் தான் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது மாவட்ட தொழில் மையங்களில் சுய வேலைவாய்ப்பு திட்டங்களில் 35,000 ரூபாய் கடன் வழங்கப்படுவதாலும் எனவே இதிலே குறைவான மனுக்கள் வருகின்ற காரணத்தினாலே இந்த 6 மாவட்டங்களில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் இருப்பவர்கள் மாவட்ட தொழில் மையம் மூலம் கடன் பெற்று வருகின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : பேரவைத் தலைவர் அவர்களே, மின்னணுவியல் துறையில் பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களில் குடிசைத் தொழிலாக டிரான்ஸிஸ்டர் அசெம்பிளிங் அமைக்க அரசு கடன் உதவி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களின் மூலமாக இதற்கு கடன் உதவி கேட்டு மனு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 233. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

233—

## விளவங்கோடு தாலுக்காவிலுள்ள விவசாயிகளுக்கு நிதியுதவி.

*521 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுக்காவில் சூறாவளிக் காற்றினாலும், மழையினாலும், பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழைகள் நாசமானது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளுக்கு நிதியுதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## விவர அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசாணை நிலை எண் 1144, வருவாய்த்துறை, நாள் 20-8-1991-ல் ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் ) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வாழைப் பயிர்களுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 50,000 பாதிக்கப்பட்ட வாழைப்பயிர் விவசாயிக்கு வழங்கினால் மிகக் குறைந்த அளவுதான் வழங்க முடியும் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு எந்த நன்மையும் இல்லை என்றும், எனவே மேற்கூறிய ரூ. 50,000 தொகையை கன்னியாகுமரி மாவட்டத்தில் எற்கனவே பாதிக்கப்பட்ட நெற்பயிர் விவசாயிகளுக்கு மானிய விலையில் கீழ்க்குறிப்பிட்டவாறு, விதை நேர்த்தி மருந்து, அஸோஸ்பைரில்லம் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசை கோரினார்.

| வரிசை எண்ணும் இடுபொருளின் பெயரும். (1) | தேவையான அளவு. (2) | மொத்த விலை. (3) | மானியத் தொகை. (4) |
|---|---|---|---|
| | | (ரூபாயில்). | |
| 1. விதை நேர்த்தி மருந்து (50 சதவீத மானியம்) | 37,950 (கிலோகிராம்) | 11,385.00 | 5,692.50 |
| 2. அஸோஸ்பைரில்லம் (50 சதவீத மானியம்) | 7,595 பாக்கெட்டுகள். | 22,785.00 | 11,392.50 |
| 3. இரசாயன உரங்கள் (20 சதவீத மானியம்) | 115,425 மெ.டன். | 1,83,525.75 | 32,915.00 |
| | | 2,17,695.75 | 50,000.00 |

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி விளவங்கோடு தாலுக்காவில் கேட்டேன். மாவட்ட ரீதியான அளவிலே ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதில் 50,000 ரூபாய் வரை கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், வாழை என்று சொன்னால் ஏத்தவாழை என்று எங்கள் பகுதியிலே சொல்வார்கள். அதைப் பயிரிட்டு எக்ஸ்போர்ட் செய்கிறோம். திருவனந்தபுரம் ஏர்ப்போர்ட் மூலமாக சௌதி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். போன ஆண்டிலே ஏகப்பட்ட நஷ்டங்கள் வந்தன. 50,000 என்று சொன்னால் ஒரு நபருக்கு வந்த நஷ்டத்தைக் கூட ஈடுகட்ட முடியாத அளவிலே நஷ்டம் வந்திருக்கிறது. அது போதாது. ஆகையினால் அதிகமாக பணம் ஒதுக்கிக் கொடுக்க முடியுமா என்றும் மேலும் இந்த விவசாயிகளுக்கு பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழை சாகுபடி என்பது பணப் பயிர். வெள்ளத்தாலும், புயல் காற்றாலும், சூறாவளிக் காற்றாலும் வாழைப் பயிர்கள் சேதம் அடைந்து வருகின்றன. அந்தப் பயிர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுப்பது என்பது இயலாத காரியம். எனவே காப்பீட்டுக் கழகத்தின் வாயிலாக பயிர் இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டு அதற்கு வேண்டிய தொகை அவருக்கு கிடைக்கக்கூடிய வகையிலே அரசு ஆவன செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விடைக்கு நன்றி. எங்களுடைய மாவட்டத்திலே இதுவரையிலும் பயிர் இன்ஷூரன்ஸ் செய்கின்ற திட்டத்தை அமலுக்கு கொண்டு வரவில்லை. ஆகையினால் இனியாவது உடனடியாகப் பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கான குறிப்பாக ஏத்தவாழை பயிருக்கு இன்ஷூரன்ஸ் செய்யும் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் இன்ஷூரன்ஸ் சில பகுதிகளிலே மட்டும்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது தமிழகம் முழுவதும் செயல்படுவதற்கு அரசு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 234. திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.





234—

## திண்டிவனம் நகரில் பல அடுக்கு வீடுகள்.

*2845 திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு வீட்டுவசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) திண்டிவனம் நகரில் வீட்டுவசதித் துறையால் பல அடுக்கு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்குத் தேவையான நிலம் கையகப் படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை ;

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் மற்றும் பல நகரங்களில் அரசு வேலைகளில் இருப்பவர்களுக்கும், பொது மக்களுக்கும் வீடு கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுவதை அரசு அறியுமா ? உடன் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நிலங்களைக் கையகப்படுத்தி அடுக்கு மாடி வீடுகள் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை திண்டிவனம் நகரில் 120 அடுக்கு மாடி குடியிருப்புகள் தமிழ்நாடு அரசு வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திண்டிவனம் நகரில் வீடு கட்டுவதற்கு தேவையை நிர்ணயிக்கின்ற விளம்பரம் ஒன்று செய்யப்பட்டது. அந்த விளம்பரத்தின் அடிப்படையில் மொத்தமே 24 மனுக்கள் மட்டும் தான் பதிவு செய்திருக்கிறார்கள். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இங்கு வீட்டுவசதி வாரியத்தால் திட்டம் நிறைவேற்ற இயலாது

[1992 மார்ச் 16

என்று கருதப்பெற்று திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. வீடு கள் தேவையானவர்கள் பதிவு செய்யும் பட்சத்தில், வீட்டுத் தேவை அதிகம் இருக்கின்ற வகையில் விண்ணப்பங்கள் பெறு கின்ற பட்சத்தில் நிச்சயமாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை கையகப்படுத்துகின்றபோது தனியார் காலி நிலங்களாக இருந்தாலும், பழைய கட்டிடங்களை இடித்து கட்டுவதாக இருந்தாலும் அதையெல்லாம் ஹவுசிங் போர்டு மூலம் தான் அரசு எடுக்கவேண்டுமென்று ஏதாவது ஒரு தனித் திட்டம் இருக்கிறதா ? அப்படி ஹவுசிங் போர்டு எடுக்காவிட்டால் ரியல் எஸ்டேட்டுகாரர்கள் அதை கையகப்படுத்தி, தனியார் களின் பழைய கட்டிடங்களை வாங்கி அதிக விலைக்கு பல்வேறு நகரங்களில் இப்போது கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் கள். அதன் விலை அரசின் விலையை விட 2, 3 மடங்கு அதிகமாக இருப்பதால் தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி குறைந்த விலையில் பல்வேறு நகரங்களில் வழங்க, எல்லா மக்களுக்கும் வீடு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் களை இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடுமாறு அறிவுறுத்து கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 235, திரு. ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை.

236 திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

236—

ஆதிதிராவிட மக்களுக்கு திருமண மண்டபம்.

*4730 திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் திருமண மண்டபம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒவ்வொரு தொகுதி யிலும் திருமண மண்டபம் அதாவது சமுதாயக் கூடம், கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு இல்லை. இதுவரை மொத்தம் 140 சமுதாயக் கூடங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சமுதாயக் கூடங்கள் தேவைப் படும் இடங்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அனுப்பும் முன்மொழிவுகளைப் பரிசிலித்து, அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, இச்சமுதாயக் கூடங்கள் (திருமண மண்டபங்கள்) 'தாட்கோ' நிறுவனம் மூலம் கட்ட ஆணையிடப்படுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய முன் அனுமதியோடு என் நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தில் உயிர்த் தண் ணீர்க் கொடுத்து தென்னை மரங்களை வாழவைத்த எங் களுடைய குடும்பத் தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு கோவை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் கள், பொதுமக்கள், விவசாயிகள், சார்பாக எங்களுடைய உளமார்ந்த நன்றியை காணிக்கையாக்கி..(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங் கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : மன்னிக்க வேண்டும் கேள்விக்கு வருகிறேன். ஆதிதிராவிட மக்கள் தாங்கள் வாழ் கின்ற இடங்களில் மிக குறுகிய இடங்களில், மிக வசதி குறை வான வகையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு குடி யிருப்புகள் என்று இருப்பது மிக மிக அரிது. அப்படிப்பட்டவர் கள் தங்களுடைய இல்லத் திருமணங்களை, அல்லது காதணி விழா அல்லது அவர்களுடைய மனைச்சீர் போன்ற நிகழ்ச்சிகள் போன்றவற்றை 500 ரூபாய், 1,000 ரூபாய் கொடுத்து மண்ட பம் பிடித்து அந்த விசேஷ நிகழ்ச்சிகளை நடத்த இயலாது. அப்படிப்பட்ட சமுதாயத்தினரை இல்லை என்ற சொல்லுக்கே இடம் அளிக்காத நம்முடைய ஒப்பற்றத் தலைவி, தமிழகத்தி னுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முன்னேற்றி வருகின்ற பல்வேறு திட்டங்களை கொண்டு வந் திருக்கிறார்கள். அதோடு இணைத்து இவர்களுக்கு தொகுதிகள்

முழுவதிலும் கடுமையான நிதிநிலை இருந்தாலும் கம்யூனிட்டி ஹால் என்று சொல்லப்படுகின்ற அந்த அமைப்புகளைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் 4 இடங்களில் சமுதாயக் கூடங்கள் ரூ. 16.01 இலட்சத்தில் கட்ட ஆணையிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வெள்ளலூர் என்ற கிராமத்தில் ரூ. 3.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் நகர்ப்புறத்தைச் சார்ந்த அரிஜன மக்கள்தான் இந்தத் திட்டத்தின்கீழ் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்படுகிறார்களா, இந்தத் திட்டம் நகர்ப்புறத்தில் இல்லாததால் பாதிக்கப்படுகிறார்களா என்று சொல்லுங்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்தில் இந்தத் திட்டம் இல்லை. ஆகவே, நகர்ப்புறத்தில் வாழும் அரிஜன மக்கள், தங்கள் இல்லத் திருமணங்களை மிகப் பெரிய அளவில் நடத்தவேண்டுமென்று திருமண மண்டபங்களை நாடிச் சென்றால், நகர்ப்புறத்தில் பிற ஜாதியைச் சேர்ந்தவர்களே திருமண மண்டபங்களை நடத்தி வருவதால், அவர்கள், குறிப்பிட்ட அந்தத் தேதியில் பிற ஜாதியினருக்கே அந்தத் திருமண மண்டபங்களை வாடகைக்கு விடுகிறார்களேயொழிய அரிஜன மக்கள் கேட்கும் பொழுது எப்படியோ தவிர்த்து விடுகிறார்கள். ஆகவே, நகர்ப்புறங்களில் பெரிய அளவில், சிறப்பான முறையில் அரிஜன மக்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களை நடத்துவதற்கு, வாலண்டரி ஏஜென்சீஸ், அரிஜன சங்கங்கள் போன்ற சங்கங்கள் திருமண மண்டபங்களைக் கட்ட முன்வந்தால் அவர்களுக்கு நிலங்களை லீசுக்கு கொடுக்கவோ பண உதவி செய்யவோ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலங்களை லீசுக்கோ மற்றவற்றுக்கோ கொடுப்பதற்கு வருவாய்த்துறைதான் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று கருதுகிறேன். கிராமப்புற மக்களின் கோரிக்கையை ஏற்றுத்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். நகர்ப்புற மக்களும் கோரிக்கை கொடுத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கூட, விஞ்ஞானம் வெகுவாக வளர்ந்திருக்கிற இந்த காலக் கட்டத்திலே கூட மிகப் பெரிய உயர் அதிகாரிகளாக இருந்தாலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நகர்ப்புறத்திலே வீடு கிடைப்பது என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே அவர்கள் திருமண மண்டபங்களைப் பெற முடிவதில்லை. எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே, வட்ட அளவிலாவது, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி அளவிலேயே பரிசீலிப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை. வட்ட அளவில் என்று சொன்னால் செலவு அதிகமாகும். நிதிநிலைமை மிக மோசமான நிலையிலே இருக்கிறது. கோரிக்கைகள் வருகின்ற பகுதிகளுக்கு, அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 237. திரு. கே. செல்வராஜ். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

237—

பால் விநியோக மையங்களில் பெண்களை நியமித்தல்.

*5025—

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

[1992 மார்ச் 16

(அ) தமிழ்நாடு முழுவதும் பால் விநியோக மையங்களில் பணியாளர்களாகப் பெண்களை நியமிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு கேட்கப்பட்டுள்ளது.

(ஆ) இதனை ஆராய்ந்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள பால் விநியோக மையங் களில் குறிப்பாக பெண்களே பால் வாங்க வருவதால், ஆண்கள் பணியாற்றுகின்ற அந்த மையங்களில், அந்தப் பணியிடங்களுக்கு படித்து வேலையில்லாத பெண்கள், விதவைப் பெண்கள், ஆதரவற்றப் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை கொடுக்கின்ற விதத்தில் 30 சதவீத பெண்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கொடுக்கும் என்கின்ற குறிப்பு இருக்கின்ற காரணத்தினால், 30 சதவீத அளவிலாவது பெண்களை அந்த வேலை வாய்ப்பில் அமர்த் துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை நகரம் மற்றும் புறநகர்ப் பகுதி களில் இதுபோன்று விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக் கிறது. ஆனால் பெண்கள் இந்த வேலையைச் செய்வதில் எந்த அளவிற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்பதை ஆராய்ந்து வரு கிறோம். அதிகாலையிலே 3.00 மணியளவில் பெண்கள் தனியாக வந்து விற்பனை செய்வதற்கு இயலுமா என்பதை ஆராய்ந்து, சாத்தியக்கூறு எந்த அளவிற்கு சாதகமாக இருக்கும் என்பதைப் பார்த்து இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரில் தனியார் நிறுவனங்களில் இரவு நேரங்களில் பெண்கள் பணியாற்றச் சென்றால் பாது காப்பு கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அரசுத் துறையான பால்வள நிறுவனத்தில் பணியாற்ற பெண்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, அந்தப் பணியில் அவர்களை அமர்த்துவீர் களா ? இந்த ஆண்டே இதைச் செயல்படுத்துவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறைக்கே நாம் பெண்களை எடுக்கின்ற இந்தக் கால கட்டத்தில், இப்பொழுது பால் பாக்கெட்டுகளையெல்லாம் அதிகமான விலைக்கு விற்று ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற சில ஏஜண்டுகளையெல்லாம் கேன்சல் செய்து விட்டு, உடனடியாகப் பெண்களை அந்த இடத்தில் நியமிக்க மாண்புமிகு அமைச்சரவர் கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்தால் கேன்சல் செய்துகொண்டு தான் இருக்கிறோம். அப்படிப்பட்ட இடங்களில் முன்னாள் படை வீரர்களுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டிருக்கிறோம். பெண் களுக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு தந்து, அதைப்பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்டதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 238. திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

238— கருமந்துரையில் தொழில் மையம்.

*3982 திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) ஏற்காடு தொகுதியில் கல்வராயன் மலையில் கருமந் துரையை மையமாகக் கொண்டு அரசு தொழில் மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. என். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த வினாவிற்கு 'இல்லை' என்று கூறினார்கள். எனது தொகுதியிலே கருமந்துரையை மையமாக வைத்து ஒரு தொழில் மையம் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், சேலம் மாவட்டத் தொழில் மைய உதவி இயக்குநர் அவர்களும் பார்வையிட்ட பொழுது அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்களும், சட்ட மன்ற உறுப்பினராகிய நானும், மற்றும் அந்தத் தொழிலை எடுத்து நடத்த முன் வருவோரும், இந்தப் பகுதியிலே ஒரு தொழில் மையம் அமைத்தால் இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களும், படித்த இளைஞர்களும், குறிப்பாக ஆதி திராவிடர்களும், பழங்குடி இன மக்களும் பயன் பெறுவார்கள் என்ற ஒரு குறிப்பான குறிக்கோளை வைத்து, அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தக் குறிப்பினைப் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்புகின்றோம், அதன் பேரிலே நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம் என்பதை என்னிடத்திலே கூறியதால் இந்த வினாவை நாங்கள் எழுப்பியிருக்கிறோம். மீண்டும் 'இல்லை' என்று சொல்லாமல், தாயுள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மீண்டும் பரிசீலனை செய்து ஆவன செய்வதற்கு அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு மாவட்டத் தொழில் மையங்கள் உள்ளன. எனவே, கல்வராயன் மலை கருமந்துரை சேலம் மாவட்டத்தின் கீழ் வருவதால், சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு தொழில் மையம் உள்ளது. எனவே இந்தக் கோரிக்கைக்கு இடமில்லை எனக் கருதுகிறேன்.

235—

ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக்கல்.

*2142 திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அபிசேகக்கட்டளை ஆதிதிராவிடர் ஆரம்பப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?



விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள்.

1—

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள்.

வினா எண். 1—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பங்கீட்டு அட்டை இல்லாதோர்க்கு உடனடியாக புதிய உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பங்கீட்டு அட்டை இல்லாத தகுதி வாய்ந்தவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2—

பஞ்சாயத்து தெரு விளக்கு.

வினா எண். 14—திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்துத் தெரு விளக்குகள் மீண்டும் மின்சார வாரியத்தால் பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பராமரிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1992 மார்ச் 16

3—

**திற்பரப்பு மற்றும் அருவிக்கரை அணைகளை உயர்த்திக் கட்டுதல்.**

வினா எண். 16—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திற்பரப்பு மற்றும் அருவிக்கரை ஆகிய அணைக்கு மேலும் 5 அடி உயரத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

4—

வினா எண். 36—திரு. இரா. நடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இப்போது இல்லை. எனினும் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையை கூடுதலாக்க வேண்டிய தேவை உள்ளதா, இந்திய மருத்துவக் கழகம் அதற்கு ஒப்புதலைத் தருமா போன்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆய்வு செய்து அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

5—

**பணகுடியில் கால்நடை மருத்துவமனை துவக்குதல்.**

வினா எண். 45—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1992 மார்ச் 16]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, பணகுடி நகரப் பஞ்சாயத்திற்கு கால்நடை மருத்துவமனை துவக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

**மானூரான் குளத்திற்கு பாசன வசதி.**

வினா எண் 84—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி, மானூர் வட்டாரத்தில் உள்ள மானூரான் குளத்திற்கு மதிகெட்டான் கால்வாயை வெட்டி பாசன வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**ஆலங்குளம் நகரில் குறைந்த மின் அழுத்தம்.**

வினா எண் 87—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் நகரத்தில் குறைவான மின் அழுத்தம் இருப்பதினால் வீடுகள் மற்றும் சிறு தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆலங்குளம் நகரத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவதை அரசு அறியும்.

(ஆ) குறைந்த மின் அழுத்தத்தை நீக்குவதற்கு அரசு ஏற்கெனவே ரூ. 10,000 செலவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

8—

ஆலங்குளம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்.

வினா எண். 88—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆலங்குளம் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த நடப்பு ஆண்டில் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்கல்.

வினா எண் 105—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு, ரேஷன் கார்டு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) போலி ரேஷன் கார்டுகளைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

(அ) ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்படுகிறது.

(ஆ) போலி ரேஷன் கார்டுகளைக் கண்டுபிடித்து ரத்து செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

10—

கடல் அலைகளிலிருந்து மின்சாரம்.

வினா எண் 111—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க மைய அரசு திட்டம் ஒன்றை தமிழக அரசுக்குத் தந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

11—

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

வினா எண். 159—திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்லை தலைமையகமாகக் கொண்ட மாவட்டத்திற்கு மீண்டும் ''அண்ணா மாவட்டம்'' என்று பெயர் மாற்றம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தின் பெயர் 18-7-1991 முதல் திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

[1992 மார்ச் 16

12—

## ஒட்டன்சத்திரத்தில் பால் பண்ணை.

வினா எண் 165— திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டன்சத்திரம் பகுதியில் மிக அதிக அளவு பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி ஆவதை முன்னிட்டு பெரிய பால் பண்ணை ஒன்று அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

13—

## பெரியகுழிப்பட்டிக்கு புதிய நகரப் பேருந்து.

வினா எண் 171—திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரத்திலிருந்து புலியூர்நத்தம் [illegible]ராட்சிக் குட்பட்ட பெரியகுழிப்பட்டிக்கு புதிய நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

## சத்துணவுக் கூடங்கள்.

வினா எண் 190—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள சத்துணவுக் கூடங்களில் விடுமுறை நாட்களில் மாணவர்கள் சத்துணவு சாப்பிட வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இக்குறைபாட்டை நீக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1992 மார்ச் 16]

விடை—

(அ) சத்துணவுக் கூடங்களில் விடுமுறை நாட்களில் நிர்ணயித்த அளவு, அனைத்து மாணவர்களும் சத்துணவு சாப்பிட வருவதில்லை என அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) விடுமுறை நாட்களில் சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அவர்கள் வீட்டிலேயே வைத்துக்கொள்ள விரும்புவதால் அரசு அக்குழந்தைகளை சத்துணவு கூடத்திற்கு அழைத்து வரகட்டாயப்படுத்த இயலாது. எனினும், குறைவான வருகையை உத்தேசித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் விடுமுறை நாட்களில் மாணவர்களின் வருகை எண்ணிக்கையை மறுநிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

15—

## நிலத்தடி நீர் அளவு குறைவதை தடுக்க நடவடிக்கை.

வினா எண். 221—திரு. ம. சின்னசாமி ; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலத்தடி நீர்அளவு ஆண்டுதோறும் குறைந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

16—

## கரூர்—அமராவதி ஆற்றுப் பாலத்தில் போக்குவரத்து.

வினா எண். 223—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், கரூர்—அமராவதி ஆற்றுப்பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாற்று வழி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலத்தில் போக்குவரத்து தடை நீக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

17—

செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டம்.

வினா எண். 231—திரு. ம. தனபால் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கை—அண்ணா மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து செங்கை கிழக்குப் பகுதிக்கு முன்னாள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். பெயரைச் சூட்ட அரசு முன்வருமா ?

விடை—

செங்கை—அண்ணா மாவட்டத்திற்கு '' செங்கற்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டம் '' என தற்போது அரசால் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தைப் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

18—

மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் பட்டா,

வினா எண். 232—திரு. ம. தனபால் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டு காலமாக வசித்து வரும் மக்களுக்கு அந்நிலத்தையே பட்டா செய்து வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை வரன்முறை செய்யவும், பட்டா வழங்கவும் தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு தனி நேர்வுகளில், தேவையைக் கருதி, தகுதியைப்





பொறுத்து, தடையைத் தளர்த்தி வீட்டுமனை ஒப்படை செய்து அவ்வப்போது அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்ய விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

19—

திருப்போரூர்—நெம்மேலி சாலை

வினா எண். 233—திரு. ம. தனபால் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்போரூர்—நெம்மேலி சாலை பணி முடிவு பெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அச்சாலையை செப்பனிடும் பணி எப்பொழுது முதல் துவக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் குறுகிய நிதி ஒதுக்கீட்டினால் இந்தச் சாலைப் பணியை அண்மைக் காலத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

20—

கரூர் நகராட்சிக்கு காவிரியிலிருந்து குடிநீர்.

வினா எண். 254—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் நகராட்சிக்கு காவிரி நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் துவங்கப்பட்டு விட்டனவா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது நிறைவுபெறும் ?

விடை—

(அ) ஆம்,

(ஆ) இந்தத் திட்டம் 1992-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1992 மார்ச் 16

21—

## தெக்குப்பட்டு அரசு சந்தன எண்ணெய் ஆலையை மீண்டும் திறத்தல்.

வினா எண். 268—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள தெக்குப்பட்டு கிராமத்தில் மூடிக்கிடக்கும் அரசு சந்தன எண்ணெய் ஆலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், தெக்குப்பட்டு கிராமத்தில் இயங்கிவந்த அரசு சந்தன எண்ணெய் ஆலை நட்டத்தில் இயங்கிவந்த காரணத்தினால் அதை மூடிவிட அரசு ஆணை பிறப்பித்தது. இவ்வாலையை இலாபகரமாக நடத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையாதலால், இதை மீண்டும் திறக்க அரசிடம் பிரேரணை ஏதும் இல்லை.

22—

## பேருந்து வசதி.

வினா எண். 270—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேலூர் தொகுதியில் செங்காநத்தம், பாலமதி, வெங்கட்டாபுரம், சதுப்பேரி, அகமேடு, கருகம்பத்தூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

பேருந்து போக்குவரத்திற்கு ஏற்ற சாலைகள் இல்லாத காரணத்தினால், செங்காநத்தம், மற்றும் அகமேடு ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி அளிக்க இயலவில்லை. இதர கிராமங்கள் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளன.



1992 மார்ச் 16]

23—

## சத்துவாச்சாரியில் மருத்துவக் கல்லூரி,

வினா எண். 353—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலூர் சத்துவாச்சாரியில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் இப்போது அரசுக்கு இல்லை,

24—

## பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்.

வினா எண். 359—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வேலூரில் உள்ள போக்குவரத்துக் கழகத்திற்கு மீண்டும் பழையபடி பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பெயரே மாற்றப்பட்டு மீண்டும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் எனப் பெயரிடப்பட்டுவிட்டது.

25—

## பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் பணி நியமனம்.

வினா எண். 360—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு அமையும் காலகட்டத்தில் வேலூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்

[1992 மார்ச் 16

கழகத்தில் 60 நபர்களை பணியமர்த்த ஆணை வெளியிடப் பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் அரசின் தற்போதைய நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர்கள் பணி நியமனம் பற்றியதாகும். ஓட்டுநர்களைப் பணி நியமனம் செய் வது போக்குவரத்துக் கழக நிர்வாக எல்லைக்குட்பட்டவை ஆகும். ஆகவே, அதன் மீது அரசின் ஒப்புதல் தேவையில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

26—

**அய்யங்குளத்திலிருந்து செட்டிகுளம் ஏரி செல்லும் வாய்க்கால் அகலப்படுத்தல்.**

வினா எண். 361—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவனிற்காடு ஊராட்சியைச் சேர்ந்த அய்யங்குளத்திலிருந்து செட்டி ஏரி செல்லும் வாய்க் காலை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அய்யங்குளத்திலிருந்து செட்டி குளம் ஏரி செல்லும் வாய்க் காலை அகலப்படுத்த திட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

27—

**மீன்பிடி வாய்க்கால்களை ஆழப்படுத்துதல்.**

வினா எண். 362—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம்பட்டினம், கரையூர் தெரு, சுண்ணாம்புக்கார தெருக்களில் உள்ள மீன்பிடி வாய்க் கால்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1992 மார்ச் 16]

விடை—

ஆம்.

28—

**பட்டுக்கோட்டை—சென்னை விரைவுப் பேருந்து.**

வினா எண். 364—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையில் இருந்து சென்னைக்கு மேற்கொண்டு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

29—

**பேராவூரணி—சென்னைக்கு சொகுசு விரைவுப் பேருந்து.**

வினா எண். 365—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணியிலிருந்து சென்னை சென்று கொண்டிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை சூப்பர் டீலக்ஸ் ஆக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

30—

**ஆரியபாளையத்திலுள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.**

வினா எண். 379—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஆரியபாளை யத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை, அரசு உயர்

[1992 மார்ச் 16

நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட புறம்போக்கு நிலமாக மாற்றம் செய்யப்பட்டு உள்ளதா ?

(அ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆரிய பாளையம் கிராமத்தில் 12 ஏக்கர் நிலத்தை உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்காக கல்வித் துறைக்கு மாற்றம் செய்வது குறித்து, அரசு பரிசீலித்தது. அதனடிப்படையில், மேற்படி இடத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களின் மொத்தப் பரப்பளவு, புல எண்கள் விவரம், இந்நிலங்களை கல்வித் துறைக்கு அளிப்ப தால் கால்நடைகளுக்கு பாதகம் ஏதேனும் ஏற்படுமா போன்ற விவரங்களுடன் மேற்படி நிலத்தை கல்வித்துறைக்கு நில மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பினை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மூலமாக, அரசுக்கு அனுப்பி வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார். அவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

31—

## நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்.

வினா எண். 385—திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தமிழக நில உச்சவரம்புச் சட்டம் அமல்படுத்தியதில் இருந்து இன்று வரை அச்சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப் பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) அந்த உபரி நிலங்களை பகிர்ந்து கொடுத்ததால் பயன் அடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) 1961-ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் அமுலுக்கு வந்த நாளி லிருந்து 31-8-1991-ஆம் நாள் வரையில், 1,71,114 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.



1992 மார்ச் 16]

(ஆ) உபரி நிலங்களை பகிர்ந்து கொடுத்ததின் மூலம், 1,17,051 பேர் பயனடைந்துள்ளனர்.

32—

## லட்சுமிபுரம் கிராமத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 395 திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

ஆலங்குளம் ஒன்றியம், லட்சுமிபுரம் கிராமத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

லட்சுமிபுரம் கிராமத்தில் தற்போது 4 கையிறைப்பான்கள் உள்ளன. இக்கிராமம் மறு ஆய்வின்படி முழு அளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும். ஆதலால் தற்போது மேற் கொண்டு திட்டம் ஏதும் மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

33—

## ஓட்டல் பண்டக விலையைக் குறைக்க நடவடிக்கை.

வினா எண் 399—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் ஓட்டல் பண்டக விலையைக் குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

உணவகங்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலை களை குறைப்பது தொடர்பாக ஓட்டல் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் அரசு அவ்வப்போது பேச்சு வார்த்தை நடத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஓட்டல் உரிமையாளர்கள் உணவுப் பண்டங்களின் விலைகளை, அனைவரும் ஒப்புக்கொள்ளும் நிலையில் (Reasonable level) வைத்திருக்க வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டு வருகிறது. இது தொடர்பாக சமீபத்தில் 12—7—1991 ஆம் நாளன்று அச்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

34—

## மணலி உரத் தொழிற்சாலை ஒப்பந்த தொழிலாளர்களின் நிலை.

வினா எண் 403 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மணலியில் உள்ள உரத் தொழிற்சாலையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்துவந்த தொழிலாளர்கள் சுமார் 1.000 பேருக்கு வேலை தர மறுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) மணலி உரத் தொழிற்சாலை மற்றும் ஸ்ரீராம் பைபர்ஸ் லிட். ஆகிய இரு தொழிற்சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் பற்றிய நிலைமையை கண்டறிய அரசாணை எண் 347, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் : 20—9—1990-ல் ஒரு உப குழுவை அமைத்து ஆராய ஆணையிடப்பட்டது. குழு தொழிற்சங்கங்கள்/முதலாளிகள்/ஒப்பந்தக்காரர்கள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டி நிலைமைகளை ஆராய்ந்து வருகிறது. இதற்கிடையில். சென்னை உரத் தொழிற்சாலையில் வேலை மறுக்கப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் எழுப்பிய தொழில் தகராறு தாவா தொழிலாளர் துறை இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் சமரச முயற்சி மேற்கொள்ளப் பட்டது, சமரச முயற்சி தோல்வியடைந்த காரணத்தால் சமரச முறிவறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு தொழில் தகராறை ஆராய்ந்து அரசாணை எண் 605, நாள் 10—6—1991-ல் சென்னை தொழில் தாவா மன்றத்துக்கு அனுப்பியுள்ளது. தற்போது இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் மேற்கண்ட ஒப்பந்தத் தொழிலாளர் சங்கம் நிர்வாகம் புதிதாக ஆட்களை வேலைக்கு நியமிக்கக் கூடாது என்று கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் 12566/88-ன் படி. தடைப் பேராணை பெற்றுள்ளது, அரசு இவ்வழக்கினை கூர்ந்து கவனித்து வருகிறது,



35—

## வெளிமாநிலத்திற்கு வைக்கோல் அனுப்புதல்

வினா எண் 404—திரு, இரா, தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு தடை ஆணையை மீறி தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலத்திற்கு வைக்கோல் கொண்டு போவதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

தற்பொழுது வைக்கோலை தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல தடையேதுமில்லை.

36—

## புல்லூர் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே அணை,

வினா எண் 417—திரு, சி, ஞானசேகரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாட்றம்பள்ளி தொகுதியில் புல்லூர் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

37—

## காவலூர் மலைக்குச் செல்லும் சாலையை செப்பனிடுதல்,

வினா எண் 420—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடியிலிருந்து, ஆசியாவிலேயே பெரிய டெலஸ்கோப் உள்ள காவலூர் மலைக்குச் செல்லும் சாலை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

[1992 மார்ச் 16

(ஆ) ஆம் எனில், அதனை விரைவில் செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்தச் சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகள் சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, சீரமைப்புப் பணிகள் யாவும் முடிக்கப்பட்ட பின்னர் இந்தச் சாலை முழுவதும் நல்ல நிலையில் இருந்து வரும்.

38—

**கன்னியாகுமரி மாவட்டத்தில் வீணாகக் கடலில் கலக்கும் நீரை பயன்படுத்துதல்.**

வினா எண், 435 திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நதிகளில் இருந்து வீணாகக் கடலில் கலக்கும் நீரைத் தடுத்து விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39—

**புதிய பாலம் கட்டுதல்.**

வினா எண் 437 திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, ஆற்றூர் அருமனை சாலையில், பனங்கரை என்ற வாய்க்காலின் மேல் கட்டப்பட்ட பாலம் பழுதடைந்திருப்பதாலும், போக்குவரத்திற்கு போதிய வசதி இல்லாததாலும் அதை இடித்துப் புதுப் பாலம் கட்ட அரசு முன்வருமா ?



1992 மார்ச் 16]

விடை—

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

40—

**கல்குளம் தாலூகாவை பிரித்தல்.**

வினா எண் 438 திரு. இரா. நடேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய தாலூகாவான கல்குளம் தாலூகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிதாக அமைக்கப்படும் தாலூகாவிற்கு திருவட்டார் தாலூகா என்று பெயர் வைக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கல்குளம் வட்டத்தை பிரித்தமைக்கும் செயற்குறிப்பைப் பரிசீலித்து முடிவெடுக்கும்பொழுது புதிய வட்டத்தின் தலைமையிடம் மற்றும் பெயர் பற்றி அரசால் முடிவெடுக்கப்படும்.

41—

**பரமக்குடியில் வைகை ஆற்றின் குறுக்கே நடை பாலம்.**

வினா எண் 459 டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடியில் எமனேஸ்வரத்திற்கும் சுப்பிரமணியசாமி கோவில் தெருவிற்கும் இடையில் வைகை ஆற்றில் நடைபாலம் கட்ட அரசிற்கு பரிந்துரை செய்யப்படுமா ?

விடை—

வைகை ஆற்றின் குறுக்கே பரமக்குடி—எமனேஸ்வரம் நயினார் கோயில் சாலையையும் இணைக்கும் வகையில் நாட்போகி பாலம் கட்டும் செயற்குறிப்பிற்கு அரசு ஆணை எண் 1786, பொதுப்

பணித் துறை, நாள் : 29—10—1991—ல் பகுதி II திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய ரூ. 61.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

42—

பரமக்குடியில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு.

வினா எண் 467—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 120 வீடுகள் கட்ட திட்டம் உள்ளது.

43—

தூத்தூர் பாலம் புதுப்பித்தல்.

வினா எண் 520 திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலூகாவில் களியக்காவிளை—தூத்தூர் நெடுஞ்சாலையில் உள்ள தூத்தூர் பாலம் பழுதடைந்துள்ளதை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

44—

விதவை, ஊனமுற்றோர், முதியோர்களுக்கு உதவித்தொகை.

வினா எண் 527—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் விதவை, ஊனமுற்றோர் முதியோர்களுக்கு உதவித்தொகையை அதிகரிப்பதற்காக அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

இல்லை.

45—

நல்லூர் கிராமத்தில் எரிவாயு.

வினா எண் 530—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி அருகேயுள்ள நல்லூர் கிராமத்தில் பெருமளவில் எரிவாயு இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எரிவாயு ஊற்று வெளியாவதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மன்னார்குடி வட்டாரத்தில், நல்லூர் கிராமத்தில் இயற்கை எரிவாயு பொறுப்பாண்மைக் குழுவினால் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்போது எதிர்பாராதவிதமாக இயற்கை எரிவாயு வெளியேறியது. இதை உடனடியாக கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளும் விரைந்து சென்று தேவையான உதவிகளைச் செய்து ஆபத்துக்கள் ஏற்படாதவாறு தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

46—

மரம் வெட்டுவதை தடுக்க நடவடிக்கை

வினா எண் 535 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர்—இராஜபாளையம் பகுதியில், மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியில் தொடர்ந்து மரம் வெட்டுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1992 மார்ச் 16

விடை—

இதற்கான விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

இராஜபாளையம் மற்றும் திருவில்லிபுத்தூர் சரகங்கள் மாவட்ட வன அலுவலர் கட்டுப்பாட்டிற்குக் கீழ் விருதுநகரில் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. அரசு இதனை வன உயிரினச் சரணாலயமாக டிசம்பர் 1988-ல் மாற்றி அமைத்து, தற்பொழுது திருவில்லிபுத்தூரைத் தலைமை யிடமாகக் கொண்டு வன உயிரினக் காப்பாளர் கட்டுப்பாட்டில் 1—4—1989 முதல் செயல்பட்டு வருகிறது.

திருவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில் சரணாலயம் 1—4—1989-இல் தொடங்கப்பட்டது முதல், வன விலங்கு களுக்கு எந்தவிதமான தொந்தரவுகள் ஏற்படாமல் இருக்க திருவில்லிபுத்தூர் வன உயிரின உய்விடப் பகுதிகளில் மரங்கள் திருட்டுத்தனமாக வெட்டப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. திருட்டு வெட்டுகள் ஏற்படாமல் பாதுகாக்க தேவை யான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு உள்ளது. சரணாலயப் பகுதிகளில் நுழைவதற்கு அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர்.

வன உயிரின உய்விடப் பகுதியில் சில்லறை வனப் பொருட்கள் மகசூல் சேகரம் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தம் செய்யப்பட்டு உள்ளபடியால், குத்தகைதாரர் அல்லது அவரது ஆட்களால் மரங்கள் வெட்டப்படுவதும் தடுக்கப்பட்டு உள்ளது.

1—4—1989-க்கு பின்னர் (சரணாலயம் ஆன பின்பு) கீழ்க் கண்ட வனக் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது:

| சரகம். | வருடம். | எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இராஜபாளையம் | 1983 | 385 |
| | 1990 | 380 |
| | 1991 | 176 |
| | | 941 |



1992 மார்ச் 16]

| சரகம். | வருடம். | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சாப்டூர் | 1989 | 612 |
| | 1990 | 528 |
| | 1991 | 85 |
| | | 1,225 |
| திருவில்லிபுத்தூர் | 1989 | 236 |
| | 1990 | 200 |
| | 1991 | 100 |
| | | 536 |

இப்பகுதி வன உயிரின சரணாலயமாக மாற்றப்பட்ட பின்னர் தீவிர தணிக்கையின் காரணமாக இப்பகுதியில் வனக் குற்றங்கள் குறைந்து வருகின்றன.

மேலும், வனப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்த வன அலுவலர் களுக்கு கைத்துப்பாக்கிகள் வழங்குவது குறித்தும் சரணாலயம் பகுதியில் கம்பியில்லாத் தகவல் சாதன அமைப்பு கொண்டு வருவது பற்றியும் அரசு பரிசீலனையில் உள்ளது.

47—

## சந்தனமரங்கள் வெட்டுவதைத் தடுத்தல்.

வினா எண் 536 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி செம்பகத்தோப்பு அருகே அரசுக்குச் சொந்தமான காடுகளில் சந்தன மரங்களை வெட்டுவதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 27—4—1991 அன்று சந்தன மரங்கள் வெட்டிய இரண்டு குற்றவாளிகள் பிடிபட்டனர். 1—7—1991 அன்று ஆறு குற்றவாளிகள் பிடிபட்டனர். இவர்கள்மீது நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு, அவை விசாரணையில் உள்ளன.

48—

## கீழத்தோட்டம் மீனவர் காலனிக்கு மின்வசதி.

வினா எண் 564 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜா மடம் ஊராட்சி, கீழத்தோட்டம் மீனவர் காலனிக்கு மின்சார வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் ராஜா மடம் ஊராட்சி, கீழத்தோட்டம் மீனவர் காலனியில் ஒரு தெரு விளக்கு பொருத்தி ஏற்கெனவே மின்வசதியளிக்கப்பட்டு விட்டது. இவ்விளக்கு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

49—

## ராஜாமடம் வழியாக பேருந்து வசதி.

வினா எண். 566—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம், ஏரிப்புறக் கரை, கீழத்தோட்டம், ராஜாமடம் வழியாகப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



50.—

## பாலம் கட்டுதல்.

வினா எண். 569—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தில் ராஜபாண்டி—கழுநீர் குளத்தை இணைக்கும் சாலையில் சிற்றாற்றின் குறுக்கே பாலம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

இல்லை

51—

வினா எண். 570—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியத்தில் தென்கலம் அருகில் ஜமீன் ஓடையின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா ?

விடை—

இல்லை.

52.—

வினா. எண். 571—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம் நாஞ்சான்குளம் அருகில் நெடுஞ்சாலையின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கட்டப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1992 மார்ச் 16

53.— சாலைகள் பழுது பார்த்தல்.

வினா எண். 574—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் இருந்து நெட்டூர், ஊத்துமலை, நல்லூர் போன்ற ஊர்களுக்குச் செல்லும் நெடுஞ்சாலைகள் பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் சாலைகள் செப்பனிடப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் ஏற்படும் சிறு பராமரிப்பு பழுதுகள் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு வாகன போக்குவரத்துக்கு இடையூறின்றி பராமரிக்கப்படுகிறது.

54—

அதிராம்பட்டினத்தில் தொழிற்கல்வி.

வினா எண். 578—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினத்தில் தொழிற்கல்வி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டினத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

55—

உள்ளூரில் கால்நடை மருந்தகம்.

வினா எண். 610—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூரில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



[1992 மார்ச் 16

விடை—

இல்லை.

56—

கழனிவாசல் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

வினா எண். 617—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆக்கிரமிப்புகள் அனைத்தும் கடந்த ஆண்டிலேயே (1990 இல்) மண் தள்ளு இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு விட்டன.

57—

புதிய பேருந்து வசதி

வினா எண். 632—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் இருந்து முதல்சேரி, பள்ளிகொண்டான், சேண்டாகோட்டை, கொக்காவிகாடு, மகிழங்கோட்டை, ராஜாமடம், கீழத் தோட்டம், ஏரிப்புறக்கரை வழியாக அதிராம்பட்டினத்திற்கு புதிய நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 மார்ச் 16

58—வேலையில்லா பட்டதாரிகள் மீன் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 651—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், ஊராட்சியில் உள்ள குளங்களில் வேலையில்லா பட்டதாரிகள் மீன் வளர்த்து வேலை வாய்ப்புப்பெறும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

59—

விளையாட்டு அரங்கம் அமைத்தல்.

வினா எண். 672—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் உள்ள இடத்தை விளையாட்டு அரங்கமாக அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

60— உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 676—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் ஆவணம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தற்போது இல்லை



1992 மார்ச் 16]

61— ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு.

வினா எண் 695—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், மாலியக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு மின் இணைப்பு வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியம், மாலியக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு ஏற்கனவே 4 குழல் விளக்குகள் பொருத்தி மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவை நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

62—

கூடுதல் பேருந்து வசதி.

வினா எண் 698—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அதிராம்பட்டினத்திலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நகரப் பேருந்துகள் போதாத காரணத்தினால் மேலும் கூடுதல் பேருந்துகள் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

63—

மீன் வளமுள்ள பாக் ஜலசந்தியை வளர்ச்சி குன்றாமல் பாதுகாத்தல்.

வினா எண் 700—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் மிக அதிகமாக மீன்வளமுள்ள ஒன்றான, கூடா பகுதியான பாக் ஜலசந்தியை வளர்ச்சி குன்றாமல்

பாதுகாக்கவும் தொடர்ந்து மீன்வளத்தைப் பெருக்கவும் அரசிடம் செயல் திட்டங்கள் உள்ளதா?

விடை—

இல்லை—ஆனால் பாக் ஜலசந்தியைச் சார்ந்த மண்டபத்தில் மத்திய மீன்வள ஆராய்ச்சி நிலையமும், தமிழ் நாடு மீன் துறையைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையமும், மண்டபம், குருசடை தீவுகளில் ஏற்படுத்தப்பட்டு பாக் ஜலசந்தியில் மீன்வளம் பாசிவளம், குறித்து ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

64— <u>நடுவிற்காடு கிராமத்திற்கு மின்வசதி.</u>

வினா எண் 703—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் ஊராட்சியைச் சேர்ந்த நடுவிற்காடு கிராமத்திற்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் அளவினியக்காடு ஊராட்சியைச் சார்ந்த நடுவிற்காடு ஒரு குக்கிராமம் (Hamlet) ஆகும். இது புதுக்கோட்டை உளூர் ஊராட்சியினைச் சேர்ந்தது அல்ல. ஆனால் மேற்குறிப்பிட்ட குக்கிராமம் இதற்கு அருகாமையில் உள்ளது.

மேற்படி குக்கிராமத்திற்கு 1987 ஆம் ஆண்டிலேயே 10 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு மின்வசதி செய்யப்பட்டு விட்டது. கூடுதலாக 10 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி ஒரு விண்ணப்பம் வந்துள்ளது. தெருவிளக்கு பொருத்தும் பணிகளுக்கான விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான இலக்கீட்டிற்கேற்ப மின்வசதி அளிக்க ஆவன செய்யப்படும்.



65—

<u>நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை.</u>

வினா எண் 723—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து அவிவலம், நடுவிக்கோட்டை, அதம்பை—பாதரங்கோட்டை கா. உஞ்சி விடுதி—ஊரணிபுரம் வரை ஓடிக்கொண்டிருந்த நகரப் பேருந்தை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

66—

வினா எண். 724—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து திருச்சிற்றம்பலம் சூரிய நாராயணபுரம் வழியாகச் செல்லும் நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

67—

<u>பேராவூரணி—திருச்சி நகரப் பேருந்து.</u>

வினா எண் 732—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து திருச்சிக்கு ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

68—

**பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக இராமேஸ்வரத்திற்குப் பேருந்து.**

**வினா எண். 733—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக இராமேஸ்வரத்திற்கு ஒரு பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை—**

இல்லை.

69—

**மீன்களைக் கொண்டு செல்ல தனிப்பேருந்து.**

வினா எண். 735—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதி அதிராம்பட்டினம் முதல் கட்டுமாவடி வரை மீன்களைப் பேருந்தில் கொண்டு போக தனிப் பேருந்துவிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

70—

**பேராவூரணியிலிருந்து பெருமகளூர் வழியாகக் கட்டுமாவடிக்கு நகரப் பேருந்து.**

வினா எண். 739—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம் பேராவூரணியிலிருந்து பெருமகளூர் வழியாகக் கட்டுமாவடிக்கு ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



**விடை—**

இல்லை.

71—

**போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்தல்.**

வினா எண். 800—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 500 பேருந்துகளுக்கு மேலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

72—

**அந்தியூர் தொகுதியில் நத்தப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா.**

வினா எண். 811—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் நத்தப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) ஆதி திராவிடர்களுக்கு 1990–91இல் எத்தனை பட்டாக்கள் வீடுகளுக்கும், காட்டுப் பூமிக்கும் வழங்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், அந்தியூர், எண்ணமங்கலம், சங்கரப்பாளையம், பர்கூர் ஆகிய நான்கு கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களிலும் நத்தப் பகுதிகளில் குடியிருக்கும் 9,376 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதியுள்ள நான்கு கிராமங்களில் வீட்டுமனை வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) அந்தியூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் 1990-1991-ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்கள் உட்பட அனைத்துக் குடியிருப்பிற்கும் சேர்த்து 234 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர்களுக்கென்று தனியாகப் பிரித்து வழங்கப்படவில்லை. மலைப் பகுதிகளில் விவசாயக் காரியத்திற்காக நில ஒப்படை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் காட்டுப் பூமிக்கு நில ஒப்படை எதுவும் வழங்கப்படவில்லை.

73—

<u>கொங்காடை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.</u>

வினா எண். 846—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள கொங்காடை என்ற ஊரில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்காமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பெரியார் மாவட்டம், பவானி வட்டம் அந்தியூர் தொகுதியில் உள்ள கொங்காடை என்ற ஊரில் வசிக்கும் 122 நபர்களுக்கு 21—4—1988 அன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.



74—

<u>புனவாசலில் கால்நடை மருத்துவமனை.</u>

வினா எண் 851—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனவாசலில் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

75—

<u>வலச்சேரி காட்டில் பாலர் பள்ளி.</u>

வினா எண் 852—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியைச் சேர்ந்த வலச்சேரி காட்டில் பாலர் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

76—

<u>பி.எச்.டி., எம்ஃபில், முடித்தவர்களுக்கு வேலை அளிக்கப்படும் வரை நிவாரண நிதி.</u>

வினா எண். 888—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பி.எச்.டி., எம்ஃபில்., முடித்தோருக்கு வேலை அளிக்கப்படும் வரை முறையே மாதம் ரூ. 2,000, ரூ. 1,000 நிவாரண நிதியாக வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1992 மார்ச் 16

விடை—

இல்லை.

77—

நகரப் பேருந்துகளைக் கூடுதலாக்க நடவடிக்கை.

வினா எண் 894—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து கழனிவாசல் பெருமகளூர் விளங்குளம் வழியாக செந்தலைச் செல்லும் 3ம் நம்பர் நகரப் பேருந்தை 14 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

78—

11-ம் நம்பர் நகரப் பேருந்தை 10 சிங்கிளாக இயக்க நடவடிக்கை.

வினா எண் 895—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஊமத்த நாடு செந்தலை வழியாக கட்டுமாவடி செல்லும் 11-ம் நம்பர் நகரப் பேருந்தை 10 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

79—

சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை 14 சிங்கிளாக இயக்க நடவடிக்கை.

வினா எண் 896—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஆலங்குடி செல்லும் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை 14 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?



1992 மார்ச் 16]

விடை—

இல்லை.

80—

வினா எண் 897—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியிலிருந்து மருங்கப்பள்ளம் வழியாக சேதுபாவா சத்திரம் செல்லும் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை 14 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

81—

பாப்பாங்கண்ணியாறு அணைக்கட்டுத் திட்டம்.

வினா எண் 921—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம் ரெண்டாம் புளிக்காடு பாப்பாங்கண்ணியாறு அணைக்கட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

82—

சித்துக்காடு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.

வினா எண் 982—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் சித்துக்காடு உயர்நிலைப் பள்ளிக்குக்கட்டிட வசதி தளவாட சாமான்கள் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை. எனினும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை இரண்டாம் பகுதி திட்டத்தில் பள்ளிக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டடங்கள் கட்டவும், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

83—

## புதிய வழித் தடத்தில் நகரப் பேருந்து விடுதல்.

வினா எண் 987—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு - மதன்பட்டவூர் - கீழப்புனவாசல் - வாடிக்காடு வழியாக பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய வழித்தடம் ஏற்படுத்தி சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

84—

## விவசாயிகளின் பம்பு செட்டுக்குத் தாமதமின்றி மின் இணைப்பு.

வினா எண் 1000—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1986-க்குப் பின் உள்ள விவசாயிகளின் பம்பு செட்டுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

ஏதுமில்லை.



85—

## பொது மக்கள் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை

வினா எண் 1018—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பொது மக்கள், அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு 15 நாட்களுக்குள் பதில் கிடைக்குமாறு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

பொது மக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் மீது காலதாமதமின்றி உடனடியாக நடவடிக்கை எடுத்து விண்ணப்பதாரர்களுக்குப் பதில் கொடுக்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அவ்வப்போது தக்க அறிவுரைகளை வழங்கி வருகிறது. சாதிச் சான்றுகள் கோரி மாணவர்களிடமிருந்தும் பொது, மக்களிடமிருந்தும் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு விண்ணப்பம் பெறப்பட்ட அன்றே விண்ணப்பதாரர்களுக்கு எந்தவிதத் தொந்திரவோ அல்லது தடையோ இல்லாமல் அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள் வழங்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளது.

86—

## விடுமுறை நாட்களில் சத்துணவு வழங்குதல்.

வினா எண் 1030—திரு. ஆர். ஈஸ்வரன்; மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் கல்வி நிறுவனம் மற்றும் சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு வழங்குவதை நிறுத்தும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

விடை—

இல்லை.

[1992 மார்ச் 16

87—

புத்தன்துறை ஊராட்சியில் மீன் பிடிக்க வசதியாக தூண்டில் வளைவு அமைத்தல்.

வினா எண். 1043— திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

விளங்கோடு தாலுக்காவில் இணையம் புத்தன் துறை ஊராட்சியில் மீனவர்களுக்கு மீன் பிடிக்க வசதியாகத் தூண்டில் வளைவு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

இதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

88—

பழுதுபட்டுள்ள டிரான்ஸ்பார்மர்களை மாற்றல்.

வினா எண். 1088—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் நகராட்சியின் எல்லையில் பழுதுபட்டுள்ள டிரான்ஸ்பார்மர்களை மாற்ற அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) தஞ்சாவூர் நகராட்சி எல்லையில், இந்நகராட்சி மின்னேற்பு டிரான்ஸ்பார்மர்கள் ஏதும் பழுதுபடவில்லை.

(ஆ) எழவில்லை.

89—

சத்துணவு ஊழியர்களின் சம்பள உயர்வு.

வினா எண் 1145—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

சத்துணவு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் மாதச் சம்பளம் உயர்த்தப்படுமா ?



1992 மார்ச் 16]

விடை—

தற்சமயம் சம்பளம் உயர்த்தப்படும் கருத்துரு இல்லை.

90—

புதிய நியாய விலைக்கடைகள் அமைத்தல்.

வினா எண். 1148—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியில், மரியதாய்புரம் கிராமத்தில் ரேஷன் கடை இல்லாமல் மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அமைத்துக் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மரியதாய்புரம் கிராமத்தில் 208 குடும்ப அட்டைகளே இருப்பதால் தனியே நியாய விலைக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

வினா எண் 1154—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதியில், கண்ணாடிக்குளம் கிராமத்தில் ரேஷன் கடை இல்லாமல் மக்கள் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அமைத்துக் கொடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதியில் கண்ணாடிக்குளம் கிராமத்தில் மொத்தம் 98 குடும்ப அட்டைகளே உள்ளதால் தனியே நியாய விலைக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1992 மார்ச் 16

92—

ஏரிப்புறக்கரை மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டுதல்.

வினா எண். 1176—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர்களுக்குச் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

93—

நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள்.

வினா எண். 1246—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்திவட்டம், பவானிசாகர் தொகுதியில் உள்ள PGI நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானியக் கடன் வழங்கப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

94—

மங்களூர் தொகுதியை வறட்சிப்பகுதியாக அறிவித்தல்.

வினா எண் 1253—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1992 மார்ச் 16]

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியை வறட்சிப் பகுதி என அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை. சரியான நீர் வரத்து இல்லாதபோதும், கிடைக்கப்பெற்ற நீரைப் பயன்படுத்தி விவசாயிகளின் சொந்த முயற்சியால் பயிர் செய்யப்பட்ட மானாவாரி பயிர்கள் மற்றும் நெல், கரும்பு ஆகியவற்றின் மகசூல் 60 விழுக்காட்டிற்கு மேல் பெறப்பட்டுள்ளது. நிலவரி முழுவதும் வசூலிக்கப்பட்டு விட்டது. எனவே மங்களூர் தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிகரும் நிலை எழவில்லை.

95—

சின்னாற்றின் மீது அணை கட்டி, நீரை வெலிஙடன் ஏரியில் விடும் திட்டம்.

வினா எண். 1254—திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மங்களூர் தொகுதியின் விவசாயிகளுக்குப் பயன்தரும் வகையில் சின்னாற்றின் மீது ஒரு அணை கட்டி, அந்த நீரை வெள்ளாற்றில் விட்டு, பின்பு வெள்ளாற்று நீரை வெலிங்டன் ஏரியில் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

96—

புதிய ரேஷன் கார்டுகள் அளித்தல்.

வினா எண். 1308—திரு. வே. தமிழரசு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் நகரத்தில் ரேஷன் கார்டுகள் இல்லாதவர்களுக்குப் புதிதாக ரேஷன் கார்டுகள் விரைவில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[1992 மார்ச் 16

விடை—

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் நகரத்தில் புதிய ரேஷன் கார்டுகள் கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியுள்ளவர்களுக்குப் புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

97—

பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் விநியோகம்.

வினா எண். 1371—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் விநியோகத்திற்கு ''ஏ'' மற்றும் ''பி'' பிரிவு என்று தற்போது உள்ளதை இணைத்து தண்ணீர் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

தற்போதுள்ள ''ஏ'' மற்றும் ''பி'' பிரிவுகளை ஒன்றாக இணைத்து தண்ணீர் விடக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.

98—

பாலம் கட்டுதல்.

வினா எண். 1372—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொள்ளாச்சியிலிருந்து சோமந்துரை சித்தூர் பெத்த நாயக்கனூர்செல்ல பாலாற்றில் பாலம் கட்ட போட்ட திட்டம், தடைப்பட்டுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடனடினாக நிறைவேற்ற ஆவன செய்யுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1992 மார்ச் 16]

99—

வேட்டைக்காரன்புதூர் குளத்திற்குத் தண்ணீர்.

வினா எண். 1377—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரம்பிக்குளம்—ஆளியாறு பழைய ஆயக்கட்டு பள்ளிவளங் கால் வாய்க்கால் மூலமாக வேட்டைக்காரன்புதூர் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்ல போட்ட திட்டப் பணி பூர்த்தியடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

பரம்பிக்குளம் ஆளியாறு பழைய ஆயக்கட்டு பள்ளிவளங் கால் வாய்க்கால் மூலமாக வேட்டைக்காரன்புதூர் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்லும் பணி ரூ. 45,000 மதிப்பீட்டில் எடுத்துச் செயல்படுத்தப்பட உள்ளது.

100—

ஆனை மலையாற்றில் அணை கட்டுதல்.

வினா எண். 1378—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தேசிய நீர் அபிவிருத்தி மையத்தின் உதவியுடன் ஆனை மலையாற்றில் அணை கட்டி கோயம்புத்தூர் மாவட்டத்திற்குப் பாசன வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கிறதா ?

விடை—

தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையே பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்தம் நிறைவேறியதும் ஆனைமலையாற்றில் அணை கட்டி பாசன வசதியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

101—

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் முறைகேடுகள்.

வினா எண். 1393—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1992 மார்ச் 16

(அ) திருப்புவனம் ஒன்றியத்தில் கழுவங்குளம் தொடக்கக் கூட்டுறவு வங்கி, எம். எண். 616 கே. பெத்தானேந்தல் தொடக்கக் கூட்டுறவு வங்கியின் நியாய விலைக் கடைகளில் பெரும் அளவில் ஊழல் நடந்ததற்காக ராம்கோ நிறுவனம் எடுத்துக் கொண்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஊழல் செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்குறிப்பிட்ட இரு தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் நடத்தி வந்த நியாய விலைக் கடைகளின் செயல்முறைகளை ஆய்வு செய்ய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 81-ன் கீழ் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த விசாரணை அறிக்கை பெறப்பட்ட பின்பு குறைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க சட்டபூர்வ நடவடிக்கைகள் தொடரப்படும்.

102—

திருப்பாச்சேத்தியிலுள்ள வைகை பாலத்தை உயர்த்திக் கட்டுதல்.

வினா எண். 1396—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

திருப்பாச்சேத்திக்கு நேராக வைகையில் கட்டப்பட்டுள்ள பாலத்தை உயர்த்திக் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—இல்லை.

103—

பரமக்குடியிலுள்ள சத்துணவுக் கூடங்கள்,

வினா எண், 1425—டாக்டர் ச, சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்கள் எத்தனை ?



1992 மார்ச் 16]

(ஆ) எம், புத்தூரில் சத்துணவுக் கூடம் அமைக்கப்படுமா ?

விடை—

(அ) 382,

(ஆ) இல்லை,

104—

இராமநாதபுரம் பெரிய கண்மாய் பாசனத்திற்கு வருடந்தோறும் வைகை ஆயக்கட்டு நீர்,

வினா எண். 1427—டாக்டர் ச, சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் பெரிய கண்மாய் பாசனத்திற்கு வருடந்தோறும் ஒரு போக விவசாயத்திற்கு வைகை ஆயக்கட்டு நீர் திறந்துவிடப்படுமா ?

விடை—

சாத்தியம் இல்லை,

105—

சோமநாத நகரில் பால்வாடிப்பள்ளி,

வினா எண். 1438—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், சோமநாத நகரில் பால்வாடிப்பள்ளிகள் ஆரம்பிக்கப்படுமா ?

விடை—

இல்லை.

[1992 மார்ச் 16

106—

செவ்வூரில் வைகை ஆற்றின் ஓரங்களில் தடுப்புச் சுவர்,

வினா எண். 1441—டாக்டர் ச, சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் செவ்வூரில் வைகை ஆற்றின் ஓரங்களில் தடுப்புச் சுவர் கட்ட அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

107—

டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க நடவடிக்கை,

வினா எண்- 1453—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மானாமதுரை பகுதியில் மருது பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப் பட்டவைகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள 10 சதவீத டீசல் வெட்டினை நீக்கிய பிறகே நிறுத்தி வைக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்து நடவடிக்கை எடுக்க இயலும்.

108—

மானாமதுரை தாலுக்காவைப் பிரித்தல்.

வினா எண். 1458—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மானாமதுரை தாலுக்கா பெரிய தாலுக்காவாக இருப்பதால் இரண்டாகப் பிரித்து திருப்புவனத்தை தலைமையகமாகக் கொண்டு புதிய தாலுக்கா ஏற்படுத்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1992 மார்ச் 16]

விடை—

இல்லை.

109—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

வினா எண். 1476—திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவகங்கையைத் தலைநகரமாகக் கொண்டிருக்கும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் மீண்டும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்படுமா?

விடை—

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தின் பெயர் தற்போது 'பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்- என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

110—

குருவிக்கரம்பையில் சார்பதிவாளர் அலுவலகம்.

வினா எண். 1481—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பையில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

குருவிக்கரம்பையில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறு இல்லை என பதிவுத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

111—

**துவரங்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியை பெண்கள் மேல் நிலைப்பள்ளியாக்கல்.**

வினா எண். 1575—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால் துவரங்குறிச்சி அரசு உயர் நிலைப் பள்ளியைப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக மாற்றி யமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

112—

**நரிக்குறவர் காலனிக்கு மின் வசதி.**

வினா எண். 1593—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி நகரத்தில் உள்ள நரிக்குறவர்கள் காலனிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி நகரத்தில் உள்ள நரிக் குறவர்கள் காலனிக்குத் தெருவிளக்கு பொருத்தக் கோரி விண் ணப்பம் ஏதும் வாரியத்திற்கு வரவில்லை. முறையான விண் ணப்பம் சம்பந்தப்பட்ட நகராட்சியிடம் இருந்து வரப் பெற்றால் இப்பணிகளுக்கான விண்ணப்ப பதிவு வரிசை அடிப்படையில் அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் வசதி அளிக்க ஆவன செய்யப்படும்.

113—

**சத்திரக்குடியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி.**

வினா எண். 1620—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பரமக்குடி தொகுதி சத்திரக்குடியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

114—

**சத்திரக்குடியிலுள்ள மேல்நிலைப் பள்ளிக்குக்கூடுதல் கட்டிடங்கள்**

வினா எண். 1621—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பரமக்குடி தொகுதி சத்திரக்குடியிலுள்ள மேல் நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இந்தப் பள்ளிக்குக் கூடுதல் கட்ட டங்கள் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை. தற் போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து எந்த எந்தப் பள்ளி களுக்குக் கட்டடங்கள் கட்ட இயலும் என்பது இனிமேல்தான் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

115—

**ஆறுகளைத் தேசியமயமாக்குதல்.**

வினா எண். 1630—டாக்டர் ச. சுந்தரராஜ், திரு. ம. சின்னசாமி, டாக்டர் திருமதி மு. சீனியம்மாள், திரு சி. இராமசுவாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆறுகளைத் தேசியமயமாக்க மத்திய அரசைத்தமிழக அரசு வற்புறுத்துமா ?

[1992 மார்ச் 16

விடை—

ஆம்.

116—

பரமக்குடி பகுதியில் வைகை ஆற்றின் ஓரத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றல்.

வினா எண். 1637—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி வைகை ஆற்றின் ஓரத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியில் வைகை ஆற்றின் ஓரத்திலுள்ள புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்தது.

(ஆ) பொதுமக்களுக்கோ அல்லது ஆற்றில் தண்ணீர்வரத்துக்கோ தற்பொழுது எந்தவித இடைஞ்சலும் கிடையாது. இது குறித்து பொதுமக்களிடமிருந்து, ஆட்சேபணை எழும் பட்சத்தில், அவை நியாயமானதாக இருப்பின், பொதுப்பணித் துறை மற்றும் வட்டாட்சியர் ஆகியோர் கூட்டு நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.

117—

பயிற்சி மருத்துவர்களின் உதவித் தொகையை உயர்த்தல்.

வினா எண். 1696—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிற்சி மருத்துவர்களின் உதவித் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.



1992 மார்ச் 16]

118—

சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

வினா எண். 1784—டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

படித்து வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர்கள் பயன் பெறும் வகையில், தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம், சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு தொழில் நுட்ப நிறுவனங்களின் மூலம் பயிற்சியளித்து, சுயமாகத் தொழில் துவங்க அவர்களை ஊக்குவிக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம், நிதியுதவி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் போன்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, தொழில் முனைவோர் ஊக்குவிப்புத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. தொழில் முனைவோர்களின் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு வங்கிகளின் வாயிலாக நிதியுதவி பெற்றுத்தரவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

119—

நொய்யல் அணை கட்டும் திட்டம்

வினா எண். 1823—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நொய்யல் அணை கட்டும் திட்டப்பணி பூர்த்தியாகி விட்டதா ?

(ஆ) ஆம் எனில், பாசனத்திற்குத் தண்ணீர் எப்போது திறந்துவிடப்படும் ?

விடை—

(அ) நொய்யல் அணை கட்டும் திட்டம் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது.

[1992 மார்ச் 16

(ஆ) பாசனத்திற்கு இந்த ஆண்டிலேயே தண்ணீர் திறந்து விடப்படும்.

120—

உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்

வினா எண். 1841—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

121—

கழுகுப்புளிக்காடு பைங்காட்டு வயலுக்கு நரியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து வாய்க்கால் அமைத்தல்.

வினா எண். 1928—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப் புளிக்காடு பைங்காட்டு வயலுக்கு நரியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர வாய்க்கால் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை :

இல்லை.

122—

மண் அணைக்குப்ல் பதிலாக பம்பிங் ஸ்கீம் போட்டுத்தரும் திட்டம்.

வினா எண். 1932—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கொண்டிக் குளம் அருகே ஓடுகின்ற மகாராஜசமுத்திரம் ஆற்றில் அமைந்



1992 மார்ச் 16]

துள்ள மண் அணைக்குப் பதிலாக '' பம்பிங் ஸ்கீம் '' போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

123—

புத்தாம்பூரிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நில ஒதுக்கீடு செய்தல்.

வினா எண். 2084—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், புத்தாம்பூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிலஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிலம் ஒதுக்கப்படும் ?

விடை—

(அ) ஆம். செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம் புத்தாம்பூர் கிராமம், புல எண். 285/6 மற்றும் 283/1 மந்தை வெளி புறம்போக்கு நிலங்களை உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்காகக் கல்வித் துறைக்கு இலவசமாக நிலமாற்றம் செய்வது குறித்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தைப் பெற்று அனுப்பும்படியும், வருவாய் நிலை ஆணை எண். 23(ஏ)-இன் கீழ் நிலமாற்றத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

124—

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கல்.

வினா எண். 2273—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி தொகுதி மேலாய்குடியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

163174 -600 008.
V 21/3/92 (18)

(1992 மார்ச் 16)

(ஆ) ஆம் எனில் எப்போது மாற்றப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

125—

## ஆதிதிராவிடர்களுக்குக் குடிமனைப் பட்டா.

வினா எண். 2304.—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பூவலூர் கிழக்கு ஆதி திராவிடர் தெருவின் குளம் புறம்போக்கில் நீண்ட பல வருடங்களாகக் குடியிருந்துவரும் ஆதிதிராவிடர்களுக்குக் குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் குறிச்சி கிழக்கு ஆதி திராவிடர் தெருவில் குறிச்சி கிராம எல்லைக்குள் குளம் புறம்போக்கில் ஆதி திராவிடர் எவருக்கும் குடியிருப்பு இல்லை. எனவே குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

126—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்

வினா எண். 2307—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பூவலூர் கிழக்கு, ஆதிதிராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலி பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

1991-92ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலை



1992 மார்ச் 16]

வரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டியை தொடர்புடைய ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம்.

127—

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி

வினா எண். 2308—திரு. ஆர். சிங்காரம்— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்ககண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் பூவலூர் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊரட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை .

128—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண். 2312—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் வட்டாரத்திக் கோட்டையைச் சேர்ந்த வழதலை வட்டத்திற்குத் தொலைக் காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலை

வரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

129—

வினா எண். 2312—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதி திராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

1991-92ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளிவிவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் இல்லை.

130—

தெரு விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண். 2320—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாட்டம் பேராவூரணி ஒன்றியம் குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல் இந்திரா நகர் மக்களுக்குத் தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டு வயல் இந்திரா நகர் மக்களுக்கு 42 தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் ஒன்று வாரியத்திடம் நிலுவையில் உள்ளது. மேற்படி 42 தெரு விளக்குகளுக்கு 1991 முதல் 1993 வரை செயலாக்கப்படவுள்ள சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் [மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

131—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்

வினா எண். 2322—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சி கிழக்கு ஆதிதிராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

1991-92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

132—

வினா எண். 2329—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிக உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பூவாளூரைச் சேர்ந்த தெய்வவிடுதியில் உள்ள ஆதி திராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1992 மார்ச் 16

விடை—

1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

133—

வினா எண். 2349—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் மேற்கு காவக்காரன் தெரு மக்களுக்கு வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

1991–92 ஆம் ஆண்டின் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தேர்வு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகள் அந்தந்த ஊராட்சியே வாங்கிக் கொள்ளலாம்.

135—

ஒற்றை விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண். 2357—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



1992 மார்ச் 16]

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதி திராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த சொக்கன் தெரு ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு கேட்டு விண்ணப்பங்கள் ஏதும் மின் வாரிய அலுவலகத்தில் தற்பொழுது நிலுவையில் இல்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வருமாயின் அவ்விண்ணப்பங்களின் பதிவு வரிசை அடிப்படையில் தகுதி பெறும் குடிசைகளுக்கு அப்பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப இலவச மின்இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

135—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண், 2364—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஆதி திராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

1991–92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள அவற்றின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் அனைத்து மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[1992 மார்ச் 16

136—

காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்.

வினா எண். 2554—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வலம்பு மன்காடு ஊராட்சி பஞ்சேரியிலுள்ள மிகவும் பின்தங்கியோர் காலனி வீடுகளைப் பழுது பார்த்து புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப் பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

137—

நகரப்பேருந்து இயக்க நடவடிக்கை,

வினா எண் 2672—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம். பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு மருங்கப்பள்ளம், வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டை செல்ல ஒரு நகரப் பேருந்தை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி—பட்டுக்கோட்டை தடத்தில் முடச்சிக்காட்டில் இருந்து மருங்கப்பள்ளம் வரை சாலை பழுதடைந்து பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. எனவே இவ்விந்தடத்தில் தற்போது பேருந்து இயக்க இயலாது.



1992 மார்ச் 16]

138—

தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்,

வினா எண் 2793—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டிற்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இதுவரையில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி கூட வழங்கப்படாத ஊராட்சிகளில் ரூ. 10,000க்கும் குறைவான ஆண்டு வருவாய் உள்ள ஊராட்சிகளுக்கு 1991–92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படும். அவ்வகையில் மழவேனிற்காட்டின் ஆண்டு வருவாய் ரூ. 19,000 என்பதால் 1991–92 ஆம் ஆண்டில் இதற்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. மழவேனிற்காடு ஊராட்சியே தன்னுடைய நிதியிலிருந்து தொலைக்காட்சிப் பெட்டி வாங்கிக் கொள்வதற்கு வழிவகைகள் உள்ளன.

139—

சென்னை கதீட்ரல் சாலையிலுள்ள அரசு நிலங்களைத்திரும்பப்பெற நடவடிக்கை

Question No. 2884—Tmt. V. G. Manimegalai: Will the Hon'ble Minister for Revenue be pleased to state:

(a) the steps taken by the Government to redeem the Government lands from the private contractors/Licencees and the land in the possession of Drive-in Woodlands hotel on the Cathedal Road, Madras? and

(b) if not he difficulties involved therein?

விடை—

(அ) மற்றும் (ஆ) :—சென்னை மாவட்டம், மைலாப்பூர் கிராமம், புல எண் 13 மற்றும் 64-ல் உள்ள அரசு நிலங்கள் விவசாயத் தோட்டக்கலைச் சங்கத்திற்குக்குத்தகை விடப்பட்டு

[1992 மார்ச் 16

ருந்தன. அவற்றுள் புல எண் 13ல் உள்ள 55 கிரவுண்டு நிலத்தினை விவசாயத் தோட்டக்கலைச் சங்கம் உட்லண்ட்ஸ் டிரைவ் இன் உணவு விடுதிக்கு உட்குத்தகைக்கு விட்டிருந்தது. விவசாயத் தோட்டக்கலைச் சங்கத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலங்களை 5—8—1989 அன்று அரசு மீளப்பெற்றது. எனவே மேற்படி நிலங்களுள் 19 கிரவுண்டு 2,375 சதுர அடி நிலத்தினை உட்லண்ட்ஸ் டிரைவ்—இன் ஓட்டலுக்குக் குத்தகைக்கு விட சென்னை மாவட்ட ஆட்சியர் அரசுக்குச் செயற்குறிப்பு அனுப்பினார்.

இதற்கிடையில் விவசாயத் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து அரசு நிலங்களை மீளப்பெற்றதை எதிர்த்து விவசாயத் தோட்டக்கலைச் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தது. மேற்படி வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. சென்னை உயர்நீதி மன்றம் 16–8–1989 ஆம் நாளிட்ட தனது இடைக்காலத் தீர்ப்பில் மறு ஆணை வரும் வரை 16–8–1989 அன்று இருந்த நிலையே (Status Que) தொடர ஆணை விட்டுள்ளது. விவசாயத் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து அரசு நிலங்களைத் திரும்பப் பெற அரசு ஆணையிட்டதனை எதிர்த்து விவசாயத் தோட்டக் கலைச் சங்கம் சென்னை உயர் நீதி மன்றத்தில் கொடுத்துள்ள வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளதாலும், மறு ஆணை வரும் வரை தற்போதுள்ள நிலையே தொடர சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத்தீர்ப்பளித்துள்ளமையாலும், தோட்டக்கலைச் சங்கம் உட்லண்ட்ஸ் டிரைவ்–இன் உணவு விடுதிக்கு உட்குத்தகைக்கு விட்டுள்ள நிலம் அதன் உபயோகத்திலேயே தொடர்ந்து இருந்து வருகிறது.

140—

## கூட்டுறவு மீனவர் சங்கம் அமைத்தல்.

வினா எண் 3019— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் தனியாகக்கூட்டுறவு மீனவர் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.



1992 மார்ச் 16]

141—

## தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.

வினா எண். 3092—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செல்லப்பிள்ளையார் கோவிலில் வானொலிப் பெட்டியும் தொலைக் காட்சிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்புஉள்ளதா—

விடை—

வானொலித் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம். இவ்வாண்டில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப்பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சி தலைவரிடமிருந்து பெறப் பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தநத மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991–92-ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

142—

வினா எண். 3097—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், பெருமகளூர் நகரம் வலையன்வலில் தொலைக்காட்சிப் பெட்டியும் வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின். ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்புள்ளிவிவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப்

பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

143—:

வினா எண் 3099—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம் கே. ஆர். புரத்திற்குத் தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இவ்வாண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட வேண்டிய ஊராட்சிகளின் பெயர்ப் பட்டியல்கள் அவைகளின் ஆண்டு வருமானங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப் புள்ளி விவரங்களின்படி விகிதாச்சார அடிப்படையில் எல்லா மாவட்டங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்து அளிக்கப்படும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஊராட்சிகளைத் தெரிவு செய்வார்கள். தனியாக இக்குடியிருப்பிற்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சியின் நிதியிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம்.

144—

வினா எண். 3112—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குப்பத் தேவன் ஆதிதிராவிடர்களுக்கு வானொலிப் பெட்டியும், தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?





விடை—

வானொலிப் பெட்டிகளைத் தொடர்புள்ள ஊராட்சிகளின் நிதியிலிருந்தே வாங்கிக் கொள்ளலாம். இதுவரையில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி கூட வழங்கப்படாத ஊராட்சிகளில் ரூ. 10,000-க்கும் குறைவான ஆண்டு வருவாய் உள்ள ஊராட்சிகளுக்கு 1991—92 ஆம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்படும். அவ்வகையில், குப்பத் தேவன் ஆண்டு வருவாய் ரூ. 18,000 என்பதால் 1991—92 ஆம் ஆண்டில் இதற்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

145—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 35 வயதை தாண்டியவர்கள்.

வினா எண். 3134—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 35 வயதைத் தாண்டிய பெண்கள் மற்றும் ஆண்கள் எத்தனை பேர் ?

(ஆ) இவர்களுக்கு இனி வேலைவாய்ப்பு உள்ளதா ?

(இ) இவர்களுக்குக் கடன் உதவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் (31—12—1990 தேதியில் உள்ளபடி) உயிர்ப்பதிவேட்டின்படி 35 வயதைத் தாண்டியவர்களின் விவரம் :

| | |
|---|---|
| ஆண்கள் .. .. .. | 1,432 |
| பெண்கள் .. .. .. | 106 |
| மொத்தம் | 1,539 |

(ஆ) தற்போதுள்ள விதிமுறைகளின்படி மாநில அரசுத் துறைகள் மற்றும் அரசைச் சார்ந்த நிறுவனங்கள் போன்றவற்றில், நியமனம் செய்ய உச்ச வயது வரம்பு 30 ஆகும். ஆனால் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை சாதியினருக்குத் தம்ழ

நாடு அரசு மற்றும் அரசைச் சார்ந்த நிறுவனங்களால் தெரிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு 35 வயது வரையிலும் கல்வித் தகுதி மற்றும் விதிமுறைகளின்படி விண்ணப்பதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றனர். மேலும், தனியார் துறை நிறுவனங்களிலிருந்து கேட்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு அவர்களால் கேட்கப்படும் கல்வித் தகுதி மற்றும் வயது பொறுத்தமட்டிலான விவரங்களுக்கு விண்ணப்பதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றனர்.

(இ) கன்னியாகுமரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 35 வயதைத் தாண்டிய பெண்கள் மற்றும் ஆண்களுக்குக் கடன் உதவி வழங்கும் தனித் திட்டம் எதுவும் தற்போது இத்துறையின் மூலம்அமுல்படுத்தப்படவில்லை. ஆனால் பொதுவாக சுய வேலைவாய்ப்பில் ஈடுபட விருப்பமுள்ள மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகும்போது, அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு அவர்களிடம் விண்ணப்பம் பெறப்பட்டு அனுப்பப்படுகிறது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கி மூலம் கடனுதவி பெற்றுத் தரவும் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

146—

**நன்னிலத்தின் வழியாக சென்னைக்குத் திருவள்ளுவர் சொகுசுப் பேருந்து.**

வினா எண். 3284—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவாரூரிலிருந்து சென்னை வரும் சொகுசுப் பேருந்தைத் திருவாரூர்—நன்னிலம்—குடந்தை வழியாக வரவும், மேலும் இரு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நன்னிலத்தின் வழியாகச் செல்லவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வழித்தடம் எண் 321 (சொகுசுப் பேருந்து) சென்னையிலிருந்து திருவாரூருக்கு குடவாசல் மற்றும் கும்பகோணம் வழியாக இயக்கப்படுகிறது. நன்னிலம் பிரதான சாலையிலிருந்து விலகி உட்புறமாக அமைந்துள்ளது. இச்சாலை தொலைதூரப் பேருந்துகளை





இயக்குவதற்கு ஏற்றதாக இல்லை. தவிரவும் இத்தடத்தின் பயணிகள் விகிதாசாரம் (71 சதவிகிதம்) குறைவாக உள்ளது. எனவே இப்பேருந்தை சுற்றுப் பாதையில் நன்னிலம் வழியாக இயக்குவது உகந்தது அல்ல.

147—

**நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைத்தல்.**

வினா எண். 3756—திரு செ. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதி, வானூர் வட்டத்தில் நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் ஒன்று அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இச் செயற்குறிப்பு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை) அனுப்பியுள்ள மறு நிர்வாக சீரமைப்பு கருத்துருவில் இடம் பெற்றுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

148—

**சென்னையில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அரசு ஊழியர் குடியிருப்புகள்.**

வினா எண். 4079—திரு ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அரசு ஊழியர் குடியிருப்புகள் எங்கெங்கு உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு பகுதியிலும் எவ்வளவு வீடுகள் உள்ளன?

[1992 மார்ச் 16

விடை—

(அ) சென்னை நகரில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அரசு ஊழியர் குடியிருப்புகள் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ளபடி மொத்தம் 62 இடங்களில் உள்ளன. இவற்றில் இனம் 2 மற்றும் 3-ல் உள்ள குடியிருப்புகள் மட்டும் பொதுவாக எல்லாத் துறை அரசு ஊழியருக்கும் அளிக்கப்படுகின்றன. ஏனைய இடங்களில் அவை குறிப்பிட்ட துறையில் குறிப்பிட்ட ஊழியருக்கு மட்டுமே அளிக்கப்படுகின்றன.

(ஆ) ஒவ்வொரு இடத்திலும் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை பட்டியலில் தரப்பட்டுள்ளது.

**சென்னை நகரில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான அரசு ஊழியர்களின் குடியிருப்புகள் பட்டியல்.**

| வரிசை எண். | குடியிருப்பின் பெயர். | குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஆளுநர் மாளிகை வளாகம், கிண்டி .. | 187 |
| 2 | அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2 .. .. .. | 247 |
| 3 | நாடண்டர் நகர், சைதாப்பேட்டை .. | 383 |
| 4 | ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை .. | 1 |
| 5 | அரசினர் கலைக்கல்லூரி, நந்தனம் .. | 1 |
| 6 | எம்.சி. ராஜா மாணவர் இல்லம் .. .. | 2 |
| 7 | ஆலம் இல்லம், புனித ஜார்ஜ் ஆலய வளாகம். | 1. |
| 8 | ஹோபார்ட் முஸ்லீம் பள்ளி, இராயப்பேட்டை | 1 |
| 9 | அரசினர் ஆசாண் மேல் நிலைப்பள்ளி, சென்னை-2 .. .. .. | 1 |



1992 மார்ச் 16]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 10 | காயிதே மில்லத் கல்லூரி, சென்னை-2 | 22 |
| 11 | மாநிலக் கல்லூரி, திருவல்லிக்கேணி .. | 1 |
| 12 | இராணிமேரிக் கல்லூரி, சென்னை-4 .. | 2 |
| 13 | அரசு அருங்காட்சியக வளாகம், எழும்பூர், சென்னை-8. .. .. | 5 |
| 14 | தமிழ்நாடு ஆவணக்காப்பக வளாகம், சென்னை-8 .. .. .. | 1 |
| 15 | பொது மருத்துவமனை வளாகம் ... .. | 21 |
| 16 | சென்னை மருத்துவக் கல்லூரி .. | 881 |
| 17 | மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனை, எழும்பூர் .. .. .. | 71 |
| 18 | கண் மருத்துவமனை, எழும்பூர் ... | 9 |
| 19 | ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை .. | 128 |
| 20 | கீழ்ப்பாக்கம் மருத்துவமனை .. | 2 |
| 21 | அறிஞர் அண்ணா மருத்துவமனை, அண்ணா நகர் .. .. | 7 |
| 22 | மனநோய் நிலையம், கீழ்ப்பாக்கம் | 19 |
| 23 | அரசு எலும்புருக்கிநோய் மற்றும் மார்பு நோய்கள் மருத்துவமனை, சேத்துப்பட்டு. | 4 |
| 24 | இராயப்பேட்டை மருத்துவமனை, இராயப்பேட்டை .. .. .. | 82 |
| 25 | கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி .. | 1 |
| 26 | ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை .. | 8 |
| 27 | கால்நடை மருத்துவமனை, சைதாப்பேட்டை | 10 |

[1992 மார்ச் 16

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 28 | கிங் ஆராய்ச்சி நிலையம், கிண்டி .. .. | 8 |
| 29 | அரசு கிளை அச்சகம், அண்ணாசாலை சென்னை-2 .. .. .. | 1 |
| 30 | அரசு அச்சகம், பழைய சிறைச்சாலை சாலை | 6 |
| 31 | பொதுப்பணித்துறை—பணி மனை மற்றும் பண்டகசாலை—பழைய சிறைச்சாலை, சாலை .. .. | 2 |
| 32 | எழுதுபொருள் அச்சகத்துறை பணியாளர் குடியிருப்பு, தண்டையார்பேட்டை .. | 300 |
| 33 | பொதுப்பணித்துறை பணி மனை மற்றும் பண்டகசாலை பணியாளர் குடியிருப்பு தண்டையார்பேட்டை .. .. .. | 102 |
| 34 | தீர்வைத் துறை அலுவலர் குடியிருப்பு, வண்ணாரப்பேட்டை .. .. .. | 6 |
| 35 | குற்றவியல் மத்திய சிறைச்சாலை, சென்னை-3 | 54 |
| 36 | பூந்தமல்லி நெடுஞ்சாலை .. .. | |
| 37 | ஆதித்தனார் சாலை, எழும்பூர் .. .. | 6 |
| 38 | அரசு அங்கீகரிக்கப்பட்ட இளைஞர் திருத்தப்பள்ளி, இராயபுரம் .. | 21 |
| 39. | காவல்துறை குடியிருப்பு, வேப்பேரி .. | 331 |
| 40. | காவல்துறை குடியிருப்பு, இராயபுரம் பிரிவு .. | 87 |
| 41. | காவல்துறை குடியிருப்பு, இராயபுரம் .. | 188 |
| 42. | காவல்துறை குடியிருப்பு, 'எச்' காவல் நிலையம் .. | 56 |
| 43. | காவல்துறை குடியிருப்பு, திருவொற்றியூர் நெடுஞ்சாலை .. | 52 |



1992 மார்ச் 16]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 44. | காவல்துறை குடியிருப்பு, கல்மண்டபம் | 50 |
| 45. | காவல்துறை குடியிருப்பு, செம்பியம் | 15 |
| 46. | காவல்துறை குடியிருப்பு, திருவல்லிக் கேணி பிரிவு .. | 585 |
| 47. | காவல்துறை குடியிருப்பு, மண்ணடி .. | 480 |
| 48. | காவல்துறை குடியிருப்பு மேற்பார்வையாளர் மற்றும் நீதிமன்ற பொறுப்பாளர் குடியிருப்பு உயர்நீதிமன்ற வளாகம் .. | 2 |
| 49. | காவல்துறை குடியிருப்பு, சிந்தாதிரிப் பேட்டை .. | 4 |
| 50. | பி2, காவல்துறை குடியிருப்பு, கிரிம்ஸ் சாலை .. | 46 |
| 51. | காவல்துறை குடியிருப்பு, மான்சன் வளாகம், கிரீம்ஸ் சாலை, நுங்கம் பாக்கம் .. | 366 |
| 52. | காவல்துறை குடியிருப்பு, கொச்சின் ஹவுஸ், கிரிம்ஸ் சாலை, நுங்கம் பாக்கம் .. | 265 |
| 53. | காவல்துறை குடியிருப்பு, வில்லேஜ் சாலை, நுங்கம்பாக்கம் .. | 47 |
| 54. | காவல்துறை குடியிருப்பு, முத்தைய முதலி சந்து, தேனாம்பேட்டை .. | 3 |
| 55. | காவல்துறை குடியிருப்பு, கோபதி நாராயணா சாலை, தியாகராயநகர் .. | 4 |
| 56. | காவல்துறை குடியிருப்பு, கோடம் பாக்கம் நெடுஞ்சாலை .. | 8 |
| 57. | காவல்துறை குடியிருப்பு. ஏ.பி. கோயில் தெரு, வடபழனி | 12 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 58. | காவல்துறை குடியிருப்பு, 100 அடி சாலை, அசோக் நகர் .. | 49 |
| 59. | காவல்துறை பயிற்சிக் கல்லூரி, அசோக் நகர் .. | 29 |
| 60. | இரயில்வே காவலர் குடியிருப்பு .. | 6 |
| 61. | மருத்துவத்துறை இயக்குநர் அலுவலக வளாகம் .. | 5 |
| 62. | கல்வி இயக்குநர் அலுவலக வளாகம் .. | 8 |
| | | 5,343 |

நூலகங்களில் வாங்கப்படும் செய்தி ஏடுகள் மற்றும் வார இதழ்கள்.

149—

வினா எண். 4140—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

மாநில அரசால் நடத்தப்படும் மாவட்ட மற்றும் கிளை நூலகங்களில் தற்போது என்னென்ன செய்தி ஏடுகள், மாத மற்றும் வார இதழ்கள் வாங்கப்படுகின்றன ?

விடை—

பொது நூலகர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட மற்றும் கிளை நூலகங்களில் தற்போது வாங்கப்பட்டு வரும் நாளிதழ் மற்றும் பருவ இதழ்கள் பற்றிய விவர அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

பொது நூலகத்துறை.

தற்போது பொது நூலகங்களுக்கு வாங்க அரசு அங்கீகரித்துள்ள பத்திரிக்கைகள்.

(தமிழ்.)

நாளிதழ்கள்.

1. அண்ணா
2. தினத்தந்தி



தமிழ்—தொடர்ச்சி.

நாளிதழ்கள்—தொடர்ச்சி.

3. தினமலர்
4. தினமணி
5. மக்கள் குரல்
6. மாலை மலர்
7. விடுதலை

வார இதழ்கள்.

1. ஆனந்த விகடன்
2. இதயம் பேசுகிறது
3. கல்கண்டு
4. கல்கி
5. கிராம ராஜ்யம்
6. சாவி
7. குமுதம்
8. செங்கோல்
9. தாய்

மாதமிருமுறை.

1. இளம் விஞ்ஞானி
2. உண்மை
3. ஏர் உழவன்
4. தமிழரசு
5. திட்டம்

[1992 மார்ச் 16

தமிழ்—தொடர்ச்சி.

மாதமிருமுறை— தொடர்ச்சி.

6. தமிழியல்

7. சமரசம்

8. சித்தர் சிந்தனை

மாத இதழ்கள்.

1. அம்புலிமாமா

2 அமுதசுரபி

3 கலைக்கதிர்

4. குறளியம்

5. செந்தமிழ் செல்வி

6. தமிழ் பொழில்

7. மஞ்சரி

8. மங்கை

9. யுனெஸ்கோ கூரியர்

10. ஹோமியோபதி

11. கோகுலம்

12. சித்தாந்தம்

13. விளையாட்டுக் களஞ்சியம்

14. கவிதை

15. விஞ்ஞானச் சுடர்

16. சர்வோதயம்

17. அனுபவ வைத்தியம்

18. சித்த மருத்துவம்



1992 மார்ச் 16]

மாத இதழ்கள்—தொடர்ச்சி.

19. திருக்கோயில்

20. சுகந்தம்

21. கழக கதிர்

22. தமிழ்ப்பணி

23. பாரதி சோலை

24. தமிழர் விளையாட்டு மடல்

25. வள்ளுவர் வழி

26. இஸ்மி

27. முல்லைச்சரம்

28. ஓம்சக்தி

29. வாழும் தமிழ் உலகம்

30. தீபம்

31. விஞ்ஞான விவசாயம்

32. குண்டூசி

33. வளரும் தமிழ்

34. ஒன்றே உலகம்

35. மங்கையர் மலர்

36. குருவின் குரு

37. பெருங்கருணை

38. இலட்சியப் பெண்

39. உதவிக்கரம்

40. தமிழ்ப் பாவை.

மாத இதழ்கள்—தொடர்ச்சி.

41. வரி ஆலோசனை.

42. குறள் மணம்.

43. மலர் பூமி.

44. கோழி கூவுது.

45. முகம்.

46. பூந்தளிர் மற்றும் அமர்சித்ரா.

47. மூலிகை மணி.

48. கலைமகள்.

49. சமய ஜோதி.

காலாண்டு இதழ்கள்:

1. வளரும் வேளாண்மை.

2. தத்துவ தரிசனா.

3. தமிழர் பண்பாடு.

4. கால்நடைக் கதிர்.

5. களஞ்சியம்.

6. புதிய கல்வி.

பொது நூலகத் துறை.

அரசு அங்கீகரித்துள்ள ஆங்கிலப் பத்திரிகைகளின் பட்டியல்:

1. The Hindu
2. Indian Express
3. Economic Times
4. Times of India



பொது நூலகத் துறை— தொடர்ச்சி.

அரசு அங்கீகரித்துள்ள ஆங்கில பத்திரிகைகளின் பட்டியல்— தொடர்ச்சி.

5. Financial Express
6. National Herald
7. News Today.

*Weeklies* :

1. Illustrated Weekly
2. Eve's Weekly
3. Eastern Economist
4. Commerce
5. Capital
6. Time
7. Blitz
8. Law Weekly
9. Sports World
10. Sports Star
11. Link
12. The Industrial Herald
13. Employment News
14. Sunday
15. Indrajal Comics

*Fortnightlies* :

1. Industrial Economist
2. Garments India
3. Soviet Land
4. Bhawan's Journal
5. Femina
6. Star and Style
7. Business India
8. Southern Economist
9. Tamiliyal
10. Frontline
11. Champak
12. India Today
13. Caravan (Alive).

*Monthlies* :

1. Aside
2. Indian Travel Guide
3. Kisan World
4. Chandamama
5. Soviet Woman
6. Science Digest
7. Medical Digest



*Monthlies*– cont.

8. Reader's Digest
9. Life
10. Hallo Madras
11. Sarvodaya
12. Inside and Outside
13. The Indian Medicine
14. Tamilarasu
15. The Midnight Sun
16. The voice of the Great Anna
17. F.T.S. Friends
18. The Press Digest
19. Purity
20. Executive Business Law Journal
21. Wisdom
22. Science To-day
23. Jr. Science Digest
24. Careers Digest
25. Competition Success Review.

Bi. *Monthlies* :

1. Hinduism To-day.

*Quarterlies* :

1. Indian Journal of Political Science
2. Lodestar
3. Indo-British Review
4. Review Projector
5. Journal of Educational Research and Extension
6. Siddha System of Life.

*Half-Yearly*

1. Nunkalai.

*Annual* :

1. Journal of Asian Studies
2. The Hindu Survey of Indian Industry.

150—

**சத்துணவு ஊழியர்கள் பற்றி புகார்கள் மீது நடவடிக்கை.**

வினா எண் 5294-திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் சத்துணவுக்கூடங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பற்றி புகார்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) அவற்றின் விவரம் என்ன ?

(இ) அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



விடை—

(அ), (ஆ) மற்றும் (இ). சத்துணவுக் கூடங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பற்றிய புகார்களை விசாரணை செய்து அதன்படி நடவடிக்கை எடுக்க அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே இம்மாதிரியான புகார்கள் குறித்து நடவடிக்கை எடுத்து விடுவதால் அரசு அளவில் சத்துணவு ஊழியர்களைப் பற்றிய புகார்கள் எதுவும் தற்சமயம் நிலுவையில் இல்லை.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி [*] இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் குறிப்புகள்.

### (அ) உரிமைப் பிரச்சினை எழுப்பும் நடைமுறை குறித்து.

திரு. இளம்வழுதி: தலைவரவர்களே,......

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், நான் சொல்கிறேன், நீங்கள் எதை எழுப்பப் போகிறீர்கள்?

திரு. எஸ், திருநாவுக்கரசு: பிரிவிலேஜ் சம்பந்தமாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவிலேஜ் இஷ்யூவைப் பற்றி என்னிடத்திலே எழுதிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது,

திரு. எஸ். திருநாவுக்கரசு: 226-ஐப் படியுங்கள், ஆளுங் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஒருவர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைக் கேளுங்கள், 226-வது விதியைப் படியுங்கள். அதாவது, விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பொழுது அது சம்பந்தமாக ஏதேனும் எழுப்புவதற்குத்தான் 226 (குறுக்கீடு). இதைக் கேளுங்கள், விதி என்ன என்பதைப் பாருங்கள். 'Notwithstanding anything contained in these rules, the Speaker mays *Suo-motu* refer any question of Privilege to the Committee of Privileges for examination, investigation and report.'

என்றுதான் இருக்கிறது, 'suc-mctu' அனுப்பலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடு) இது ஸ்பீக்கருக்கு இருக்கிற அதிகாரம், இதில் உறுப்பினருக்கு என்ன இருக்கிறது?

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் சொல்வது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதைக் கேளுங்கள், இது சம்பந்தமாகச் சில உறுப்பினர்கள் என்னிடத்திலே எழுத்து மூலமாகச் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள், அதுபற்றி நான் பதில் சொல்ல எழுந்திருக்கிறேன். நீங்கள் கொடுக்காத உறுப்பினர். இந்த விதியை சொல்லிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?

திரு, எஸ், திருநாவுக்கரசு: ரூலிங் பார்ட்டி மெம்பர்,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ரெஃபர் பண்ணலாம் என்பது எனக்கு இருக்கிற உரிமை, அதை நீங்கள் சொல்ல வேண்டியது இல்லை, நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு), நீங்கள் உட்காரலாம். மற்ற உறுப்பினர்களுக்கு அது பற்றிக் கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: என்ன ஆயிற்று என்று,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்த உறுப்பினர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும், கொடுக்காமல் நின்று கொண்டு இருப்பது என்றால்—எந்த விதியிலே இப்பொழுது நிற்கிறீர்கள், சொல்லுங்கள், எல்லாம் தெரிந்ததுபோல் ஒவ்வொரு தடவையும் நீங்கள் எழுந்து கொண்டு இருக்கிறீர்கள், நீங்கள் எந்த விதியிலே இப்பொழுது நிற்கிறீர்கள்? விதி 226,இல் "The Speaker may *suo-motu* refer any matter involving breach of privilege "என்று இருக்கிறது, இது ஸ்பீக்கர் செய்யவேண்டிய விஷயம், இதிலே நீங்கள் எழுந்து கொண்டிருந்தால் என்ன செய்வது? இதில் ஏதேனும் நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள்?

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஸீரோ ஹவரிலே .......

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zoro Hour என்று ஏதாவது விதி இருக்கிறதா? (குறுக்கீடு) பார்லிமெண்டிலும் விதி இல்லை; இங்கும் விதி இல்லை, (குறுக்கீடு) ஏதாவது விதி இருந்தால் சொல்லுங்கள், நீங்கள் இங்கு எல்லாம் தெரிந்ததைப் போல பேசிக் கொண்டே இருக்கக் கூடாது.



zero hour என்று எந்த விதி இருக்கிறது, இந்த விதி226-இல் speaker may suo moto refer என்றுதான் இருக்கிறது. அது, speaker-க்கு இருக்கிற அதிகாரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. zero hour என்பது ஒரு convention தானே தவிர, அது விதி இல்லை, "Parliamentary Rules of Procedure and also Rules of Procedure in the Legislative Assembly" இவற்றைப் படித்துப் பார்த்தோமேயானால் "Zero Hour" என்பதற்கு எந்தவிதமான விதிமுறையும் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி,)

திரு, எஸ், திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், என்னிடத்திலே கொடுத்த உறுப்பினருக்கு நான் பதில் சொல்ல வேண்டும், (குறுக்கீடு), என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்கு நான் விளக்கம் சொல்ல வேண்டும், (குறுக்கீடு) அதை நீங்கள் கேட்கவில்லை; உட்காருங்கள்,

(ஆ) உறுப்பினர் திரு, பி, சொக்கலிங்கம். உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சிலரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் குறிப்புரை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு,பி. சொக்கலிங்கம். பேரவை விடுதியிலேயிருந்து கடத்திச் செல்லப்பட்டு. தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து. திரு. பரிதி இளம்வழுதி விதி 56-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத் தையும், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஸ்பெஷல் மென்ஷனாக இதை அவையில் எழுப்ப வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையும் கேட்டு, என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், பொது விவாதத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுப்பதில்லை என்பது நியதி. அதனால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுத்திருக் கிறேன். இருந்தாலும். இது உறுப்பினரைப் பற்றிய பிரச்சினை, அதுவும் சட்டமன்ற விடுதியில் நடந்ததாகத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், சட்டமன்ற விடுதி என்பது வேறு எந்தத் துறை யின் கீழ் வராமல். பேரவைத் தலைவருடைய நேரடி நிர்வாகத் திலே வருகிற ஒரு இடமாகும், எனவே. நான் இதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு, சொக்கலிங்கம் அவர் கள் தாக்கப்பட்டதாக காவல்துறைக்கு செய்தி கிடைத்து காவல் துறை அதுபற்றி தீவிரப் புலன் விசாரணை செய்து கொண்டிருப்ப தாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள், மேலும். சட்ட மன்ற விடுதிக்குள் உறுப்பினர்கள் பெரிதும் பாதுகாப்பாக இருக்கத்தக்க பல்வேறு நடைமுறைகளை நாம் வகுத்துக்

கொண்டிருக்கிறோம், இன்னும் அதிகமான பாதுகாப்புக்குரிய
ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பார்வை
யாளர்களை இரவு நேரத்தில் விடுதிக்குள் அனுமதிப்பதில் சிலபல
கடுமையான நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டு
மென்றுகூட நான் "அவைக் குழு" வுக்கு ஒரு கோரிக்கையைப்
பரிசீலிக்குமாறு எடுத்து வைத்திருக்கிறேன், இன்னும் அதிகமான
காவல்துறை பாதுகாப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்
கின்றன. திரு, சொக்கலிங்கத்தைப் பொறுத்த மட்டில். அவர்
கொடுத்து இருக்கிற புகார் மீது காவல்துறை தீவிரப் புலன்
விசாரணை செய்து கொண்டிருக்கிறது, மருத்துவமனையில்
அவர் நலமாக இருக்கிறார் என்ற செய்தியும் தெரிவிக்கப்பட்
டிருக்கிறது. உறுப்பினர்களுடைய பாதுகாப்பைப் பொறுத்த
மட்டில் முழு அளவில் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்
படும் என்பதைத் தெரிவித்து. இந்தப் பிரச்சினையை இத்துடன்
விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு, எஸ், திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. இது போன்ற.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கொடுத்து இருப்
பதிலே யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை,

திரு, இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே. இதுபோன்ற சம்பவம் தொடர்ந்து நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடைபெற்றுக் கொண்
டிருக்கிறது என்பது சரியல்ல: விடுதிக்குள் இது நடந்தது என்
பதால், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு), நீங்கள் உட்
காருங்கள், உங்களுக்கு அனுமதியை மறுத்திருக்கிறேன், நீங்கள்
சொன்னதற்கு உங்களுடைய தகவலுக்காக இதை அவையிலே
தெரிவித்திருக்கிறேன், இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்
டாம்,

## 3. வரவு-செலவுத் திட்டம், 1992–93, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992–93 ஆம் ஆண்டிற்
கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது மேலும் விவாதம்.
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை
அறிக்கையின் மீது, எதிர்க்கட்சியின் சார்பில் கருத்துக்களைத்



தொகுத்துக் கூறும் கட்டத்திலே நான் உங்கள் முன்னால் நிற்கிறேன். மிகவும் நெருக்கடியான நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, அரசியல் துறையிலும் ஒரு நெருக்கடியை நாம் மத்தியிலே சந்திக்க நேர்ந்தது. குறுகிய கட்சிக் கண்ணோட்டங்களைக் கடந்து, தேசிய நோக்குடன் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்ட ஆதரவால், ஒரு மிகப் பெரிய நெருக்கடி தவிர்க்கப்பட்டது. அதில் நம்முடைய முதலமைச்சருக்கு குறிப்பிடத்தக்க பாத்திரம் இருந்தது. அவர் அளித்த ஆதரவுக்கு, பிரதமரே அவருக்கு நன்றி தெரிவித்து இருப்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் பின்பற்றி, அவை உறுப்பினர்களும், நாட்டு மக்களும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசு கவிழ்ந்துவிடும் என்றும், இடைத் தேர்தல் வந்து விடும் என்றும் எண்ணிக் கொண்டு செயல்பட்டவர்கள் ஏமாந்து போனார்கள். மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையை முதலமைச்சர் பாராட்டி வரவேற்று இருக்கிறார். புரட்சிகரமான பட்ஜெட் என்று நடுநிலையாளர்களால் பாராட்டி வரவேற்கப்பட்டதை நமது முதலமைச்சர் அவர்கள் பாராட்டி இருப்பது பொருத்தமானது.

முற்பகல் 10–50

பலதரப்பான பத்திரிகைகளும், பொருளாதார நிபுணர்களும் அந்த பட்ஜெட்டைப் பெரிதும் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள். அதிலே இரண்டொன்றை மட்டும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். நம் தமிழகத்தில் பிரசுரிக்கின்ற 'ஆனந்தவிகடன்' பத்திரிகையில் 'நிம்மதிப் பெருமூச்சு' என்று தலைப்பிட்டு, மைனாரிட்டியாக இருந்தாலும், நரசிம்மராவ் ஆட்சி நிதானமாக செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் ஒரு பட்ஜெட்டை அளித்துள்ளது. நெருக்கடியில் சிக்கி, முச்சந்தியில் நின்ற இந்தியப் பொருளாதாரம் குறிப்பிட்ட பாதை நோக்கி வழி நடத்தப்பட்டிருக்கும் நேரம் இது என்று சொல்லப்பட்டு, கடைசியில், எதிர்க்கட்சிகளின் சிறுபிள்ளைத்தனமான இந்த முயற்சி தோற்றுப் போனதை அறிந்து மக்கள் 'நிம்மதிப் பெருமூச்சு' தான் விடுகின்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறது.

அதேபோல, 'குமுதம்' பத்திரிகையும் ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. நரசிம்மராவின் பலம், கருணாநிதி உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும், அது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது

அல்ல. அவரது பலம் மக்களின் இதயத்தில் இருக்கிறது. எதிர்காலம் குறித்து அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையில் இருக்கிறது என்றும் அந்தப் பத்திரிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

உண்மையில், உர மானியத்தை மட்டும் மத்திய அரசு ரத்துச் செய்திருக்குமேயானால், 5,000 கோடி ரூபாய் மத்திய அரசுக்கு கிடைத்து, பற்றாக்குறையே இல்லாத பட்ஜெட்டாக அது அமைந்திருக்கும். விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு, மானியத்தை ரத்து செய்ய மறுத்தது. அதேபோல, விவசாய வருமானத்தின் மீது வரி விதிக்கப்பட வேண்டுமென்ற உலக வங்கியின் ஆலோசனையையும் மத்திய அரசு ஏற்கவில்லை. உலக வங்கியின் நிர்ப்பந்தத்திற்கு மத்திய அரசு பணிந்து விட்டது என்ற குற்றச்சாட்டும் அதன் மூலம் தகர்க்கப்பட்டு விட்டது.

அதேபோல, நம்முடைய மாநிலத்திலும் சென்ற நிதி ஆண்டில் 1,220 கோடி ரூபாய் அளவுக்கு இருந்த பற்றாக்குறை நிலையை 1992–93 ஆம் ஆண்டு முடிவில் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ. 494.09 கோடியாக பற்றாக்குறையைக் குறைத்து நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது மிகப் பெரிய சாதனையாகும். விலைவாசிகளைப் பாதிக்காத வகையில் 70 கோடி ரூபாய்க்கு மட்டுமே வரி விதித்திருக்கிறார்கள். அரசின் சிக்கன நடவடிக்கைகள் மூலம் ரூ. 55 கோடி மிச்சப்படுத்தியும் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்த ரூ. 62.47 கோடி செலவில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. முதியோர், விதவைகள், ஆதரவற்ற மகளிர், உடல் ஊனமுற்றவர்களுக்கான உதவித் தொகையை ரூ. 50 லிருந்து ரூ. 75 ஆக உயர்த்தியிருப்பதும், கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகையை ரூ. 200லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

அதேபோன்று விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் 40,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு தரும் சிறப்புத் திட்டத்தையும் நான் வரவேற்கிறேன்.

சென்ற முறை இந்த அவையில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஏனைய மத்திய அரசின் பணித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் தனிப் பயிற்சி நிலையத்தை முழு அளவில், நிலை உயர்த்தவும், புதிய வளாகம் ஒன்றில் அதை அமைக்கவும், ரூ. 35 இலட்சத்தை ஒதுக்குவது பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.



உண்மையில் சத்துணவு, இலவச மின்சாரம், நியாய விலையில் உணவுப் பண்டங்கள் விநியோகம், ஏழைகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குதல் போன்ற மக்கள் நலத் திட்டங்களைக் கைவிட்டிருந்தாலேயே ஒரு உபரி பட்ஜெட்டை நாம் இங்கே வழங்கி இருக்க முடியும். ஆனால் எவ்வளவு நிதி இடர்ப்பாடு இருந்தாலும், அந்த நிலைக்குச் சென்று விடாமல் பட்ஜெட்டைத் தயாரித்ததற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அரசியல் உறவுகளுக்கு அப்பாற்பட்டு, யதார்த்த நிலையில் இந்தக் கருத்துக்களை நான் கூற முற்படுகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றபோது ரூபாய்க்கு 1 படி அரிசி திட்டத்தை, கோவை, சென்னை போன்ற நகரங்களுக்கு அமல்படுத்தினார். ஆனால் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்ததினால் அந்தத் திட்டத்தைத் தொடரவோ, விரிவுபடுத்தவோ அவர்களால் முடியாமல் போய் விட்டது. அதற்காக, ஏழை மக்கள் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டையோ, அவருடைய உயர்ந்த மனிதாபிமானத்தையோ ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு கல்வி அமைச் அமைச்சர்.

முற்பகல் 10–55

<u>மாண்புமிகு டாக்டர் செ.அரங்கநாயகம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலேயும், சென்னையிலேயும் ஒரு படித் திட்டத்தைக் கொண்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆனால் அதை எடுத்தவர் அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற கருணாநிதி.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், தொடர முடியவில்லை என்றுதான் சொன்னேன். யார் மீதும் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கம் இல்லை. அண்ணா அவர்களுக்கு மக்கள் மீது இருந்த ஈடுபாட்டையோ, அவர்களுடைய உயர்ந்த மனிதாபிமானத்தையோ, யாரும் மறுக்க முடியாது. அதற்காக நான் சொல்லவில்லை. ஆனால் அதைத் தொடர முடியவில்லை. அடுத்து வந்த அரசுகளால் கூட தொடர முடியாத நிலை ஏற்பட்டது என்றுதான் நான் சொன்னேன். அண்ணாவே சொல்லியிருக்கிறார். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று. உயர்ந்த இலட்சியம் அது. அதற்காக வசதி உள்ளவர்களுக்கு

வரி விதிப்போம்; ஏழை மக்களுக்கு வசதியைப் பெருக்குவோம் என்கின்ற அணுகுமுறைகள் பற்றி எல்லாம் அண்ணா அவர்கள் சொன்னார்கள். Tap the rich and pat the poor அதாவது தாங்கக் கூடியவர்களுக்கு வரி விதிக்கக்கூடியது என்பது தவறான கொள்கை என்று கூற முடியாது. அதுதான் அண்ணாவினுடைய கொள்கையாக இருந்தது. அதைத்தான் இந்த அரசும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பின்பற்றவில்லை என்று நான் சொல்லவில்லை. மின்சாரக் கட்டணத்தைத் தொழில் அதிபர்கள் எதிர்க்கவில்லை. உண்மையில் அவர்கள் அதிகமான கட்டணத்தைச் செலுத்தி வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் தொழில் அதிபர்களுக்குக் கொஞ்சம் மின்சாரக் கட்டணம் அதிகம். தடை இல்லாமல் மின்சாரம் வழங்கப்படுவதைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். மின் வாரியங்களில் ஏற்படும் இழப்பைக் குறைக்க கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இப்போது மத்தியில் புதிதாக ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. 8,162 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்களுக்கு 20,108 கோடி ரூபாய் முதலீடு செய்ய தனியார் துறை முன் வந்துள்ளது. இதில் பாதிக்கு மேற்பட்டது அன்னிய முதலீடாக அமைந்திருக்கிறது. தமிழகத்திற்கு இதிலே மூன்று பெரிய திட்டங்கள் வர இருக்கின்றன. அவற்றைச் சிறந்த முறையில் நிறைவேற்றி மாநிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி ஆகியவற்றைத் துரிதப்படுத்த முடியும். இந்திய ரிசர்வ் வங்கி நமது மாநிலத்தின் பொருளாதார நிலை குறித்து ஒரு ஆய்வு நடத்தி இருக்கிறது. அதில் மின் வாரியம் மற்றும் போக்குவரத்துக்கள் குறித்த ஆய்வு நாம் பரிசீலிக்க வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது. அதிலே அந்த இரண்டு துறைகளிலும் கடுமையான நிர்வாகச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி கூறப்பட்டிருக்கிறது. வங்கிகள் நிலை பற்றி நரசிம்மம் கமிட்டி சமர்ப்பித்த அறிக்கை போன்று இந்த அறிக்கையும் ஒரு முக்கியமான அறிக்கையாகக் கருதப்பட வேண்டும்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 67 இலட்சம் ரூபாய் கையாடல் செய்யப்பட்டது பற்றி இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். உள் தணிக்கை, வெளித் தணிக்கை எல்லாவற்றையும் மீறி இவ்வளவு பெரிய தொகை கையாடல் ஒரு கீழ்நிலை ஊழியரால் செய்யப்பட்டிருக்கிறது. உயர்மட்ட அதிகார வர்க்கம் அதற்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இருந்தாலும் போக்குவரத்து வசதியைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலம் முன்னணியில் எப்போதும் இருப்பது உலக வங்கி உட்பட எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் நிதிநிர்வாகத்தில் உள்ள கோளாறுகளால் ஏற்பட்ட மோசமான நிலைமைகளைப் பற்றி நாம் ஆராய வேண்டி உள்ளது. இந்த நிலைமைகளை முழுமையாக ஆராய்ந்து குறைகளைப் போக்க அரசுக்கு ஆலோசனை கூறும் வகையில் ஒரு உயர்மட்டக் குழு அமைப்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மின் வாரியங்களின் தலைவர்களைக் குறுகிய காலத்தில் அடிக்கடி மாற்றுவது நிர்வாகத்தைத் திறம்பட நடத்த உதவாது என்பதைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வணிக வரி வசூலைப் பொறுத்த வரையில் தேக்க நிலையைப் போக்க ரிசர்வ் வங்கி, நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறது. அதைப் பின்பற்றி உயர் நீதிமன்றத்தில் தேங்கியுள்ள வணிக வரி சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகளையும் நடத்துவதற்கு ஒரு சிறப்பு வழக்கறிஞரைத் தமிழக அரசு நியமித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். இந்திய அரசின் வரி விதிப்பில் சுங்க வரி குறைக்கப்பட்டு, மாநிலங்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய 'எக்ஸைஸ் ட்யூட்டி' வருமான வரி போன்றவை உயர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மத்திய அரசுக்கு 950 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை முழுவதும் மாநிலங்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. இதன் மூலம், தமிழகம் கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் நீண்ட நாட்களாக வைத்த கோரிக்கை மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மத்திய அரசுக்கு மட்டுமே சேரக்கூடிய கஸ்டம்ஸ் ட்யூட்டி, வரி விதிப்பை பெருமளவு ரத்து செய்திருப்பதை மாநில அரசுகள் மனப்பூர்வமாக வரவேற்று இருக்கின்றன. மத்திய அரசின் சிக்கன நடவடிக்கையில் ஒரு பகுதியாக ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றை கடுமையாகக் கட்டுப்படுத்தியும், கண்காணித்தும் வந்த 'ஆபீஸ் ஆப் தி கன்ட்ரோலர் ஆப் இம்போர்ட்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ்' என்ற ஸ்தாபனமே ஒழிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-00.

அதற்குப் பதிலாக, ஏற்றுமதி வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் ஒரு புதிய அமைப்பை — ''எக்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்'' — உருவாக்கி அதில் குறைந்த அளவிலான எண்ணிக்கையிலே ஊழியர்களை வைத்துக் கொண்டு, மற்றவர்களை வேறு துறைகளில் பணிக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதே போன்று 'கன்ட்ரோலர் ஆப் கேபிடல் இஷ்யூஸ்' என்ற அமைப்பும் ஒழிக்கப்பட்டுவிட்டது. இனிமேல் தொடங்கப்படுகின்ற புதிய பப்ளிக் லிமிட்டெட் கம்பெனி பதிவு செய்தால் மட்டுமே போதுமானது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 16

முன்பு போல, அத்தகைய கம்பெனிகள் தொடங்குவதற்கு அனுமதி கோரியும், இயங்கிக் கொண்டிருக்கின்ற கம்பெனிகளை புதுப்பிக்கக் கோரியும் வருடக் கணக்கில் அலையவோ, அதிகமான பொருட் செலவுகளை மேற்கொள்ளவோ, அதிகார வர்க்கத்தின் பிடியில் சிக்கி அல்லல்படவோ அவசியம் இல்லை. இந்தப் புரட்சிகரமான மாறுதலைச் செய்வதன் மூலம் தொழில் தொடங்க முன் வருபவர்க்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று மாநிலங்களில் தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு சில நடைமுறைகளை வகுக்க வேண்டும். குஜராத் போன்ற மாநிலங்களில் இருப்பதைப் போன்று தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு 'காத்திருந்து உதவும் உயர் மட்ட அதிகாரிகளை' 'ஆபீசர்ஸ் இன் வெயிட்டிங்' நியமிக்க வேண்டும். இங்கே என். ஆர். ஐ-க்கள் வந்தால் சில நேரங்களிலே அதிகாரிகளைச் சந்தித்து பல நாட்கள் சிரமப்பட்டாலும் அதற்குரிய அனுமதியைப் பெற முடியுமா என்று அவர்கள் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு இது மிகவும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில்களைத் தொடங்குவதற்கு பல்வேறு அனுமதிகளை பெறவேண்டிய கட்டாயங்களை தளர்த்தி நடைமுறைகளை எளிதாக்கி உதவுகின்ற வகையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். தொழில் தொடங்குவதற்கு தேவையான கட்டமைப்பு, இன்ப்ரா ஸ்ட்ரக்சர் செப்பனிடும் வகையிலே புதிய அறிவிப்புகளை செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மத்திய அரசின் முதலீடு இங்கே குறைந்து கொண்டே வந்து இருப்பதாக குற்றம் சுமத்தப்படுகிறது. உண்மையில் கடந்த 3 ஆண்டுகளாக எந்த மாநிலத்திலேயுமே பொதுத் துறையில் முதலீடு செய்யப்படவில்லை. எல்லா மாநிலங்களிலும் மத்திய அரசின் முதலீடு குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழகத்திற்கு மாத்திரம் குறைக்கப்பட்டிருப்பதாக கூற முற்படுவது உண்மைக்கு புறம்பானதாகும். தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்த அஸ்ஸாம், பீகார், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்கள் மட்டுமே விதி விலக்காகும். ஓரளவுக்கு கூடுதல் முதலீடு அங்கே செய்யப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு நிதி தருவதைப் பொறுத்தவரையில் மத்தியிலே அதற்கு என்று அமைப்புகள் இருக்கின்றன. அவைகள் மூலமாகத்தான் நிதிப் பங்கீடு என்பது வரையறுக்கப்படுகின்றது. மத்தியிலே இருக்கின்ற 'பைனான்ஸ் கமிஷன்' ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வருகிறது. அது அரசியல் சட்டத்திலே 280வது பிரிவிலே வருகிறது. அதற்குப் பின்னாலே பிளானிங் கமிஷன். யூனியன் பைனான்ஸ் மினிஸ்ட்ரி, அதையும் தாண்டி



1992 மார்ச் 16] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில். இவைகள் எல்லாம் சேர்ந்துதான் மாநிலங்களுக்கு எப்படி நிதியைப் பிரித்துக் கொடுப்பது என்று தீர்மானிக்கிறார்கள்.

கடந்த 1985 ஆம் ஆண்டிலேயிருந்து 1990 ஆம் ஆண்டு வரையில் எடுத்துக் கொண்டால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், 6,103 கோடி ரூபாய் பிளான் அவுட்லேயாக, திட்ட ஒதுக்கீடாக நமக்குத் தரப்பட்டிருக்கிறது. அதையே மற்ற மாநிலங்களுக்குப் பார்க்கும்போது, நமது அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசம் 5,847 கோடி. அப்ராக்சிமேட். இன்னும் ரூ. 5,200 கோடி வருகிறது. நமக்கு 5,750 கோடி குறைவு. கர்நாடகம் அப்ராக்சிமேட்லி ரூ. 3,500 கோடி. ஆகிறது. நம்முடைய நிலை 5-வது இடம். அதிலே நாம் இருக்கிறோம். மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், குஜராத் இவற்றுக்குப் பின்னால் 5-வது இடத்திலே தமிழ்நாடு இருக்கிறது.

1990–91-லே எடுத்துக் கொண்டால் கூட, நம்முடைய நிலை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். குறையவில்லை. 1990-91 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1,450 கோடி ரூபாய். 1991–92-லே தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1,605 கோடி ரூபாய். 1992–93 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1,750 கோடி ரூபாய். அந்த வகையிலேயும் அது குறைந்த தொகையாக குறைக்கப்பட்டிருப்பதாகவும் நிச்சயமாகக் கருத முடியாது. 1991–92 மத்திய திட்ட ஒதுக்கீடு, பிளான் அவுட்லே என்று எடுத்துக் கொண்டால், திருத்தப்பட்டதை நான் சொல்கிறேன். 40,172, அது ஒரிஜினலாக 42,969. அது திருத்தப் பட்டது. அது திருத்தப்பட்ட நேரத்திலே கூட நமக்கு குறைக் கப்படவில்லை. இதற்கு போன ஆண்டு நிதி வரும் முறை என்று எடுத்துக் கொண்டால் இன்டர்னல் அண்டு எக்ஸ்ட்ரா பட்ஜெட்டரி ரிசோர்ஸ்ஸஸ் பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாக மற்ற அமைப்புகள் மூலமாக வருவது, 22,500 கோடி ரூபாய். 40 ஆயிரம் கோடியிலே, 22,500 கோடி ரூபாயாக வருகிறது. சுமார் 56 சதவிகிதம். அதே, பட்ஜெட் சப்போர்ட். டேக்ஷேசன் வரி விதிப்பு, கடன் வாங்கல், டெபிசிட் பைனான்ஸ். 17,612 கோடி ரூபாய். 44 சதவிகிதம் அதிலே வருகிறது. 1992–93-க்கு டோட்டல் பிளான் அவுட்லே என்று எடுத்துக் கொண்டால், 48,407 கோடி ரூபாய். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 20 சதவிகிதம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய பொருளாதார நெருக்கடியிலும் திட்டம் கைவிடப்படுமோ என்ற அச்சம் நிலவிய நிலையிலே, 'பிளான் ஹாலிடே' என்று பேசப்பட்ட நேரத்திலே, எதிர்க்கட்சித் தலைவர்கள், 'திட்டம் கோவிந்தா' என்று முகாரி பாடிய நேரத்திலே 20 சதவிகிதம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 16

முற்பகல் 11.05

Internal and extra Budgetary Resources இந்த ஆண்டுக்கு 29,906 கோடி ரூபாய் வரும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது 62 சதவிகிதம். சென்ற ஆண்டு 56 சதவிகிதம் என்று இருந்தது. இந்த ஆண்டு 6 சத விகிதம் அதிகரிக்கப்பட்டு 62 சதவிகிதம் அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. Budgetary Support குறைக்கப்பட்டிருக் கிறது. 38 சதவிகிதம் தான் Budgetary Suppcry ஆக, பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைத்து, பொது நிறுவனங்களின் முதலீட்டுக்குத் தகுந்த வருமானம் வரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கடன் வாங்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக அதிக மாக கடன் வாங்க முற்படவில்லை. தனியார்கள் துறை முதலீடு செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மாநிலங் களுக்குச் சாதகமான ஒரு வரி விதிப்புக் கொள்கையை மேற் கொண்டிருக்கிறார்கள். மொத்தமாகப் பார்த்தால் Additional Resource Mobilisation மத்திய அரசுக்கு இழப்பும், மாநில அரசுக்கு லாபமும் ஏற்பட்டிருக்கிறது. Total Additional Rescurce Mobilisation 3,106 கோடி ரூபாய். Ircome Tax Extra சென்ற ஆண்டைக் காட்டிலும் விதிக்கப்பட்ட வரியாலே அதிகமாக வருகிற (Ircome Tax) 325 கோடி ரூபாய். Coporation Tax 570 கோடி ரூபாய் Union Exoise Duty 2,211 கோடி ரூபாய். ஆக, மாநிலங்களுக்கு அதிகமாக 1.500 கோடி ரூபாய் இந்த வருஷம் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் Customs Duty Centre–க்கு மட்டும் இழப்பு 2,200 கோடி ரூபாய். நிகரமாக Centre–க்கு loss என்று எடுத்துக்கொண்டால் 935 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆக, மாநிலங்களுக்கு அதிக உதவி தர வேண்டும் என்கிற நோக்கத் தோடு இப்படி எல்லாம் செய்திருக்கிறார்கள்.

உலக வங்கி சொன்னதாலேதான் Customs Duty Cut என்று சொன்னால், Corporation Tax அதிகரித்து இருக்கலாம். ஆனால் அதிகரிக்க வில்லை. ஏன் என்று சொன்னால் Corporation Tax is not divisible. Corporation Tax அதிகமாகப் போடப்பட்டால் நமக்கு இதிலே எந்தத் தொகையும் கிடைக்காது. இருந்தாலும் அதை அவர்கள் செய்யவில்லை.

அதேபோல ராஜா செல்லையா Committee Interim Report பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நேர்முக வரி விதிப்புக் கொள்கையை மேலும் மேலும் மாநிலங்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகின்ற நிலையிலே அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நாம் கடன் —Borrowings வாங்குகிறோம். Our Dependence on Borrowings.



1992 மார்ச் 16] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதை நாம் குறைப்போம் என்று நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். அதுபோல Deficit Financing Our Dependenco on Deficit Financing will be reduced என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நமக்கு 1,751 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இதற்கு நமக்கு மேலேயும் Additional Recources Mobili ation நம்மாலே காட்ட முடியுமானால் அவர்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது நிதிநிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கில் காட்டப்படும் பற்றாக்குறை நிலைமை கவலை அளிப்பதாக இருக்கிறது. 1990-91ல் பற்றாக்குறை 553.40 கோடி ரூபாயாக இருந்தது. 1991-92ல் வருவாய்க் கணக்கில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை 902.49 கோடி ரூபாய். ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 650.05 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் வருவாய்க் கணக்கில் அவர்கள் காட்டுகின்ற வரவு குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டதன் விளைவேயாகும். இவ் வாண்டு பற்றாக்குறை 808.73 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இவ்வாறு பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு வணிக வரி வசூல் போன்றவற்றில் மேலும் முனைப்புக் காட்ட வேண்டும். ஆனால் புதிய வரி விதிப்பு என்ற பெயரால் விலைவாசியை ஏற்றுகின்ற வகையிலும், குறைந்த மூலதனத்தைக் கொண்டு தொழில் செய்பவர்களைக் கசக்கிப் பிழி கின்ற வகையிலும் வரி விதிப்பதிதும், வரி வசூலிப்பதும் வர வேற்கத்தக்கதல்ல. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 18-1|4 லட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகும் ஓட்டல்களிலும் உணவு விடுதிகளிலும், உணவு மற்றும் குளிர்பானங்கள் மீது விற்பனை வரி விதிக்கப்படுகிறது. அதை 3 லட்சத்திற்கு குறைத்திருப்பது மிகவும் மோசமாக விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குப் பதிலாக ஓரளவு குறைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும்.

அதேபோன்று கருப்பஞ்சாறு கசண்டுக்கு விற்பனை வரிச் சட்டம் 3 (3)ன்கீழ் அளிக்கப்பட்டிருந்த சலுகை நீக்கப்பட்டு 25 சதவிகிதம் விற்பனை வரி விதிக்க முற்படுவது பொதுமக் களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். சக்தி உள்ளவர்களிடம் இருந்து நியாயமான அளவில் வரி வசூல் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் வரி விதிப்பு என்கிற பெயரால் பொதுமக்களுக்குத் தண்டனை வழங்க நமக்கு அதிகாரம் இல்லை. இந்த கசண்டு, கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்கு மட்டும் பயன்படவில்லை, ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. தற்போதைய வரி விதிப்பபின் மூலம் அத்தகைய தொழில்கள் பாதிக்கப்படக்

கூடிய அபாயம் இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு இந்த வரி விதிப்பை மறுபரிசீலனை செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு 50 சிசி-க்குக் குறைவான இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அது தொடர்ந்து இப்போதும் அளிக்கப்பட்டிருக்கிறது, அது டி.வி.எஸ்.க்கு சலுகை காட்டுவதற்காக என்று சில உறுப்பினர்கள் வருத்தப்பட்டார்கள், அது சரியல்ல. ஓசூரில் உள்ள டி.வி.எஸ். சுசுகி நிறுவனம் சென்ற ஆட்சிக் காலத்தின்போது பல்வேறு தொல்லைகளுக்கு ஆட்பட்டு மூடப்பட்டது. தங்களுடைய தொழிற் சங்கத்தை அங்கே பலமிக்க ஸ்தாபனமாகக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு கடந்த கால ஆட்சியாளர்கள் பல வருந்தத்தக்க, தவறான செயல்களில் ஈடுபட்டுவிட்டார்கள். அதன் விளைவாகப் பல சேதங்கள் ஏற்பட்டு. தொழிற்சாலை மூடப்படும் நிலைமை ஏற்பட்டது, அதற்கு உதவுகிற வகையில் அரசு சென்ற ஆண்டு அறிவித்த வரிச் சலுகை அமைந்திருக்கலாம்,

முற்பகல் 11-10

அதே போன்று என்பீல்டு நிறுவனம் தயாரித்துள்ள 50 சி,சி. திறன் கொண்ட சில்வர் பிளஸ். எக்ஸ்ப்ளோரர் போன்ற இரு சக்கர வாகனங்கள் இந்தச் சலுகையால் பெரிதும் பயன் பெற்றன, அது மட்டுமல்லாமல் 2 சக்கர வாகனங்களுக்கு ரோட் டாக்ஸ் என்ற பெயரில் மொத்தமாக 2.000 ரூபாய் வசூலிக்கப்படுகிறது, இது வாகனங்களின் விலையை உயர்த்துவதால். அவற்றின் விற்பனையில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது, இதனால் உற்பத்தி முடக்கம். ஆட் குறைப்பு போன்ற அபாயம் ஏற்படுகிறது. எனவே அந்த வரி குறித்தும் மறு பரிசீலனை செய்ய வேண்டுகிறேன், அதே போன்று டிராக்டர்கள். ரியர் லோடர். டம்ப்பர். ஸ்க்ரேப்பர் இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள வரி 9 சத விகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது, இவை அனைத்தும் விவசாயிகளுக்குப் பயன்படுபவை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை),

ஏற்கெனவே டீசலுக்கு வரி. உதிரி பாகங்களுக்கு விலை. வாகனங்களுக்கு விலை கூடியுள்ள இந்த காலக் கட்டத்தில் விவசாயிகள் சுமையை அதிகரிக்காமல் இருக்கவும். விலைவாசிகள் ஏறாமல் கட்டுப்படுத்தவும் இது உதவுமென்று நான் கருதுகிறேன்,



இதே போல விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய என்ஜின்கள். பம்பு செட்டுகள். ஸ்பிரேயர்கள் ஆகியவற்றுக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன், நம்முடைய வரி விதிப்பு. மலரைச் சேதப்படுத்தாமல் தேனைச் சேகரிக்கும் தேனீக்களின் பணியைப் போன்று அமைந்திருக்க வேண்டும், கரும்பு ருசி என்பதற்காக அடியோடு பயன் படுத்தும் வழக்கத்தைக் கைவிட்டு விட வேண்டும்,

ஸ்டேண்டர்டு மோட்டார்ஸ் கே.சி.பி., பின்னி இவைகளைத் திறப்பதற்காக எடுத்த நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன். திருவொற்றியூரில் உள்ள கார்போரண்டம் யூனிவர்சல் என்ற நிறுவனம் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தின் காரணமாக மூடப்பட்டிருக்கிறது. தொழிற் சங்கமும், நிர்வாகமும் தொழிலாளர் நலத் துறை அதிகாரியின் முன்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுகிற வகையில் அங்கே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒப்பந்தத்தின் பலனாகக் கிடைக்கும் ஊதிய உயர்வு நிலுவைத் தொகை மற்றுமுள்ள சலுகைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்ட பிறகு, ஒரு சிறு பகுதியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதை ஆதரித்து வேலை நிறுத்தம் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. இதனால் உற்பத்தி பாதிப்பு, வருவாய் இழப்பு. அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பு, அன்னியச் செலாவணி இழப்பு போன்ற பல்வேறு இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பொறுப்பற்ற ஒரு சிலரின் சட்ட விரோத நடவடிக்கைகளால் ஏற்படும் இழப்புகளைத் தடுக்க அவசர உணர்வோடு அரசாங்கம் தலையிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல கோவையிலும், தமிழ் நாட்டின் பிற பகுதிகளிலும் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்த வரையில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உயர்நீதி மன்ற நீதிபதி நியமனத்தில் குடியரசுத் தலைவரின் உத்தரவையே ரத்து செய்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஸ்ரீவத்சவா என்பவரை கௌஹாத்தி உயர்நீதி மன்றத்திற்கு நியமனம் செய்தது ஏற்கத்தக்கதல்ல என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவத்சவாவுக்கு எதிராக பல கிரிமினல் வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருவதையும், அவர் நீதித் துறையில் பணியாற்றியவர் அல்ல என்றும் குறிப்பிட்டு நியமனம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது, முதலமைச்சர் பரிந்துரை செய்து, 'மத்திய உள் துறையும், சட்டத் துறையும் பரிசீலனை செய்த பின்னர்' குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படுகிறது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியை கலந்து

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1992 மார்ச் 16

கொண்டு குடியரசுத் தலைவர் நியமன உத்தரவில் கையெழுத்திடுகிறார். இந்தக் கட்டத்தை எட்டுவதற்கு முன்னர் மத்திய, மாநில அரசுகளின் உளவுத் துறையினர் சம்பந்தப்பட்ட நியமனத்திற்குரிய நபர்களைப் பற்றிய முழு விவரங்களை அரசுக்கு அளிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இந்த நடைமுறைகள் எல்லாம் இருந்தும், கிரிமினல் வழக்குகள் சம்பந்தப்பட்ட அரசியல் சட்ட விதிகளின்படி போதிய தகுதியில்லாத ஒரு நபரை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமித்தது வெட்கக் கேடானது, வருந்தத்தக்கது. கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தைரியமாக எடுத்த நடவடிக்கையின் காரணமாக வளைந்த செங்கோல் நிமிர்த்தப்பட்டிருக்கிறது. எனவே நீதிபதிகளின் நியமனங்களில் மிகுந்த எச்சரிக்கையுடனும், நியாய உணர்வுடனும் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

உயர்ந்த பதவிகளுக்கு நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்களின் தகுதி, திறமை, தனித்தன்மை போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டு, சிவில் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளுக்கு உட்பட்டவர்களை மிக உயர்ந்த பொறுப்பில் நியமிப்பது அரசுக்குப் பெருமை சேர்க்காது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சில நீதிமன்றப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கு அளவுக்கு அதிகமான கட்டணமும், சலுகைகளும் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. அதை நியாயமான அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும். மத்திய அரசு சிக்கன நடவடிக்கையாக பல துறைகளை ரத்து செய்திருக்கிறது, அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறது. சம்பளத்தில் 10 சதவீதத்தைக் குறைத்துக் கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றவர்கள் விமானப் பயணங்கள், வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவைகளைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. அண்மையில் மொரிஷீயஸ் நாட்டுக்குப் பயணமான நமது பிரதமர் அவர்களை வழியனுப்புவதற்காக யாரும் விமான நிலையத்திற்கு வர வேண்டாம் என்று கண்டிப்புடன் கூறிவிட்டார். இவ்வாறு எல்லா வகைகளிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பிரதமரும், குடியரசுத் தலைவரும், வலியுறுத்தி வருகிறார்கள். நம்முடைய முதலமைச்சர் சம்பளமே வாங்காமல் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பின்பற்றி சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது எல்லோருடைய கடமையாகும். இந்த உணர்வுகளுக்கு நேர்மாறாக செயல்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஊக்குவிக்கக் கூடாது. அரசாங்கப் பணத்தை அளவுக்கு அதிகமாக



1992 மார்ச் 16] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

பல குறுக்கு வழிகளில் அடையத் துடிப்பவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டத்திற்கு நாம் பணம் ஒதுக்கினால் மட்டும் போதாது. அந்தப் பணம் மக்களுக்கு உரிய வகையில் போய்ச் சேரும் வகையில் நிர்வாகத்தைச் சீரமைப்பது அடிப்படைத் தேவையாகும். மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டதைப் போல, திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தில், 1 ரூபாயில் 15 அல்லது 16 காசுகள் தான் மக்களுக்குப் போய்ச் சேருகிறது. மீதிப் பணம் எல்லாம் இடைத் தரகர்களாலும், அதிகார வர்க்கத்தாலும் விழுங்கி ஏப்பம் விடப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்காகத் தான் பஞ்சாயத்து ராஜ்யம் என்ற அருமையான திட்டத்தை ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்தார்கள். தற்போது நமது நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1 கோடி ரூபாய் வீதம் சுமார் 380 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே போன்று குடிநீர் வழங்குவதற்காக கிராமப் புறங்களுக்கு 474 கோடி ரூபாயும், நகராட்சிகளுக்கு ரூ. 104 கோடியும் செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகருக்கு மட்டும் குடிநீர் வழங்கவும், கழிவு நீரகற்றவும் 1,100 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டி, உலக வங்கியிடமிருந்து நிதி உதவி கோரியுள்ளோம். இந்த நிலையில், திட்டங்களைச் சிறப்பாக அமல்படுத்த மக்கள் பிரதிநிதிகள் கையில் உள்ளாட்சி நிர்வாகங்களை ஒப்படைக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். உள்ளாட்சி நிர்வாகத்தின் வருவாயைப் பெருக்க நிலவரி ஒரு ரூபாய்க்கு 45 பைசாவிலிருந்து ஒரு ரூபாயாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று உள்ளாட்சி மேல்வரி இரண்டரை ரூபாய் என்ற அளவிலிருந்து குறைந்தபட்சம் ரூ. 5 ஆகவும், அதிகபட்சம் ரூ. 10 ஆகவும் வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரி விதிப்புகள் விவசாயிகளை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதே போல நகரப்புறத்தில் இருக்கிற மத்திய தர வர்க்கத்தையும் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எனவே உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றையும் அதிகாரிகளிடம் விட்டுவிடும் போக்கு ஜனநாயக முறைக்கு ஏற்றதல்ல என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்திற்கு புதிய வளாகம் கட்ட ரூ. 1.1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த புதிய வளாகம் எங்கே அமைய இருக்கிறது? ஏற்கெனவே இருக்கிற வளாகத்திற்குள்ளேயா? அல்லது பல்கலைக் கழகத்திற்கு எதிரில் உள்ள அரசால் ஏற்கெனவே கையகப்படுத்த முனைந்த

இடத்திலா? அந்த இடத்தில் அந்த இடம் குறித்து வழக்கு ஒன்று இருக்கிறது. எனவே அதை தெளிவுபடுத்த நான் வேண்டிக் கொள்கிறேன். அதே போல், எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தை இரண்டரை கோடி ரூபாய் செலவில் விரிவு படுத்தும் திட்டம் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்த எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம் குறித்து தனியார் தொடுத்த வழக்கு ஒன்று நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே அந்த நிலையையும் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக் கழக விவகாரங்களில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடக்கும் சீர்கேடுகளைப் பற்றி சென்ற முறை நான் சட்டமன்றத்தில் எடுத்துரைத்தேன். பிரிவினையைத் தூண்டும் வகையிலும், குடியரசுத் தலைவர், முதலமைச்சர் போன்றவர்களை இழிவுபடுத்தும் வகையிலும் பேசிய ஒரு தமிழ்ப் பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது. அவருக்கு தற்போதைய துணைவேந்தர் பாதுகாப்பு அளித்து வருவதாகவும் புகார் கூறப்பட்டது. அதற்கு மாண்புமிகு கல்வியமைச்சர் பதில் அளிக்கும் போது பல்கலைக் கழகங்களில் தலையிடுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையே என்று வேதனைப்பட்டார். உண்மையில் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவில் அரசாங்கத்தின் அதிகாரிகளே அதிகம் இருக்கிறார்கள். பதிவாளரையும் அரசாங்கமே நியமிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அந்த பல்கலைக் கழகத்தின் சட்டப் பிரிவு 7-ன் கீழ், அரசுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது.

அதோடு, பல்கலைக் கழக வேந்தர்களைப் பொறுத்த வரையில் மத்தியிலே குடியரசுத் தலைவர், பிரதமர், மற்ற மாநிலங்களில் முதலமைச்சர் போன்றவர்களைப் போடும் வழக்கம் இருந்து வருகிறது. மரபும் இருக்கிறது. அந்த அடிப்படையில் ஆந்திராவில் தெலுங்குப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக அந்த முதலமைச்சர் இருக்கிறார். மேற்கு வங்கத்தில் விஸ்வபாரதி பல்கலைக் கழகத்திற்கு பிரதமரும், காந்திகிராம பல்கலைக் கழகத்திற்கு துணை குடியரசுத் தலைவரும், பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்திற்கு குடியரசுத் தலைவரும் வேந்தர்களாக இருந்து வருகிறார்கள்.

முற்பகல் 11-20.

இதே போன்று (குறுக்கீடு). One is Vice-President, One is President. In Madurai it is Vice President (Interruption) I am speaking about the other one — Pondicherry — அதே போல தமிழகத்திலே முக்கியமான சில பல்கலைக் ழகங்களுக்காவது முதலமைச்சரையே வேந்தராக நியமிக்கும்



வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்துகிறேன் என்பதையும் இந்தக் கட்டத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

சென்னைப் பல்கலைக் கழகத்திலே இயங்கி வரும் நிர்வாக இயல்துறை—டிப்பார்ட்மென்ட் ஆஃப் மேனேஜ்மென்ட் ஸ்டடீஸ்- அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி கவுன்சிலின் அங்கீகாரம் பெற்று 1955 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. ஆல் இந்தியா கவுன்சில் ஃபார் டெக்னிக்கல் எஜுகேஷன் அங்கீகாரம் பெற்ற அந்தத் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசு பிறப்பித்த ஆணையை பல்கலைக் கழக சிண்டிகேட் நிறைவேற்ற வில்லை. ஏற்கவில்லை. அதனாலே அந்தக் கவுன்சில் இந்தத் துறைக்கு வழங்கியிருந்த அங்கீகாரம் திரும்பப் பெறக் கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனை அந்தத் துறையைச் சார்ந்த ஆசிரியர்களும், மாணவ, மாணவியர்களும் பல்கலைக் கழகத்திற்கும், அரசுக்கும் பல முறை முறையிட்டும் பலனில்லை. எம்.பி.ஏ. வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப் பதில் ஆல் இந்தியா கவுன்சில் ஃபார் டெக்னிக்கல் எஜுகேஷ னுடைய வழி முறைகளை — நார்ம் சிக்ஸ் — பின்பற்றப்பட வில்லை என்று கூறப்படுகிறது. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் கௌரவமிக்க, பிரசித்திப் பெற்ற துறையாக விளங்கு கிறது. பல ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் அங்கே படித்து வருகிறார்கள். அதே போல பல தனியார் துறை அதிகாரிகளும் இந்தத் துறையில் மாணவர்களாகச் சேருகிறார்கள். தனியார் துறையிலே பலரும் இந்தக் கல்வியை போதிக்க முனைப் புக் காட்டி வருகிறார்கள். கடுமையான போட்டிக்கு நடுவே, இந்தத் துறையின் முக்கியத்துவம் கருதி அரசாங்கம் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேசுகின்ற போது துணை வேந்தராக கவர்னர் இருப்பதற்குப் பதிலாக முதலமைச்சரே இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். ஆகவே கவர்னர் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறாரா அல்லது வேண்டாமென்று சொல்லுகிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. சென்ற முறை அவர் இங்கே உறுப்பினராக இருந்தபோது அந்த முதலமைச்சர் இருந்தபோதே இந்த அவையிலேயே பேசியிருக்கிறேன். எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் ஆளுநரே தான் வேந்தராக இருக்க வேண்டிய அவசியமில்லை. சில பல்கலைக் கழகங்களுக்கு அதனுடைய முக்கியத்துவம் கருதி நம்முடைய ஆணைக்குக் கட்டுப்படுகிற அமைப்பு என்பது போன்ற குற்றச் சாட்டுகள் இல்லாமல் இருக்கும் வண்ணம் முதலமைச்சரே அதிலே இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். கவர்னரைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இருக்க வேண்டும். கவர்னரைப் பொறுத்த வரையில் நீங்கள் ஏதோ திசை திருப்பாதீர்கள். ஆளுநரைப் பொறுத்த வரையில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய உணர்வு சரியானது தான். அதாவது பல்கலைக் கழகங்களிலே வேந்தருக்கென்று சில அதிகாரங்கள் தரப்பட்டிருந்தாலும், சட்டமன்றத்திலே அது சம்பந்தமான கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அமைச்சரவைக்கு இருக்கிறது; முதலமைச்சருக்கும், கல்வி அமைச்சருக்கும் தான் இருக்கிறது. ஆகவே அதிகாரம் ஓரிடம், பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இன்னுமோர் இடத்திலே இருக்கிற அந்த நிலைமைக்குத் தீர்வு காண வேண்டுமானால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருடைய கருத்தைப் பரிசீலிப்பது நல்லது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து, யூ.ஜி.சி. இடமிருந்து போதுமான உதவிகளைப் பெறுவதற்கு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கவியரசு கண்ணதாசனுடைய பெயரில் காரைக்குடியில் அமைக்கப்பட்டு, முடிக்கப்பட்ட நிலையிலே உள்ள மணி மண்டபத்தை உடனே திறந்து வைக்கவும், ஒவ்வொரு ஆண்டும் அவருடைய பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடவும் ஆணை பிறப்பிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் மன்னர் திருமலை நாயக்கர் ஆகியோர் விழாக்களை அரசு விழாக்களாக



எடுப்பதற்கு ஆணையிட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மன்னர் திருமலை நாயக்கரைப் பொறுத்த வரையில் அவருடைய நானூறாவது பிறந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் விரும்பினார்கள். அதற்காக முனு ஆதி தலைமையில் ஒரு விரிவான விழாக் குழு அமைத்து வேலைகளைத் தொடங்க ஆணையை பிறப்பித்தார். ஒவ்வொரு ஆண்டும் தைப்பூச நாளன்று மன்னர் திருமலை நாயக்கரின் பிறந்த நாளை மதுரையில் கொண்டாடுகிறார்கள். அந்த நாளை அரசாங்க விழாவாக அறிவித்துக் கொண்டாட வேண்டும் என்பதே மக்களுடைய வேண்டுகோள். அதிலும் குறிப்பாக முதன் முறையாக அரசு விழாவாக நடத்தும்போது அந்த மாவட்டத்திலேயிருந்து சட்டமன்றத்திற்கு முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நம்முடைய முதலமைச்சரும், தேனியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், அந்த மாவட்டத்திற்குச் சொந்தக்காரரான நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் கட்டாயமாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். என் மூலமாக இந்த வேண்டுகோளை தங்களுக்கு வைக்குமாறு கேட்டுக் கொள்கிறார்கள். ஏதாவது ஒரு நாளில் அரசு அதிகாரிகள் மற்றவர்களைக்கொண்டு திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழாவை—அதை ஒரு சம்பிரதாய விழாவாக மாற்றிவிடாமல்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தைப்பூச நாளில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று நானும் என்னுடைய சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அண்மைக் காலத்திலே பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. உற்பத்தியாளர்களுக்கு பாலின் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது.

முற்பகல் 11-25

நான் சென்ற ஆளுநர் உரையின் மீது பேசும்போதே பால்
விலையை உயர்த்தும்போது பசும்பாலுக்கும் சேர்த்து உயர்த்த
வேண்டும் ; எருமைப் பாலுக்கும் உயர்த்துங்கள் ; அதேபோல்
பசும் பாலுக்கும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்
டேன். ஆனால் இப்போது எருமைப் பாலுக்கு மட்டும் விலை
உயர்த்தப்பட்டு இருக்கிறது. கொள்முதலில் மொத்தத்தில்
எருமைப்பால் 5 சதவீதம்தான் ; 95 சதவீதம் பசும் பால்,
எனவே பசும்பாலுக்குக் கண்டிப்பாகக் விலையை ஏற்றிக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் விவசாயிகள் மத்தியிலே கரும்புக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டுமென்று இன்றையதினம் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள், அதையும் பரிவோடு பரிசீலித்து கட்டுப்படியான விலை கொடுக்க வேண்டும் ; அதிக விலை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

நிதி அமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் விவசாயத்தைப் பொறுத்தவரை மின் கட்டணத்தைப்பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள், விவசாயிகள் மத்தியிலே ஒரு அச்சம் இருக்கிறது, விவசாயத்திற்கு பழையபடி மீட்டர் முறை கொண்டு வரப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படும் என்ற அச்சம் இருக்கிறது, இன்றையதினம் மீட்டர் வைத்து நீங்கள் கட்டணத்தை வசூலித்தால் நிச்சயமாக விவசாயிகளாலே அதைக் கட்ட முடியாது, 500 அடி, 600 அடி. அதற்கு மேலே கூட ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதிலே இருந்து கம்பிரசரிலே தண்ணீரை வெளியே எடுத்து கிணற்றுக்குள் விட்டு, பிறகு மீண்டும் மோட்டார் பம்ப் செட்டிலே விவசாயத்திற்கு பம்ப் செய்துகொண்டு இருக்கிறார்கள், இந்த நிலையிலே இருக்கிற விவசாயிகளுக்கு மீட்டர் கட்டணம் என்று சொன்னால் நிச்சயமாக அவர்களாலே அதைத் தாங்கிக்கொள்ள முடியாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் விவசாயிகளுக்கு மீட்டர் முறை கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் விசைத்தறியாளர்களுடைய தொழிலை குடிசைத் தொழிலாகக் கருதி அவர்களுக்கு மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை, மற்ற தொழில்களைப் போல பெரிய தொழிலில் இருப்பவர்கள் அல்ல அவர்கள், அவர்கள் 2 அல்லது 3 அல்லது 5 தறிகளை வைத்துக்கொண்டு தொழில் நடத்திக் கொண்டு இருப்பவர்கள், அவர்கள் விவசாயத்திலே ஈடுபட முடியாத காரணத்தாலே கிராமங்களிலே அந்தத் தொழில் பரவி இருக்கிறது, எனவே. அதைக் குடிசைத் தொழிலாகக் கருதி அவர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை, நீண்ட நாட்களாக சுதந்திரப் போராட்ட வீரர்கள்—மத்திய பென்ஷன் வாங்குபவர்களையும் மாநிலப் பென்ஷன் வாங்குபவர்களையும் இரண்டு பிரிவாகப் பிரித்து இருக்கிறார்கள், அப்படி இல்லாமல் இரண்டு பேருக்கும் மற்ற மாநிலங்களில், நம்முடைய அண்டை மாநிலத்தில் வழங்குவதைப் போல, கேரளாவைப் போல, உத்தரப் பிரதேசத்தைப் போல மற்ற மாநிலங்களைப் போல இரண்டு பேருக்கும் ஒரே சீராக ஓய்வு ஊதியத் தொகை வழங்க வேண்டும். அதை 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



இங்கே காலையிலே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் நேரத்திலே சில நல்ல தகவல்களை வெளியிட்டார்கள். பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனம் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனத் திட்டம் ஒன்றுதான் கோவை மாவட்டத்திலே தென் பகுதிக்கு நீண்டகாலமாகப் பயன் அளித்து வருகிற ஒரு பாசனத் திட்டமாகும். அமராவதி பாசனத் திட்டத்திற்கு அடுத்த திட்டமாக அது இருந்து வருகிறது. பெரியார் மாவட்டத்திற்கும் பயன் கிடைக்கிறது. அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறோம். எனவே இனியும் காலதாமதம் இல்லாமல் மேல்நீராறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதோடு ஆனைமலையாறு—நல்லாறு திட்டங்களையும் கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி அந்தத் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், இப்போது தண்ணீர் விடுகிற பிரச்சினை இங்கே பேசப்பட்டது, என்னுடைய தொகுதியிலே 2 அல்லது 3 வட்டாரங்களில் சுல்தான்பேட்டை வட்டாரத்தில் வடபகுதிக்கு விடமுடியாது, வடக்கு பகுதி நீங்கலாக தெற்கு பகுதிக்கு பாய்கிறது. வடக்கு பகுதிக்கு அதிலே இருந்து தண்ணீர் விடுவது சிரமம், பொங்கலூர் குண்டடம் வட்டாரத்தில் குடிப்பதற்கே தண்ணீர் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி,

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் பற்றி குறிப்பிட்டார்கள். இது கேரளாவிலே வீணாக 200 டி.எம்.சி.-க்கு மேலாக நீண்ட நாட்கள்ளாக கடலிலே கலந்து கொண்டிருக்கின்ற பிரச்சினை ஆகவே, எப்படி கர்நாடகப் பிரச்சினைக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் கர்நாடக முதலமைச்சர் அவர்களையும் தமிழக முதலமைச்சர் அவர்களையும் அழைத்துப் பேசினார்களோ அதே போல் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இதற்கு ஒரு ஏற்பாடு செய்து அவரும் கலந்து கொண்டு, கேரள முதல் அமைச்சரும், நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் கலந்துகொண்டு பிரதமரே அவர்களை அழைத்து அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கும், வீணாகக் கடலிலே கலக்கின்ற அந்தத் தண்ணீரை தமிழக விவசாயிகள் பெற்று பயன் பெறுவதற்கும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் இருக்கின்ற மாவட்டமும் நானும் இருக்கின்ற பெரியார் மாவட்டமும் பயன் பெறுவதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க இந்த சட்டமன்றத்திலே அதற்கு உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே அந்த வறண்ட பகுதிகளுக்கும், இப்போது மூன்றாவது மண்டலம் பாசனம் பெறுகிறது. அது பாசனம் பெறுவதுபோக எஞ்சிய தண்ணீர் இருக்குமேயானால், குடி தண்ணீருக்கே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற அந்தப் பகுதிக்கும், குளம் குட்டைகளுக்கும், பொங்கலூரில் குண்டடத்தில் விரிவாக்கப் பகுதிகளுக்கும் தண்ணீரை விட வேண்டுமென்று நான் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறேன் ; அமைச்சருக்கு எழுதி இருக்கிறேன். உரிய அதிகாரிகளுக்கும் எழுதியிருக்கிறேன். அதையும் கருத்திற் கொண்டு அந்தப் பகுதிகளுக்கும் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அடுத்தபடியாக பாண்டியாறு - புன்னம்புழா பற்றி உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் நீண்ட நாட்களாகப் பேசி வருகிற பிரச்சினை அது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எங்களுடைய பகுதிக்கு ஒரு விமோச்சனம் வர வேண்டுமென்றால், கோவை மாவட்டத்துக்கு விமோச்சனம் வர வேண்டுமென்றால், சில பகுதிகளில் பெரியார் மாவட்டத்திற்கும் விமோச்சனம் வர வேண்டுமென்றால் அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியாக வேண்டும். அதற்காக கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தியாக வேண்டும். நம்முடைய மாநிலத்தில் தான் அதன் உற்பத்தி ஸ்தானம் இருக்கிறது. நீலகிரி கூடலூர் பகுதியில் அது உற்பத்தியாகிறது. அது பெருமளவில் காடுகளில் ஓடி, மலை முகட்டிலே ஓடி, கள்ளிக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கிற செயில் நதியில் கலந்து கடலில் கலந்து வருகிறது. முன்பெல்லாம் அதற்கு பல்வேறு காரணங்களை சொல்வார்கள். அங்கே ஆறு வற்றிவிடும். கடல் தண்ணீர் உள்ளே வந்து உப்பளமாக மாறிவிடும் என்று காரணம் சொல்வார்கள். அதற்கு மேல் கேட்டால் உள்நாட்டு படகு போக்குவரத்து பாதிக்கப்படும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பிறகு, வேண்டுமானால் நீங்கள் வெறும் மின்சாரத் திட்டமாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லி 1967 ஆம் ஆண்டில் அதற்கு பணம் கூட ஒதுக்கப்பட்டது. இப்போது அந்த நிலையெல்லாம் மாறி முழுமையாக பாசனத் திட்டமாக வர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். இல்லாவிட்டாலும் குறைந்தபட்சம் கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்கா, கூட அவினாசி தாலுக்கா, மேட்டுப்பாளையம் தாலுக்கா போன்ற பகுதிகளுக்கும், திருப்பூர் தாலுக்காவில் வடக்கு பகுதி போன்ற பகுதிகளுக்கும் குறைந்தபட்சம் குளம், குட்டைகளுக்காவது தண்ணீர் விட—பெரியார் மாவட்டத்தைச் சொல்லிவிட்டேன்—



அங்கேயிருக்கிற தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க உதவுகிற வகையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்னொரு முக்கியமான பிரச்சினை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கரூர்-திண்டுக்கல்-மதுரை வழியாக தூத்துக்குடிக்கு செல்லும் ரெயில் பாதையை அகலப்படுத்துவது பெரிய பிரச்சினையாக நீண்டகாலமாக இருக்கிறது. அதற்கு பணம் ஒதுக்கி அந்தத் திட்டம் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு ரெயில்வே பட்ஜெட்டில், ரெயில்வே நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை திண்டுக்கல்லுக்கும் மதுரைக்கும் இடையேயுள்ள பகுதி முழுவதுமாக முடிப்பதற்கு போதுமானதாக இருக்காது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னொரு 5 அல்லது 6 கோடி ரூபாய் அதற்கு ஒதுக்குவார்களானால் திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரையில் ரெயில்வே ட்ராக்கை அகலப்படுத்துவதற்கு பணி முடிந்து விடுமென்று நண்பர்கள் சொல்கிறார்கள். ஏற்கனவே நம்முடைய எம்.பி.க்கள் ரெயில்வே அமைச்சரிடத்தில் பேசியிருக்கிறார்கள். நானும் அவர்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறேன். மேலும் தொடர்புகொள்ள முயற்சிக்கிறேன். பேசவிருக்கிறேன். எனவே, இந்தப் பேரவையின் மூலமாக ரெயில்வே அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குறைந்தத் தொகையை கண்டிப்பாக ஒதுக்கி இந்த ஆண்டு திண்டுக்கல்லிலிருந்து மதுரை வரையில் ரெயில்வே பாதையை அகலப்படுத்துகிற பணியை முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல சென்னை நகரில் நீண்டநாள் கோரிக்கையாக ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்கவேண்டும் என்பது இருக்கிறது. இதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அண்மையில் அந்த மீன்பிடித் துறைமுகம்—Fishing Harbour — திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அண்மையில் திறக்கவிருக்கிறார்கள். அந்த மீன்பிடி துறைமுகத்திற்கு சென்னை நகரில் பிறந்து, தலைசிறந்த தேசியவாதியாகவும், புரட்சிவாதியாகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும் , சீர்திருத்தவாதியாகவும் வாழ்ந்து காட்டிய சிங்காரவேலர் அவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்று பலரும் விரும்புகிறார்கள். நானும் அந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். நான் ஏற்கனவே பிரதம அமைச்சர் அவர்களுக்கு அது குறித்து கடிதம் எழுதியிருக்கிறேன். நிச்சயமாக நிறைவேற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதைப்போல என்னோடு சேர்ந்து இந்த அரசாங்கமும் அந்தக் கோரிக்கையை முன்வைத்து மீன்பிடித் துறைமுகத்திற்கு சிங்காரவேலர் அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்திலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால்
எல்.டி.டி.இ.-யை தடைசெய்ய வேண்டுமென்று கோரிக்கை
எழுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து உள்துறை இணை
அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் அவர்கள் முதலமைச்சர்
அவர்களைச் சந்தித்து இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியும்
எல்.டி.டி.இ.-யை தடை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி
வருகிறது. ராஜீவ் காந்தி, பத்மநாபா போன்றவர்களுடைய
கொலைகளில் விசாரணைக்குப் பிறகு, எல்.டி.டி.இ.-யின் பங்கு
எந்த அளவுக்கு இருக்கிறது என்பது இன்றையதினம் தெளிவாக்
கப்பட்டிருக்கிறது. இங்கே சில சக்திகள் அவர்களை ஆதரித்து
வருகிறார்கள். எனவே, எல்.டி.டி.இ.-யை தடை செய்ய
வேண்டும் என்பது மிக அவசியமாகிறது. எல்.டி.டி.இ.-யை
கண்டிப்பாக தடைசெய்ய வேண்டுமென்று நானும் கேட்டுக்
கொள்கிறேன். இதை பஞ்சாப் தீவிரவாதிகளோடும், நக்சலைட்டு
களோடும் சம்பந்தப்படுத்துவது சரியாகாது. அவர்கள் இந்த
நாட்டு பிரஜைகள். தவறான வழிகளில் அவர்கள் செயல்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கையெடுக்க
வெண்டும். நடவடிக்கையெடுத்துக் கொண்டாலும் இந்த நாட்
டிலே இருக்கிற காரணத்தால் அவர்களாலே மறைந்துகொள்ள
முடியும். அவர்களையும் இவர்களையும் ஒன்றுபடுத்துவது
நல்லதல் . இவர்கள் வெளிநாட்டிலிருந்து நம்முடைய நாட்
டுக்கு வந்து இங்கேயிருக்கிற சிலரைத் தூண்டிவிட்டு ஒரு பிரி
வினை இயக்கம் நடத்த வேண்டுமென்ற முனைப்பிலே செயல்
பட்டுக்கொண்டிருப்பவர்கள். எனவே, கண்டிப்பாக அவற்றைத்
தடை செய்யவேண்டும் என்று நானும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அரசு ஊழியர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்த
வரையில், சமுதாய நிர்ப்பந்தங்களின் காரணமாக ஒவ்வொரு
கட்டத்திலேயும் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது, பொதுத்
துறை நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஊழியர்களுடைய
எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருக்கிறது என்பதுதான்
குற்றச்சாட்டு. தற்போது அந்த எண்ணிக்கையைக் குறைக்க
வேண்டும் என்று நினைக்கும்போது, எதிர்ப்பு நிலையைச்
சந்திக்க வேண்டியதாக இருக்கிறது. இன்றையதினம் படித்து
விட்டு, வேலையில்லாமல் காத்து இருப்போர்களின் எண்ணிக்கை
யும் அவர்கள் படும் துயரமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது,
வேலையில்லா ஊதியம் வழங்குவதாலே மட்டும் பிரச்சினை
களைத் தீர்த்துவிட முடியாது. மாதம் ஆயிரம் ரூபாய் அளவுக்கு
ஊதியம் பெற்றாலும், அவர்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழே
வாழ்பவர்கள்தான் என்று வரையறுக்கப்பட்டு இருக்கிறது.
இந்தப் பின்னணியில், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக
வீட்டு வாடகைப் படி, தொழில் வரி ரத்து போன்ற கோரிக்



கைகளை முன் வைத்து, குரல் கொடுக்கும் அரசு ஊழியர்களைப்
புறக்கணித்துவிடாமல், அவர்களையும் அழைத்துப் பேசி,
நிலைமைகளை விளக்க முற்பட்டு இருக்கும் முதலமைச்சர் அவர்
களின் முயற்சி வரவேற்கத்தக்கதாகும்.

நெருக்கடியான சூழ்நிலையிலேயும், சத்துணவுப் பணியாளர்
கள் போன்ற அடிமட்ட ஊழியர்களுக்கான ஊதியத்தை
உயர்த்திய முதலமைச்சர் அவர்களின் தாய் உள்ளத்தைப் போற்
றாமல் இருக்க முடியாது. சத்துணவுப் பணியாளர்களைப்
பொறுத்தவரையில், இன்னும் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்
திற்கும் இடையிலே வேறுபாடுகள் இருக்கின்றன. சில பஞ்சா
யத்து ஒன்றியங்களிலே சம்பளம் மாதாமாதம் கொடுப்பதில்லை,
2 மாதம், 3 மாதம், 4 மாதம் கழித்துத்தான் சம்பளம் கொடுக்
கிறார்கள். குறைந்த சம்பளம் பெறும் அவர்களுக்கு உரிய
நேரத்திலே சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று
நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

எங்களைப் போன்ற பொதுமக்களின் பிரதிநிதிகளின்
உணர்வுகளையும் பத்திரிகையாளர்களுடைய வேண்டுகோளை
யும் ஏற்று, அரசு ஊழியர் அமைப்புகள், தொழிற்சங்கங்
களின் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சு
வார்த்தைக்கு ஏற்பாடு செய்தும், அவற்றிலே முதலமைச்சரே
கலந்து கொண்டும், பெருமை சேர்ப்பது ஜனநாயகத்தின் மீது
முதலமைச்சருக்கு உள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது,

அதேபோன்று, பொதுமக்களைச் சந்திக்கின்ற ஏற்பாடு
களைச் செய்ததற்காகவும், மக்கள் அதை மகிழ்ச்சியுடன் வர
வேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

‘போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர்
தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால்,
எடுத்து உரைப்பேன், எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்’ என்ற
கவியரசு கண்ணதாசனின் கவிதை இலக்கணத்திற்கு இலக்கிய
மாகத் திகழ்ந்து ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று
பணியாற்றிக் கொண்டு இருக்கும் நமது முதலமைச்சர் அவர்
களைப் பாராட்டி, அவர்களுக்கு உறுதுணையாக நின்று,
‘ஒல்லும் வகையெல்லாம் உதவி’, ‘உடுக்கை இழந்தவன்
கைபோல, இடுக்கண் களைந்து வரும் நமது மாண்புமிகு நிதியமைச்
சர் அவர்களையும் பாராட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை
வரவேற்று, அமைகிறேன், வணக்கம்.

[1992 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதில் ஒரு சிறிய சந்தேகம். எல்.டி.டி.இ.-ஐத் தடை செய்யவேண்டும் என்பது மாநில எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தா அல்லது அனைத்திந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருடைய கருத்தா ? ஏன் என்றால், அங்கே இன்னும் இந்த மாதிரி முடிவு பண்ணவில்லை. பொலிட்டிக்கல் அஃபேர்ஸ் கமிட்டியிலே இனிமேல்தான் டிஸ்கஸ் பண்ணப் போகிறோம் என்று சொல்கிறார்கள். இன்னும் டிக்ளேர் பண்ணவில்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஏற்றுக் கொள்ளவில்லை. கேபினட் ஏற்றுக் கொள்ளவில்லை. அமைச்சரவையே ஏற்றுக்கொள்ளவில்லை. அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவரும் சொல்லவில்லை. எனவே, இது மாநிலத் தலைவருடைய கருத்தா, அல்லது அனைத்திந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருடைய கருத்தா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உள்துறை இணை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தினைத் தான், இவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே ஒழிய, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிடமிருந்து, இதுவரை எந்தப் பத்திரிகைக் குறிப்பும் வரவில்லை. அதுவரை சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய கருத்துதான் அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்து, அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தைத்தான் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பிரதிபலிக்கிறார்கள் , என்று கொள்ளவேண்டும். பி.ஏ.சி. என்பது Political Affairs Committee of the Cabinet. அதை அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய நடவடிக்கைகளோடு குழப்பக்கூடாது என்கிற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் ஒன்றும் குழப்பவில்லை. நான், தனித் தனியாகத்தான் கேட்டேன். கவர்ன்மென்ட் டெசிஷன் இன்னும் எடுக்கவில்லை. எனவே, இது ஸ்டேட் அப்போசிஷன் தலைவருடைய கருத்தா? அல்லது



[1992 மார்ச் 16] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அனைத்திந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருடைய கருத்தா என்றுதான் கேட்டேன். Ministerial Committee is different from Congress Leadership என்பது எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஏன் இந்த சந்தேகம் வருகிறது என்று எனக்குப் புரியவில்லை. பொலிட்டிகல் அப்பேர்ஸ் கமிட்டி என்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் என்ன நிலையை மேற்கொள்ள வேண்டும் என்று அதிலே அவர்கள் முடிவு செய்ய வேண்டும். அதற்கு முன்பாக கருத்து கட்சியிடமிருந்து தான் உருவாகிச் செல்லவேண்டும். தமிழகத்திலே இருக்கிற யதார்த்த நிலைகளைக் கொண்டு, இந்த எல்.டி.டி.ஈ. இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக காங்கிரஸ் வலியுறுத்துகிறது. நான் இந்த அவையிலே வலியுறுத்தி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில்தான் எல்.டி.டி.ஈ.—யே இல்லாமல் செய்து, அமைதியை ஏற்படுத்தி விட்டோமே, ஆகையினாலே, அதைத் தடை பண்ண வேண்டிய அவசியம் என்ன ? அப்படியானால், எல்.டி.டி.ஈ. தீவிரமாக இங்கே இருக்கிறது, அமைதி இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கருதுகிறாரா ?

முற்பகல் 11–40

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அவர்கள் தொடர்ந்து இங்கே வந்து ஊடுருவல் செய்து குழப்பம் விளைவித்து இங்கே இருக்கின்ற சில சக்திகளுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுப்பதன் காரணமாக இங்கேயும் ஒரு பிரிவினைவாத இயக்கம் தோன்றி விடக்கூடாது என்கிற நல்ல எண்ணத்திலேதான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்டீர்கள். அதற்குப் பதில் வந்து விட்டது. மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், நமது இராணுவம், கப்பல் படை எல்லாம் அவ்வளவு பலஹீனமாக இருக்கிறதா ? இதை

யும் மீறி வருகின்ற அளவுக்கு அவர்கள் சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்களா ? நம்முடைய கப்பல் படை எல்லாம் மிகுந்த பந்தோபஸ்துடன் கடலோரப் பகுதிகளில் இருக்கிறார்கள், கடலிலும் இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இங்கே அவர்களை ஊக்குவிக்கின்ற சக்திகள் இருக்கிறார்கள். ஆகவேதான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது என்பது தான் எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இயக்கத்தை அரசு தடை செய்வது என்றால், அந்த இயக்கத்திற்கு ஆதரவு கொடுப்பவர்கள் இந்த மாநிலத்திலே குற்றவாளிகளாக கருதப்படுவார்கள். அது யாரைப் பாதிக்கின்றதோ, அவர்கள் உணர்ந்துகொண்டு, அவர்கள் அதற்காக குரல் கொடுப்பது, அவர்களை அடையாளம் காட்டுகின்றமைக்கு நான் உள்ளபடியே உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும், மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இதிலே ஒன்றும் இல்லை. நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று சொல்லவில்லை. ஆதரிக்கிற சில சக்திகள் இருக்கின்றன. அவர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்கிறார்கள். திரு. திருநாவுக்கரசு அவர்களுக்காக குரல் கொடுக்கிறார்கள் என்று சொல்லவில்லை.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆதரித்தார். நாங்களும் ஆதரிக்கிறோம், தடை செய்யக்கூடாது என்று கேட்கிறோம். அவர்களுக்கு தனி நிலம் கிடைக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதற்காக மத்திய அரசு அந்தமாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு இந்த மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. கண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.



<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்த அவையிலே பேசியபோது இதே போன்ற கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆதரித்ததாகவும், இன்று அத்தோடு நிறுத்திக் கொண்டார். அன்றையதினம் இந்திராகாந்தியும், ராஜீவ் காந்தியும் ஆதரித்ததாக சொன்னார்கள். எல்.டி.டி.ஈ. யை முதலில் நாம் ஆதரித்தது உண்மை. அங்கே அவர்கள் அடித்து விரட்டப்பட்ட நிலையில் தமிழகத்திற்கு வந்தபோது நாம் ஆதரித்தோம். ஆனால் அதற்குப் பின்னாலே நம்முடைய ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்றையதினம் அவர்கள் அங்கே சென்றதற்குப் பின்னால், நமக்கு எதிரிகளாக மாறிவிட்டதற்குப் பின்னால், ஆதரிப்பதற்கு வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, எம். ஜி. ஆர். அவர்கள் அன்றையதினம் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஆதரித்து, ராஜீவ் காந்தியோடு அவர் கடற்கரையிலே நின்று, ராஜீவ் காந்தியினுடைய கரத்தையும், அவர் கரத்தையும் உயர்த்திப் பிடித்துப் பேசிய பேச்சு நண்பர் திருநாவுக்கரசுக்கு இன்னும் மறந்திருக்காது என்று நான் நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு நிதியமைச்சர்.

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1991–92–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள், 1992–93–ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பற்றிய பொது விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, 71 உறுப்பினர்கள் கலந்து கொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் தங்கள் கண்ணோட்ட போக்குக்கு ஏற்ப, எடுத்துரைத்துள்ளார்கள். நாட்டின் நன்மை கருதியும், மக்களின் நல்வாழ்வு கருதியும், அரசின் செம்மை கருதியும், நிதிநிலையின் செழிப்பு கருதியும், சீரிய கருத்துக்களைச் சிறப்பாக எடுத்து வைத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் உளங்கனிந்த நன்றியை நான் உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்ஜெட் என்றாலே அவரவர் மனப்போக்குக்கு ஏற்ப பாராட்டுரைகள் நல்கப்பெறும், பழிப்புரைகள் வீசப்படும்; எதிர்ப்பு உரைகளும் எறியப்படும். எதையும் தாங்கும் இதயம் உண்டு என்ற முறையில்தான், நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று செங்கோல் ஓச்சி வருகின்றோம். பாராட்டுகள் எங்களை

யும் மீறி வருகின்ற அளவுக்கு அவர்கள் சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்களா? நம்முடைய கப்பல் படை எல்லாம் மிகுந்த பந்தோபஸ்துடன் கடலோரப் பகுதிகளில் இருக்கிறார்கள், கடலிலும் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே அவர்களை ஊக்குவிக்கின்ற சக்திகள் இருக்கிறார்கள். ஆகவேதான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது என்பது தான் எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இயக்கத்தை அரசு தடை செய்வது என்றால், அந்த இயக்கத்திற்கு ஆதரவு கொடுப்பவர்கள் இந்த மாநிலத்திலே குற்றவாளிகளாக கருதப்படுவார்கள். அது யாரைப் பாதிக்கின்றதோ, அவர்கள் உணர்ந்துகொண்டு, அவர்கள் அதற்காக குரல் கொடுப்பது, அவர்களை அடையாளம் காட்டுகின்றமைக்கு நான் உள்ளபடியே உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும், மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒன்றும் இல்லை. நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று சொல்லவில்லை. ஆதரிக்கிற சில சக்திகள் இருக்கின்றன. அவர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்கிறார்கள். திரு. திருநாவுக்கரசு அவர்களுக்காக குரல் கொடுக்கிறார்கள் என்று சொல்லவில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆதரித்தார். நாங்களும் ஆதரிக்கிறோம், தடை செய்யக்கூடாது என்று கேட்கிறோம். அவர்களுக்கு தனி நிலம் கிடைக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதற்காக மத்திய அரசு அந்தமாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு இந்த மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. கண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.





திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்த அவையிலே பேசியபோது இதே போன்ற கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதரித்ததாகவும், இன்று அத்தோடு நிறுத்திக் கொண்டார். அன்றையதினம் இந்திராகாந்தியும், ராஜீவ் காந்தியும் ஆதரித்ததாக சொன்னார்கள். எல்.டி.டி.ஈ.யை முதலில் நாம் ஆதரித்தது உண்மை. அங்கே அவர்கள் அடித்து விரட்டப்பட்ட நிலையில் தமிழகத்திற்கு வந்தபோது நாம் ஆதரித்தோம். ஆனால் அதற்குப் பின்னாலே நம்முடைய ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்றையதினம் அவர்கள் அங்கே சென்றதற்குப் பின்னால், நமக்கு எதிரிகளாக மாறிவிட்டதற்குப் பின்னால், ஆதரிப்பதற்கு வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றையதினம் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஆதரித்து, ராஜீவ் காந்தியோடு அவர் கடற்கரையிலே நின்று, ராஜீவ் காந்தியினுடைய கரத்தையும், அவர் கரத்தையும் உயர்த்திப் பிடித்துப் பேசிய பேச்சு நண்பர் திருநாவுக்கரசுக்கு இன்னும் மறந்திருக்காது என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1991–92–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள், 1992–93–ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகள் ஆகியவை பற்றிய பொது விவாதத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, 71 உறுப்பினர்கள் கலந்து கொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் தங்கள் கண்ணோட்ட போக்குக்கு ஏற்ப, எடுத்துரைத்துள்ளார்கள். நாட்டின் நன்மை கருதியும், மக்களின் நல்வாழ்வு கருதியும், அரசின் செம்மை கருதியும், நிதிநிலையின் செழிப்பு கருதியும், சீரிய கருத்துக்களைச் சிறப்பாக எடுத்து வைத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் உளங்கனிந்த நன்றியை நான் உவகைப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்ஜெட் என்றாலே அவரவர் மனப்போக்குக்கு ஏற்ப பாராட்டுரைகள் நல்கப்பெறும், பழிப்புரைகள் வீசப்படும்; எதிர்ப்பு உரைகளும் எறியப்படும். எதையும் தாங்கும் இதயம் உண்டு என்ற முறையில்தான், நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று செங்கோல் ஓச்சி வருகின்றோம். பாராட்டுகள் எங்களை

உற்சாகப்படுத்துகின்றன, ஊக்கப்படுத்துகின்றன, பழிப்புரைகள்
எங்களை ஒருநிலைப்படுத்துகின்றன; எங்கள் நெறியை உறு
திப்படுத்துகின்றன; நீதியையும் நன்மையையும் விரும்புகிறவர்
களாகி பிறருக்கும், தமக்கும் பலனை கருதி நடப்பவர்களின்
உயர்ந்த பண்புகளை, அறிவுடைய சான்றோர் போற்றிப் புகழ்
வார்கள் என்ற கருத்து தோன்ற,

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு''

என்று, வள்ளுவப் பெருந்தகையார் கூறியதற்கு இணங்க,
பலதரப்பட்ட நல்லவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையைப்
போற்றிப் பாராட்டி, வரவேற்றிருப்பது, எனக்கு மன நிறை
வைத் தருகின்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்,
திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பொறுப்புணர்ந்து, பாங்கு உணர
அறிந்து ''இந்த பட்ஜெட், பாலைவனத்தில் ஒரு பசும்
சோலை, சாமானிய மக்கள் மீது வரிச் சுமையை
ஏற்றாத வகையில் மிகுந்த கவனத்தோடு தயா
ரிக்கப்பட்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டிருப்பதோடு,
இந்த அவையிலே பேசுகிறபோதும் இந்த நிதிநிலை அறிக்கையை
குறிப்பிட்டுப் பல்வேறு சீரிய கருத்துக்களையெல்லாம் அவர்கள்
வரவேற்று இருப்பதோடு சில சீரிய பரிந்துரைகளையும், இந்த
அரசு ஏற்று நடத்த வேண்டும் என்பதற்கான காரண காரிய
விளக்கங்களோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக
அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அதைப்போலவே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பொறுப்போடு
கூடிய உறுப்பினர்கள் பலரும், இந்த நிதிநிலை அறிக்கையானது,
'இருட்டில் ஒரு விளக்கு' என்றும் 'சிறந்த முறையில் தயா
ரிக்கப்பட்ட சீரிய பட்ஜெட்' என்றும், 'ஏழை எளிய பாட்டாளி
மக்களுக்கெல்லாம் நலம் பயக்கும் நல்ல பட்ஜெட்' என்றும்,
'துணிச்சலான பட்ஜெட்' என்றும், குறிப்பிட்டு வரவேற்று
இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய
நன்றியைத் தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.45.

எதிர்க்கட்சிகளாக இருந்து கொண்டு, அதே நேரத்தில், ஆளும்
கட்சியின், ஆட்சியின் ஆக்கப் பணிகளுக்குத் தோழமை உணர்
வோடு ஊக்கம் தந்து வருகின்ற, ஃபார்வர்டு பிளாக் கட்சி,
இந்தியக் குடியரசுக் கட்சி, உழவர் உழைப்பாளர் கட்சி,
இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த
உறுப்பினர்கள், பட்ஜெட்டைப் பாராட்டி, சீரிய பரிந்துரைகள்
பலவற்றையும் தந்துள்ளார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத்



தெரிவித்துக் கொள்கிறேன். 'தோளில் சுமந்துள்ள சிலுவையை
பொறுப்புணர்ச்சியோடும் கடமை உணர்ச்சியோடும் இறுதி வரை
யில் சுமந்து செல்வோம்' என்ற உணர்வுடன், நிதிநிலை அறிக்
கைக்கு மேலும் பொலிவும் வலிவும் ஊட்டுகிற வகையில், ஆளும்
கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், கருத்துக்களை வழங்கி
யிருப்பதற்காக அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

காழ்ப்புணர்ச்சியோடு, கட்சி மாச்சரியம் கொண்ட சில
அரசு ஊழியர் சங்கங்களைத் தவிர, பெரும்பாலான அரசு
ஊழியர் சங்கங்கள், இந்த நிதிநிலை அறிக்கையைப் பெரிதும்
வரவேற்று இருக்கின்றன. அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட
சில வர்த்தகச் சங்கங்களைத் தவிர பெரும்பாலான வர்த்தகச்
சங்கங்கள் சில மாற்றங்கள் வேண்டுமென்று குறிப்பிட்டுப் பொது
வாக வரவேற்று இருக்கின்றன. பொது மன்றங்கள் பலவும் இந்த
நிதிநிலை அறிக்கையை வரவேற்று இருக்கின்றன. 'இந்து',
'தினமணி', 'தினத்தூது', 'மக்கள் குரல்', 'நியூஸ் டு டே' போன்ற
சில முக்கியமான நாளேடுகள் இந்த நிதிநிலை அறிக்கையைப்
பற்றி நல்ல கருத்துக்களைக் கூறியிருக்கின்றன. நாட்டை
ஆள்பவர்களுக்கு இடிப்பாரை—அதாவது தவறு கண்ட இடத்
தில் கடிந்து அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் கூறக்கூடி
யவர்களைத் தமக்குத் துணையாகக் கொண்டிருக்க வேண்
டும் என்று வள்ளுவர் பெருந்தகையார் குறிப்பிட்டிருக்கிறார்.
அந்த இலக்கணத்திற்கு ஏற்றவாறு கடமையைத்தான் எதிர்
வரிசையிலே இருக்கும் காங்கிரஸ் கட்சியும் பிற தோழமைக்
கட்சிகளும் முறையாக செய்து வருகின்றன என்பதிலே, எனக்கு
மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. 'இடிப்பாரை இல்லா ஏமரா
மன்னன், என்று தான் வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர,
பழிப்பாரை இல்லா ஏமரா மன்னன் என்று வள்ளுவர் குறிப்பிட
வில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இடித்துரைப்பாரின்
நோக்கம் எப்பொழுதும் வரவேற்கக்கூடியது; ஆனால் பழித்து
உரைப்பாரின் நோக்கம் எப்பொழுதும் வெறுத்து ஒதுக்க வேண்டிய
தாகத்தான் இருக்கும்.

இதே மன்றத்தில் ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள்
குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது. '' ஆளும் கட்சிக்கு
எதிர்க்கட்சி மாப்பிள்ளைத் தோழன் போல் இருந்து செய்ய
வேண்டியது எது, செய்யக் கூடாதது எது, என்பதைக் கூறி,
துணை புரியவேண்டும் என்றும் ஆனால் மாப்பிள்ளைத் தோழனாக
வந்துவிட்ட பிறகு, மாப்பிள்ளையை முறையில்லாத முறையில்
தள்ளி விட்டு விட்டு, மணவறையில் உட்கார்ந்து விட முயலக்
கூடாது என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா
அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் இந்திய அரசு கொடாக்கண்டன் என்றால் மாநில அரசு விடாக் கண்டனாக இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவையில் அல்ல வெளியில். 'இந்த ஆட்சியின் சிறந்த செயல் திட்டங்களையும் சிறிய சாதனைகளையும் ஏற்று, அவற்றை தொட்டுப் பார்க்கக் கூட மனம் பொறாத தொடாக் கண்டர்கள்' சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படிப்பட்ட காழ்ப்புணர்ச்சி கொண்ட தொடாக் கண்டர்களுக்கு மைய அரசு, கொடாக்கண்டனாகவும், மாநில அரசு விடாக்கண்டனாகவும் படுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஒரு வகையில் பார்த்தால் ஏழை எளிய மக்களை தவிக்க விடாமல் பார்த்துக் கொள்ளும் விடாக்கண்டர்கள் தான் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வன்முறையாளர்கள் தலைவிரித்தாடாமல் பார்த்துக் கொள்ளும் விடாக்கண்டர்கள் தான் நாங்கள். குற்றங் குறைகளை நிகழ விடாமல் பார்த்துக் கொள்ளும் விடாக் கண்டர்களும் நாங்கள் தான் என்று வேண்டுமானால், அந்த விடாக்கண்டர் என்ற சொல்லுக்கு நாம் பொருள் கொள்ளலாம். "தமிழக அரசால் மத்திய அரசிடமிருந்து நிதி உதவியைப் பெற முடியவில்லை என்பது கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது" என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து நிதி உதவியை அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும் தான் பெற முடியுமே ஒழிய, பெறவேண்டுமே ஒழிய, கைத்திறனால் பெறக்கூடிய முறையிலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிடமிருந்து நிதி உதவியை நாங்கள் எங்கள் அறிவுத் திறந்தாலும், ஆற்றல் திறத்தாலும் பெற முயலுகிறோமே அல்லாமல், கையாலாகும் தனத்தால் அல்ல. இது அறிவாலும் ஆற்றலாலும் மட்டுமே முயலப்பட வேண்டிய ஒன்று. முயலுகின்றோம்.

முற்பகல் 11-50

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லாம் எங்களுக்கு மகிழ்ச்சித் தருகின்ற முறையிலேதான் அவற்றையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தான் நான் எடுத்துக் கொள்கின்றேன். கருத்துக்களை எல்லாம் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்ற வகையிலேதான் நான் எடுத்துக் கொள்கிறேனே அல்லாமல், எந்த வகையிலும் நான் எரிச்சலோ, வருத்தமோ, வாட்டமோ கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். "கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் கடலில் தத்தளிப்பதைப் போல, நிதியமைச்சர் நெடுஞ்செழியன் நிலை தெரிகிறது. மத்திய அரசோ, உலக வங்கியோ ஹெலிகாப்டர் அனுப்புமா என்ற ஏக்கமும் தெரிகிறது" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.





தி.மு. கழக ஆட்சியினால் விட்டுச் சென்ற நிதிப் பற்றாக்குறை என்னும் கொந்தளிக்கும் கடலில் நான் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன் என்பது மட்டும் உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் பாட்டாளிக் கட்சியை நம்பியாவது கரை ஏறமுடியுமா என்றால் அதுவும் முடியாது என்பதும் உண்மைதான். (மேசையைத் தட்டும் ஒலி).

ஹெலிகாப்டரில் நிதி உதவ இந்திய அரசும். உலக வங்கியும் வந்தால் தான், நமக்கு நல்வாழ்வு பெற வழி ஏற்படும் என்பதும் உண்மைதான். இவை இல்லையென்றால் நமது தொல்லைகளும் துயரங்களும், இடுக்கண்களும் இடையூறுகளும் நம்மைவிட்டு நீங்க வழியில்லை என்பதும் உண்மைதான்.

மாண்புமிகு ஜனதா தள உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் "4 கோடி ரூபாய்க்கு வரி குறைப்புச் செய்துவிட்டு 400 கோடி ரூபாய்க்கு வரி போட்டு உள்ளார்கள்" என்று குறிப்பிட்டு உள்ளார். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 4 கோடிக்கு வரி குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதும், வரி விதிப்பும் கட்டண உயர்வும் சேர்ந்து ரூபாய் 70 கோடிக்கு என்பதும் உண்மை. அதுதான் வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், டாக்டர் குமாரதாஸ் அவர்கள் எனக்குத் தெரியாமலேயே, எனக்குச் சாதகமாக, ரூ. 330 கோடிக்குக் கூடுதலாக வரி விதிப்பதற்கு வழி செய்துள்ளார் என்பது மட்டும் தெரிய வருகிறது. ஆக இந்த ரூ. 330 கோடியையும், அரசுக்கு அவர் முறைப்படி கிடைக்கச் செய்ய வேண்டும். அதனால் ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையை ஓரளவு நீக்க எனக்கு அது உதவி செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பொலியும் மேசையைத் தட்டும் ஒலியும்).

மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு ரூ. 160 கோடிக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார். அவர் ஈவுக்கு ரூ. 90 கோடியை இந்த அரசுக்கு தர வேண்டிய கடப்பாடுடையவராக அவர் இருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு, பழனிசாமி அவர்கள், மத்திய அரசு, உலக வங்கி ஆகியவற்றின் உதவிகளை எதிர்ப்பார்த்து, இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உள்ள முடிக்கு கொண்டை போட முடியாமல், ஒட்டு முடிக்கு கொண்டை போடும் முயற்சி இது, என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் உவமை நயத்தோடு. எங்களைப் பொறுத்தவரையில், சொந்த முடியைக் கொண்டு தான் கொண்டை போட வேண்டும் என்று விரும்புகின்றோம், (மேசையைத் தட்டும் ஒலி).

(டாக்டர் இரா, நெடுஞ்செழியன்) [1992 மார்ச் 16

சொந்த முடியை பெருக்கும் முயற்சியாகத்தான் வரி வருமானத்தையும், வரியில்லா வருமானத்தையும் மத்திய அரசிலிருந்து பெறவேண்டிய நிதி ஆதாயத்தையும் பெருக்க முயன்று கொண்டு இருக்கிறோம். ஆனால், மத்திய அரசு, உலக வங்கி ஆகியவற்றின் ஒட்டு முடியில்லாமல் மேற்கு வங்காள ஜோதிபாசு அரசோ, முன்பு இருந்த கேரளாவின் நயினார் அரசோ, ரஷிய நாடோ, சீன நாடோ, தம் சொந்த கொண்டையைப் போட முடியவில்லை என்பதை மட்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) சீன நாடும், ரஷிய நாடும் கூட அமெரிக்காவில் ஒட்டு முடியை அவ்வப்போது வாங்கி வாங்கித்தான் தம்முடைய சொந்த கொண்டையைப் போட்டுக்கொண்டு வருகின்றனவே அல்லாமல் வேறல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ''பட்ஜெட் புத்தகம் கனமாக உள்ளது, மக்களைப் போய்ச் சேரும் பயன்கள்தான் மிகக் குறைவாக இருக்கின்றன'' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இராமாயண தெருக்கூத்தைப் பார்க்க ஒருவன் சென்றானாம். கூட்ட நெரிசலில் தெருக்கூத்தை பார்க்க முடியாமல் நெரிசல் அதிகமாக இருந்த காரணத்தாலே அவன் தூக்க நிலையில் உட்கார்ந்து இருந்தானாம். அவன் தோளில் அவன் பின்னால் இருந்த மற்றொருவன் தெருக்கூத்து பார்ப்பதற்காக, ஏறி உட்கார்ந்து கொண்டு தெருக்கூத்தைப் பார்த்தானாம். இராமாயண தெருக்கூத்து முடிந்து அவரவர்கள் வீட்டுக்குச் சென்ற பிறகு, போய் விட்டு வந்தவனை மற்றொருவன் கேட்டானாம், தெருக் கூத்து எப்படி இருந்தது என்று. அதற்கு அவன் சொன்னானாம், ''ஒரு ஆள் பாரமாக இருந்தது'' என்று. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-55

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களை, நான் பட்ஜெட்டைப் படித்துப் பார்க்கத்தான் சொன்னேனே தவிர, பட்ஜெட்டின் எடை என்ன என்று கணக்குப் போட்டுப் பார்த்துக் கனமா, லேசா என்று சொல்லச் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

மதிப்பிற்குரிய தி.மு.க. தலைவர் ''நிதியமைச்சர் நெடுஞ்செழியன் பட்ஜெட் அரை வேக்காட்டு சமையல்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். தரமான நல்ல சமையல் சாப்பாடு என்றால், அது முழு வேக்காட்டு உணவு; முக்கால் வேக்காட்டு உணவு, அரை வேக்காட்டு உணவு; ...கால் வேக்காட்டு உணவு என்று எல்லா வகை வேக்காட்டு உணவுகளும் தான சேர்ந்து இருக்கும். பொங்கல் சோறு என்றால், அது முழு



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேக்காடாக இருக்கும்; தயிர் சோறு என்றால், அதை முக்கால் வேக்காட்டோடுதான் இறக்க வேண்டியிருக்கும். புளியோதரை அரையே அரைக்கால் வேக்காட்டோடுதான் இருக்கவேண்டும். அவித்த முட்டை என்றால் அரை வேக்காட்டோடு தான் இருக்க வேண்டும். 'ஆப் பாயில்டு எக்' என்றுதான் அதற்கு பெயர். கீரைத்தண்டு என்றால் கால் வேக்காட்டோடுதான் அதை வதக்கி எடுத்து விடவேண்டும். பச்சடி என்றால் வேக்காடே இல்லாமல் பச்சடி உருவாக்க வேண்டும். ஆக இந்த பட்ஜெட்டில் அறுசுவை உண்டி பக்குவமாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அதன் அளவுக்கு ஏற்ப, அளவோடு வேக்காட்டைப் பெற்று தான் விளங்குகிறது என்பதையும், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.க. தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, எந்த நிதிச் செயலாளரை சமையல்காரராகக் கொண்டு பட்ஜெட் சமையலை உருவாக்கினாரோ அதே சமையல்காரரைக் கொண்டு தான் நாங்கள் மிக அனுபவத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) மிகத் திறமையாக இந்த பட்ஜெட்டை உருவாக்கியிருக்கிறோம் என்பதை, அவருக்குப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தி.மு.க. தலைவர் ''இந்த பட்ஜெட்டை எழுதியவர் ஏட்டை கெடுத்தார்; பாடியவர் பாட்டைக் கெடுத்தார் என்றே ஆகி விட்டது'' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஏட்டையும் சரிவர படித்துப் பார்க்காமல், பாட்டையும் சரிவர கேட்டுப் பார்க்காமல் நாள்தோறும் நாட்டை பலவகைகளில் கெடுத்துக்கொண்டு இருக்கிற ஒருவர்தான், அப்படி குறிப்பிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

'அறிவு இல்லாதவனை அறிவு உடையவன் ஆக்க முயன்றால் அப்படி முயலும் ஒருவனே அறிவு இல்லாதவன் என்று கூறின நிலை ஏற்படும்; அறிவு இல்லாதவன், தான் அறிந்த அளவில் தானேதான் அறிந்தவன் என்று, முடிவு செய்து கொள்வான்' என்னும் கருத்துப்பட

''காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு''

என்று, வள்ளுவர் பெருந்தகையின் கூற்றைத்தான், நாம் நினைவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், பொதுப்படையாகப் பார்ப்போமேயானால், நல்ல எண்ணம் படைத்த பலரும் எழுதிய ஏடும் நன்றாகத்தான் இருக்கிறது; பாடிய பாட்டும் நன்றாகத்தான் இருக்கிறது என்று கூறியிருப்பது எங்களுக்கு மனநிறைவை அளிக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

தி.மு.க. தலைவர் அவர்கள் "நிதிநிலை அறிக்கை புள்ளி விவர புழுதியைக் கொண்டு, பல பொய்களை மறைக்க முயன்று இருக்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். நிதிநிலை அறிக்கை வெளிப்படையானது. இதில் உண்மையை மறைக்கவும் முடியாது; உண்மைக்கு மாறானவற்றைக் கூறவும் முடியாது; அப்படி எல்லாம் செய்துவிட்டு, இந்தப் பேரவையில் இருந்து நான் தப்பித்துப் போகவும் முடியாது. 'நிதிநிலை அறிக்கை', 'வரவு-செலவுத் திட்டம்' என்றால், நிலைமைகளை புள்ளி விவரங்களால் தான் விளக்க முடியும். புள்ளிவி வரங்கள் எதுவும் இல்லாமல் வரவு-செலவு என்று எவ்வாறு கணக்கு எழுதமுடியும் என்று தெரியவில்லை. அவர் வெளியிட்ட பல நிதிநிலை அறிக்கைகள் புள்ளிவி வரங்களோடு தான் இருந்து வந்து இருக்கின்றன. புள்ளி விவரங்கள் தி.மு.க. தலைவரின் கண்களுக்கு புழுதியாகப் பட்டாலும், எங்களுடைய கண்களுக்கு, அவைகள் புனிதமானவைகளாகவும், அதுமட்டுமல்லாமல், புத்துயிர் தருவனவாகவும் இருக்கின்றன.

தி.மு.க. தலைவர் "ரூபாய் 4 கோடிக்கு வரிச் சலுகை வழங்கி, சின்ன மீனைக் காட்டி பெரிய மீனைப் பிடிப்பது போல், ரூபாய் 70 கோடிக்கு வரி விதிப்பு செய்யப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். மீன் பிடிப்பது என்று ஆகிவிட்டால், சிறிய மீனைப் போட்டுத்தான் பெரிய மீனை எடுப்பது வழக்கம். 'கெண்டையைப் போட்டு விராலை எடுப்பது' என்பதுதான் பழமொழி. சிறிய மீனைக்கூட அல்ல, சிறிய புழுவைக்கூட பயன்படுத்தி, பெரிய மீனை எடுப்பது உண்டு. தி.மு. கழக தலைவர்தான், பெரிய மீனைப் போட்டுச் சிறிய மீனைப் பிடிப்பதையே, எப்பொழுதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார் போலும்.

'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'

என்பது வள்ளுவர் காட்டிய நெறி. அதாவது, முதலில் எவ்வளவு துன்பங்கள் அடுக்கடுக்காக பெருகி வந்த போதிலும், முடிவில் இன்பத்தைத் தரக்கூடிய பணிகளை ஒருவர் தமக்குள்ள துணிவை பயன்படுத்திக்கொண்டு, செய்து முடிக்க வேண்டும் என்பது ஆகும். அந்த ஆக்க நெறிகளைக் கடைபிடித்துத்தான், கடுமையான நிதி நெருக்கடி, எதிர்க்கட்சிகள் ஜனநாயக நெறிமுறைகளுக்குப் புறம்பாக கொடுக்கும் பெருந்தொல்லைகள், தீவிர வாதிகளின் சூது, சூழ்ச்சி, வஞ்சனை, பொறாமை காரணமாக இழைக்கிற கொடுஞ் செயல்கள், எதிரிகள் வீசுகிற இழி சொற்கள், பழிச் சொற்கள், இல்லாது பொல்லாதனவகளைக் புனைந்து கூறும் புனைச் சுருட்டுக்கள் ஆகியவற்றையெல்லாம் சமாளித்து, இறுதியில் இன்பம் பயக்கும் பணிகளைத் துணிச்சலோடு செய்து முடிக்



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கும் திறனைத்தான். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய (மேசையைத் தட்டும் ஒலி) தலைமையில் இயங்கி வரும் இந்த அரசு, பெற்றுத் திகழ்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற பொது விவாதத்திற்கு, நான் பொதுப்படையாக, கொள்கைகள், நோக்கங்கள், திட்டங்கள் பற்றிச் சில விளக்கங்களை மட்டும் வழங்க முற்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்தி கூறியுள்ள தொகுதி பற்றிய பல்வேறு பிரச்சினைகளை, அந்தந்த துறைகளைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவற்றையெல்லாம் கூர்ந்து ஆராய்ந்து, பார்த்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவு எடுப்பார்கள். இந்த அவையிலேயும் வாய்ப்பு ஏற்படும்பொழுது கூறுவார்கள். அதுமட்டுமல்லாமல் அடுத்தடுத்து மானியக் கோரிக்கைகள் வர இருக்கின்ற காரணத்தினாலும், அந்த மானியக் கோரிக்கைகளின்போது, விரிவான விவாதம் நடைபெற இருக்கின்ற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தந்தத் துறை பற்றிய கோரிக்கைகளை, அந்தந்த துறை பற்றிய குறைபாடுகள், குற்றங்கள் ஆகியவற்றை எடுத்துச் சொல்கின்றபொழுது, அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள் அவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து அவற்றின் மீது எடுக்கவேண்டிய சிறப்பான, நியாயமான நடவடிக்கைகளை, முறைப்படி எடுப்பார்கள் என்பதையும், நான் இப்போது தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது ஓரளவுக்கு இந்த அவையினர் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நிதிநிலையை மட்டும் நான் தெளிவுபடுத்திக் காட்ட விரும்புகிறேன். 1992-93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, எவ்வாறு அமையும் என்றும், கடுமையான நிதி நெருக்கடி நிலையில் பொறுப்பு ஏற்றுள்ள இந்த அரசு, நடப்பாண்டில், அதாவது 1991-92-இல் உள்ள உச்சகட்ட பற்றாக்குறையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்றும், வரும் ஆண்டில் திட்டச் செலவுகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்க எவ்வித முயற்சி எடுக்கும் என்றும் கேட்டுப் பலர் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருந்தார்கள். உள்ளபடியே நடப்பு ஆண்டில் நிதிப் பற்றாக்குறை மிகவும் சோதனைக்குரிய ஒன்றாகவே அமைந்து விட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற கட்டத்தில், உச்சகட்ட [illegible] அதாவது ரூபாய் 898 கோடிக்கு நிதிப் பற்றாக்குறை [illegible]

சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதன்பின், மலிவு விலை மதுவை அறவே நீக்கிவிட்டதன் காரணத்தால், மேலும் நிதி இழப்பு ஏற்பட்டு, மொத்த பற்றாக்குறை, ரூபாய் 1,220 கோடி என்ற அளவிற்கு உயர்ந்தது. இந்த அளவிற்கு நிதிப் பற்றாக்குறை இருப்பதால், நடப்பு ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டை சற்று குறைத்துக் கொண்டு, நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க வேண்டும் என்றால், நாங்கள் சமாளித்து இருக்கலாம். ஆனால் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எக்காரணம் கொண்டும். நிதி ஒதுக்கீட்டில் குறைபாடு இருக்கக் கூடாது என்று கருதியதன் அடிப்படையில், மக்கள் மீது பளு ஏற்படாத வண்ணம் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதிலும், அரசு நிறுவனங்களில் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதிலும் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு உள்ளன. நடப்பாண்டில் ரூ. 1,220 கோடி என்று இருந்த பற்றாக்குறை பல்வேறு முயற்சிகளின் காரணமாகவும், நிதி ஆதாரங்களைப் பெருக்கியதன் காரணமாகவும், ஏற்பட்ட இழப்புக்களை ஓரளவுக்குக் குறைத்ததன் காரணமாகவும் ரூ. 401 கோடியே 47 இலட்சம் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டது. உள்ளபடியே, இது ஒரு மாபெரும் சாதனை என்பதை உணர வேண்டும். நாங்கள் பொறுப் பேற்றபொழுது, நிதிப் பற்றாக்குறையே இல்லை என்ற நிலை இருந்திருக்குமேயானால் மலிவு விலை மதுக் கடைகள் நீக்கப்படாமல் இருந்திருக்குமேயானால் நமக்கு வேறு வகையில் பயன்படுத்தக்கூடிய அளவில் ரூ. 818 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஆதாயமாகக் கிடைத்திருக்கும். ஆனால், பற்றாக்குறையை நீக்கவேண்டிய அவசியம் ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொரு பக்கம் மிக அவசியமான, தேவையான, இன்றியமையாத கொள்கையான மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. இந்த இரண்டின் காரணமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஒரு பக்கம் இருந்ததால் கிட்டத்தட்ட ரூ. 818 கோடியே 53 இலட்சத்திற்கு நாம் நிதி ஆதாயத்தைத் திரட்டியிருந்தாலும், அதனால் உருவான பலனை வளர்ச்சித் திட்டங்களுக்கோ, மேம்பாடுத் திட்டங்களுக்கோ செலவழிக்க இயலாமற் போயிற்று.

பிற்பகல் 12-05

அதுமட்டுமல்ல, நடப்பாண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 1,600 கோடிக்கு எவ்விதக் குறைபாடும் ஏற்படாத வகையில் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது உள்ளபடியே இந்த அரசின் மாபெரும் சாதனையாக அமையும்.



தி. மு. கழக ஆட்சிக் காலத்தில், 1989-90 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகளுக்கு என்று, ரூ. 1,457 கோடி நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால் ரூ. 1,202 கோடி அளவிற்குத்தான் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ரூ. 245 கோடி அளவிற்குத் திட்டப் பணிகள் குறைந்து போயின. திட்டம் போடப்பட்டது ரூ. 1,457 கோடி- ஆனால் அதிலே நிறைவேற்றப்பட்டது 1,202 கோடிக்குத்தான். ரூ. 245 கோடி அளவுக்குத் திட்டப் பணிகள் குறைந்தன. அதன் விளைவாக மின்சாரத் துறையில் திட்டச் செலவு சுமார் ரூ. 250 கோடி அளவிற்கு அவைகள் குறைத்துக் கொடுக்கப்பட வேண்டி வந்தது.

1990-91 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்கு என்று ரூ. 1,360 கோடி ஒப்புக் கொள்ளப்பட்டது. ரூ. 1,377 கோடி அளவிற்கு அந்த ஆண்டில் திட்டப் பணிகள் நிறைவேறின.

ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1991-92 இல், திட்டப் பணிகளுக்கு என ரூ. 1,600 கோடி ஒப்புக் கொள்ளப்பட்டது. கடுமையான நிதி நெருக்கடி நிலை இருந்தாலும், திட்டப் பணிகளைச் சுமார் ரூ. 1,640 கோடி அளவிற்காகவாவது நிறைவேற்றி வைக்க முடியும் என்கின்ற நம்பிக்கையை இந்த அரசு கொண்டுள்ளது.

1992-93 ஆம் ஆண்டுத் திட்டப் பணிகளுக்கு, முதலில் ரூ. 1,486 கோடிதான் திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றாலும், அந்த அளவை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து, திட்டப் பணிகளின் அளவு ரூ. 1,751 கோடிக்கு அமைய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இறுதியாக மத்திய அரசும், திட்டக் குழுவும் ரூ. 1,751 கோடிக்குத் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க இசைவு தந்தது. இது ஒரு பெரிய வெற்றியாகும்.

மத்திய அரசினிடத்திலே கேட்டீர்களே, ஏதாவது கிடைத்ததா என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ஆக மத்திய அரசு ரூ. 1,486 கோடிக்குத்தான் முதலிலே திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் தந்தது. அதற்குக் காரணம் அதிகமாக மத்திய அரசு நமக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், மாநில அரசுக்குத் தன்னுடைய நிதி ஆதாயத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புக் கூறுகள் அதிகம் இல்லை என்ற காரணத்தைக் காட்டி, திட்டக் குழுவினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

இருந்தாலும், ரூ. 1,751 கோடிக்கு கூடுதல் நிதி ஆதாயத்தை நாங்கள் எப்படியாவது திரட்டி, இந்த ஆண்டு திட்ட ஒதுக்கீடான ரூ. 1,600 கோடிக்குமேல் இருக்க வேண்டுமே தவிர எக்காரணத்தை கொண்டும் அதனால் குறையக் கூடாது என்ற திட்டத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தார்கள்.

நாம் வற்புறுத்தி வந்தாலும், செவிகொடுத்துக் கேட்கின்ற அரசுதான் மத்திய இடத்திலே இருக்கிறது. கேட்கப்படுகின்ற தொகை முழுவதையும் உதாசீனம் செய்கின்ற அளவில் மத்திய அரசு இல்லை என்பதற்கு எடுத்துக் காட்டு. இந்த ரூ 1,486 கோடியை ரூ. 1,751 கோடியாக்க முதலிலே மறுத்தாலும், மாண்புமிகு இந்தியப் பிரதமரும் மாண்புமிகு இந்தியாவினுடைய திட்டக் குழுத் தலைவரும், இதனை ஏற்று, ரூ. 1,751 கோடி ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்குள்ளேயே வழங்க முன் வந்தது உள்ளபடியே பாராட்டுதலுக்குரிய ஒன்றுதான். ஏனென்றால், பல தடவைகளில் கேட்டவை முழுவதும் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்பொழுது கேட்டது கிடைத்தது என்ற மகிழ்ச்சியின், அடிப்படையிலேதான் இதை நான் குறிப்பிட்டு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ரூபாய் 245 கோடி அளவிற்குத் திட்டப் பணிகளைத் தி. மு. க. அரசு குறைத்துக் கொள்ள இசைவு தந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 265 கோடி திட்டப் பணிகளுக்கு என்று கூடுதலாகப் பெற்றுத் தந்தது ஒரு மாபெரும் சாதனை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

தி.மு.கழக அரசு 1989–90ஆம் ஆண்டில், திட்டச் செலவினைக் குறைத்துக் கொண்ட நிலையிலும்கூட, ரூபாய் 50 கோடிக்குக் கூடுதல் வரி விதிப்பும், கட்டண மாற்றமும் செய்தது. 1990-91ஆம் ஆண்டு மலிவு விலை மதுவைப் புகுத்தியதன் மூலம் கணிசமான அளவிற் வருவாய் ஏற்படுகின்ற சூழ்நிலை இருந்தும் கூட, தி. மு. க. அரசு, அந்த ஆண்டு 62 கோடி ரூபாய்க்கு வரி விதிப்பும், கட்டண மாற்றமும் செய்தது.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1991–92 இல், ரூபாய் 898 கோடி ரூபாய் பற்றாக் குறை இருந்தும், மலிவு விலை மதுக் கடைகளை நீக்கியதன் மூலம் ரூபாய் 322 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்ட நிலையிலேயும் கூட, நிலைமைகளைச் சமாளிக்க, அந்த ஆண்டு ரூ. 70 கோடி அளவிற்குத்தான் வரி விதிப்பும், கட்டண மாற்றமும் செய்யப் பட்டன. 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில்



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ரூபாய் 619 கோடி ரூபாய், பற்றாக்குறை ஏற்பட்டு விட்ட
நிலையிலேயும் கூட, ரூபாய் 70 கோடி அளவிற்குத்தான் வரி
விதிப்பும், கட்டண உயர்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.
ஏழை, எளியவர்களை அதிகமாக பாதிக்காத வகையிலும்,
இந்தக் கட்டண விதிப்பும், வரி விதிப்பும் மேற்கொள்ளபபட்
டிருக்கின்றன. முந்தைய அரசின் போக்கினையும், இன்றைய
அரசின் போக்கினையும், ஒப்பிட்டுப் பார்க்கிறவர்களுக்கு,
இந்த அரசு, எவ்வளவு நிதானமாகவும், நியாயமாகவும்,
நேர்மையாகவும் வரி விதிப்பு, கட்டண உயர்வுப் பிரச்சினைகளை
அணுகியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பிற்பகல் 12–10

நிதிப் பற்றாக்குறையை
மேலும், நடப்பு ஆண்டிற்கான
சமாளிப்பதற்குத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
மத்திய அரசு, நமக்கு தகுந்த நிதியுதவி அளிக்குமென்று நம்பு
கிறேன். மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியைப் பொறுத்து,
அண்மையில் மத்திய அரசு, நிதிநிலை அறிக்கை தாக்கல்
செய்தபோது, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வழங்கக்
கூடிய பங்கில் சற்றுக் கூடுதலாக அமையும் முறையில் அறிவித்
துள்ளது. அதன் வாயிலாக, நம்முடைய முயற்சியாக சிறு
சேமிப்பு வசூல், மற்றும் இதர முயற்சிகளாலும் நடப்பு
ஆண்டிற்கான பற்றாக்குறையை ஓரளவுக்கு ஈடுகட்டி, ஏற்
கெனவே இருந்த அளவு, அதாவது 1990–91-ஆம் ஆண்டு
இறுதியில் இருந்த பற்றாக்குறை அளவுக்காவது எடுத்துச்
செல்ல முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான்
நாம் நிதி நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்து, நடப்பு ஆண்டிலாவது,
மிக அதிகமான அளவிலான நிதிப் பற்றாக்குறையை நாம்
ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்ற போதிலும், தமிழக
அரசின் நிதிநிலையைப் பொறுத்தவரையில் சில பிரச்சினை
களுக்குரிய விவரங்களை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

நிதிப் பற்றாக்குறை பிரச்சினைகளை, மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்களும், அவருடைய உரையிலே குறிப்
பிட்டுக் காட்டினார்கள். மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்
சந்திரன் அவர்களும், மற்றவர்களும்கூட, அதிலே ஏற்படுகிற
சில சங்கடங்களையும் மற்றவைகளையும் இங்கே சுட்டிக்
காட்டினார்கள். கடந்த சில ஆண்டுகளாக, வருவாய்
கணக்கில் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிற ஒரு நிலையை நாம்
காண்கிறோம். குறிப்பாக 1978-79 இல் இருந்து, தொடர்ந்து
படியாகத்தான் வருவாய்க் கணக்குகள் இருந்து கொண்டு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

வருகின்றன. 1986–87-க்குப் பிறகு, வருவாய்க் கணக்கிலேயே பற்றாக்குறை ஏற்பட்டது. 1986-87 இல் ரூபாய் 103 கோடியே 61 லட்சம் ரூபாயாக இருந்த வருவாய்க் கணக்கு, 1987–88-இல் ரூபாய் 282 கோடியே 92 லட்சம் என்ற அளவில் பற்றாக்குறையாக மாறிவிட்டது. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டு வரும் நிலை, உள்ளபடியே அரசுக்குப் பெரும் கவலையைத்தான் தருகிறது. மேலும், 1988–89 இல் ரூபாய 277 கோடியே 17 லட்சம் பற்றாக்குறையும், 1989–90 இல் ரூபாய் 479 கோடியே 22 லட்சம் ரூபாய் பற்றாக்குறையும், 1990–91-இல் ரூபாய் 553 கோடியே 4 லட்சம் பற்றாக்குறையும் என்ற அளவில் ஏற்பட்டன. 1991–92 இல் திருத்திய மதிப்பீடுகள் என்பதில், வருவாய்க் கணக்குப் பற்றாக்குறையை, ரூபாய் 650 கோடியே 5 லட்சம் என்ற அளவுக்கு நிறுத்துகிறோம். 1992-93 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் நிகரப் பற்றாக்குறை ரூபாய் 808 கோடியே 73 லட்சம் என்று இருக்கிறது. வருவாய்க் கணக்கில் உபரி நிலையை ஏற்படுத்தி, மூலதனக் கணக்கில் உள்ள செலவினங்களை, இந்த உபரியிலிருந்து பயன்படுத்திக் கொள்ளலாம். சில நேரங்களில், திட்ட ஒதுக்கீட்டில், கல்வி, சமூக நலன், சத்துணவு போன்ற, திட்டங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் ஒதுக்கீடுகளில் சேர்க்கப்படாமல், வருவாய்க் கணக்கில் சேர்க்கப் பட்டன. இதனால், வருவாய்க் கணக்கிலுள்ள பற்றாக்குறையும் மேலும் அதிகரிக்கிறது.

நாம் வளர்ச்சித் திட்டங்களை, மேம்பாட்டுத் திட்டங்களை கைவிட்டு விடமுடியாது ; அல்லது நிறுத்தி விடவும் முடியாது. எப்படியாவது, அதை நிறைவேற்றித் தீர வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுகிறபோதுதான், மூலதனக் கணக்கில் முடியாது என்ற நிலை வருகிறபோது, வருவாய்க் கணக்கிலேயே நாம் எடுக்க வேண்டிய அவசியம் வருகிறது. அதனால், இந்த வருவாய்க் கணக்கில் உள்ள பற்றாக்குறை மேலும் அதிகரிக்கிறது. மேலும், மானியங்கள் மற்றும் இழப்பீடுகள் போன்றவை, ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவதாலும் வருவாய்க் கணக்கிலுள்ள பற்றாக்குறை மேலும் அதிகரிக்கிறது. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருப்பதால்தான். மூலதனச் செலவில் தொய்வு ஏற்படுகிறது, புதிய புதிய திட்டப் பணிகள், அதாவது சாலைகள். பாசனத் திட்டங்கள். தொழில் துறையின் மூலதனச் செலவுகள். போன்றவை மேற்கொள்வதற்கு நாய போதுமான ஒதுக்கீடு செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. இதனால்தான். வருவாய்க் கணக்கில் ஏற்பட்டுள்ள, பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன், மேலும், வருவார்க் கணக்கில் ஏற்படும் பற்றாக்குறையை



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முயற்சியாகத்தான் கடன் பெற
நாம் ஈடுகட்டும் வட்டியைச் செலுத்த வேண்டிய
வேண்டிய அவசியமும். ஆக, ஆண்டுக்காண்டு இந்த,
அவசியமும் ஏற்பட்டுள்ளன, கடன் வாங்க வேண்டிய
நிலைமையைச் சமாளிப்பதற்குக் விரும்பத்தக்கது அல்லதான,
ஒரு அவசியம் ஏற்படுவது வழியில்லை என்று வருகின்ற
ஆனால், அதைத் தவிர வேறு மக்களைக் காப்பாற்ற
பொழுது கடன் வாங்கித்தான் நிறைவேற்ற வேண்டும்
வேண்டும். பல்வேறு திட்டங்களை போதுதான், மத்திய அரசும்
என்று கட்டாயம் வருகின்ற கடன் தொகைகளை நம்பித்தான்
சரி, மாநில அரசும் சரி, இப்பொழுது நம்முடைய கடன்
வாழ வேண்டியிருக்கிறது. வளர்ந்து கொண்டு வருவதைப்
தொகை ஆண்டுக்காண்டு கடன் தொகையும்
போன்றே, மத்திய அரசினுடைய வருகிறது. எப்படியாவது ஐந்
ஆண்டுக்காண்டு வளர்ந்து திட்டங்களையும் நிறை
தாண்டுத் திட்டங்களையும், மற்ற மத்திய அரசின்
வேற்றவேண்டுமென்று வருகின்றபொழுது, கிட்டத்தட்ட ரூ $3\frac{1}{2}$
கடன் தொகையைக் கணக்கிட்டால் வெளிநாட்டுக் கடன்கள்
இலட்சம் கோடிக்கு உள்நாட்டு, இந்த ஆண்டு
மட்டும் மத்திய அரசுக்கு இருக்கின்றன. மத்திய அரசு, வட்டி
வரவு-செலவுத் திட்டத்திலே கூட வேண்டிய அவசியத்
மட்டும் 32 ஆயிரம் கோடி செலவிட பற்றி நான்
திற்கு ஆளாகியிருக்கின்றது, மத்திய அரசைப் மத்திய அரசுக்கு
ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், எந்தச் சூழ்நிலை
ஏற்படுகின்ற எந்த நெருக்கடியானாலும், 25 மாநிலங்
யானாலும் அது இந்தியாவிலே இருக்கின்ற நாங்கள் பாதிக்
களையும் சேர்த்துதான் பாதிக்கும். ஆக திட்டமிட்டு,
கும் என்று சொல்வதற்குக் காரணமே அவர்கள் நாங்கள்
வேண்டுமென்றே செய்கிறார்கள் என்ற அளவில் நடவடிக்கை
சொல்லவில்லை. மத்திய அரசு எடுக்கின்ற சொல்லிக்
களின் மூலம் ஏற்படுகின்ற விளைவுதான் என்பதைச்
கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

என்று தனியாக மக்கள் இல்லை,
மத்திய அரசுக்கு தனியாக இல்லை. மாநிலங்களில்
மாநிலங்களுக்கு என்றும் மத்திய அரசுக்கும் சார்ந்
இருக்கின்ற அதே மக்கள் தான் நடவடிக்கைகள்
துள்ள மக்கள். அவர்கள் எடுக்கின்ற அதைப் பற்றிக்
மாநிலங்களைப் பாதிக்கின்ற பொழுது, நாம் அதே
கவலைப்படவேண்டியவர்களாக இருக்கின்றோம். நமக்கு
நேரத்தில் பற்றாக்குறை ஏற்படுகிற நிலைமையும்; அரசுக்கு
உதவி செய்ய முடியாத நிலைமை மத்திய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

ஏற்படுகின்ற போதும்தான் நாம், கடன் வாங்கித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றோம். ஆகவே நான், கடன் சுமை ஏறிக் கொண்டே போகின்றது. அதை எப்படியும் குறைக்க வேண்டும் என்று சொன்னால் நாம் கடன் வாங்குகின்ற நிலையிலிருந்து தப்பிக்க வேண்டும். கடன் வாங்காமல் இருந்தால்தான் கடன் பளுவும் ஏறாது வட்டி செலுத்துகின்ற நிலையும் இராது. நாம் வாங்கும் கடன் மூலதனச் செலவுக்குப் பயன்பட்டால் அது உள்ளபடியே நலன் பயக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டக் கூடியதாக அது அமையும். ஆனால் வருவாய் செலவினம் அதிக பற்றாக்குறை இருக்கக்கூடிய நிலையில், அரசு பெறும் கடன், வருவாய் செலவினத்திற்குப் பயன்படுத்தப் பட்டால், அது நல்ல நிதிநிலை அறிக்கையை உருவாக்காது என்பது உண்மைதான். நம் வருவாய்க் கணக்கில் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும், தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதற்கான முயற்சிகளிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், பல்வேறு துறைகளை அணுகி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், வருவாய் செலவினப் பற்றாக்குறையை உடனடியாக, ஒரே கால கட்டத்தில், முழுமையாக குறைத்து விடுவதற்கு முடியுமா என்றால், ஒரேடியாக் குறைத்து விட முடியாது. இந்த அரசு, வருவாய் செலவினத்திற்கானப் பற்றாக்குறையைக் குறைக்கப் பல முனைகளில், பல நடவடிக்கைகளை எடுத்து, நிலையை சீர்செய்ய தக்க முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த முயற்சிகளுக்கு—அந்த முயற்சிகள் எடுக்கும்பொழுது இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவார்களேயானால், அவற்றை எளிதாகச் செய்ய முடியும் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காகத்தான் நிதிக் குழு நிதியை ஒதுக்குகிறது. ஒன்பதாவது நிதிக் குழுவில் ஒன்பது ஆயிரம் கோடி நிதி ஒதுக்கினாலும் தமிழ்நாட்டிற்கு 43 கோடிதான் கிடைத்தது. ஐந்து ஆண்டுகளுக்குத் தான் ஒதுக்குகிறார்கள். அதனுடைய விளைவாக வந்ததுதான் பற்றாக்குறை. தமிழ்நாடு அரசு இதை ஏற்கனவே இந்தியப் பேரரசிடம் வாதிட்டிருக்கிறது. இந்திய அரசு அதை இன்னும் ஏன் தரவில்லை, அது தான் நாங்கள் கேட்கக் கூடியது.



1992 மார்ச் 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அதே கருத்தைத் தான் நாங்களும் வலியுறுத்தி வருகின்றோம், இந்த நிதி நிலை அறிக்கையிலேயும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, 9-வது நிதிக் குழு நமக்குத் தரவேண்டிய நியாயமான அடிப்படையில் அதிகமான ஒதுக்கீடு செய்யலாம், ஆனால் செய்யவில்லை என்பதே நம்முடைய குற்றச்சாட்டு. ஆனால் 9-வது நிதிக் குழு அந்தத் தீர்ப்பை வழங்கி 43 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்கு தருகின்ற போது, அது நமக்கு ஒரு அநீதி இழைக்கப்பட்டது போலத்தான், அந்த அநீதியைத் துடைக்க வேண்டும். நிதிக் குழு ஒரு தடவை ஒரு திட்டத்தைப் போட்டு தந்து விட்டால் அதிலே எந்த ஒரு மாற்றத்தையும் செய்ய மத்திய அரசு முன் வர இயலாது. அடுத்த நிதிக் குழுவிடம் குறைபாடுகளை எடுத்துச் சொல்லி இதை நாம் தீர்த்துக் கொள்ள வேண்டும், ஆனால் நாம் எடுத்துச் சொல்வது மத்திய அரசுக்கு 'டிஸ்கிரீஷனரி பண்ட்' மத்திய அரசு சில பல மாநிலங்களைக் கண்டறிந்து, பல மாநிலங்களினுடைய சூழ்நிலைமைகளைக் கண்டறிந்து நிதி ஒதுக்கீடு செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, நமக்கு ரூ. 43 கோடி தான் நிதிக் குழுவின் மூலம் வந்தாலும் கூட, மத்திய அரசினுடைய, தன்னிச்சையான அடிப்படையில்—உதவிநிதி கொடுக்கப்படலாம். உத்திரப்பிரதேசம் போன்ற சில மாநிலங்களுக்கு ரூ. 400, ரூ. 500, ரூ. 300 கோடி 'டிஸ்கிரீஷனரி பண்ட்' -லிருந்து தன்னிச்சையாக தந்திருப்பதைப் போலவே—தமிழகத்திற்கும் தருமானால். நமக்கு இருக்கிற 400 கோடிக்கு மேலே இருக்கிற பற்றாக்குறை நீக்கப்படும் என்ற முறையிலேதான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டும் வருகிறார்கள், மத்திய அரசு அதைப் பற்றி உரிய நேரத்தில் கவனிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தான், நாம் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகின்றோம்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் 'டிஸ்க்ரஷனரி ஃபண்ட்' 10 சதவீதத்திலே இப்போது திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைப்படி 7½ சதவீதமாகக் குறைத்துவிட்டது என்பதை நிதியமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடிக்கு மேல் இடி என்
பார்கள், அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள், ஏற்கெனவே கொடுத்த 10 சதவீதமே போதவில்லை என்று நாம் வாதாடிக் கொண்
டிருக்கும்போது அங்கே இருக்கிற நிதி நெருக்கடி நிலைமையையொட்டி அந்த 7½ சதவீதமாகக் குறைப்பது என்பது இன்னும் கொஞ்சம் அதிகமான கஷ்டத்தையும், இன்னும் வற்புறுத்தவேண்டிய அவசியத்தையும், அது எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த 7½ சதவீதம் என்பது 'ஸ்பெஷல் ப்ராப்ளம்ஸ் இன் ஸ்டேட்' என்பதில் வருவது, அது ப்ளானிங் கமிஷன் கொடுப்பது. அதிலேயும் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்களா?

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : நான் விளக்க
வேண்டியிருக்கிறது, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு,
பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிற போதெல்
லாம் ஏதோ மத்திய அரசு தமிழக அரசுக்கு மட்டும்,
தமிழ்நாட்டுக்கு மட்டும் ஒரு அநீதி செய்து வருவது போன்று
ஒரு கருத்துத் தொனிக்கும்படியே பேசி வருகிறார். நான் என்ன
சொல்ல வருகிறேன் என்றால் for every allocation of fund, the
Central Government has got a formula. The formula applies through-
out India, irrespective of the State. Whether the Central Govern-
ment has violated any formula as far as Tamil Nadu is concerned
இதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். உத்தரபிரதேசத்
திற்கு ஒரு நீதி செய்யப்பட்டிருக்கிறது, அந்த நீதி தமிழ்நாட்
டுக்கு செய்யப்படவில்லை என்றால், எப்போதாவது அந்த விதி
முறைகளை மத்திய அரசு மீறி இருக்கிறதா என்பதை அவர்கள்





சொல்லிக் காட்ட வேண்டுமே தவிர ஏதோ மத்திய அரசு திட்டமிட்டே தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்து வருகிறது, அநீதி செய்கிறது என்பதைப் போன்று பேசுவது விரும்பத்தகாத ஒன்று. அதுவும் இப்போது இருக்கிற மத்திய அரசினுடைய நல்ல உள்ளத்தைப் பாதிப்பதாக அமையும். அது நாளாவட்டத்தில் தமிழ்நாட்டினுடைய நிதி நிர்வாகத்திற்குச் செய்யப்படுகிற ஒரு அடாத செயலாக இருக்கும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 9வது நிதிக்குழு என்பது ஒவ்வொரு மாநிலத்திற்கும்
எவ்வளவு வருவாய் வரும், எவ்வளவு செலவாகும் என்று கணக்
கிட்டு அந்த அடிப்படையில் ஒதுக்குகிறது. நமக்கு தமிழ்நாடு நிதி
யமைச்சர் அவர்கள் தந்துள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கை
யில் சொல்வது அப்படி கணக்குப் போட்டதே தப்பு என்று.
தமிழ்நாட்டினுடைய உண்மையான நிலைமை 1990-லிருந்து
1995 வரையிலும் என்ன வரும் என்று அவர்கள் பார்த்திருக்க
வேண்டும். அவர்கள் போட்ட கணக்குக்கும், நாட்டிலுள்ள
நிலைமைக்கும் தலைகீழாக இருக்கிறது. தப்பாகக் கணக்குப்
போட்டு எங்களுக்கு அநீதி இழைத்து விட்டீர்களே என்றுதான்
தமிழ்நாடு கேட்கிறதே தவிர இந்திய அரசிடம் பிச்சை கேட்க
வில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர்
அவர்களே, அவர் எதைக் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று
சொன்னால் 9,000 கோடியில் 43 கோடி ரூபாய் என்று அவர்
சொல்லி அதை நிதியமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு
உள்ள அந்தப் புள்ளி விவரம் எனக்குப் புரியவில்லை. அது என்ன
புள்ளி விவரம் ஒவ்வொரு ஆண்டுக்குமா? அல்லது 5 ஆண்
டுக்கா? (குறுக்கீடு) நீங்கள் சொல்வது கரெக்ட் இல்லை. நான்
தேடிப்பார்த்தேன். எதிலேயும் அந்தப் புள்ளி விவரம் இல்லை.
எதிலே இருந்து சொல்கிறீர்கள்? சும்மா இஷ்டத்திற்கு ஏதாவது
புள்ளி விவரம் தருவதா? எதை வேண்டுமானாலும் தந்துவிட
லாமா? சும்மா புள்ளி விவரம் என்று சொன்னால் எப்படி?
நானும் பல புஸ்தகங்களை எடுத்துப் பார்த்தேன். (குறுக்கீடு)

சென்ற ஆண்டு என்பதோடு இந்த ஆண்டு என்பதை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால் நம்முடைய மாநிலத்திற்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் திட்ட ஒதுக்கீடு அதாவது 'அவுட்லே' 9 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு 9.10 சதவீதம் சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகம். சென்ற ஆண்டைக் காட்டிலும் பல மாநிலங்களுக்குத் திட்ட ஒதுக்கீடு பெருமளவு குறைக்கப்பட்டிருக்கிறது. உத்தரப்பிரதேசத்துக்கு மைனஸ் 30.84 சதவீதம்; அருணாச்சல பிரதேசத்திற்கு மைனஸ் 10.29 சதவீதம்; வேறு ஒன்றுக்கு மைனஸ் 30.74 சதவீதம்; நார்த் ஈஸ்டர்ன் கவுன்சிலுக்கு மைனஸ் 12.61; பாண்டிச்சேரிக்கு மைனஸ் 8.24; அதேபோல் பீகாருக்கு மைனஸ் 1.74. இப்படி பல மாநிலங்களுக்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இது அரசியலா? இது நிச்சயமாக அரசியல் கிடையாது. அதிகமாக அவர்களால் நிதியாதாரத்தைத் திரட்ட முடியாது என்ற காரணத்தால்தான் அவர்களுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளுக்கு நான் சொல்கிறேன். முன்பே கணக்குச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி முழு விவரத்தில் போய்க்கொண்டிருந்தால் எப்படி? அவர் சொன்ன அந்த 43 கோடி ரூபாய்க்கு நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். அதன் பிறகு முழு விவரமும் நீங்கள் சொல்லி, இப்படியே இரண்டு பேரும் கேள்விக்குப் பதில் சொல்வது என்று போய்க் கொண்டிருந்தால் விவாதம் முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சென்ற 5 ஆண்டுகளில், அதாவது 1985-லிருந்து 1990 வரை இருக்கிற புள்ளி விவரத்தைக் குறிப்பிட்டு இங்கே நான் சொன்னேன். அதிலே நாம் 5-வது இடம் பெற்றிருக்கிறோம். மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக ஐந்தாவதாக நமக்குத்தான் அதிகமாகத் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் இந்த 1990–91-லிருந்து 1992–93 வரை மூன்று ஆண்டுகளுக்கு உள்ளது பற்றி நான் முன்பே பேசும்போது சொல்லியிருக்கிறேன். மீண்டும், மீண்டும் சொல்கிறேன். அது மத்திய அரசு ஒதுக்குகிற நிதியே அல்ல. Finance Commission is the creation of the Constitution. Article 280 clearly provides that for every five years, the Government has to appoint the Finance Commission. It is the creation of the Constitution. It is not the creation of the Central Government. It is the creation of the Constitution. அவர்கள் சொல்கிறார்கள். இவ்வளவுதான் வரும் என்றால், எப்படி வருகிறது என்றால், அதற்கு என்று விதி முறைகள் இருக்கின்றன. அதை மீறி அவர்கள் செய்ய முடியாது.



திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த 43 கோடிக்கு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அவரே பதில் சொல்வார். அந்த 43 கோடியைப் பற்றி எதிர் கட்சித் தலைவர் பதில் சொல்லியிருக்கிறார். நிதியமைச்சரும் உங்களுடைய கருத்தை ஏற்றிருக்கிறார். அவர் பதில் சொல்வார்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் எல்லா புத்தகத்தையும் தேடிப்பார்த்துவிட்டேன்: இவர் சொல்கின்ற புள்ளி விவரம் இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் எனக்கு மிகுந்த நம்பிக்கையும், மரியாதையும் உண்டு. அவர் சொல்வது திட்டக் குழுவினுடைய ஒதுக்கீடு. சென்ற ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை இந்த அரசின் சார்பிலே இங்கே தந்தார்கள். அந்த நிதிநிலை அறிக்கை என்னிடத்திலே இருக்கிறது. அதிலே பாரா 7-ல் இருக்கிறது.

திட்ட வருவாய் மானியம் குறித்த ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தமிழ் நாட்டிற்கு மனநிறைவுள்ளதாக அமையவில்லை என்பது மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1990–95 ஆம் ஆண்டுக்கால அளவிற்கு, திட்ட வருவாய் மானியங்களாக ரூபாய் 9,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ் நாட்டிற்கு வெறும் ரூபாய் 43.79 கோடி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. உபரிகள், பற்றாக்குறை ஆகியவை குறித்து ஒன்பதாம் நிதிக் குழு எடுத்துக்காட்டியுள்ள கணக்கீடுகளும், திட்ட வருவாய்க் கூறுக்கான அதன் கணிப்பும் முழுவதுமாகப் பிழைபட்டுள்ளன என்பது இப்போது தெரியவந்துள்ளது.

ஆகவே கணக்கை கணக்கர் கெடுத்துவிட்டார் என்று சொல்கிறேன். இதிலே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம் எங்கெங்கோ போய் விட்டு மீண்டும் என்னிடத்திலே வந்து சேர்ந்திருக்கிறது. இதைப் பொறுத்து தெளிவாக நான் முதலிலேயே சொன்னேன். நிதிக்குழுவினுடைய பரிந்துரைகள் படி அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. இனிமேல் நிதிக்குழுவின் இடத்திலே போய் நாம் கேட்கமுடியாது. அது முடிந்துவிட்டது. நிதிக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

குழு செய்வது அதைப் பொறுத்தவரையிலே பார்முலா வகுத்துச் செயல்படுவது. அதைப் பொறுத்தவரையில் நிதிக்குழு ஒரு முடிவு எடுத்துள்ளது. மத்திய அரசு அந்த பார்முலா-வின்படிதான் நடக்கிறேன் என்கின்றது. நாம் மத்திய அரசினிடத்திலே கேட்பது அதில் அநீதி இழைக்கப்பட்டதன் காரணமாக மத்திய அரசு நமக்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்கின்ற வகைகளிலேயிருந்து ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். திட்ட ஒதுக்கீடாக இருந்த காரணத்தினால்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தியதன் பேரில், அவர்கள் மீண்டும் ஆராய்ந்து சிந்தித்ததன் பேரில் 1,486 கோடி ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து மாறி ரூ. 1,715 கோடி ஒதுக்குவதற்கு வந்திருக்கிறது. காரணம் திட்டக் குழுவினுடைய விருப்பத்தின் அடிப்படையிலே, அது அமைந்ததனால் தான். அந்த வகையிலேதான், மத்திய அரசினை நாம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வேறு பல மாநிலங்களுக்கு உதவி செய்து இருப்பதைப்போல், நமக்கும் நிதி கிடைக்கப்பெற்றால் ஓரளவுக்கு நமக்கு இருக்கிற நிதி நெருக்கடி நிலை தீரும் என்ற எண்ணத்திலேதான், மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லப்பட்டு வருகிறது.

1990-91—இல் தமிழ்நாட்டில் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு ரூ. 300 என்று இருந்தது. 1991-92-லிருந்து ரூ. 331 ஆக உயர்ந்துள்ளது. 1992-93-ல் இது 362 ரூபாய் ஆக உயர்ந்து உள்ளது. தமிழ்நாட்டில் நபர் வாரி திட்ட ஒதுக்கீடு, சராசரியை விடக் குறைவாக உள்ளது. இதனை உயர்த்த வேண்டும் என்று பெருமுயற்சி செய்துள்ளோம். நாம் நம்முடைய செலவினங்களை ஆராய்ந்து மாற்றங்கள் செய்தாக வேண்டியிருக்கிறது. இதற்கென கூடுதல் நிதி திரட்டவேண்டும். மேலும், மத்திய அரசிடம் இருந்து கூடுதல் நிதியுதவி பெற முயற்சிகள் அனைத்தையும் நாம் செய்து வருகிறோம். நம்முடைய செலவினங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை நாம் கவனிக்கவேண்டும். திட்டம் சாராத செலவினங்களையும் நாம் கட்டுப்படுத்தியாக வேண்டியிருக்கிறது. இதுவும் திட்டத்தில் சாராத செலவினங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் அடங்காதவைகள் 'நான்-பிளான், நான் டெவலப்மெண்ட்' மீது நாம் அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. இவற்றை எல்லாம் குறைக்க வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. நம் திட்டத்தில் திட்டம் சாராத செலவினங்கள் சற்று அதிகமாகவே இருக்கின்றன.

1989-90 கணக்கீட்டின்படி, தமிழ்நாடு நபர் வாரி திட்டம் சாராத செலவினங்கள், ரூபாய் 749 ஆகும். கர்நாடகத்தில் ரூ. 714 ஆகும். ஆந்திரப் பிரதேசத்தில் ரூ. 691 ஆகும். கேரளாவில் ரூ. 802 ஆக உள்ளது. எனவே, திட்டத்தில் இல்லாத செலவினங்கள் மீது நாம் அதிக கவனம் செலுத்தி கட்டுப்படுத்துவதில் ஈடுபடவேண்டியிருக்கிறது. மேலும் வளர்ச்சித் திட்டங்கள் சாராத 'நான்-பிளான்' செலவினங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில், 1985-90 ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரப்படி, 20.2 என்ற அளவில் உயர்ந்துள்ளது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, சற்று அதிகமாகவே இருக்கிறது. உதாரணமாக கர்நாடகத்தில் 11.9 சதவிகிதம் ஆகவும், ஆந்திரப் பிரதேசத்தில் 18·5 சதவிகிதம் ஆகவும், கேரளத்தில் 21.6 சதவிகிதமாகவும், மகாராஷ்ட்டிராவில் 11.7 சதவிகிதமாகவும் இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு திட்டம் சாராத வளர்ச்சிப் பணிகளுக்கு இல்லாத செலவினங்களின் உயர்வை நாம் ஓரளவுக்கு தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. எனவே, இந்தச் செலவினங்களின் உயர்வைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பு முயற்சி செய்தாக வேண்டும். வேறு கண்ணோட்டத்தில் இதனை கவனித்தோம் என்றால், வளர்ச்சிப் பணிகளுக்கு என எவ்வளவு தொகை ஒதுக்க இயலும் என்பதும் விளங்கும். அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களுடைய ஓய்வூதியங்களுக்கு என ஒதுக்கப்படும் தொகை மொத்தச் செலவினங்களில் 46.54 சதவிகிதம் ஆகும். மொத்தச் செலவினத்தை நாம் கணக்கிட்டுப் பார்த்தால், அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு 46.54 சதவிகிதம் ஆகிறது. மானியங்கள் மற்றும் இழப்பீடுகளுக்கு வழங்கப்படும் தொகை 24.69 சதவிகிதம் ஆகிறது. வட்டிக் கட்டுவதில் மட்டும் 11.68 சதவிகிதம் ஆகிறது. இம்மூன்று இனங்களை மட்டும் கூட்டினால் 82.91 சதவிகிதம் போய்விடுகிறது. மீதமுள்ள 17.09 சதவிகிதத்தில் அரசு நிர்வாக இயந்திரங்களின் மேல் செலவு 9.10 சதவிகிதம் ஆகிறது. கடைசியாக மக்களுக்கு நேரடியாக பயன்தரக் கூடியவைகள் வருவாய்க் கணக்கிலே 7.99 சதவிகிதம்தான் இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 90 சதவிகிதம் நேரடியாக மக்களுக்கு பயன்படாத அளவுக்கு, வசதியில்லாத அளவுக்கு, கிட்டத்தட்ட 10 சதவிகிதம் அளவுக்கு மட்டுமே பயன்படுகின்ற அளவுக்கு இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதுதான் நமக்கு அதிகக் கவலையைத் தருகிறது. ஆகவே, இதிலே சில சீர்திருத்தம் செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆக, செலவழிக்கப்படுகின்ற பணங்கள் மக்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களுக்கு உருவான பயன்களை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அரசு அலுவலர்களுக்கு மற்றும் ஓய்வூதியங்களுக்காக ஒதுக்கப்படக் கூடிய தொகையை வழங்க இயலாத அந்தச் சூழ்நிலையில் அரசு அலுவலர்களின் எண்ணிக்கை இந்த அளவுக்கு இருக்க வேண்டுமா என்பதையும்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1992 மார்ச் 16] பிற்பகல் 12-30.

நாம் கவனத்துடன் ஆராயவேண்டியிருக்கிறது. அலுவலர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி அவர்களுக்கு ஊதியம் வழங்குவதாலே மக்களுக்கு நேரடியாகப் பயன்தரும் நிதிநிலையை ஏற்படுத்த முடியாத சூழ்நிலையை நாம் தவிர்த்தாக வேண்டும். எனவே, மேற்கொண்டு அரசு அலுவலர்களின் எண்ணிக்கையை உயர்த்தாமல் நாம் கண்காணிக்க வேண்டும். இருப்பவர்களை யாரையும் நாம் வேலையை விட்டு போகச் சொல்ல முடியாது. கூடுமானவரை கூடுதலாகப் பணியாளர்களை நியமித்து அதிகச் செலவுக்கு ஆளாகாத அளவுக்குத்தான் நாம் கடைப்பிடிக்க முடியும். உபரியாக உள்ள அலுவலர்களைக் கொண்டு புதிய திட்டங்களுக்குப் பயன்படுத்துகின்ற முயற்சியில் நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். மானியங்கள் மற்றும் இழப்பீடுகள் என்கிற தலைப்பில் 24.69 சதவிகிதம் செலவிடப் படுகிறது. இதற்கென ரூ. 1,791 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மானியங்களுக்காகவும், இலவசத் திட்டங்களுக்காகவும் நேரடியாகப் போய் இந்தத் தொகை மட்டும் சென்றடைகின்றது. இழப்பு மானியங்கள் உணவு விநியோகத்திற்கு மட்டும் ரூ. 503 கோடி ஆகிறது. விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் அளிக்க ரூ. 350 கோடி நாம் இந்த ஆண்டுத் திட்டத்திலே ஒதுக்கியிருக்கிறோம். மற்றும் இலவசத் திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவில் அமைகின்றன. இந்த அளவுக்கு உதவி மானியங்கள் வழங்குவதால், நம்முடைய வளர்ச்சித் திட்டங்களும், மேம்பாட்டுத் திட்டங்களும் தாம் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, உதவி மானியங்களும், இலவசச் சலுகைகளும், மற்றவைகளும் அளிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், அவை யாருக்கு என்று நாம் பார்க்கின்றபோதுதான், நாம் சிந்தித்து சிலபல முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கிறது. ஏழையெளியவர்கள் காப்பாற்றப்படவேண்டும். வசதியற்றவர்கள், வாய்ப்பற்றவர்கள் காப்பாற்றப்படவேண்டும். நாம் உதவி செய்யாவிட்டால் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாமல் இக்கட்டான நிலைக்கு ஆளாவார்கள் என்கிற நிலையில் இருப்பவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் சலுகைகளை எல்லாம் ஓரளவுக்குத் தரவேண்டியதுதான். ஆனால், அப்படி இல்லாமல் வசதிபடைத்த மற்றவர்களுக்கும் தருகின்ற அளவுக்கு அவை இருக்கக் கூடாது. வறுமைக் கோட்டுக்குக் கீழே தமிழகத்தைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு 32 பேர்கள் இருக்கிறார்கள் என்றாலும் நாம் கொடுக்கின்ற சலுகைகள் 75 சதவிகிதத்தினருக்கும் மேல் போய்ச் சேர்கின்றன. இவைகளை எல்லாம் நாம் ஓரளவுக்கு கவனம் செலுத்தினால் அதிலிருந்து வருகின்ற ஓரளவு தொகையை, நாம் திரும்ப ஏழையெளியவர்களைக் காப்பாற்ற அல்லது வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பி



னர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டுகின்ற சில மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் செலவழிக்க இயலும். இல்லையென்றால், இதே நிலைமை தான் நீடிப்பது என்றால், எவ்வளவுதான் வருமானம் வருவாய்க் கணக்கில் வந்தாலும், அதில் கிட்டத் தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு தான் பலன் கிடைக்குமே தவிர, 6 ஆயிரம் கோடி ரூபாய் நேரிடையாகப் பலன் தராத நிலை தான் இருக்கும். ஆகவே, அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்தால்தான், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும்விட, தமிழகத்தை முன்னணிக்கு கொண்டு வர வேண்டுமென்று எண்ணுகின்ற அளவுக்கு அது பெருதவியாக அமையும். ஆகவேதான், இந்த நிலைமைகளை எல்லாம் நான் விளக்கிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

அதுமட்டுமல்லாமல், அரசு இயந்திரங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகளை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். வாகன வசதிகள், பயணப் படிகள், வாடகை, அலுவலக நிர்வாகச் செலவு முதலியவற்றைக் குறைப்பதில் மிகுந்த கவனத்தை எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த வகைகளில் எல்லாம் சிக்கனம் வேண்டுமென்று இங்கே எடுத்துக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஆகவே, சிக்கன நடவடிக்கைகளை எந்த அளவுக்கு இருக்கின்ற வளர்ச்சித் திட்டங்களுக்குப் பாதகம் இல்லாத அளவுக்கு, திட்ட முயற்சிகளுக்குப் பாதகம் இல்லாத அளவுக்கு, நாம் கடைப்பிடிக்க வேண்டுமோ, அந்த அளவுக்குக் கடுமையாக நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஒவ்வொரு துறையிலும் பத்து சதவிகிதம் அளவுக்காவது செலவினத்தைக் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிக்கையும்விட்டு, சிக்கன நடவடிக்கைகளுக்கு ஆக்கம் தேடியிருக்கிறார்கள்.

மேலும், நிதி ஆதாரங்கள் பற்றிய சில விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1992–93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மிகச் சிறப்பாக அமைந்து விட்டது என்பதைக் கண்டு, மனம் பொறாத சிலர், ஏதாவது குறை கூற இயலுமா என்ற முறையில் மிக ஆழ்ந்த ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு ஆக்கபூர்வமான கருத்துக்கள் கிடைக்கின்றனவா என்றால், அவையும் கிடைத்ததாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பல புள்ளி விவரங்களை எடுத்துக்கூறி, நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் போது

மானதாக இல்லை என்று கூறினார்கள். நிதிநிலை அறிக்கை என்பது, நிதி அமைச்சர் உரையை ஒட்டி வரும் ஆண்டுக்கான நிதி ஆதாரங்களைச் சுருக்கமாகக் கொடுக்கக்கூடிய ஒரு அறிக்கைதான் (Annual Financial Statement)—ஆண்டு நிதிநிலை அறிக்கையாகும். இந்த அறிக்கையில் செலவினங்களைப் பொறுத்தவரையில் திட்டம் மற்றும் திட்டம் சாராத ஒதுக்கங்கள் ஒட்டுமொத்தமாகப் பல தலைப்புகளுள் காட்டப்பட்டிருக்கின்றன. நம்முடைய முயற்சி, திட்டம் சாராத செலவினங்களைக் கட்டுப்படுத்துவது, திட்டத்திற்கான செலவினங்களை உயர்த்த வேண்டுமென்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் திட்டம் மற்றும் திட்டம் சாராத செலவினங்களை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு, போதுமான அளவுக்கு, உயர்த்தவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது சரியான வாதமாக இராது. நம்முடைய நோக்கமே, திட்டத்தில் அடங்கியுள்ள புதுப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்துவிட்டு, அதில் கூடுதல் ஒதுக்கீடு வழங்குவதுதான். திட்டத்தைப் பொறுத்தவரை, நடப்பு ஆண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு ரூபாய் 1,600 கோடியாகும். வரும் ஆண்டுக்கு, அதாவது. 1992-93ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு ரூபாய் 1,751 கோடியாகும்' ஒவ்வொரு துறையிலும் கணிசமான அளவுக்கு அதிக ஒதுக்கங்கள், திட்ட மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வரவர்கள் கூடுதல் திட்ட ஒதுக்கீடான ரூ.1,751 கோடியை வாதிட்டுப் பெற்றதன் அடிப்படையில்தான் இந்தக் கூடுதல் ஒதுக்கங்கள் செய்ய முடிந்தது என்று நான் இங்கே திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஒதுக்கங்களின் விவரங்கள் சிலவற்றை இங்கே தெரிவிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கு ரூ. 187 கோடியே 53 இலட்சம் ஒதுக்கீடு 1991–92இல் இருந்தது. ஆனால், 1992–93இல் ரூபாய் 215 கோடியே 75 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசனத்திற்கு ஏற்கெனவே ரூ. 99 கோடியே சில்லரை ஒதுக்கப்பட்டது. இப்போது அதைவிடக் கூடுதலாக கிட்டத்தட்ட ரூ. 30 இலட்சம் வருகின்ற அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மின்சார உற்பத்திக்கு ரூ. 425 கோடியே 65 இலட்சமாக இருந்தது. . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லி முடிக்கட்டும். இன்னும் பல துறைகள் பற்றிச்சொல்ல இருக்கிறார். (குறுக்கீடு) அவர் முடிக்கட்டும். உட்காருங்கள். அவர் முழு



மையாகச் சொல்லி முடிக்கட்டும். அதற்குள் எழுந்தால் சரியல்ல. (குறுக்கீடு) மற்ற துறைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறார். உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முழுக்கச் சொல்லி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறியும் வினாவாக இருந்தாலும் சரி, அறியாத வினாவாக இருந்தாலும் சரி, ஐய வினாவாக இருந்தாலும் சரி கேட்கலாம். நான் படித்து முடித்து விட்டால் நிலைமை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே புரியும்.

மின்சார உற்பத்திக்கு சென்ற ஆண்டு ரூ. 425 கோடியே 65 இலட்சம், இந்த ஆண்டு ரூ. 458 கோடியே 90 இலட்சம். தொழில் வளர்ச்சிக்கு சென்ற ஆண்டு ரூ. 106 கோடியே 42 இலட்சம். இந்த ஆண்டு ரூ. 409 கோடியே 68 இலட்சம். போக்குவரத்து மற்றும் சாலைகளுக்கு சென்ற ஆண்டு ரூ. 87 கோடியே 16 இலட்சம்; இந்த ஆண்டு 125 கோடியே 94 இலட்சம். கல்விக்கு சென்ற ஆண்டு ரூ. 47 கோடியே 97 இலட்சம்; இந்த ஆண்டு ரூ. 70 கோடியே 81 இலட்சம். மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கு சென்ற ஆண்டு ரூ. 57 கோடியே 21 இலட்சம் ; இந்த ஆண்டு ரூ. 65 கோடியே 16 இலட்சம். குடிநீர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறத்திற்கு சென்ற ஆண்டு ரூ. 315 கோடியே 23 இலட்சம் ; இந்த ஆண்டு ரூ. 325 கோடியே 33 இலட்சம். சமூக நலன் மற்றவற்றுக்கு சென்ற ஆண்டு ரூ. 89 கோடியே 17 இலட்சம்; இந்த ஆண்டுக்கு ரூ. 92 கோடியே 5 இலட்சம்.

பிற்பகல் 12-40

இவ்வாறு பொதுவாக அனைத்துத் துறைகளிலும் கணிசமான அளவுக்கு உயர்ந்த ஒதுக்கீடுகளை வரும் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டில் வழங்கியுள்ளோம். இங்கே பேசிய உறுப்பினர்கள் ஒதுக்கீடுகளில் குறைவு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளனர். அந்த வாதங்கள் முற்றிலும் தவறானவை. ஒரு சில பத்திரிகைகளில் நிதி ஒதுக்கீட்டில் தொய்வு ஏற்பட்டுவிட்டது என்று ஒரு உண்மைக்குப் புறம்பான வாதத்தை எழுப்ப முயற்சி செய்திருப்பதைக் கண்டு நான் வியப்பு அடைகிறேன். குறிப்பாக இதில் பல தவறான விவாதங்கள் தரப்பட்டுள்ளன.

முந்தைய ஆட்சியில் 1990–91ல் ஊரக வளர்ச்சிக்கான திட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ. 178 கோடியும், திருத்த மதிப்பீட்டில் ரூ. 324 கோடியும் என்ற அளவில் உயர்ந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு உயர்வு ஏற்பட்டுள்ளது என்றும், நடப்பாண்டில் இந்த அளவுக்கு உயர்வு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

இல்லை என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 1990—91ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசுத் திட்டமான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் நேரடியாக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போய்விடும் என்றும், மாநில அரசின் நிதி நிலை அறிக்கையில் சேராது என்றும் ஒரு நிலை இருந்தது. திருத்திய மதிப்பீட்டில் இவைகளை மாற்றி அரசின் கணக்குகளில் கொண்டுவரும் முறை ஏற்படுத்தப்பட்டது. எனவே திருத்திய மதிப்பீட்டில் காணப்படும் உயர்வு வெறும் கணக்கு மாற்றத்தினால் ஏற்பட்டது. மத்திய அரசிடமிருந்து பெற்ற ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி உதவி நீங்கலாக உயர்வு ஏதும் இல்லை. எனவே பொருத்தமில்லாத புள்ளி விவரங்களைக் கொடுத்து, ஏதோ இந்த ஆட்சியில் நிதி ஒதுக்கங்களில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற ஒரு வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. மேலும் ஒரு ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வழங்கும்போது, நிதி ஒதுக்கங்கள் செய்யப்படுகின்றன. திருத்திய மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கங்கள் நிதிநிலை அறிக்கையில் செய்யப்படும் ஒதுக்கங்களோடு ஒப்பிட்டுப்பார்ப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஆகவே திட்ட ஒதுக்கீட்டுக்கும் திருத்திய மதிப்பீட்டுக்கும் வேறுபாடு இருக்கிறது. ஒப்பிடுகிறபோது திட்ட மதிப்பீட்டோடு திட்ட மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) ஆகவே திட்ட ஒதுக்கீட்டை ஒப்பிடும்போது போன ஆண்டு திருத்த மதிப்பீட்டோடு இந்த ஆண்டு திட்ட மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்கும். திட்ட ஒதுக்கீட்டடோடு திட்ட மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். திருத்திய மதிப்பீட்டோடு திருத்திய மதிப்பீட்டை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் அதில் வருவாய்த்துறையையும் கவனிக்கவேண்டும், செலவினத் துறையினையும் கவனிக்கவேண்டும். அந்த வகையில் பார்த்தால் எது எதற்கு, எவ்வளவு செலவழிக்கவேண்டுமென்ற அளவுக்கு அந்த ஆண்டுக்கான தேவைப்படும் அளவை கருத்தில் கொண்டு தான் நாம் நிறைவேற்றவேண்டும்.

சில இடங்களில் சில வகைகளுக்கு, திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறபோது அந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற சூழ்நிலையில்தான் பார்க்கவேண்டுமே தவிர, ஆண்டுக்காண்டு ஒதுக்கிக்கொண்டே போக வேண்டியது அவசியம் இல்லை. சில இனங்களில் அது குறைக்கப்படவேண்டியது அவசியம், சில இனங்களில் உயர்த்தவேண்டியது அவசியம் என்று இருக்கும் ஒட்டுமொத்தமாகத்தான் இதைக் கவனிக்கவேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் மீது மத்திய அரசு எந்தவிதமான உதவியும் அளிக்கவில்லை என்றும் அரசு இதுகுறித்து என்ன



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நடவடிக்கை எடுக்கப்போகிறது என்றும் இங்கே பேசிய சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசிடம் இந்த அரசு பல்வேறு கோரிக்கைகள் வைத்திருந்தபோதிலும், அந்த அளவுக்கு தொகைகள் கிடைக்கவில்லை என்றால் இந்த அரசு என்ன செய்யப்போகிறது என்றும் கேட்கப்பட்டது. மத்திய அரசிடம் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் பல வகையானவை. தற்போதுள்ள நெருக்கடியான நிதிநிலையில், அதிலும் குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்றபோது ஏற்கெனவே இருந்த கடுமையான நிதி நெருக்கடியை ஈடு கட்ட ஒரு சிறப்பு நிதி உதவியை அளிக்கவேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தி கேட்டுக் கொண்டது. தொடர்ந்து கேட்டுக் கொண்டேதான் வருகிறது. நடப்பாண்டு இறுதியில் மட்டும் ரூ. 401 கோடியே 34 லட்சம் இறுதிப் பற்றாக்குறை இருப்பதால் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் கட்டாயம் வழங்கவேண்டுமென்று நான் முதலிலே குறிப்பிட்ட மாதிரி மீண்டும் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய நிதியமைச்சர் அவர்களுக்குக் கடிதங்கள் மூலமாக தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில் மத்திய அரசு நடப்பு ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் சிறப்பு நிதி உதவி அளிக்கும் என்று நாம் எதிர் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டும் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவுகள் சம்பந்தமாக சில கோரிக்கைகளை நாம் மத்திய அரசிடம் எடுத்து வைத்துள்ளோம். பல ஆண்டுகளாக வற்புறுத்தியிருக்கிறோம். அது தொடர்ந்து வற்புறுத்தப்படும். அது மட்டுமல்லாமல். அண்மையில் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள சில அறிவிப்புகளின் அடிப்படையிலும் சில கோரிக்கைகளை நாம் எழுப்பியுள்ளோம். மாநில அரசின் நிதியாதாரங்களுக்காக மத்திய அரசிடம் உரிமைக்குரல் எழுப்புவது இந்த அரசின் கடமையாகும். குறிப்பாக நிறுவன வரியில் ஒரு பகுதியை சரக்கு ஒப்படை செய்வதற்கான புதிய திட்டம், 9-வது நிதிக்குழு வழங்கியுள்ள திட்ட வருவாய் ஆகியவை. மாநிலங்களில் உள்ள குறைபாடுகள்; காட்கில் கோட்பாட்டில் உள்ள சில அம்சங்கள் சிறு சேமிப்பில் தொய்வு ஏற்படும் அபாயம் போன்றவைகள் இதில் அடங்கும்.

எதிர்க்கட்சி வரிசையில் உள்ள மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலரும் இந்தக் குறைபாட்டை சுட்டிக் காட்டி, இது நிவர்த்திக்கப்படவேண்டுமென்ற கருத்துக்களையும் இங்கே வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது பொதுவாக மத்திய அரசுக்கும் நமக்கும் இருக்கிற சண்டையைப் பொறுத்தல்ல. வாதப் பிரதிவாதங்களைப் பொறுத்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

அல்ல, நமக்குச் சில பல தேவைகள், உரிமைகள் இருக்கின்றன என்பதை வலியுறுத்தத்தான் இவைகள் எடுத்துச் சொல்லப் படுகின்றன. இந்தப் பிரச்சினையில் எடுத்துக் கூறும் போது, அனைத்து மாநிலங்களின் சார்பாக தமிழ்நாடு சிறப்பு பிரச்சினைகளை எடுத்துக் கூறுவது இந்த அரசின் கடமையாக இருக்கிறது. இதனை எடுத்துக் கூறுவது தவறு என்ற வாதம் முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

பிற்பகல் 12-45

மத்திய அரசிடம் நாம் எடுத்து வைத்திருக்கும் மூன்றாவது வகையான கோரிக்கை, சில குறிப்பிட்ட திட்டங்களைப் பற்றியதாகும், இவைகள் தமிழ்நாடு கடற்கரை எல்லைப் பகுதி மேம்பாட்டுப் பணிக்கான திட்டத்திற்கு நடப்பாண்டு திட்டக்குழு வழங்கிய ரூ. 15 கோடி நிதி ஒதுக்கீட்டைப் போலவே, வரும் ஆண்டில் நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் அடங்கும். அதோடு வேறு பல வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசிடம் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறோம். குறிப்பாகப் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் இதர நாடுகளிடமிருந்து பெறும் உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களைப் பற்றிப் பல கோரிக்கைகளை நாம் எடுத்து வைத்திருக்கிறோம். இங்கே பேசிய சில உறுப்பினர்கள் மற்றும் சில பத்திரிகைகள், தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீட்டிற்கு உலக வங்கியையும், மற்றும் இதர பன்னாட்டு நிதி நிறுவனங்கள் போன்ற அமைப்புகளையும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதனை விமர்சித்துமிருக்கிறார்கள். பன்னாட்டு நிதி நிறுவனங்கள் போன்ற அமைப்புகளை நம்பியிருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. மாநில அரசுகளைப் பொறுத்த வரையில் நேரிடையாக உலக வங்கி அல்லது இதர பன்னாட்டு நிதிநிறுவனங்களை அணுகி நிதியுதவிகளைப் பெற இயலாது. இந்த மாதிரியான நிதி உதவிக்கு மத்திய அரசை அணுகி, மத்திய அரசும், மாநில அரசும் கூட்டாக பன்னாட்டு நிதி நிறுவனம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் கலந்து நிதியுதவி பெறப்படுகிறது.

மேலும் மத்திய அரசு, உலக வங்கி அல்லது பன்னாட்டு நிதி நிறுவனங்களை அணுகி சிறப்புக் கடன் பெறும்போது சில நிபந்தனைகளுக்குட்பட்டு இவ்வாறான கடன்களைப் பெறுகிறது. மாநில அரசு சில திட்டங்களுக்கு மட்டும்தான், சில ப்ராஜெக்ட்டு களுக்கு மட்டும்தான் இவ்வாறான நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியைப் பெறுகிறது. ஆக இவை இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது, மேலும் நமக்கு நேரிடையாக அந்நியச் செலாவணி கிடைப்பது கிடையாது, நம்முடைய திட்டங்களுக்கென பன்னாட்டு நிதிநிறுவனங்கள் மத்திய அரசுக்கு உதவி



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

செய்கின்றன, அதன் அடிப்படையில் மத்திய அரசு நமக்கு எப்போதும் போல வழங்கக் கூடிய மத்திய அரசின் உதவி, சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் போல வழங்குகிறது. உலக வங்கியாக இருந்தாலும் சரி, பன்னாட்டு நிதிநிறுவனங்களாக இருந்தாலும் சரி, வேறுபல நாடுகளாக இருந்தாலும் சரி, நிதியுதவியை நேரிடையாக எந்த மாநிலத்திற்கும் எந்த நாடும், எந்த நிறுவனமும் தராது, மத்திய அரசுதான் அதை வாங்கி மத்திய அரசு வைத்துக்கொண்டுள்ள சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் என்கிற திட்டத்தின் கீழ்தான் வழங்கும். குறிப்பாக ஒரு திட்டத்திற்கு பத்து கோடி ரூபாய் செலவாகிறது என்றால் ஏறத்தாழ ஏழு கோடி ரூபாயை அந்நியச் செலாவணியாக மத்திய அரசுக்கு பன்னாட்டு நிதி நிறுவனங்கள் தருகின்றன. அந்த ஏழு கோடியை மத்திய அரசு ரூபாய் கணக்கில் நமக்கு வழங்குகிறது. ஆகவே, மத்திய அரசின் நிதி உதவி எப்போதும் போல வழங்குகிற மத்திய நிதியுதவியின் அடிப்படையிலே அமைகின்றது. மத்திய அரசு வழங்கக் கூடிய தொகை 30 சதவீதம் மானியமாகவும், 70 சதவீதம் கடனாகவும் இருக்கிறது. அந்தக் கடனிலே இருக்கிற வசதி என்னவென்றால். அதை 15 ஆண்டுகளிலே நாம் திருப்பிக் கட்டினால் போதும், இன்னுமொரு வசதி என்னவென்று கேட்டால், வட்டி 10.75 சதவீதம்தான். ஆகவே 10.75 சதவீதத்திற்கு எந்த வங்கியிலேயிருந்தும், எந்த தனிப்பட்ட லேவா தேவிக்காரர்களிடமிருந்தும் நாம் வாங்க முடியாது. யாரிடத்திலும் வாங்க முடியாது. அது மட்டுமல்லாமல் 15 ஆண்டுகள் இடைவெளி வேறு கிடைக்கிறது. உலக வங்கியிடத்திலே, வேறு பல இடத்திலேயிருந்து நிதியுதவியைப் பெற்று, அதை மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகிறது. ஆக நம்முடைய தேவைகளை நிறைவேற்ற அது பெரிதும் பயன்படுகிறது என்கிற காரணத்தால்தான், அப்படிப்பட்ட நிதிகளை நாடுகிறோம். சென்னை மேம்பாட்டு நிதி திட்டமாக இருந்தாலும் சரிதான், குடிநீர் திட்டமாக இருந்தாலும் சரி, ஏழையெளியவர்களுக்கெல்லாம் குடிசைகள் கட்டும் திட்டமாக இருந்தாலும் சரி, வேளாண்மை பெருக்குத் திட்டமாக இருந்தாலும் சரிதான், நீர்ப்பாசன திட்டங்களைச் செம்மைப் படுத்துவதற்கான திட்டமாக இருந்தாலும் சரிதான், உலக வங்கியினுடைய உதவி வேண்டுமென்று கேட்பதற்குக் காரணமே நமக்கு நன்மைகள் என்ற அடிப்படைகள் இருப்பதால்தான். சில முக்கியமான மாநிலங்கள் இவ்வாறான நிதியுதவியைப் பெறுவதில் நல்ல முக்கிய முன்னேற்றம் காட்டியிருக்கின்றன. இந்த பட்டியலில் தமிழ்நாடும் அடங்கும். இதனை மேலும் வலுப்படுத்தும் முயற்சியாகத்தான், இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திட்டங்களை திட்ட அறிக்கை வடிவில் தயாரித்து கூடுதல் நிதியுதவியைப் பெறுவதில் சிறந்த முயற்சி எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஆக உலக வங்கியையும், மற்ற

நிறுவனங்களையும் கடன் கேட்க வேண்டாம் என்று சொன்னால் உள்ளூரிலே இருக்கிறவர்களிடம்தான் கடன் வாங்க வேண்டும். யார் நமக்கு உதவி செய்கிறார்கள்? தொழிற்சாலைகள் வேண்டும், வசதிகள் வாய்ப்புகள் வேண்டும் என்று சொல்லும்போது, இந்த நிதியுதவி எங்கேயிருந்து வந்தால் என்ன என்பது மட்டுமல்லாமல் நமக்கு அதிலே சலுகைகள் வேறு இருக்கின்றன. இதைப் பெற வேண்டிய அவசியத்திலே தான் நாம் இருக்கிறோம், ஆகவேதான் மத்திய அரசு புதிய பொருளாதார நடவடிக்கையின் அடிப்படையிலே ஏற்றுமதி, இறக்குமதியைப் பொறுத்தவரையில் சில தளர்வுகளை ஏற்படுத்தித் தாராளமாக வைத்திருப்பதற்குக் காரணமே இங்கேயிருப்பவர்களுடைய பணத்தை பயன்படுத்துவது மட்டுமல்லாமல், இங்கேயிருப்பவர்கள் செய்கிற முயற்சியோடு கூடுதலாக அன்னிய நாட்டிலே இருக்கிற இந்தியர்கள் முதலீடு செய்வதால் சில அன்னிய நாட்டு மூலதனங்கள் இங்கே வரும் போது நாம் வளர முடியும் என்பதுதான்.

பிற்பகல் 12–50

இப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் சிங்கப்பூர் வளர்ந்து இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே தான் விழுந்துபட்ட ஜப்பான் இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு அமெரிக்காவினுடைய தயவிலும் அமெரிக்காவினுடைய முதலீட்டினுடைய அடிப்படையிலும் தன்னுடைய நிலையினை மிக நன்றாக வளர்த்துகொண்டு இருக்கிறது என்பதை நாம் காணுகின்றபோது புதிய பொருளாதாரக் கொள்கை நமக்குப் பயன்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையைக் கொண்டதன் காரணமாகத்தான், இப்போதுகூட 2 ஆயிரத்து சில்லரை கோடி ரூபாயாக இருந்த அந்நியச் செலாவணி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள், திரு மன்மோகன் சிங் ஆகியோர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக இப்போது கிட்டத்தட்ட ரூ. 11 ஆயிரம் கோடிக்கு வருகின்ற அளவுக்கு நிலமை சீர்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை ஓரளவுக்கு உதவியாக இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ. 751 கோடியில் தொய்வு ஏற்பட்டுவிடும் என்ற ஐயப்பாடு ஏற்படச் தேவையில்லை. புதிய திட்டங்களுக்காக முயற்சிகளை இப்போதே எடுத்தால் தான், 1992–93 ஆம் ஆண்டில் நாம் திட்ட ஒதுக்கீட்டில் உயர்வு காண இயலும். இதற்கான வழிவகைகளைக் காண்பதற்கான முயற்சிகளையும் இப்போதிருந்தே இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு சேமிப்பு திட்டத்தைப் பொறுத்தவரையிலும், வருமான வரி தள்ளுபடி இருந்ததை மத்திய அரசு நீக்கிவிட்டு இருக்கிறது. நமது நிதி ஆதாரங்களைத் திரட்ட இருக்கக்கூடிய





பல வழிகளில் சிறு சேமிப்பு ஒரு சிறந்த ஏற்பாடாக இருக்கிறது. மத்திய நிதிநிலை அறிக்கையில், தற்போது வருமான வரி சட்டப் பிரிவுகளில் 80-எல் 80-சிசிஏ என்று வழங்கப்பட்ட சலுகைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் சிறு சேமிப்பு திட்டத்தின் மூலம் நாம் நிதி திரட்டுவதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டி, இதைத் தள்ளுபடி செய்தது தவறு என்று சுட்டிக்காட்டியது மட்டுமல்லாமல், மத்திய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாநில அரசின் சார்பாக கடிதங்கள் எழுதி, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

மத்திய அரசு நமக்கு வழங்கும் நேர்முக வருவாயில் ஓரளவுக்கு நமது பங்கு உயர்ந்துள்ளது. இதில் சுமார் ரூ. 40 கோடி அளவுக்குத் திட்ட மதிப்பீட்டில் இருந்து உயர்ந்துள்ளது. இந்த நேர்முக வருவாய் உயர்வு நம் பங்கிற்கு கிடைத்த போதிலும் நம்முடைய பற்றாக்குறையை சமாளிக்க இது போதாது. சிறு சேமிப்பின் மூலம் 1988–89-ல் ரூ. 73 கோடி 18 இலட்சம் கடனாகப் பெற்றோம். 1990–91-ல் ரூ. 300 கோடி வளர்ந்தது. சிறு சேமிப்பின் மூலம் 1992–93-ல் 330 கோடி ரூபாய் நமக்குக் கடனாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வருமான வரிச் சலுகைகள் ரத்து செய்யப்பட்டால், சிறு சேமிப்பு மூலம் இந்த அளவு நிதி ஆதாரம் பெற இயலாது. நமக்குக் கிடைக்கும் நேர்முக வரிப் பங்கு மூலம் மட்டும் இந்த இடைவெளியைச் சரிக்கட்ட இயலாது. அந்த இடைவெளியை நிரப்ப சிறு சேமிப்பு ஒரு சிறந்த நிதி ஆதாரமாகக் காணப்படுகிறது. சிறு சேமிப்பு மூலம் கிட்டத்தட்ட ரூ. 350 கோடி, ரூ. 400 கோடி வருகிறது என்றால், வரி போட வேண்டிய அவசியமோ, அல்லது வருமானத்தைப் பெருக்க வேண்டிய அவசியமோ இல்லாமல் ஓரளவுக்கு சரிக்கட்ட முடியும். சிறு சேமிப்பிலே பெறுகிற கடனிலே என்ன லாபம் என்று கேட்பீர்களேயானால் அந்தக் கடனை 330 கோடி ரூபாய் கடன் வாங்குகிறோம் என்றால் அதை 5 ஆண்டுகளுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதை பிறகு 15 ஆண்டுக்காலத்தில் அதாவது மொத்தத்தில் 20 ஆண்டுக்காலத்தில் திருப்பிச் செலுத்தினால்போதும். இதற்கு மத்திய அரசு நமக்கு விதிக்கின்ற வட்டி 14 சதவிகிதத்தில் தான். சிறு சேமிப்பிலே வருமானம் உடையவர்கள் போடுகிறார்கள் என்றால், தங்களுக்கு 1,000 ரூபாய் 1,500 ரூபாய், 1,700 ரூபாய், 2,000 ரூபாய் மிச்சப்படுகிறது என்ற கணக்கை வைத்துத்தான் 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று கொண்டு வந்து போடுகிறார்கள். இந்த வரிச் சலுகையை நீக்கி விட்டால் என்ன ஆகிறது என்றால் சிறு சேமிப்புக்கு அந்தத் தொகை வராது; அவர்கள் எல்லாம் பங்கு மார்க்கெட்டுக்கு கொண்டு போய் பணத்தைப் போடுவார்களே தவிர, தங்களுக்கு அதிக

லாபம் தருகின்ற இடத்திற்குக் கொண்டுபோய் போடுவார்களே தவிர, சிறு சேமிப்பிலே போட மாட்டார்கள். இங்கே வருமானத்திலே சலுகை இல்லை என்றால், நமக்கு வரவேண்டிய தொகை வராமல் போய்விடுகிறது என்ற ஆதங்கத்திலே, நாம் மத்திய அரசுக்கு மீண்டும் மீண்டும் வற்புறுத்தினோம்.

இந்த வரி மாற்றங்கள், சலுகைகள், மற்றவைகள் எல்லாம் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. மன்மோகன் சிங் செய்துள்ளார். டாக்டர் ராஜா ஜே. செல்லையா அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைத்து, விரிவாக ஆராயச் செய்து ஆராய்ந்து அவர்கள் தந்த அறிக்கையினுடைய அடிப்படையிலே பல மாற்றங்களை இப்போது நிதி அமைச்சர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் செய்து எல்லோரும் பாராட்டத்தக்க அளவுக்கு அந்த நிதிநிலை அறிக்கை அமைந்ததை நீங்கள் காண்பீர்கள். அதிலேகூட டாக்டர் ராஜா ஜே. செல்லையா தலைமையில் அமைந்த வரிச் சீர்திருத்தக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் வரி மாற்றங்கள் பலவற்றை மேற்கொண்டு உள்ளார். டாக்டர் ராஜா செல்லையா குழு அந்த அறிக்கையில் சிறு சேமிப்பு வைப்பு நிதியில் சேர்த்தால் 80 எல், 80 சிசிஏ-படி அளிக்கப்பட்டு வந்த வருமான வரிச் சலுகையை எடுக்கும்படி அவர் பரிந்துரை செய்யவில்லை.

பிற்பகல் 12-55

செல்லையா குழு பரிந்துரை செய்யவில்லை. அதற்கு மாறாக செல்லையா குழு என்ன சொல்லியிருக்கிறது என்றால் 40,000 ரூபாய் வரை இருப்பதை 50,000 ரூபாய் ஆக்கினால் தான் மாநிலங்களுக்கும் மற்றவைகளுக்கும் கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்று. ஆனால் நிதிநிலை அறிக்கையில் வரும்போது எல்லா வகைகளுக்கும் வரிச்சலுகை நீக்கப்பட்டதைப் போல இதற்கும் சேர்த்து நீக்கி விட்டார்கள். நேற்று நாடாளுமன்றத்திலே நிதி அமைச்சர் மன்மோகன்சிங் அவர்கள் இதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பலரிடத்திலேயிருந்தும் இந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. இதை மறுபடியும் பரிசீலனை செய்யவிருக்கிறேன்; பரிசீலனை செய்து, ஏதாவது செய்ய முடியுமா என்பது பற்றி நான் கவனிக்கிறேன் என்று நேற்று நாடாளுமன்றத்தில் அவர்கள் அறிக்கை அளித்திருக்கிறார்கள்.

மற்றொன்றையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வருமான வரியினுடைய இலக்கு உச்சவரம்பு 28,000 ரூபாய் அளவுக்கு என்று இருப்பதை, 40,000 ரூபாய் அளவுக்கு உயர்த்தச் சொல்கிறார்கள். அப்படி உயர்த்தினால் என்ன வரும் என்பதையும் மாண்புமிகு மன்மோகன்சிங் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நான் நிதானமாகத்தான் 28,000 ரூபாயோடு



நிறுத்தியிருக்கிறேன் என்றும் உயர்த்தினால் மத்திய அரசுக்கு இழப்பு 150 கோடி ரூபாய் அளவுக்குத்தான் வரும்; ஆனால் மாநிலங்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு வரும்; நீங்கள் எல்லாம் விரும்பினால் நான் செய்கிறேன் என்றும் தெரிவித்து உறுப்பினர்களிடத்திலே விட்டு விட்டார்கள். ஆக, அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறது. ஆகவே, நமக்குப் பதிலாக அவர்கள் வசூலித்துத் தருகிறார்கள் என்றால் இந்த நிலையிலே நிறுத்துவதுதான் நல்லது என்று மாண்புமிகு மன்மோகன்சிங்கை நாம் வற்புறுத்துவதுதான் பொருத்தமுடையதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் இழப்பு ஏற்படுவதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற கருத்து சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்திற்கு ஏற்படுகிற இழப்பு ரூ. 560 கோடி என்று நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்திருந்தேன். இது சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறி, பலதரப்பட்ட கருத்துக்கள் இந்த அவையிலும் வெளியிடப்பட்டுள்ளன. செய்தித்தாள்களிலேயும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இலவசமாக மற்றும் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுவது போன்ற பல இனங்களின் வாயிலாக ஏற்படும் மொத்த இழப்பு ரூ. 706.30 கோடியாகும். இதில் விவசாயத்திற்கு வழங்கப்படும் இலவச மின்சாரமும் அடங்கும். விவசாய பம்புசெட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்திற்காக மட்டும் ஏற்படுகிற இழப்பு 560 கோடி ரூபாயாகும். இதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. விவசாயத்திற்கு அளிக்கப்படுகிற மின்சாரத்திற்கு ஏற்படுகிற இழப்பு ரூ. 560 கோடி என்பதிலே எந்தவிதமான முரண்பாடும் இல்லை. ரூ. 560 கோடி என்ற அளவுக்கு எவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி யூனிட் மின்சாரம் வழங்கப்படுகிறது. மொத்தம் 1,600 கோடி யூனிட் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதிலே நான்கில் ஒரு பங்கு, கிட்டத்தட்ட 400 கோடி யூனிட் மின்சாரம் விவசாயத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது. ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய கட்டுப்படியாகிற செலவு ரூ. 1.40 ஆகிறது. அந்த வகையிலே கணக்கிட்டுப் பார்த்தால் 400 கோடி யூனிட் மின்சாரம் விவசாயத்திற்கு வழங்குகிறோம் என்றால், ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் 40 காசு என்ற அளவில் கணக்கிட்டுப் பார்த்தால் ரூ. 560 கோடி ரூபாய் அதன் மூலம் மொத்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

இழப்பு ஏற்படுகிறது என்பதுதான் மொத்தத்தில் வருகிறது. விவசாயப் பம்புசெட்டுகளுக்கு வழங்கக்கூடிய இலவச மின்சாரம் தவிர இதர சில பிரிவினர்களுக்கும் இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுகிறது. குறிப்பாக குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இலவச மின்சாரம் மற்றும் குறைந்த கட்டணத்தில் வசூலிக்கப்படும் மின்சாரம் ஆகிய இனங்களில் மின்சார வாரியத்திற்கு ஏற்படுகிற இழப்பு கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| விவசாயப் பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம். | 560 |
| குடிசைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் மின்சாரம். | 12.90 |
| தெரு விளக்குகளுக்கு வழங்கப்படும் குறைந்த கட்டண மின்சாரம். | 5.40 |
| பொது குடிநீர்த் திட்டங்களுக்காக வழங்கப்படும் குறைந்த கட்டண மின்சாரம். | 7.20 |
| வீடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும் மின்சாரம். | 111 |
| ஆக மொத்தம் .. | 696.50 |

பிற்பகல் 1-00

அது மட்டுமல்ல. உயரழுத்த மின்சாரம்— நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் குறைந்த கட்டண மின்சாரத்தால் ஏற்படும் இழப்பு ரூ. 9.80 கோடி ஆகும். ஆக, எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால், இழப்பு முழுவதையும் சேர்த்துக் கூட்டிப் பார்த்தால் ரூ. 706.30 கோடி வருகிறது. இந்த இழப்புகளை ஈடு கட்டும் முயற்சியாக ஒருசில நுகர்வோர்களிடமிருந்து மின் சாரத்திற்கு அதிக கட்டணத்தை, அதாவது உற்பத்தி மற்றும் விநியோகச் செலவைக் காட்டிலும் சற்று கூடுதலாக வசூல் செய்கிறோம். குறிப்பாக உயர்ந்த அழுத்த மற்றும் குறைந்த அழுத்த மின்சாரத்தைத் தொழிற்சாலைகளுக்கும் வர்த்தக ரீதியில் இயங்கும் நிறுவனங்களுக்கும் வழங்கும்போது இந்த உயர்ந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனால் கிடைக்கக்கூடிய வருவாய் ரூ, 250 கோடி நமக்கு கிடைக்கிறது. நான் ஏற்கெனவே கூறிய மொத்த இழப்பான ரூபாய் 706 கோடியே 30 இலட்சத்தை



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஓரளவு இது ஈடு செய்கிறது, இது ஈடு செய்தது போக. ஈடு செய்ய முடியாமல் இருக்கிற இழப்பு ரூ, 452 கோடியாகும். இந்த நிகர இழப்பான ரூ. 452 கோடியை இந்த இழப்புக்கு காரணமாக அமைந்திருக்கிற மாநில அரசு ஈடு செய்ய வேண்டியிருக்கிறது, ஆகவே, மின்சாரத்துறைக்கு இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னால், மாநில அரசு கட்டளை இடுவதனால், இது இதற்கு இவ்வளவு இலவச மின்சாரம் தாருங்கள் என்று மாநில அரசு சொல்வதன் காரணமாகத் தான் அது கட்டணத்தைக் குறைத்து வழங்குகிறது. வர்த்தக ரீதியில் மற்ற மற்ற வர்த்தக நிறுவனங்களைப் பயன்படுத்துவதைப் போல மின்சாரத் துறையைப் பயன்படுத்த முடியவில்லை. அரசுக்கு கட்டுப்பட்டு அது நடக்கிறது. ஆகவே, அரசினுடைய கட்டளையை ஏற்று அது இழப்புக்கு ஆளாகிறது. அப்படி ஆளாகிற இழப்பை இலாபம் வரா விட்டாலும், ஈடுகட்டுகிற அளவுக்காவது அரசு தன்னுடைய உதவியைச் செய்ய வேண்டுமென்று மின்சாரத் துறை எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது. ஆகவே, இலாபமும் இல்லாமல், நட்டமும் இல்லாமல் மின்சாரத் துறை இயங்க வேண்டுமென்றால் ரூ. 452 கோடியை அரசு ஈடுகட்ட வேண்டும், ஏனென்றால் அரசினுடைய கொள்கை காரணமாகத்தான் இந்த இழப்பு ஏற்படுகிறது. ரூ. 452 கோடியை ஈடு செய்யும் முயற்சியாக நாம் ரூ. 350 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஈடு செய்வதற்காக என்று ஒதுக்கியிருக்கிறோம், இது மின்சாரத் துறைக்குப் போய்ச் சேரும்.

அது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் வட்டி என்ற அளவில் மின்சாரத் துறை அது வாங்கிய முதலீட்டுக்கு 100 கோடி ரூபாய் அரசுக்குத் தர வேண்டியிருக்கிறது. அந்த ரூ. 100 கோடியையும் சேர்த்து இந்த இழப்புக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்வதன் காரணமாக, இந்த ரூ. 350 கோடியோடு ரூ. 102 கோடி வட்டி வருவதையும் சேர்த்து 452 கோடியை மின்சாரத் துறை ஈடுசெய்து கொள்கிறது. ஆகவே. வட்டி மூலம் வருகிற 102 கோடியையும் மின்சாரத் துறையை எடுத்துக் கொள்ளச் சொல்கிறோம். நாம் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய ரூ. 350 கோடி ரூபாயையும் ஈடு செய்வதற்கு நாம் தந்து விடுகிறோம். அரசு இவ்வகையான முறையில் ஈடு செய்வதால் தான் மின்சார வாரியத்தினுடைய நிகரப் பற்றாக்குறை சரி செய்யப்படுகிறது.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்தால் ஏற்படும் இழப்பு ரூ, 560 கோடி ரூபாயாகும் என்பதில் எவ்வகையான சந்தேகமும் இல்லை. இதிலே எந்த விதமான சர்ச்சையும் முரண்பாடும் இல்லை. இதுபற்றி செய்தித்தாள்களில் என்ன கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என்றால். குறிப்பாக மொத்த இழப்பு வெறும் ரூ. 30 கோடி என்பது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

எதற்கென்றால், குதிரைத் திறன் ஒன்றுக்கு ரூ.50 என்று வைத்து கடைசியில் ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு இல்லையென்றாக்கி, மற்றவர்களுக்காக்கி, 7½ ஏக்கர்களுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு என்றாக்கி, கடைசியாக ஏற்பட்டிருக்கிற அவர்கள் குதிரைத் திறன் அடிப்படையிலே விவசாயிகள் செலுத்துவது ரூ. 30 கோடியாகும். அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றவுடன் அந்த 30 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது அந்த வகையில் உண்மை. அது மொத்த இழப்பு அல்ல. மொத்த இழப்பு 30 கோடி ரூபாய் என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது, மொத்த இழப்பு ரூபாய் 560 கோடியில், இந்தக் குதிரைத் திறன் அடிப்படையில் கட்டணம் செலுத்தியவர்களுக்கு தள்ளுபடி செய்தது ரூபாய் 30 கோடியும் இதிலே அடங்குகிறது. அது இல்லாவிட்டால் ரூ. 530 கோடி ரூபாய் இழப்பு இருக்கும். எனவே அதையும் சேர்த்தால் ரூ. 560 கோடி வருகிறது. ஆகவே இந்தப் புள்ளி விவரங்களில் வேறு எந்தவிதமான மாற்றமோ அல்லது முரண்பாடோ இல்லையென்பதைக் குறிப்பிட்டு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றால், மாநில அரசின் நிதிநிலை உறுதியாகவும், உபரியாகவும் இருக்க வேண்டும். மேலும் மின்சாரம் என்பது ஒரு இடு பொருளாக உபயோகப்படுத்தப்படுவதால் அதற்கு இந்த அளவுக்கு கட்டணம் செலுத்தாமல் இருந்தால், பொருளாதார அடிப்படையில், மூலப் பொருள்களின் விலைவாசிகள், சம்பளம், கூலி போன்றவை ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே போகிறபோது, அதிலே ஏற்படுகிற இழப்பும் உயர்ந்து கொண்டே போகிறபோது, பொது மக்களுடைய வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துகிற நிதியை எடுத்துத்தான் அந்த உயர்ந்த செலவுகளுக்கு நாம் ஈடு கட்ட வேண்டி வரும். ஆகவே தான், எப்படியும் இதை வழங்க வேண்டுமென்று முயற்சியெடுக்கப்பட்டாலும், தவிர்க்க முடியாத இதர பல செலவுகளை ஏற்கும் கட்டத்தில், இதிலே தொய்வு ஏற்படக் கூடாது. எனவே, இந்தக் கட்டணத்தை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் சிலபல நடவடிக்கைகளை ஏழை எளியவர்கள், சாதாரண விவசாயிகள், மற்றவர்களுக்கு ஏற்கெனவே இருந்ததைப் போல ஓரளவிற்கு செய்வோமேயானால் நாம் அதனால் ஏற்படும் நிதி இழப்பீட்டை சரிக்கட்டத்தான் வேண்டி வரும், ஆனால் யாருக்கு என்ற கேள்விதான் வருகிறது. இப்படி யாருக்கு என்ற கேள்வி வருகிற போது, ஏழையெளியவர்களாக இருக்கிற, குறைந்த நிலங்களைக் கொண்டிருக்கிற, குறைந்த வசதியுடையவர்களுக்கு தந்து விட்டு, மற்றவர்களுக்கு விதிப்பதன் மூலம், வளர்கிற இந்த நிதிநிலை உயர்வை, விலை மிகுதியை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும். இந்த



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

முயற்சியில் அரசு ஈடுபடுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் நிலைமையைத் தெரிந்து வளர்ச்சித் திட்டங்களுக்கு, மேம்பாட்டுத் திட்டங்களுக்கு பயன்படுத்துகிற அளவுக்கு உதவி செய்கிற முறையில் உதவி செய்வார்கள் என்று கருதுகிறேன், அதை நல்ல நிபுணர்களும், மற்றவர்களும் ஆராய்ந்து அறிந்து நல்ல முடிவுக்கு வருவார்கள் என்று கருதுகிறேன். முடிவுக்கு வருகின்றபோது இந்த அவைக்கு அறிவிக்கப்படும். எப்படியும் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கலாம் என்று கொடுத்தால் பெருமளவிற்குக் கொடுத்துவிடலாம். பஸ்ஸை இலவசமாக விடு, தண்ணீரை எல்லாம் இலவசமாகவே வழங்கு, நீர்பாசனத்திட்டங்களை இலவசமாகவே கொடு, எல்லாவற்றையும் இலவசமாகவே வழங்கு என்றால், எங்கேயிருந்து கொடுக்க இயலும் என்ற கேள்வி வரும். இதையெல்லாம் சரிக்கட்டுவதற்கு யாராவது எங்கேயாவது புதையலைக் காண்பிப்பார்களானால், அதிலேயிருந்து ஏதாவது வெட்டி எடுத்துக் கொடுக்கலாம், அல்லது வேறு யாராவது நிதியுதவி கொடுப்பார்களானால், அதிலேயிருந்து ஏதாவது கொடுக்கலாம். இலவசமாகக் கொடுக்கலாம் என்ற கொள்கை மிக மிக உயர்ந்த கொள்கைதான். ஆகவே இதை நடைமுறைப் படுத்த முடியுமா என்பதுதான் கேள்வி. நடைமுறைப் படுத்தச் சொன்னாலும் நடைமுறைப்படுத்தலாம். இதை நடைமுறைப் படுத்தினாலும், அரசு மட்டுமே போடவேண்டிய சாலைகள், அரசு மட்டுமே நிறுவ வேண்டிய பெரிய பெரிய மருத்துவமனைகள், அரசே பொறுப்பேற்று நடத்தவேண்டிய பெரிய பெரிய கல்வி நிலையங்கள், அரசு மட்டுமே ஏற்று நடத்த வேண்டிய பல திட்டங்கள், இவைகளை நாம் தனியாருக்கு விட இயலாது. ஒரு ஊரிலே இருக்கிற குப்புசாமி முதலியாரைக் கூப்பிட்டு, நீங்கள் நெடுஞ்சாலையைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றால், எந்தக் குப்புசாமி முதலியார் வந்து ஏற்றுக் கொள்வார். தனிப்பட்ட ஆட்கள் எப்படி ஒப்புக் கொள்வார்கள் ? இதை அரசு மட்டுமே செய்ய வேண்டும் என்றால், அரசுக்கு நிதி வேண்டும். சாலை போடுதல், கல்வி நலம் தருதல், பாதுகாப்பை ஏற்படுத்துதல், காவல் துறையைப் பாதுகாத்தல், மின்சார உற்பத்தியைச் செய்தல், நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றல், புதிய அணைக் கட்டுகளைக் கட்டுதல், இவைகளுக்கு தனிப்பட்டவர்கள் யாரும் பொறுப்பேற்க இயலாது ; அரசைத் தவிர. . இதைப் பொறுப்பேற்றுச் செய்கிற அரசுக்கு நிதி வேண்டும். நிதி

வேண்டும் என்றால், நிதியைச் திரட்டித்தான் தரவேண்டும். இருக்கிற நிதியைக் கரைத்துக் கரைத்து, இலவசமாக திட்டங்களுக்குக் கொடுத்துக் கொண்டே போவோமானால், நான் முதலிலே சொன்னபடி, நூற்றுக்கு 10 சதவீதம் அளவிற்குத்தான் நன்மைகள் செய்கின்ற அளவிற்கு வருமே தவிர, 90 சதவீதம் அளவிற்கு நன்மை செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே தான் மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரளவிற்குச் சிந்திக்க வேண்டும். நாம் தருகின்ற அளவிற்கு, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட சலுகைகள், வசதிகள், உதவிகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, நகைகளுக்கு வரிகுறைப்புப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள சில வரிவிதிப்புகளை பற்றிக் குறிப்பிடுகின்றபோது அவர்கள் குறிப்பிட்டார்கள். கவரிங் நகைகள் மீது குறைக்கப்பட்டுள்ள வரிகைளைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். அதில் முரண்பாடு இருக்கிறது என்றும் அவர்கள் கூறினார்கள்.

கடந்த நிதி நிலை அறிக்கையில் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளின் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இது அசல் தங்கத்தினால் முலாம் பூசப்பட்ட நகைகளுக்கு மட்டும் பொருந்தும். அண்மையில், நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரி விகிதம் இமிடேஷன் நகைகள், அதாவது இமிடேஷன் ஜுவல்லரி என்று சொல்லப்படுகின்றவைகளுக்கு 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதிலே என்ன சங்கடம் வந்து விட்டது என்றால், ஆங்கில உரையில் இது 'கோல்ட் கவரிங் ஜுவல்லரி' என்றும், இதிலே -இமிட்டேஷன் ஜுவல்லரி' என்றும் இருக்கிறது. "இமிட்டேஷன் ஜுவல்லரி" என்பதை மொழி பெயர்த்தவர்கள் போலி நகைகள் என்றால், ஏதாவது சந்தேகம் வந்துவிடப் போகிறது என்று சொல்லி, போலி நகைகள் என்றால், என்ன நகை என்று யாராவது கேட்டால் என்ன செய்வது என்பதற்காகத்தான் அதை 'கவரிங்' என்று போட்டு விட்டார்கள். ஆகவே, இதை -இமிட்டேஷன் ஜுவல்லரி' என்று போட்டிருந்தா, மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களுக்கு சந்தேகம் வரவே வராது. ஆகவே, 'கோல்டு கவரிங் ஜுவல்லரிக்கும்' இமிடேஷன் ஜுவல்லரிக்கும் வேறுபாடு இருப்பதால், அப்போது வரிச் சலுகை கோல்டு கவரிங் ஜுவல்லரிக்கு, இப்போது வரிச் சலுகை இந்த இமிடேஷன் ஜுவல்லரிக்கு என்ற விளக்கத்தை மட்டும், நான் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



இந்த அரசு எப்போதும் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டி, ஏழை எளியவர்கள் மீது கூடுமான வரையில் எவ்வித சுமையும் ஏற்படாத வண்ணம் கவனித்து வருகிறது. அதன் அடிப்படையில், கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட, 1992-93 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலும் சரி, ஏழை எளியவர்கள் மீது எவ்வித சுமையும் ஏற்படுத்தாதவாறு, நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு வந்துள்ளன. இங்கே பேசிய பல உறுப்பினர்களும் ஒருசில செய்தித்தாட்களும், இந்த அரசு, 1992-93 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறையை எவ்வாறு சரிக்கட்டப் போகிறது என்றும் கேள்வி எழுப்பினார்கள். மாநில அரசின் வருவாய் ஆதாரங்கள் மிகக் குறைவானவையே. நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும், விலை உயர்வு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையில், மக்கள் மீது எவ்வித கூடுதல் பளுவும் ஏற்படாத வண்ணம் இந்த அரசு கவனித்துக் கொண்டுள்ளது. அதனால்தான் புதிய வரிகள் விதிக்கும் கட்டத்தில் மிகக் கவனத்துடன் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. மாநில அரசுகள் விதிக்கும் வரிகளின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய், அந்தந்த மாநிலத்திலுள்ள நபர் வாரி வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம் என்றால், என்ன நிலை என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதை வரிசைப்படுத்திப் பார்க்கும் போது கீழ்க்கண்டவாறு அமைகிறது.

பிற்பகல் 1—10

இதன் விவரங்கள், 1990-91ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலிருந்தும், 1987-88ஆம் ஆண்டுக்கான நபர் வாரி வருமானக் கணக்கின் அடிப்படையிலும், கணக்கிடப்பட்டுள்ளன. கர்நாடகத்திலே ஒவ்வொருவருக்கும் கிடைக்கிற வருமானத்திலே, சராசரியாகக் கிடைக்கிற வருமானத்திலே—சராசரி எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்ற கணக்கைப்பார்த்தால், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் 17.21 சதவீதம், கேரளாவைப் பொறுத்தவரையில் 17.16 சதவீதம், தமிழ்நாட்டைப் பொறுத்து 16.73 சதவீதம், ஹரியானா 15.43 சதவீதம், ஆந்திரப் பிரதேசம் 15.23 சதவீதம், மகாராஷ்டிரம் 15.03 சதவீதம், குஜராத் 14.87 சதவீதம். இந்த அளவுகள் வரும்போது கிட்டத்தட்ட ஒருவருக்கு கிடைக்கின்ற சராசரி வருமானத்தில் ஆறிலே ஒரு பங்கு நம்முடைய மாநிலத்திற்கு வரியாக செலுத்த வேண்டிய கட்டாயம் ஓரளவிற்கு இருக்கிறது. ஆனால் பண்டைய காலங்களில் எல்லாம் பார்த்தாலும்கூட, அரசுக்கு இருக்க வேண்டிய கடமை ஆறிலே ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. அதே அளவுதான் இருக்கிறதே தவிர, அதற்கு மேலும் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் நம்முடைய பொறுப்பு என்பதை அரசு உணர்கிறது. ஏனென்றால் அதற்கு மேலும் வரி விகிதங்கள் அதிகம் போனால், மக்களுக்கு அவதி ஏற்படும் என்ற காரணத்தினாலேதான்

கூடுமான வரையில் இந்த வரி விகிதம் அதிகமான அளவு பாதிக்காத அளவிற்கு நிலைமைகளை சரிக்கட்டவும் தனிப் பட்டவர்களுடைய வருமானம் உயர உயர உயர்கின்ற அளவிற்கு ஆறிலே ஒரு பங்காவது இருக்கிற அளவிற்கு பார்த்துக்கொள்வதை நாம் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். இதை இந்த அரசு முறையாக மேற்கொண்டும் வருகிறது. வரிகளை நீக்கியதைப் பொறுத்த வரையிலும் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில வகையான மளிகைப் பொருள்கள்மீது வரிக் குறைப்பு செய்யப்பட்டிருந்தாலும் பரவலாக பயன்படுத்தக் கூடிய மளிகைப் பொருள்களின் மீது வரிக் குறைப்பு இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

நான் இங்கே கடந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவையில் சமர்ப்பிக்கும்போது, ஆற்றிய உரையினை நினைவுபடுத்த விரும்புகிறேன். செப்டம்பர் 1991-லே இந்த அரசு மஞ்சள், மிளகாய், கொத்தமல்லி, புளி, சீயக்காய் மீதான வரியை 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக ஏற்கெனவே குறைத்துள்ளது. மக்கள் பரவலாக பயன்படுத்தக் கூடிய மளிகைப் பொருள்களின் மீதான வரியை அரசு படிப்படியாக குறைத்து வருகின்றது. மக்கள் நேரடியாக வாங்கி நுகரும் கரும்புக்கு அறவே வரியில்லை என்று முன்பே தமிழக அரசில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வாய் விளங்கம், பூலாங்கிழங்கு, நெருஞ்சி, தாதருப்பூ, அதி விடயம். மாச்சக்காய். மதனகாமப்பூ. வெள்ளி லோத்திரம், நிலவாகை. சாரணவேர் போன்ற மருத்துகளுக்கு மட்டுமே பயன் படக்கூடிய இந்தப் பொருள்களுக்கு இருந்த வரி அறவே முன்பே நீக்கப்பட்டிருக்கிறது.

மிளகு, வெல்லம், சீரகம் ஆகியவற்றுக்கு இந்த 8 சதவீதம் வரி 6 சதவீத வரியாக முன்பே ஆக்கப்பட்டுவிட்டது. மஞ்சள், மிளகாய், கொத்தமல்லி போன்றவைகளுக்கு முதலில் சொன்னபடி 6-லிருந்து 4 ஆக முன்பே ஆக்கப்பட்டுவிட்டது.

மருந்துகள், மருந்துப் பொருள்களுக்கு விதிக்கப்படுகின்ற வரி 8 சதவீதத்திலிருந்து சென்ற முறையே 6 சதவீதமாக ஆக்கப் பட்டிருக்கிறது. உயிர்காக்கக் கூடிய விலை உயர்ந்த 6 மருந்து களுக்கான வரி அறவே சென்ற தடவை நீக்கப்பட்டிருக்கிறது.

அட்டவணை 1 மற்றும் 2 ஆகியவற்றில் சேராதவை, நெய் இதர பால் பொருட்கள், வெந்தயம், கிராம்பு, குச்சிக்கிழங்கு வறுவல், சேமியா ஆகியவற்றுக்கு 8 சதவீதத்திலிருந்து 5 சதவீத மாக இப்போது நாம் குறைத்திருக்கிறோம். கிராம்புக்கு குறைக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கிராம்பை அதிகமாக பயன் படுத்துகிறவர்கள் இல்லை என்றும், வெளி மாநிலத்தார்தான்



அதிகம் வாங்குகிறார்கள் என்றும் இதிலே வரி போட்டால் பரவா யில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைக் கவனத்தில் நான் வைத்துக் கொள்கிறேன். இதை எந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் வருங்காலத்தில் அதைப் பயன் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வெந்தயம் போன்ற சாதா ரண பொருள்களுக்குப் போட்டிருக்கிறார்கள் என்றார்கள். அதை எடுத்து விடலாம் என்றாலும் எடுத்து விடுகிறோம். ஆக வரி பல வகைகளுக்கு போடுகிறோம் என்றால் ஓரளவிற்கு எடுக்கின்ற வரியும் போடுகின்ற வரிக்கு சமமாக இருந்தால் எடுப்பதில் என்ன லாபம் இருக்கிறது? கூடுமானவரையில் எந்தெந்த இனத்தில் எடுத்தால் நமக்கு ஓரளவிற்கு வரி இழப்பு குறையும் என்பதையும், எந்தெந்த இனத்திலே வரி போட்டால் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கும் என்பதையும் பார்த்து, பற்றாக்குறை சரிக்கட்டப் படுமா என்று பார்க்க வேண்டியிருக்கிறது, நாம் ரூ. 70 கோடிக்கு வரி போட்டுவிட்டு, ரூ. 200 கோடிக்கு தள்ளமுடியுமா? ரூ. 70 கோடிக்கு வரி போடுவதற்குக் காரணம், நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்வீர்கள் என்பதற்காக ரூ. 4 கோடியை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். இந்த ரூ. 4 கோடியிலே ஏற்படுகிற மகிழ்ச்சி அந்த ரூ. 70 கோடியிலே ஏற்படுகின்ற வருத்தத்தை ஓரளவிற்கு சமாதானப்படுத்தும் என்பதற்குத்தான் செய்கிறோம், இதெல்லாம் ஆறுதல் கூறுகின்ற நடவடிக்கைதானே தவிர, எல்லா நிதியமைச்சர்களும், எல்லா கட்டங்களிலும் எல்லா இடங்களிலும் கையாளுகிற முறைதான் இது.

தொழில் வரி விதிப்பு. இதற்கான விளக்கத்தை நான் கூற முனைகிறேன். தொழில் வரி மீதான உச்சவரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 2,500 வரை உயர்த்தி, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திற்கு 19[illegible]-ஆம் ஆண்டு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே இந்த வரி புதிதாக விதிக்கப்பட்டது அல்ல. தொழில் வரி என்பது ஏற்கெனவே பல ஆண்டுக்காலமாக இருந்து வருகிற வரிதான், அதிலே சில பல மாற்றங்களைத்தான் நாம் இப்போது செய்திருக் கிறோம். இந்த வரி விதிப்பானது ஏற்கெனவே இருக்கிற வரி விதிப்பாகும், புது வரி அல்ல. ஆண்டு ஒன்றுக்கு விதிக்கப்படும் வரியின் உச்ச வரம்பு 2,500 என்று உயர்த்தப்பட்ட பிறகு மகா ராஷ்டிரா, குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்களில் இந்தப் புதிய உச்ச வரம்பைப் பயன்படுத்தி, நிதி ஆதாரங்களைத் திரட்டிட நடவடிக்கைகள் வேகமாக எடுக்கப்பட்டுள்ளன,

பிற்பகல் 1–15

தமிழ்நாட்டில் தற்போது இந்த வரி மாவட்ட நகராட்சி சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சி சட்டம் போன்ற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டங்களின் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. இதற்கு ஒரு மாற்றம் கொண்டு வர வேண்டுமென்று நான் மத்திய அரசு இதற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. பல நேரங்களில் கொடுக்கப்படும் டிமாண்ட் சரியான முறையில் செய்யப்படுவதில்லை. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒருங்கிணைந்த முறையில் தொழில் வரியை வசூலிப்பதற்கு ஒரு தனிச் சட்டத்தைக் கொண்டு வர இந்த அரசு உத்தேசித்துள்ளது. இந்தச் சட்டத்தில் மாத ஊதியம் பெறக்கூடியவர்களுக்கு, அவர்கள் பெறக்கூடிய ஊதியத்தின் அடிப்படையில் வரி விகிதங்கள் நான் ஏற்கெனவே அறிவித்தபடி விதிக்கப்படும். இதர பிரிவினர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தகுதி அல்லது எத்தனை ஆண்டுகள் பணியாற்றி வருகிறார்கள் என்ற நிலையெல்லாம் கருதி, வரி விகிதங்கள் சட்ட முன் வடிவினால் தெளிவாக இந்த அவையில் வைக்கின்ற பொழுது, அதனுடைய முழு விவரங்களும் விளக்கங்களும் தெளிவாகத் தரப்படும். இந்த நேரத்தில் அரசு அலுவலர்களிலே குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு மட்டும் இந்த வரியைச் செலுத்துவதிலே விலக்கு அளித்து, மற்றவர்களுக்கு அரசாங்கமே வரிச் செலுத்துவது என்ற முறையை 1988-லே கொண்டு வந்து, தொழில்வரியை அரசு அலுவலர்களுக்குப் பதிலாக அரசாங்கமே தொழில் வரியைச் செலுத்தும் என்று சொல்லி 1988-ல் அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டு உள்ளாட்சி மன்றங்களுக்கு இதனால் வரக்கூடிய வருமானத்தை அரசு அளித்துக் கொண்டு வந்தது. இது எந்த நிலையில் என்று சொன்னால் 5-வது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் பெற்று. பல ஊதிய உயர்வுகளும் அகவிலைப்படிகளும் வழங்குவதற்கு முன்னால் அளித்த தன்மையே தவிர, அதற்குப் பிறகு 5-வது சம்பளக்குழு அமைக்கப்பட்டு, ஊதிய உயர்வுகளும், பெரும் அளவுக்குப் படிகள் எல்லாம் உயர்த்தப்பட்டு, எல்லா வசதிகளும் செய்து விட்ட பிறகும் கூட, இந்த உதவியை அரசாங்கமே செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது முறையில்லை, அரசு அலுவலர்களில் குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு மட்டும் அரசாங்கமே இந்த வரிகளை நீக்கிவிட்டுச் சமுதாயத்திலே இருக்கிற மற்றவர்களுக்கெல்லாம் ரூ. 1,500-க்கு மேற்பட்ட வருமானம் உடையவர்கள்— இந்த வரியைக் கட்ட வேண்டும் என்று சொன்னால், அது நியாயமாக இருக்காது; அது முறையாகவும் அமையாது என்பதை அரசு ஊழியர்களும் நன்றாக அறிய வேண்டும்.

அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் நான் முதலிலேயே சொல்லியபடி அரசு ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய எல்லா வசதிகளையும் எல்லா வாய்ப்புகளையும்



கூடுமானவரையில் இருக்கின்ற நிதிநிலையை அனுசரித்து அரசு செய்து கொண்டு வருகிறது. நான் முதலிலே சுட்டிக் காட்டியபடி மொத்த வருமானம் 100 ரூபாய் என்றால் அதிலே 46 ரூபாய் அரசு ஊழியர்களுடைய சம்பளம், படி, பென்சன்களுக்கு மட்டும் போகிறது என்று கணக்கிட்டு காண்பித்தேன். ஆகவே அவர்களுக்கு கொடுக்கின்ற சம்பளங்கள் ஓரளவிற்கு நியாயமானது, இன்னும் கூட அதிலே அவர்கள் கோரிக்கைகள் பல பல வைக்கிறார்கள் என்றாலும்— அதிலே நியாயங்கள் கூட இருக்கக்கூடும், ஆனால் அந்த நியாயங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவுக்கு நிதி இல்லை என்பதை, பொது மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி இல்லாதபோது, இவற்றை எல்லாம் அவர்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனால் சமுதாயத்திலே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வருமானம் உடையவர்களாக இருக்கின்ற அவர்கள் சாதாரணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15,000 முதல் ரூ. 24,000 வரை வருமானம் உடையவர்கள் செலுத்த வேண்டியது ரூ. 60 தான். கிட்டத்தட்ட ரூபாய் 1,500-க்கு மேல் ரூ 2,400 வரையில் சம்பளம் பெறக் கூடியவர்கள் தர வேண்டியது மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய் தான். ரூ. 1,500-க்கு மேல் சம்பளம் வாங்கக் கூடியவர்களாலே 5 ரூபாய் உள்ளாட்சி நலம் கருதி, அங்கிருக்கிற ஊராட்சி தருகிற, ஊராட்சி ஒன்றியங்கள் தருகிற, நகராட்சி தருகிற குடிநீரைப் பயன்படுத்துகிறவர்கள், அவற்றினுடைய தார் சாலைகளிலே போகிறவர்கள், அந்த நகராட்சி— ஊராட்சி ஒன்றியங்களில் செய்து தருகிற ஏற்பாடுகளை எல்லாம் பயன்படுத்துகிறவர்கள்— மாதம் ரூ. 1,5°0-க்கு கீழே இருப்பவர்கள் தராமல்— ரூ. 1,500-க்கு மேலே இருப்பவர்கள் கிட்டத்தட்ட 5 சதவீதம் 100-க்கு 5 ரூபாய் தான்— மொத்தத்திலே 5 ரூபாய் மாதத்திற்கு தர வேண்டியிருக்கிறது. ஆண்டுக்கு 60 ரூபாய் 6 மாதத்திற்கு 30 ரூபாய் தர வேண்டியிருக்கிறது. ஆண்டுக்கு 24,000-லிருந்து 30 ஆயிரம் வரை சம்பாதிப்பவர்கள் தர வேண்டியது 96 ரூபாய் தான். அதிலே ஒன்றும் பெரிய இழப்போ அல்லது அவர்களைப் பாதிக்கக்கூடிய அளவிலோ இல்லை. அரசையே நடத்திச் செல்லுகின்றவர்களுடைய நிலையோடு சேர்த்து, அரசை நடத்திச் செல்லுகின்றவர்களுக்கு உதவியாக இருக்கிற அதிகாரிகளும் அலுவலர்களும் ஊழியர்களும் மற்றவர்களும் நிலைமையை உணர்ந்து, அவர்களோடு சேர்ந்து இந்த நிதிநிலையைச் சரிக்கட்டுவதிலே ஊழியர்கள் எல்லாம் ஈடுபட வேண்டுமென்று

வேண்டுகோளைத்தான் இந்த அவையின் மூலமாக எடுத்துரைக்கிறேன். நாட்டின் நலன் கருதி, அவர்களை விட ஏழை எளிய மக்கள், கஷ்டப்படுகிற மக்கள், துன்பப்படுகிற மக்கள் சிற்றூர் தோறும், பேரூர்தோறும், நகரங்கள் தோறும் இருக்கிறார்கள் என்ற உணர்வோடு அரசாங்கத்தினுடைய உணர்வோடு அவர்களும் ஒன்றிப் போகவேண்டும் என்ற வேண்டுகோளை மட்டுமே அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

இந்தத் தொழில் வரியை பொறுத்தவரையிலும் இதன் மூலம் வருகின்ற வரி முழுவதும் அந்தந்த ஊராட்சிக்குத்தான் பயன்படப்போகிறது. அந்தந்த ஊராட்சிகளுடைய நிலைமைகளை நீங்கள் பார்ப்பீர்களானால் மொத்தம் 12,612 ஊராட்சிகள் இருக்கின்றன. இதிலே 8,453 ஊராட்சிகள் மிக மிக நலிந்த நிலையில் இருக்கின்றன. இவைகளில் பெரும்பாலானவை மின் கட்டணம் செலுத்த முடியவில்லை. தெரு விளக்குகளை பராமரிக்கமுடியவில்லை, ஊராட்சி சாலைகளைப் பராமரிக்க முடியவில்லை, துப்புறவுப் பணியையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. அவர்களுடைய சம்பளத்தை ஈடுகட்ட முடியாத அளவுக்கு இந்த ஊராட்சிகள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. திட்டப் பணிகளுக்கென ஒதுக்கக்கூடிய தொகைகள், சம்பளம், படி ஆகியவற்றைக் கொடுப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. மேலும் சுமார் 100 ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர இதர ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் பணிகள் எதுவும் எடுத்துச் செய்ய முடியாத சூழ்நிலை இப்போது இருந்து வருகிறது. புதிதாக மக்களுக்கு சில வசதிகளை, வாய்ப்புகளைச் செய்ய முடியவில்லை. இதை எல்லாம் கருத்தில் கொண்டுதான் கிராமப்புற மக்கள் தங்களுடைய ஊராட்சிகளில் குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு, துப்புறவு போன்ற பணிகளைப் பராமரிப்பதில் அரசே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கருதுகிறார்கள். இதில் எதிர்பார்ப்பு நியாயமான ஒன்றுதான். இதற்கு வேண்டிய தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவது அவர்களின் கடமையாகக் கருதி இதனை ஏற்கத் தயங்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் மிகச் சிறந்த முயற்சியாக இந்த வரி விதிப்பு மாற்றங்களைச் செய்துள்ளோம். இந்த வரி விதிப்பு மாற்றங்கள் எல்லாம் அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்குப் போக வேண்டுமே தவிர இந்த மாற்றத்தின் மூலம் கிடைக்கின்ற கூடுதல் பணம் அரசுக்கு வரப் போவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு ஆங்காங்கு கொடுக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆங்காங்கு கிடைக்கும். அந்த வகையிலே தான் 45 காசு என்பதை 1 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம். இது 20 ஆண்டுகளுக்கு முன்பு விதிக்கப்பட்ட முறை. மற்றொன்று



ரூ. $2\frac{1}{2}$ என்று இருந்த அந்த மேல் வரியை இப்பொழுது 5 ரூபாய் குறைந்த அளவாகவும் 10 ரூபாய் உயர் அளவாகவும் வைத்துக் கொள்ளுகின்ற முழு உரிமையும் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இது கூட 1972-ல் விதிக்கப்பட்ட தொகை. ஆகவே தான் 20 ஆண்டுக் காலமாக இல்லாமல் இருப்பதன் காரணமாக 5 வரையிலும்—ரூ. $2\frac{1}{2}$-யாக இருப்பதை ரூ. 5 ஆக உயர்த்துகிறோம். அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் விரும்பினால் ஐந்தோடவே நிறுத்திக் கொள்ளலாம். ஆங்காங்கு இருக்கின்ற வசதி வாய்ப்புகளை நினைத்தால் 6 ரூபாயோ, 7 ரூபாயோ, 8 ரூபாய், 10 ரூபாய்க்கு மேல் போகாமலும் பார்த்துக்கொள்ளலாம். அது அவர்களுக்கே விடப்பட்டு இருக்கிறது. இது இந்த ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் ஆகியவற்றினுடைய நிதிநிலையைச் சீர்ப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டிருக்கின்ற முயற்சிதான்.

உணவு விடுதிகளைப் பொறுத்த வரையில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 18,25,000 ரூபாய் மொத்த விற்பனை செய்கின்ற ஓட்டல்களுக்கும், உணவு விடுதிகளுக்கும், உணவு மற்றும் குளிர் பானங்களுக்கு 5 சதவீத விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விதிப்பு ஆண்டுக்கு ரூ.18,25,000-க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களுக்கு என்பதிலிருந்து ரூ. 3 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு வியாபாரம் செய்கின்ற அந்த ஓட்டல்களுக்கு மட்டும் இந்த 5 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது. விலை உயராது. உயரக் கூடாது, ஏனென்றால் சாதாரணமாக 10 ரூபாய் என்று சொன்னால் 10 ரூபாய்க்கு உணவுப் பண்டங்கள் கொடுக்கப்படுகின்றன என்றால் இந்த 10 ரூபாயோடு வாங்குகின்றவர்கள், உண்ணுபவர்கள் 10 காசு சேர்த்துத் தரவேண்டுமே தவிர இந்தவரி விதிப்பதினால் உணவுப் பண்டங்களுடைய விலைகளை உயர்த்தி விடுவார்கள் என்று சொல்வதிலே நியாயம் இல்லை. உயர்த்தக் கூடாது. உயர்த்த முடியாது. உயர்த்தினால் அது தவறு. 10 ரூபாய்க்கு சாப்பிட்டு வந்தால் 10 ப்ளஸ் சேல்ஸ் டாக்ஸ் போடுகிற மாதிரி 10 காசு கூட போடுவார்கள். 5 ரூபாய்க்கு 5 காசு கூட போடுவார்கள். வாங்குகின்றவர்களுக்கு சிறிது வரி ஏறுகிறது. வரியே இல்லாமல் எப்படி ஆள முடியும். 5 காசு ஏறுகிறது. ஏறவில்லை என்று நான் சொல்லவில்லை. ஏற்றாமல் எந்த ஆட்சியும் இயங்க முடியாது. இது தாங்கக் கூடிய வரி தான் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

பிற்பகல் 1-25.

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே, ஓட்டலில் சாப்பிடுகிறவர்களுக்கு பனிஷ்மெண்டாக இந்த அரசு இதை உயர்த்தி பரிசாக தந்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிட்டு இப்படி இனிப் பேசக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பரிசுகளை கேரள அரசும், கர்நாடக அரசும் ஏற்கனவே மிகச் சிறப்பாக தந்து வருவதன் காரணமாகத் தான் நாமும் தந்து வருகிறோம். கேரளாவிலும், கர்நாடகத்திலும் பல ஆண்டுகளாக 2 லட்ச ரூபாய் தான் உச்ச வரம்பு. 2 லட்ச ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கின்ற அவ்வளவு ஓட்டல்களுக்கும் அங்கே வரி விதிக்கப்பட்டு சம்பாதனையைப் பெற்று வருகிறார்கள். ஓட்டல்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. நாளுக்கு நாள் புதிய புதிய ஓட்டல்களையும் திறந்து கொண்டு தான் வருகிறார்கள். சாப்பிடுகிறவர்களும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, நாம் ஒரு லட்ச ரூபாயைக் கட்டி, அவர்கள் 2 லட்ச ரூபாய் என்று வைத்திருக்கிற நிலையை மாற்றி, 3 லட்ச ரூபாய்க்கு மேல் என்று நாம் சொல்லி இருக்கிறோமே தவிர, ஆக இதனால் ஒன்றும் அதிகமாக பாதித்து விடுகின்ற நிலைமை இல்லை. 18 லட்ச ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களுக்குத்தான் வரி ஏய்ப்புக்கள் இடையில் அதிகமாக நடக்கின்றன என்று விற்பனை வரித் துறைக்கு அத்தகைய செய்திகள் எல்லாம் வந்ததன் காரணமாகத்தான் நாம் இந்த அளவுக்கு முயற்சி எடுத்தோம். இதில் அதிகமாக பாதிக்கின்ற சூழ்நிலை எதுவும் இல்லை. இப்போதும் கூட நாளுக்கு நாள் கிட்டத்தட்ட ஓட்டல்களை புதிது புதிதாக திறந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இதனால் எதுவும் பாதிக்கவில்லை என்ற சூழ்நிலையைக் காட்டுகிறது.

பேருந்து வாகன வரி மீதான மேல் வரியில் சில மாற்றங்களை அறிவித்து இருந்தேன். நகர்ப்புறப் பேருந்துகளின் மீதான மேல் வரி 25 சதவீதம் என்று அறிவித்து இருந்தேன். நகர்ப்புற பேருந்து மீது இதுவரை மேல் வரி விதிக்கப்படவில்லை. இதனை படிப்படியாக உயர்த்த வேண்டும் என்று பொதுவாக நகரப் பேருந்துகள் அதிகமாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானதாக இருக்கின்றன என்று என்னிடம் கூறப்பட்டது. ஆகவே, இதை கருத்தில் கொண்டு நகரப் பேருந்து



களின் மீதான மேல் வரி 25 சதவீதம் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதை, 10 சதவீதமாக குறைக்க அரசு தீர்மானித்து இருக்கிறது. ஏன் என்றால் நகர்ப்புற வண்டிகளைப் பொறுத்த வரையில் செலவினங்களும் மற்றவைகளும் அதிகமாக இருக்கின்றன. மபசல் வண்டிகள், வெளி ஊர்களுக்குப் போகிற பஸ்களுக்கு அதிகம் இல்லை. நகர்ப்புறங்களில் மட்டும் 25 சதவீதம் 10 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். விலைவாசி ஏற்றத்தினால் நீங்கள் எல்லாம் கஷ்டப்படுகிறீர்களோ இல்லையோ, நாட்டில் இருக்கிற மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்களோ இல்லையோ, நாங்கள்—அரசு—அதிகம் கஷ்டப்படுகிறோம். விலைவாசி ஏற, ஏற அரசுக்கு எவ்வளவு கடினங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். ஒரு கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் எல்லாம் விலைவாசி ஏற ஏற சிமிண்ட் விலை ஏறி, இரும்பு விலை ஏறி, கூலி ஏறி, சம்பளம் ஏறி எல்லாம் ஏறி, இப்போது 4 கோடி ரூபாய் செலவழித்து ஒரு அணையைக் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதிகமாக கஷ்டப்படுபவர்கள் யாராவது உண்டு என்றால் அது நிதியமைச்சராகவும், முதலமைச்சராகவும், இந்த அரசாகவும் தான் இருக்கும். ஆக நாங்கள் விரும்பி, கஷ்டத்தை நாங்களாகவா வாங்கிக் கொள்வோம்? எங்கோ போகிற சனியனை வீட்டு வரையிலும் வந்து விட்டுப் போ என்றா சொல்வோம்? (சிரிப்பு). அது பாட்டுக்கு போய்க்கொண்டு இருக்கட்டும். கூப்பிட்டு தன் வீட்டிலா வைத்துக் கொள்வோம்? நாங்கள் வரிப்போட்டு உங்களுடைய அதிருப்தியைப் பெறுவதிலே எங்களுக்கு என்ன லாபம், ஆகவே இந்த வரிகளை நிதானமாகப் போடுகிறோம் என்றால், விலைவாசிகள் ஏறுகின்றன, எந்தக் காலத்திலே விலைவாசி ஏறாமல் இருந்தது, எனக்குத் தெரிந்து கால் அணாவுக்கு இரண்டு வடை கிடைத்தது, (சிரிப்பு) இப்போது ஒரு வடை 2½ ரூபாய்க்கு விற்கிறது, ஆக இந்த வடையின் விலை திடீரென்று 2½ ரூபாய்க்கு வந்து விட்டதா? விலை மெல்ல மெல்ல ஏறியிருக்கிறது. 1939-க்கும் 1944-க்கும் இடையில் நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது. உணவு விடுதியிலே ஒரு நாளைக்கு நாட்செலவு காலை டிபன், மத்தியானம் சாப்பாடு, சாயங்காலம் டிபன், இரவு சாப்பாடு எல்லாவற்றிற்கும் சேர்த்து 3½ அணா தான் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மாதத்திற்கு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிட்டத்தட்ட 20 காசு தான் நான் செலுத்திக்கொண்டு இருந்தேன். ஆக, இப்போது 350 ரூபாய், 400 ரூபாய் ஒரு மாதத்திற்கு ஒரு மாணவனுக்கு ஆகிறது. (குறுக்கீடு) அறுநூறு ரூபாயா ; என் கணக்கு ஒரு 6 மாதத்திற்கு முன்பாக இருக்கும். (சிரிப்பு) எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால் பண்டங்களின் விலைவாசி அவ்வப்போது ஏறுவது என்பது உலகம் எங்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிற ஒரு நிகழ்ச்சி தான். அதிசயமாக இங்கே மட்டும் தமிழ்நாட்டிலே மட்டும் தான் நடக்கிறது என்பது இல்லை. இதைக் கட்டுப்படுத்த நாம் தவறுகிறோம் என்று சொல்லுவது சரியாக இல்லை. புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் இருப்பது காஸ்ட் அக்கவுண்டிங் முறை அல்ல. ஒவ்வொரு பொருளுக்கும் உற்பத்தி விலை இவ்வளவு தான் இருக்கவேண்டும் ; விற்பனை விலை இவ்வளவு தான் இருக்கவேண்டும் என்று சொல்லி லேபில் ஒட்டி அந்த விலையில் தான் விற்கவேண்டும் என்ற முறை கையாளப்படுகின்ற சூழ்நிலையில் நம்முடைய நாட்டில் மத்திய அரசிலும் சட்டம் இல்லை ; நம்முடைய இடத்திலும் தமிழ்நாட்டிலும் சட்டம் இல்லை, ஆனால் அப்படிப்பட்ட வகையிலே, உலக நாடுகளையெல்லாம் நாம் பார்க்கின்றபோது உலக நாடுகளில் நிலவும் விலைவாசிகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் நிலவும் விலைவாசிகள் மிகமிகக் குறைவு, (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான்கு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையிலே வந்த செய்திபடி பார்த்தால் உலகத்திலேயே குறைவான அளவுக்கு செலவை வைக்கக் கூடிய நகரம் இந்தியாவில் இருக்கிற டெல்லியும் கல்கத்தாவும் தான் என்றும் மற்ற நகரங்களை ஒப்பிட்டுப் பார்த்து, புள்ளி விவரங்களையெல்லாம் தந்திருந்தார்கள். அதையெல்லாம் எடுத்துச் சொன்னால் நேரம் இடம் தராது என்பதற்காக நான் அந்தப் புள்ளிவிவரங்களை எடுத்துச் சொல்லவில்லை. குறைந்த செலவினம், உலக நாடுகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவிலேதான். இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகம்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.



பிற நாடுகளில் ஏன் கஷ்டம் ஏற்படவில்லை என்று கேட்பீர்களானால், வாழ்க்கைத் தரம் உயருகின்ற அளவுக்கு விலைவாசிகளும் உயர்ந்து கொண்டே போகின்றன. நம்முடைய நாட்டிலே இருக்கிற கஷ்டங்கள் என்னவென்றால், விலைவாசிகள்- உலக சூழ்நிலை, உலக நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி விலைவாசிகள் அந்த நாடோடு ஈடுகட்டுகிற தன்மை, கொடுக்கல் வாங்கல் ஆகிய இவற்றின் காரணமாக இங்கே விலைவாசிகள் உயருகின்ற நிலைமைக்கு—நாம் தடுக்க முடியாத அளவுக்கு உயரும்போது அதை எட்டிப்பிடிக்கின்ற அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடிவதில்லை. அதனுடைய விளைவாகத் தான் நாம் அதிகமாக கஷ்டப்பட வேண்டிய அவசியம் நம்முடைய நாட்டிலே ஏற்படுகிறது. வசதி, வளம் படைத்தவர்கள், வருமானம் படைத்தவர்கள் விலைவாசிகளினுடைய உயர்வை தாங்கிக் கொள்கிறார்கள். மேல் நடுத்தர மக்கள் சரிக்கட்டிக் கொள்கிறார்கள். கீழ் நடுத்தர மக்கள் சமாளிக்க முயலுகிறார்கள். ஆனால் ஏழைகளும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற வறியவர்களும், ஏறுகின்ற விலைவாசியை எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு, அது எவ்வளவு ஏறினாலும்கூட அவர்களுடைய நிலை ஓரே நிலையிலேயே இருப்பதன் காரணமாக அவர்களால் தாங்க முடியாத நிலை வருகின்றது. உலகத்திலே இருக்கிற பிற நாடுகளிலே ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறவர்கள் குறைவு. ஆகவே, அங்கே அதிக கஷ்டங்கள் தெரிவதில்லை. நம்முடைய நாட்டிலே ஏழ்மைக் கோட்டிற்கும், வறுமைக் கோட்டிற்கும் கீழே இருப்பவர்கள் அதிகம் இருப்பதன் காரணமாக, அதிலும் வருமானம் இல்லாதவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டு பொருளாதார கணக்குப்படி பார்த்தால் சம்பாதிக்கிறவர் ஒருவர் ; சம்பாதிக்காமலேயே சாப்பிட்டுக்கொண்டு இருப்பவர்கள் 7 பேர். 1 : 7. ஒருவர்தான் சம்பாதிப்பார் ; திண்ணையிலே இரண்டு ; கூடத்திலே இரண்டு ; அடுப்பங்கரையிலே இரண்டு ; (சிரிப்பு) ஆலமரத்தடியிலே ஒன்று என்று 7 பேர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருப்பார்கள். ஆனால் 7 பேரும் சம்பாதிக்கிற நிலை பிற நாடுகளிலே இருக்கிறது. அந்த நிலை நம் நாட்டிற்கு வர வேண்டுமென்பதற்காகத்தான் மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி பல முயற்சிகளை எடுத்து வருகின்றன. நாம் கட்டுப்படுத்தி விற்க முடியும் என்று சொல்லக்கூடியவை அரிசி, கோதுமை, பாமாலின் ஆயில், சர்க்கரை, சிமெண்ட், இரும்பு, உரம், பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு போன்றவற்றை கட்டுப்படுத்தலாம். ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி இவ்வளவுக்குத்தான் விற்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதனுடைய நிலையும் உலக சூழ்நிலைகள் மற்றவைகளையொட்டி ஏற்ற வேண்டிய அவசியமும் அவ்வப்போது ஏற்படுகின்றது. அவைகளில் கூட ஒரு பகுதியைத்தான் நாம் கட்டுப்படுத்துகிறோம். ஒரு பகுதி கட்டுப்படுத்த முடியாமல்

இருக்கிறது. இப்போது நாம் டூயல் பாலிசியை வைத்திருக்கிறோம். லெவி முறையிலே வருகின்ற அரிசியைத்தான் குறைந்த விலையிலே கொடுக்கிறோமே தவிர, வெளிச்சந்தையில் விற்பதை எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று இடம் கொடுத்திருக்கிறோம்.

அதேமாதிரி லெவி சர்க்கரை, அதேமாதிரி லெவி சிமெண்ட், இரும்புக்கு இருந்த விலைக் கட்டுப்பாட்டை இப்பொழுதுதான் தளர்த்தி இருக்கிறார்கள். அதனுடைய விளைவை மத்திய அரசு பார்க்க இருக்கிறது, ஆனால் இதில் என்ன சங்கடம் என்று கேட்டீர்களென்றால் விலைவாசிக்கு இன்னார்தான் காரணம், இவர் மட்டும்தான் காரணம் என்று யார் ஒருவரையும் சுட்டிக் காட்டுவதற்கு இல்லை. அவரவர்களுக்கு எந்தெந்த நேரங்களில் என்னென்ன தோன்றுகிறதோ யார் யார் மேலே வெறுப்பு வருகிறதோ அப்போது மட்டும் அவர்களை சுட்டிக்காட்டிவிட்டு அவரவர்கள் அமர்ந்து விடுகிறார்கள். ஆனால் விலைவாசி ஏறிக் கொண்டே வருகிறது என்பது உண்மை. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், விளைவிப்போர், உற்பத்தி செய்வோர் அவர்களாகவே விலைகளை நிர்ணயிக்கிறார்கள். டிமாண்ட் அண்ட் சப்ளை தியரிபடி டிமாண்ட் அதிகமாக இருந்து, அதாவது தேவை அதிகமாக இருந்து வழங்குவது குறைவாக இருக்கின்ற போது, இதுதான் சமயம் என்று ஏற்றுகிறார்கள். பெருமழை பெய்து கொடைக்கானல், நீலகிரியிலே உள்ள வழிகளெல்லாம் அடைபட்டபொழுது—அங்கே மூன்று ரூபாய்க்கு விற்ற தக்காளி—தக்காளிக்கு கிராக்கி வந்து விட்டது என்று தெரிந்தவுடன் 30 ரூபாய்க்கு விற்றார்கள். விலையை நிர்ணயித்தவர்கள் யார் என்றால் அந்தத் தக்காளியை உற்பத்தி செய்பவன், இப்போது சம்பாதித்தால்தான் சம்பாதிக்கலாம் என்று விலையை, விளைவிப்போர், உற்பத்தி செய்வோர் நிர்ணயித்தார்கள். தேவை அதிகம் இருந்து உற்பத்தி குறையும்போது ஏற்படும் கிராக்கி நிலை விலையை உயர்த்துகிறது. விளைவிப்போர், உற்பத்தியாளர், உரிமையாளர்களின் கொள்ளை லாப நோக்கம் ஒரு காரணமாக இருக்கிறது. நேற்று வந்த நுகர்வோர் சங்கத்தினர் கூட இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கொள்ளை லாபம் அடிக்க பலபேர் தங்களுடைய விருப்பப்படி விலைகளை ஏற்றிக் கொண்டே போகிறார்கள். அது சார்பான பொருள்களினுடைய விலையெல்லாம் ஏறிக்கொண்டு இருக்கின்றன என்று தெரிவித்தார்கள்.

பிற்பகல் 1–35

போக்குவரத்துச் சாதனங்களுடைய வரிகள் உயர்கின்ற பொழுது, அதனுடைய வாடகை உயர்த்தப்படுகிறது. வாடகை உயர்த்தப்படும்பொழுது, அதில் ஏற்றி வருகின்ற



சரக்குகளெல்லாம் விலை உயர்வாக ஆக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. சம்பளம் உயர்கிறது; படி உயர்கிறது; கூலி உயர்கிறது.

ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்திலேயெல்லாம் கால் ரூபாய்தான் கூலி கேட்டார்கள். கால் ரூபாய் பணம், தண்ணிக்குக் காசு என்று கேட்பான். தண்ணிக் காசு என்று கேட்பான்; கால் ரூபாய் தான் கொடுப்பார்கள். கால் ரூபாய் கேட்ட இடத்திலே இப்பொழுது 22 ரூபாய்க்குக் கூலி ஏறி இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தினக் கூலி இப்போது ரூபாய் 25.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நன்றி. அது இன்னும் ஏறி விட்டது இங்கே. நான் ரூ. 22 ஆக இருக்கும் என்று நினைத்தேன். இல்லை, இல்லை, ரூ. 25 என்று ஏறி இருக்கிறது என்கிறார்கள். தஞ்சாவூரிலே கொஞ்சம் குறைச்சல் என்று நான் நினைக்கிறேன். 22 ரூபாய்க்கு நிற்கிறது அங்கே. மத்திய மாநில அரசுகளுடைய வரி விதிப்பும் இந்த விலையேற்றத்திற்குக் காரணமாக அமையும். வரியே விதிக்காமல் மத்திய அரசும் மாநில அரசும் இருக்க முடியாது. வரி விதிக்க விதிக்க ஓரளவுக்கு ஏறுகிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இரயில்வே கட்டணம் உயரும்பொழுது, அஞ்சல் கட்டணங்கள் உயரும் பொழுது, தொலைபேசிக் கட்டணங்களெல்லாம் உயரும்பொழுது இந்த விலைவாசிகள் அதற்குத் தகுந்தாற்போல, விற்பனையிலே ஈடுபட்டிருப்பவர்கள் விலையேற்றத்தை ஓரளவுக்கு வைக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ரூபாயினுடைய மதிப்பும், இருக்கிற சூழ்நிலைகளை வைத்து, அன்னியச் செலாவணியை ஈடுகட்ட, சரிக்கட்ட, குறைத்தால்தான் சரிக்கட்ட முடியும் என்கிற பொழுது குறைக்கிறார்கள். அந்த அளவிலே பார்க்கின்ற பொழுது இன்றைக்குக் காலையிலே வந்த பத்திரிகை ஒன்றைப் பார்த்தேன். அதிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 1947–லே ஒரு ரூபாய்க்கு 100 காசு என்றால், இன்றைக்கு ஒரு ரூபாயின் மதிப்பு 6 காசுதான். அவ்வளவுக்கு மதிப்பு குறைந்துள்ளது.

அதைத் தவிர, பண வீக்கம். பண வீக்கம் எப்படி ஏற்படுகிறது என்றால், வரி போடுவதாலே பண வீக்கம் வராது. பற்றாக்குறையைச் சரிக்கட்ட, நோட்டு அடிக்க முயற்சி பண்ணும்பொழுது, அதிகமான நோட்டுகளை வெளியே விடும்பொழுது, கள்ள மார்க்கெட் சந்தையிலே பணம் குவிந்து செலவழிக்கப்படும்பொழுது, பண வீக்கம் ஏற்படுகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 16

இப்பொழுதெல்லாம், பொருளாதார நிபுணர்கள் கொடுக்கின்ற கணக்குப்படி, கள்ள மார்க்கெட்டிலே, மட்டும் நாற்பதாயிரம் கோடி முடங்கிக் கிடக்கிறது. அதை வெளியே கொண்டு வருவதற்கு மத்திய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மத்திய அரசுக்கு இருக்கிற ஒரேயொரு வசதி என்னவென்று கேட்டீர்கள் என்றால்— நமக்கு இல்லாத வசதி—அவர்களுக்கு நாசிக் பிரஸ் இருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்திலே பற்றாக்குறையாகி விட்டது என்றால், உடனே காகிதக் கட்டை ரீம் ரீமாக அனுப்பி 100 ரூபாய் நோட்டு, 500 ரூபாய் நோட்டு அடித்துத் தள்ளு என்றால் தள்ளி விடுகிறார்கள். அப்படியொரு பிரஸையாவது நமக்கு இங்கே கொடுத்தார்கள் என்றால், நாம் அதையாவது வைத்து ஓரளவுக்கு ஈடுகட்டலாம் என்கிற நிலையாவது ஏற்படும். ஆகவே, இப்பொழுது பரவலாக ரூபாய் நோட்டுகளை இவ்வளவுதான் வெளியிட வேண்டுமென்று ஒரு கணக்கு இருக்கிறது. ஆனால் நம்முடைய இந்திய அரசாங்கத்தினுடைய கணக்குப்படி அது இரண்டு பங்கு மூன்று பங்கு கூடுதலாக ஆகியிருக்கிறது. அதன் காரணமாகவும், ஆனால் அதுபோன்று இப்பொழுது கள்ளச் சந்தையிலே பணம் சிக்கி இருப்பதும், பதுக்கி வைத்து, காலம் வந்ததற்குப் பிறகு விற்கலாம் என்கின்ற அளவிற்குப் போக்கும், மற்றவைகளும் இருக்கின்றன. பதுக்கி வைத்தல், கள்ளச் சந்தை போன்றவைகளைப் பெரும்பாலும் அரசு இருக்கின்ற சட்ட விதிகளை வைத்துக்கொண்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்து வருகின்றன. ஆனால், பொதுவாகப் பார்க்கின்றபொழுது தாக்குப் பிடிக்க முடியாத அளவிற்கு விலைவாசிகள் ஏறிக்கொண்டு வருகின்றன என்பதை நாம் நன்றாகக் காண்கிறோம்; கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

தனி நபர் வருமானம் 1982-லே ரூ. 1,627 ஆக இருந்தது. இப்பொழுது ஓரளவுக்கு வளர்ந்து கொண்டு வருகிறது. இப்பொழுது 3,835 ரூபாயாக வளர்ந்திருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் போடுவதால், மொத்தமாக நாட்டுக்கு, வளர்ச்சி உண்டா என்று கேட்டால் வளர்ச்சி உண்டு. ஆனால், மக்கள் பெருகப் பெருக வளர்ச்சியைப் பங்கிட்டுக் கொள்வதன் காரணமாக வளர வேண்டிய அளவிற்கு தனிப்பட்டவர்களும், தனிப்பட்ட குடும்பங்களும் வளர முடியாத சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ரூ. 1,627 ஆக இருந்த தனி நபர் வருமானம் ரூ. 3,735 ஆக ஆகியிருக்கிறது, பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக. ஆனால் ஒருவருக்கு சம்பளம் 800 ரூபாயாக அன்றைக்கு இருந்தது என்றால் இன்றைக்கு சராசரி 1,725 ரூபாய் என்று அந்த சம்பளம் உயர்ந்திருக்கிறது. பத்து கிராம் தங்கம் 1942–43—லே 60 ரூபாய் விற்றது. எனக்குத் தெரிந்து 13 ரூபாயும் விற்றது. 1930-லே கிட்டத்தட்ட 13 ரூபாய் ஒரு



1992 மார்ச் 16] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பவுன். இப்பொழுது தங்கம் 1991–92—லே 4,150 ரூபாய். ஆனால் இதிலே என்ன ஒன்றே ஒன்று கவனிக்க வேண்டுமென்றால் உலகத்திலே இருக்கின்ற பண்டங்களையெல்லாம் மதிப்பிடுவது தங்கம்தான்—புல்லியன் பாங்கு—இந்தத் தங்கத்தை வைத்துத்தான் உலகத்திலே இருக்கிற பொருள்களெல்லாம் மதிப்பிடப்படுகின்றன. எதைப் பார்த்தீர்கள் என்றாலும், ரூபாய் நோட்டை வைத்தோ அல்லது நோட்டை வைத்தோ, பிராமிசரி நோட்டை வைத்தோ கணக்குப் போட முடியாது, தங்கத்தை வைத்துதான். ஆகவேதான் ஒவ்வொரு அரசாங்கமும், தங்களிடத்திலே தங்க இருப்பு இருக்க வேண்டுமென்று கருதி, தங்க இருப்பாக அந்நியச் செலாவணி மூலம் சேர்த்து வைப்பதற்கு முயற்சி எடுக்கிறார்கள். அது என்ன கணக்கு என்று கேட்டீர்கள் என்றால், 1930-லே 13 ரூபாய்க்கு எத்தனை இட்டிலி ஒரு பவுனுக்கு வாங்கினோமோ அவ்வளவு இட்டிலி இப்பொழுதும் வாங்கலாம். ஒரு பவுனுக்கு அன்றைக்கு எவ்வளவு பொருட்கள் வாங்கினோமோ, அவ்வளவு பொருட்களையும், இன்றைக்கும் ஒரு பவுனுக்கு வாங்கலாம். அது சரியாக வந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், வருமானத்தினுடைய அளவு, கீழே இருக்கிறவர்கள் தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறது. ஏழை எளியவர்கள் அதிகம் இருப்பதனால்தான், கஷ்டம் வருகிறதே தவிர, உலகெங்கும் இந்த நிலைமை போய்க்கொண்டிருக்கும்போது இங்கேயும் அவ்வாறு போகிறது. அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டுக் காட்டினேன்.

பிற்பகல் 1–40

அந்த வகையில் வருகிறபோது, நம் நாடு இந்தியாதான் குறைவு என்று சொன்னதற்குக் காரணம், 1960இல் இருக்கிற புள்ளி 100 என்று வைத்துக் கொண்டோமேயானால், விலைவாசிகள் பற்றிய புள்ளி விவரங்கள் பங்களாதேஷில் 199 ஆக இருக்கிறது. பாகிஸ்தானில் 190; பக்கத்தில் இருக்கிற இலங்கையில் 205; சிங்கப்பூரில் 196; ஜப்பானில் 185; பிரிட்டனில் 192; அமெரிக்காவில் 188; இந்தியாவில்தான் 184. ஆகவே, விலைவாசிகளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, குறைவு என்று சொன்னேன். அதே மாதிரி இந்தியாவைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால், 1960 இல் விலைவாசிப் புள்ளி 100 என்று வைத்துக்கொண்டால், பாம்பேயில் 791; கல்கத்தா 785; டெல்லி 788; ஹைதராபாத் 782; பெங்களூர் 809; அஹமதாபாத் 784; சென்னை 756. இந்த வகையிலே பார்த்தாலும், ஓரளவுக்கு நாம் சமாளிக்கக்கூடிய அளவிலேதான் இருக்கிறோம். மற்றைய தன்மைகளையும் நாம் பார்க்கிறபோது, ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்று உணர்கிற காரணத்தினால்தான், எப்படி

எப்படி கட்டுப்படுத்த முடியும் என்பதைப் பற்றி ஆலோசிக்
கிறோம். சாலைகள் மூலமாக கூட்டுறவுப் பண்டக சாலைகள்
தான்— பொது மார்க்கெட்டையே தடுத்து நிறுத்த முடியும்.
ஆகவேதான், கூட்டுறவு இயக்கங்களைச் செம்மைப்படுத்தி,
சீர்படுத்தி, மற்ற இடங்களில் இருப்பதைவிட, நேரடியாகப் போய்
கொள்முதல் செய்து, கொள்ளை இலாபம் அடிக்காமல், அதிக
மாக, நியாயத்திற்கு மீறி கூட்டாமல், கூட்டுறவுக் கடைகள்
ஆங்காங்கு பெருகி, அவற்றின் மூலமாக விற்கிறோம். தன்னிச்சை
யாக விலையேற்றத்தைச் செய்கிற வியாபாரிகளை அடக்கி,
ஒடுக்க முடியும். ஆகவே, கூட்டுறவு இயக்கத்திலே ஈடுபட்டிருப்
பவர்கள், மிகப்பொறுப்புணர்ச்சியோடும்மிக நல்ல தன்மையோடும்
ஈடுபடுவார்களேயானால், பொது மார்க்கெட்டை நாம் கட்டுப்
படுத்த முடியும். அதுதான் இந்த ஜனநாயகத்திலே நாம் செய்ய
முடியுமே தவிர, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், செய்ய
வேண்டிய பணிகள் அத்தனையையும் முறையாகச்செய்து வருகிறது
எனபதையும் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்
பினர்கள் பலபேர் குறிப்பிட்டார்கள். வேலைவாய்ப்புத் துறை
யில், தேவை, வழங்கல், டிமாண்ட், சப்ளை கொள்கைப்படி
பார்த்தால், தேவை, ஆண்டுக்காண்டு பெருகிக் கொண்டே போகி
றது. வேலைகளை உருவாக்கி வழங்குவது என்பது, குறிப்பிட்ட
அளவிலே, குறைந்த நிலையிலேதான் இருந்து வருகிறது. வேலை
வாய்ப்புப் பதிவு அலுவலகங்களில் ஆண்டுதோறும் 5 இலட்சம்
பேர் பதிவு செய்கிறார்கள். அரசுத் துறையில் மட்டும் சுமார்
ஆண்டொன்றுக்கு 50 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரம் பேருக்கு
வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடிகிறது. பொதுத்
துறைகளில் 30 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரம் வரை ஏற்படுத்தப்
படுகின்றன. தனியார் துறைகளில் கிட்டத்தட்ட நடுத்தர, பெரிய
சிறு தொழிற்சாலைகளில் மட்டும் 1 லட்சம் அளவுக்கு ஏற்படுத்த
முடிகிறது. வர்த்தகம், டணிமனை போன்றவைகளில் 30 ஆயிரம்
பேருக்கு ஏற்படுத்த முடிகிறது. இவற்றையெல்லாம் செய்தும் கூட
3 இலட்சம் பேர் — ஆண்டுக்காண்டு 3 இலட்சம் பேர்—தங்கு
கிறார்கள். இதையெல்லாம் சரிக்கட்டுவதற்காகத்தான் எல்லோ
ருக்கும் அரசுத் துறையிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்
தருவது என்பது இயலாத ஒரு காரியம். பொதுத் துறைகளில்
வேலைவாய்ப்பினைப் பெருக்க நிதிவசதி போதுமான அளவுக்கு
இல்லை. அதுமட்டுமல்ல ; பொதுத் துறையைப் பொறுத்த வரை
யில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது
மாதிரி, பொது நிறுவனங்களில் மக்களுடைய வரிப் பணத்தைக்
கொண்டுபோய் முதலீடு செய்வதால் அரசுக்கும், மக்களுக்கும்,
சமூகத்திற்கும் நஷ்டம் ஏற்படுகிறதே தவிர, லாபப் பயன் எதுவும்
இல்லை என்பதை மத்திய அரசும் உணர்கிறது ; மாநில அரசும்
உணர்கிறது. அந்த அளவிலேதான், 1990—92-ஐப் பொறுத்த



வரையில், தமிழக அரசைப் பொறுத்த வரையில், பொது நிறுவனங்
களின் மூலம் மொத்த நஷ்டம் 197 கோடி ரூபாய் ; அதாவது
1990—91இல். அதில் லாபம் ஈட்டித் தந்தவைகளில்
லாபம் மட்டும் 67 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 130 கோடி
ரூபாய் பொது நிறுவனங்களில் ஒட்டுமொத்த நஷ்டம் ஏற்பட்டி
ருக்கிறது. மக்களுடைய வரிப் பணத்தைக் கொண்டுபோய் பாழ்
படுத்துகிற அளவுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். மத்திய
அரசினுடைய நிலைமை, 2, 3 நாட்களுக்கு முன்னால் பத்திரிகை
யிலே வந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். 54 பொது நிறுவனங்
களிலே 8,500 கோடி ரூபாய் மத்திய அரசுக்கு நஷ்டம். ஆகவே
தான், தமிழக அரசைப் பொறுத்த வரையில், மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கூட, தொழில்துறை வளர வேண்டும்,
சிறப்புப் பெற வேண்டும், வளம் பெற வேண்டும் என்பதை
வற்புறுத்தி வருகிறார்கள். உள்ளபடியேநஷ்டத்தைத் தொடர்ந்து
செய்து கொண்டிருக்கிற தொழிற்சாலை களையெல்லாம் மூடி
விடுவதற்கு என்னென்ன செய்யலாம்; அதில் பணி புரிபவர்களுக்கு
எப்படி வேலை வாய்ப்பைத் தரலாம் என்பதை ஆலோசித்து,
பரிந்துரை செய்யும்படியாக குறிப்பிட்ட அதிகாரிகளையும், துறை
களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1—45

சில நிறுவனங்களைச் சீர்படுத்தி செம்மையாக்க முடியும்
என்றால் சீர்படுத்தி செம்மையாக்கலாம். சில நிறுவனங்களைப்
பொறுத்த வரையில், தனியார்களுக்கு விற்க முடியும் என்றால்
யாராவது அதே தொழிலைச் செய்கிறவர்கள் அதை வாங்கி,
தங்கள் நிறுவனத்தோடு சேர்த்துக் கொண்டால், அதிக லாபம்
வரும் என்று கருதுவார்களேயானால், அப்படிப்பட்ட பொது
நிறுவனங்களை தனியார்களுக்கு விட்டுக் கொடுக்கலாம். தனி
யாரும் வாங்காமல், நாமும் நடத்த முடியாமல், இலாபமும்
ஈட்டாமல், பொது மக்களுடைய வரிப் பணத்தைப் பாழாக்கிக்
கொண்டிருக்கிற நிறுவனங்கள் எவையெவை என்று கண்டறிந்து,
அவற்றை மூடிவிட்டு, வேறு வகையிலே அந்தப் பணத்தை பயன்
படுத்துவதற்கு முடியுமா என்பது பற்றி மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சிந்திக்கும்படியாகவும் துறைகளைக்
கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பொருள் உற்பத்தி பெருக, விற்பனை மிக, நாட்டின் வரு
மான நிலை வளர, பொருளாதார இருப்பு பெருக, ஏற்றுமதிப்
பொருள்களை விரிவாக்க, இறக்குமதிப் பொருள்களை குறைப்
பிக்க, மிகுதியான வேலை வாய்ப்புகளை உருவாக்க, தனியார்
துறையில் எல்லா வழிமுறைகளையும் பெரிய, சிறிய, நடுத்தரத்
தொழிற்சாலைகளையும் உருவாக்க வேண்டிய அவசியம்
ஏற்படுகிறது. இதைத்தான் மத்திய அரசும் கடைப்பிடிக்

கிறது. மாநில அரசும் கடைப்பிடிக்கிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கையாகவும், தொழிற் கொள்கையாகவும் அண்மையிலே வெளியிட்டு அதன் மூலமாக அந்தத் துறைகளில் ஈடுபடுகின்ற தொழில் அதிபர்கள் எல்லாம் ஊக்கம் பெறத்தக்க அளவுக்கு பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அதன் மூலமாக பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, கடன் வசதி, நில வசதி, நீர் வசதி, மின்வசதி, வரிச்சலுகை, ஊக்கத் தொகை போன்றவைகளை அளித்து அதன் மூலமாகத் தொழிற்சாலைகளை வளர்ப்பதன் மூலம் தொழிற்சாலை வளர வளர, வேலையில்லாத் திண்டாட்டம் போகும். வேலை வாய்ப்பு பெருகும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் அவர்கள் அதிக ஊக்கம் காட்டி வருகின்றார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை, மேம்பாட்டுத் திட்டங்களை நாம் நிறைவேற்றி இருக்கிறோம் என்றால், அதில் ஒதுக்கப்பட்ட பணத்தில் கிட்டத்தட்ட 35-லிருந்து 40 சதவீதம் தற்காலிக வேலை வாய்ப்பைத் தருவதற்குப் பயன்படுகின்ற அளவிலேதான் அமைந்து இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள்தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தினுடைய அடிப்படையில் தற்காலிக வேலை வாய்ப்புகள் அந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே ஓரளவுக்கு ஏற்படுத்துவதற்கு வழிவகை ஏற்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 'ஊரக வளர்ச்சிச் சிறப்புத் திட்டங்களுக்காக' ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 35 கோடியும், ஊரக வேலை வாய்ப்புக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 193 கோடியும் இலட்சக்கணக்கான தற்காலிக வேலை வாய்ப்புகளை அந்தப் பகுதிகளிலே ஏற்படுத்தப் பயன்படுவதாக அமையும். ஆக, அரசால் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பது மட்டும் உண்மை. வேலை வாய்ப்புக்கு எதுவுமே செய்யப்படவில்லை என்று கூறுவது பொருந்தி வராது. ஒவ்வொருவரும் தங்கள் கல்வி அறிவையும் தொழில் பயிற்சித் திறனையும், குறைந்த அளவு நிதி வசதி அத்தனையையும் பயன்படுத்திக் கொண்டு சுய வேலை தொடங்க அதிகமாக மக்கள் முன்வருவார்களேயானால், ஹரியானா, பஞ்சாப் மாதிரி இம்மாநிலமும் ஓரளவு வளர்ச்சியுறுவதற்கும், வேலை வாய்ப்பின்மையைக் குறைப்பதற்கும், வழிவகை ஏற்படும். அதற்கு அதிகமான அளவுக்கு ஊக்கத்தை, தொழில் துறையினரும், மற்றவர்களும் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். ஆக, கடன் உதவி, நிதி நிறுவனங்கள், வங்கிகள், மூலம் பெற ஏதுவாகும். அவைகளுக்கெல்லாம் ஊக்கமும்



ஆக்கமும் அரசு அளித்து வருகின்றது. சிறிய, நடுத்தரத் தொழில்களைத் துவங்க பலர் முன்வருவார்களேயானால் இதை ஓரளவுக்குச் சமாளிக்க முடியும். இதற்கெல்லாம் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தரவேண்டுமென்று எல்லோரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்றாலும் கூட . . . . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இரண்டே கால் மணி நேரம் ஆகிவிட்டது.

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பதற்கிணங்க, விளக்கங்களை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்த அந்தத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் வரும்போது விரிவாகவும், விளக்கமாகவும் கூறுவார்கள் என்றும், பொதுவாக எடுத்துக் கூறுகின்ற தன்மையின் அடிப்படையில் சில பல விளக்கங்களை மட்டும் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். இதை மன்ற உறுப்பினர் பெருமக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாட்டில் இருக்கிற பொது மக்களும் பொருளாதார நிலையை உணர்ந்து— இந்த மாநிலத்தை முதன் மாநிலமாக ஆக்குவதற்கு உறுதுணை செய்வதற்குக் கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அந்த வகையிலே எல்லோருடைய ஒத்துழைப்பையும் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவப் பெருந்தகையார் தனது குறளில் 'ஒப்புரவறிதல்' என்பது பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லி இருக்கிறார். ஒப்புரவறிதல் என்பது உலகத்தின் போக்கை உணர்ந்து. இல்லாதவர்களுக்கு உள்ளவர்கள் உதவி செய்து, உலக வாழ்வை ஒழுங்குபடுத்தி சமன் செய்தல் என்பது பொருளாகும். ஒப்புரவுப் பண்பை நன்றாக உணர்ந்து அதன்படி நடத்தலாகிய கடமையை நன்கு அறிந்திருக்க அறிவுடையார் தம் பொருள் வளம் குறைந்த காலத்திலும் கூட எந்த வகையிலாவது ஒப்பாவு செய்தல் வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றத் தயங்க மாட்டார்கள், என்னும் கருத்துப்பட, "இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் கடனறி காட்சி யவர்" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அந்த இலக்கணத்திற்கேற்ப மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசின் பொருளாதார வளம் குறைந்துள்ள இந்த நேரத்திலும் ஒப்புரவ செய்யும் தொண்டைப் பொறுத்தவரையில் சிறிதேனும் தயக்கம் காட்டாமல் ஏழையெளியர் வசதி வாய்ப்பு மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் முறைப்படி மேற்கொண்

டுள்ளார்கள். அந்தக் கொள்கையை எதிரொலிப்பதன் மூலம் இந்த நிதிநிலை அறிக்கை இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. இதை முழுவதுமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று, மாண்புமிகு உறுப்பினர்கள் மசோதா வரும்போது நிறைவேற்றித் தரவேண்டும் என்று எல்லோரையும் தங்கள் மூலமாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1—50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் முடிவுற்றது. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 17-3-1992 காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

19. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 150 வரை).

163174

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 [illegible]amatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.